

# இஸ்லாமிய
# வாரிசுரிமைச் சட்டங்கள்

M. முஹம்மத் யூசுஃப் மிஸ்பாஹி

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டங்கள்


தொகுப்பு

அஷ்ஷைக் M. முஹம்மது யூசுஃப் மிஸ்பாஹி



DARUL IMAN TRUST
ISLAMIC BOOK HOUSE
77, Dematagoda Road, Maradana,
Colombo - 09.
Tel: 011 2684851, Fax: 011 2688102



சாஜிதா புக் சென்டர்

248, தம்புச் செட்டி தெரு,

சென்னை - 600 001.

போன் : (044) 2522 4821

Email : shajithabookcentre@yahoo.com

web : shajithabookcentre.blogspot.in

# புத்தக விபர தொகுப்பு

நூல் பெயர் :

- இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டங்கள்

ஆசிரியர் :

- M. முஹம்மது யூசுஃப் மிஸ்பாஹி

மூன்றாம் பதிப்பு :

- அக்டோபர் 2013

பக்கங்கள் :

- 192

நூலின் அளவு :

- 1/8 டெம்மி

ஒளி அச்சுக்கோர்வை :

- சாஜிதா கிராஃபிக்ஸ், சென்னை-1.

அச்சிட்டோர் :

- கிராஃபிக் பார்க்
  சென்னை – 5 ✆ 28444445 / 46

வெளியீடு :

- சாஜிதா புக் சென்டர்
  248, தம்புச் செட்டி தெரு, (முதல்மாடி)
  சென்னை - 600 001.
  போன் : (044) 2522 4821 / 98409 77758
  Email : shajithabookcentre@yahoo.com
  web : shajithabookcentre.blogspot.in

விலை :

- ₹ 85.00

ஜம்யிய்யது அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் அமைப்பின் தலைவரும் 'அல்ஜன்னத்' மாத இதழின் ஆசிரியருமான மவ்லவி S. கமாலுத்தீன் மதனி அவர்கள் வழங்கிய

# மதிப்புரை

எல்லாப் புகழும் வல்ல
இறைவன் அல்லாஹ்வுக்கே! அவனுடைய
சாந்தியும் சமாதானமும் இறைவனின் இறுதித்
தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் மற்றும்
நல்லோர்கள் அனைவர் மீதும் உண்டாகட்டுமாக!

இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டங்கள்
விளக்கப்பட்டிருப்பது போன்று வேறெந்த
மதங்களிலும் விளக்கப்படவில்லை.
வாரிசுகளுக்குரிய உரிமைகளை வழங்குவதில்
இஸ்லாம் காட்டுகின்ற அக்கறை வேறெந்த
கொள்கை கோட்பாடுகளிலும் பார்க்க முடியாது.

இறந்தவரின் சொத்தை எவ்வாறு பங்கிட
வேண்டும் என்ற விபரம் உலகப் பொதுமறையான
அல்குர்ஆனில் மிகத் துல்லியமாகக்
கூறப்பட்டுள்ளது.

'வாரிசுரிமைக் கல்வியைப் பயிலுங்கள்.
மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுங்கள்'
என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் (ரலி)**

**நூல்கள் (அஹ்மத், திர்மிதி)**

இக்கல்வி நாளடைவில் தேய்ந்து போய் விட்டது. வாரிசுரிமை பற்றி மக்கள் அறிந்து கொள்ள முறையான தமிழ் நூல்கள் இல்லாதது பெருங் குறையாக இருந்தது. அதை நிவர்த்தி செய்யும் நோக்கில் சகோதரர் M. **முஹம்மது யூசுப் மிஸ்பாஹி** அவர்கள் வாரிசுரிமைச் சட்டங்களைப் பற்றி 'அல்ஜன்னத்' மாத இதழில் எழுதி வந்தார்கள். இத் தொடர் வாசகர் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றது.

அத்தொடரை மெருகூற்றி தற்போது நூல் வடிவில் தந்திருப்பது மிக்க மகிழ்ச்சியை தருகிறது.

இந்நூல் மிகப் பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக மார்க்கக் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இது அதிகப் பயனுள்ளதாக அமையும்.

இந்நூலை உருவாக்கிய ஆசிரியர் அவர்களுடைய முயற்சியை அல்லாஹ் ஏற்று அதை மக்களுக்குப் பயனுள்ளதாக ஆக்கியருள்வானாக!

அன்புடன்
S. கமாலுத்தீன் மதனி
நாகர்கோயில்.

# முன்னுரை

அறியாமைக் காலத்தில் ஒருவர் இறந்துவிட்டால் சொத்து முழுவதையும் அக்குடும்பத்திலுள்ள ஆண்களே எடுத்துக் கொள்வர். அக்குடும்பத்துப் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லாதிருந்தது. பெண்களை மனிதப் பிறவியாக மதிக்காத காலம் அது. அந்தக் காலகட்டத்தில் இஸ்லாம் பெண்களுக்கு சொத்துரிமை மட்டுமின்றி சகல விதமான உரிமைகளையும் வழங்கிச் சிறப்பித்தது.

ஒருவர் விட்டுச் செல்லும் சொத்துக்கள் ஓரிருவரிடம் மட்டும் தேங்கிவிடாமல் நெருங்கிய வாரிசுகள் பலரும் அதில் பங்கு பெறக் கூடிய சட்டங்களை இஸ்லாம் மட்டுமே வகுத்தளித்துள்ளது. சமூகத்திலும், இறந்தவரின் குடும்பத்திலும் உள்ள ஒவ்வொருவரின் பொறுப்புகளுக்கு ஏற்றவாறு இச் சொத்துக்கள் குறைவாகவும், கூடுதலாகவும், சமமாகவும் பிரித்து வழங்கும் முறையை அல்குர்ஆனும் நபிமொழிகளும் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளன.

இவ்வளவு தெளிவான வாரிசுரிமைச் சட்டம் நவீன பொருளியல் திட்டத்தில் கூட இல்லை. வேறெந்த சமுதாயங்களிலும் இல்லை. இத்திட்டத்தில் மாற்றம் செய்யவோ கூட்டவோ, குறைக்கவோ உலகில் எந்த அதிகாரிக்கும் அனுமதியில்லை.

இறந்தவர் தனது வாரிசுகளுக்கு, இஸ்லாம் கூறும் சொத்துரிமையை விட அதிகமாக எழுதிக் கொடுப்பதற்கும், வாரிசுகளுக்கு மரணசாசனப் (உயில்) எழுதிக் கொடுத்து மற்ற வாரிசுகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தவும் இஸ்லாம் அனுமதிக்கவில்லை. மேலும் இறந்தவர் தனது சொத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேல் அறப்பணிகளுக்காகக் கூட மரணசாசனம் (உயில்) எழுதிக் கொடுத்து வாரிசுகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதைத் தடை செய்துள்ளது.

பெண்களை மனிதப் பிறவியாகவே கருதாத அந்த அறியாமைக் காலத்தில் பெண்களுக்கு சொத்துரிமை மட்டுமின்றி சகலவித

மான உரிமைகளையும் இஸ்லாம் மட்டுமே வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இந்நூல் இஸ்லாம் கூறும் வாரிசுரிமைச் சட்டங்களை என் அறிவுக்கு எட்டிய வகையில் மிக எளிமையாக உதாரணங்கள் பலவற்றுடன் விளக்கியுள்ளேன். இந்நூலை அரபி கல்லூரிகளில் பாடத்திட்டத்தில் வைக்கும் அளவுக்கு விளக்கம் கொடுத்திருப்பதுடன் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் கேள்விகளும் சேர்த்துள்ளேன்.

இந்நூலை எழுத எனக்குப் பலரும் பல வகைகளில் உதவினர். குறிப்பாக சகோதரர் வழக்கறிஞர் ஆரணி தஸ்தகீர் M.Com, B.L. அவர்கள் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கினார். முஸ்லிம் சட்டம் (MUSLIM LAW) என்றொரு நூலையும் அவர் எனக்குத் தந்து உதவினார். அது இந்நூல் எழுத எனக்குப் பல வகையிலும் உதவியது. 'அல்ஜன்னத்' மாத இதழில் இத்தொடர் வெளிவந்து வாசகர்களின் பாராட்டையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்நூலை முழுமையாக சரிபார்த்துத் தந்து மதிப்புரையும் வழங்கிய மவ்லவி **S.** கமாலுத்தீன் மதனி அவர்களுக்கும் மற்றும் வெளிவர உதவிய அனைவருக்கும் என் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன். இதைப் படித்து நேர்வழி பெறுவதுடன் படிப்பவர்கள் எழுத்துலகில் என் பணி தொடர வல்ல ரஹ்மான் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கக் கோருகின்றேன். அல்லாஹ்வே எனக்கு இந்நூல் எழுத சகலவிதமான ஆற்றலையும் சக்தியையும் அறிவையும் தந்து உதவினான். அவனுக்கே எல்லாப் புகழும்.

இந்நூலில் குறைகள் காணப்பட்டால் சுட்டிக் காட்டுங்கள். இன்ஷா அல்லாஹ் அடுத்தப் பதிப்பில் சீர்படுத்திக் கொள்ளத் தயாராக உள்ளேன்.

**அன்புடன்**

**M. முஹம்மது யூசுஃப் மிஸ்பாஹி**

**பொட்டல் புதூர்**

**11-06-2004**

# உட் பொதிந்தவைகள்

| | பக்கம் |
|---|---|
| 1. வாரிசுரிமையின் அவசியம் | 09 |
| 2. இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் சிறப்பு | 14 |
| 3. கடனும் வஸிய்யத்தும் | 19 |
| 4. வாரிசுரிமை பெறுவோர் | 24 |
| 5. வாரிசுரிமையின் வகைகளும் வாரிசுகளின் வகைகளும் | 28 |
| 6. பெண்களுக்கு அநீதமான பங்கீடா ? | 30 |
| 7. கணவனுக்குக் கிடைக்கும் பங்குகளும் மனைவிக்கு கிடைக்கும் பங்குகளும் | 35 |
| 8. பெண் மக்களின் பாகம் | 42 |
| 9. மகனின் மகள் பாகம் பெறும் முறைகள் | 45 |
| 10. உடன் பிறந்த சகோதரி | 50 |
| 11. தந்தைவழிச் சகோதரிகள் பாகம் பெறும் முறைகள் | 57 |
| 12. தாய்வழிச் சகோதரிகள் | 62 |
| 13. தாயின் பாகம் | 69 |
| 14. பாட்டன் பாட்டி விளக்கம் | 74 |
| 15. பாட்டன் பாட்டி பங்கு விகிதம் | 77 |
| 16. மகன் பாகம் பெறும் முறைகள் | 82 |
| 17. மகனின் மகன் (பேரன்) பாகம் பெறும் முறைகள் | 84 |
| 18. தந்தையின் பாகங்கள் | 86 |
| 19. ஆறில் ஒன்று (1/6) பாகம் பெறுவோர் | 89 |
| 20. மூன்றில் ஒன்று (1/3) பாகம் பெறுவோர் | 93 |
| 21. மூன்றில் இரண்டு 2/3 பாகம் பெறுவோர் | 95 |
| 22. சொத்தில் பாதியைப் பெறுவோர் | 98 |
| 23. சொத்தில் கால்பங்கு பெறுவோர் | 100 |

24. சொத்தில் (1/8) எட்டில் ஒரு பாகம் பெறுவோர் ........ 101

25. அஸபாக்கள் - எச்சதாரர்கள் ........ 102

26. சொத்துரிமையில் குறுக்கீடுகள் ........ 117

27. ஏற்ற விதிக் கொள்கை (அவுல்) ........ 123

28. இறக்க விதிக் கொள்கை (ரத்து) ........ 130

29. அடிப்படைப் பங்கு எடுப்பது எவ்வாறு ? ........ 137

30. தவுல் அர்ஹாம் ........ 144

31. ஒருவருக்கு இரண்டு வழிகளில் சொத்து கிடைக்குமா ? ........ 148

32. தனக்குக் கிடைக்கும் பங்கை வாரிசுதாரர் விட்டுக் கொடுத்தல் ........ 151

33. சொத்துக்களைப் பங்கிடும் முறை ........ 154

34. இறந்தவருக்குக் கடன் இருந்தால் ? ........ 157

35. பல தலைமுறைகளாப் பாகம் பிரிக்கப்படாமல் இருந்தால் ? ........ 160

36. வாரிசு கருவில் இருந்தால் ? ........ 172

37. நீரில் மூழ்கி, தீயில்கருகி, விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் வாரிசுரிமை ........ 177

38. காணாமல் போனவர் மற்றும் கைதியின் வாரிசுரிமை ........ 182

39. சாப அழைப்புப் பிரமாணம் (லிஆன்) செய்த தம்பதியரின் சொத்துரிமை........ 187

40. உரிமைவிடப்பட்ட அடிமையின் வாரிசுரிமை ........ 188

41. இறை நிராகரிப்பாளரின் வாரிசுரிமை ........ 190

42. முகாஸமதுல் ஜத்து ........ 191

# 1. வாரிசுரிமையின் அவசியம்

வாழ்வின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் வழிகாட்டும் இஸ்லாம், வாரிசுரிமை பற்றியும் மிகத் தெளிவானதொரு வழிமுறையைக் காட்டியுள்ளது. பல்வேறு வழிமுறைகளில் பொருளை அடைய முடிந்தாலும் அதை ஈட்டுவதற்கான சிறந்த வழி எது? அதை எந்தெந்த வகைகளில் செலவிட வேண்டும்? என்பன போன்ற வினாக்களுக்கு பொருளியல் நிபுணர்களே வியந்து பாராட்டும் வண்ணம் எக்காலத்திற்கும் பொருத்தமான தீர்வை இஸ்லாம் வழங்கியுள்ளது. அது போல பொருளாதாரம் ஓரிடத்தில் குவிந்து, சிலர் என்றும் பொருளாதார வசதி படைத்தோராகவும், சிலர் என்றுமே வறியவர்களாகவும் இருக்கும் நிலையை இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

மனிதன் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதிப்பது தனக்கு மட்டுமின்றி, தனது பிற்கால வாழ்வு, தனது மரணத்திற்குப் பின்னர் தனது சந்ததிகள், உற்றார், உறவினர் போன்றவர்களுக்காகவும் தான். எனவே, அவன் அப்படி, கடின உழைப்பின் மூலம் ஈட்டிய சொத்து, சுகங்கள் அவனது மரணத்திற்குப் பின்னர் உரியவர்களுக்குக் கிடைக்காமல் போய், ஒரு சிலரோ அல்லது உரிமையற்றவர்களோ அபகரித்து விடக் கூடாது என்ற விஷயத்தில் தனிக் கவனம் செலுத்தி, அதற்காக அந்தச் சொத்தில் அவர்களுக்கு உரியது எந்த அளவு என்பதையும் இஸ்லாம் நிர்ணயித்துள்ளது. அளவு நிர்ணயிக்கப்படாதிருந்தால் பேராசையால் தனக்கே சொத்து முழுவதும் சேர வேண்டுமென்று வலியவர்கள் அதை அபகரித்து விடக் கூடும். எனவே, தகுதியானவர்களுக்கு தகுதியான விகிதத்திலேயே சொத்துரிமை அளித்துள்ளது இஸ்லாம்.

*'ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒரு சோதனை உண்டு. எனது சமூகத்தினருக்கு பொருட் செல்வம் தான் பெரிய சோதனையாகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக கஃபு இப்னு இயாழ் (ரலி) அறிவிக்கிறார்கள்.*

**நூல் : திர்மிதீ 2337, இப்னுஹிப்பான் 2470,**

**அஹ்மத் 4:160, ஹாகிம் 4:318**

எனவே, நம் பொருட் செல்வம் என்ற சோதனையில் நாம் வெற்றிபெற, கவனமாக நடப்பது அவசியமாகும். சொத்து, மனிதர்களுடன் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், 'அடியார்கள் மன்னிக்காமல் நான் மன்னிக்க மாட்டேன்' என அல்லாஹ் குறிப்பிடும் 'ஹுகூகுல் இபாத்' என்ற பிரிவுடனும் சேர்ந்ததாகும். தொழுகை, நோன்பு, ஹஜ், ஸக்காத் போன்றவைதான் கட்டாயக் கடமை என நாம் எண்ணிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் சொத்துரிமையும் கட்டாயக் கடமைதான்.

*(மரணமடைந்த) தாய், தந்தையரும் நெருங்கிய உறவினரும் விட்டுச் சென்ற சொத்தில் ஆண்களுக்குப் பங்குண்டு. (அது போல) தாய், தந்தையரும் நெருங்கிய உறவினரும் விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பங்குண்டு; அச்சொத்துக் குறைவாகவோ, அதிகமாக வோ இருந்தாலும் சரியே! இந்தப் பங்கு அல்லாஹ் வினால் நிர்ணயிக்கப்பட்டதாகும்.*

**(அல்குர்ஆன் 4:7)**

4:11வது வசனத்தில் பாகப்பிரிவினைப் பங்கீடுகளைப் பற்றிக் கூறிய பின்னர் 'இது அல்லாஹ்விடமிருந்து வந்த கட்டளை யாகும்' என்றும் 4:12வது வசனத்தின் இறுதியில் 'இது அல்லாஹ் வினால் விதிக்கப்பட்டதாகும்' என்றும் 4:13வது வசனத்தில் 'இவை அல்லாஹ்வின் வரையறைகளாகும்' என்றும் அல்லாஹ் கூறுகிறான். எனவே வாரிசுரிமைப் பங்கீடு கட்டாயக் கடமையே.

நமது நாடுகளில் ஒருவர் இறந்தவுடன் சொத்துரிமை பங்கு பிரித்துக் கொடுக்கப்படாத காரணத்தால் அண்ணன், தம்பி, அக்காள், தங்கைகளுக்கிடையில் சண்டைகள் ஏற்பட்டு நீதிமன்றம் செல்லும் பலரைப் பார்க்கின்றோம். பெண் மக்களுக்கு சொத்துரிமை கொடுக்கப்படாத நிலையைப் பார்க்கின்றோம். ஆனால் இஸ்லாம் தான் பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு எனக் கட்டளையிட்டு பெண்ணுரிமை பேணிய மார்க்கம் ஆகும். எனவே, வாரிசுரிமை சொத்துப் பங்கீடு கட்டாயக் கடமை. அதன் மூலம் பல சண்டை சச்சரவுகளைத் தவிர்க்கலாம். அதன் மூலம் உலகில் நம்மிடையே குடும்பங்களுக்கிடையே அமைதியை ஏற்படுத்தலாம்.

**சொத்துரிமை ஏற்பட்ட வரலாறு:**

ஸஃது இப்னு ரபீஃ (ரலி) அவர்களின் மனைவி, ஸஃதின் மூலம்

தனக்குப் பிறந்த இரு பெண் மக்களுடன் வந்து, 'அல்லாஹ்வின் தூதரவர்களே! இவ்விருவரும் ஸஃது இப்னு ரபீஃ அவர்களின் (மூலம் எனக்குப் பிறந்த) புதல்விகள். இவர்களின் தந்தை ஸஃது உஹதுப் போர்க்களத்தில் கொல்லப்பட்டார். இந்தப் பெண்களுக்கு எந்தப் பொருளையும் விட்டு வைக்காமல் அவரது சொத்து முழுவதையும் அவருடன் பிறந்த சகோதரர் எடுத்துக் கொண்டார். இவ்விருவரின் சொத்துகளுக்காகவே எவரும் திருமணம் செய்ய முன் வருவார்கள்' என முறையிட்டார். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், 'இது விஷயமாக அல்லாஹ் தீர்ப்பளிப்பான்' எனக் கூறினார்கள். அப்போதுதான் சொத்துரிமை பற்றிய பின்வரும் (4:11,12வது) குர்ஆன் வசனங்கள் இறக்கி அருளப்பட்டன.

உங்கள் மக்களில் ஓர் ஆணுக்கு, இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பங்கு போன்றே கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசம் செய்கிறான். பெண்கள் மட்டும் இருந்து, அவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டு இருந்தால், அவர்களுக்கு இறந்து போனவர் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகம் கிடைக்கும். ஆனால் ஒரே பெண்ணாக இருந்தால், அவள் பங்கு பாதியாகும்.

இறந்தவருக்கு குழந்தை இருக்குமானால், இறந்தவர் விட்டுச் சென்றதில் ஆறில் ஒரு பாகம் (அவரது) பெற்றோர் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால், இறந்தவருக்கு குழந்தை இல்லாதிருந்து பெற்றோர் மட்டுமே வாரிசாக இருந்தால், அவர் தாய்க்கு மூன்றில் ஒரு பாகம் (மீதி தந்தைக்கு உரியதாகும்). இறந்தவருக்கு சகோதரர்கள் இருந்தால், அவர் தாய்க்கு ஆறில் ஒரு பாகம் தான் (மீதி தந்தைக்குச் சேரும்). இவ்வாறு பிரித்துக் கொடுப்பது அவர் செய்துள்ள மரண சாசனத்தையும், கடனையும் நிறைவேற்றிய பின்னர் தான். உங்கள் பெற்றோர்கள், குழந்தைகளில் யார் நன்மை பயப்பதில் உங்களுக்கு நெருக்கமாக இருப்பவர்கள் என்று நீங்கள் அறிய மாட்டீர்கள். ஆகையினால் (இந்தப் பாகப் பிரிவினை) அல்லாஹ்விடமிருந்து வந்த கட்டளையாகும். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும், மிக்க ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

இன்னும், உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில் அவர்களுக்குப் பிள்ளை இல்லாதிருந்தால், உங்களுக்குப் பாதிப்பாகம் உண்டு. அவர்களுக்குப் பிள்ளைகள் இருந்தால், அவர்கள் விட்

டுச் சென்றவற்றிலிருந்து உங்களுக்கு கால்பாகம்தான். (இதுவும்) அவர்கள் செய்திருக்கிற மரண சாசனத்தையும், கடனையும், நிறைவேற்றிய பின்னர்தான். தவிர, உங்களுக்குப் பிள்ளை யில்லாதிருப்பின், நீங்கள் விட்டுச் சென்றதிலிருந்து அவர்களுக்கு கால்பாகம்தான். உங்களுக்கு பிள்ளைகள் இருந்தால் அப்போது அவர்களுக்கு நீங்கள் விட்டுச் சென்றதிலிருந்து எட்டில் ஒரு பாகம்தான். (இதுவும்) நீங்கள் செய்திருக்கும் மரண சாசனத் தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னரேதான்.

தந்தை, பாட்டன் போன்ற முன் வாரிசுகளோ அல்லது பிள்ளை, பேரன் போன்ற பின்வாரிசுகளோ இல்லாத ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ - இவர்களுக்கு ஒரு சகோதரனோ, அல்லது ஒரு சகோதரியோ இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு. ஆனால் அதற்கு அதிகமாக இருந்தால், அவர்கள் மூன்றில் ஒரு பாகத்தில் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். (இதுவும்) அவர்களின் மரண சாச னமும், கடனும் நிறைவேற்றிய பின்னர்தான். ஆனால் (வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படக்கூடாது. (இது) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும். இன் னும் அல்லாஹ் (அனைத்தையும்) நன்கறிந்தவனாகவும், மிக்க பொறுமையுடையவனாகவும் இருக்கின்றான்.

**அல்குர்ஆன் 4:11,12**

அப்போது, நபி (ஸல்) அவர்கள் அப்பெண்களின் சிறிய தந்தையை அழைத்து, ஸஃதின் புதல்விகள் இருவருக் கும் சொத்தில் மூன்றில் இரண்டு பங்கும், ஸஃதின் மனைவிக்கு எட்டில் ஒரு பங்கும் கொடுத்துவிட்டு, மீதியை அவர் எடுத்துக் கொள்ளும்படி ஆணையிட் டார்கள்.

**ஆதாரம் : அபூதாவூத் 2891, திர்மிதீ 2092,**

**இப்னு மாஜா 2720, அஹ்மத் 3307**

மற்றொரு வரலாறு:

பனீஸலமா கூட்டத்தினரில் நான் நோய்வாய்ப்பட் டிருக்கும் போது, என்னை நபி (ஸல்) அவர்களும் அபூபக்ர் (ரலி) அவர்களும் நோய் விசாரிக்க வந்தனர்.

என்னால் எதையும் விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் என்னைக் கண்டார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் தண்ணீரை வரவழைத்து உளூச் செய்து, பின்னர் என் மீது தண்ணீரைத் தெளித்தார்கள். அப்போது நான் விழித்து, அல்லாஹ் வின் தூதர் அவர்களே! எனது செல்வத்தை நான் என்ன செய்யச் சொல்கிறீர்கள்?' எனக் கேட்க, அப்போது 4:11வது வசனம்அஇறங்கிற்று என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார்கள்.

**(புகாரி 4577, 6723, 5651, 5676 மற்றும் முஸ்லிம்**

**இன்னொரு வரலாறு:**

ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரலி) அவர்களின் சகோதரரான அப்துர் ரஹ்மான் இப்னு ஸாபித் (ரலி) அவர்கள் மரணமான போது ஆண் வாரிசுகள் அனைவரும் வந்து, சொத்து முழுவதை யும் எடுத்துக் கொண்டனர். அவரது மனைவி உம்மு கஹ்ஹா மற்றும் அவரது சகோதரிகள் ஐவருக்கும் எதுவும் கொடுக்க வில்லை. அப்போது உம்மு கஹ்ஹா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்ட போது மேற்கண்ட வசனம் இறங்கிய தாகவும் வரலாறு காணப்படுகிறது. (தப்ஸீர் இப்னு ஜரீர்)

ஆக எது எப்படியாயினும், பெண்களுக்குக் கிடைக்க வேண் டிய சொத்து கிடைக்காமல் பெண்களுக்கு அநீதி இழைக் கப்பட்ட போதுதான் சொத்துரிமை பற்றிய தெளிவான சான்று கள் தோன்ற ஆரம்பித்தன என்பது உண்மையாகும். (அல்லாஹ் மிக அறிந்தவன்)

**பயிற்சி வினாக்கள்:-**

(1) வாரிசுரிமை கட்டாயக் கடமையா? அதற்கான ஆதாரங்கள் என்ன?

(2) அல்குர்ஆன் 4:11,12வது வசனங்கள் இறங்கக் காரணம் என்ன?

# 2. இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் சிறப்பு

*பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்)தில் ஆண்களுக்குப் பாகமுண்டு, அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பாக முண்டு - (அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந் தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே, (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும்.*

**அல்குர்ஆன் 4:7**

அல்லாஹ் இந்த வசனத்தில் இறந்தவர் விட்டுச் சென்ற சொத்தில் ஆண்களுக்கும் பாகமுண்டு என்று கூறுகிறான். அதே போல பெண்களுக்கும் பாகம் உண்டு என்று கூறுகிறான். சொத்து குறைவாக இருந்தாலும் சரி அதிகமாக இருந்தாலும் சரி என்று குறிப்பிடுகிறான்.

சொத்து குறைவாக இருக்கிறது அதிகமாக இருக்கிறது என்பது பிரச்சனை அல்ல, மாறாக நெருங்கிய உறவினர் விட்டுச் செல்லும் சொத்தில் ஆண்வாரிசுகள், பெண் வாரிசுகள், ஒவ்வொருவருக்கும் நிர்ணயிக்கப்பட்ட பாகம் உண்டு என்று கூறியிருப்பதால் இந்த வாரிசுரிமை பற்றி ஒவ்வொருவரும் அறிந்து கொள்வது கட்டாயம் ஆகும்.

*'யூகத்தின் அடிப்படையில் (வாரிசுரிமை பற்றிப்) பேசக் கூடியவர்கள் தோன்றுவதற்கு முன்பு (மிக முக்கிய அடிப்படைக் கல்வியான பாகப்பிரிவினை) கல்வியைக் கற்றுக் கொள்ளுங்கள்' என்று உக்பா பின் ஆமிர் (ரலி) அறிவிக்கிறார்.*

**ஆதாரம் :புகாரி**

**(பாகப்பிரிவினையை கற்றுக் கொள்ளுங்கள் என்ற பாடம்) மற்றும், ரஸீன்**

இன்று வாரிசுரிமைக் கல்வி எவருக்கும் தெரிவதில்லை. அரபுக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள், கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் உட்பட அனைவருமே பாடம் படிக்க வேண்டு மென்ற நோக்கத்திலும், பாடம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்திலும் தான் கற்றுக் கொள்கிறார்களே தவிர இது

வாழ்வியல் பிரச்சனை என்ற ரீதியில் கற்றுக் கொடுப்பதில்லை; கற்றுக் கொள்வதுமில்லை. அதனால் கல்வி கற்கும்போது இப்பாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் கூட, பின்னாளில் அது பற்றிக் கேட்கும்போது மறந்து விட்டேன் அல்லது தெரியாது என்று கூறுவதைப் பார்க்கிறோம்.

சொத்துரிமை பிரச்சனை சிக்கலாகி குடும்பப் பிரச்சனை தோன்றினால் மட்டுமே அரபுக்கல்லூரிகளுக்கு தீர்ப்புக்கேட்டு எழுதி அதன்படி செயல் படுகின்றனர். இல்லையெனில் யூகத்தின் அடிப்படையில் தான் பாகப்பிரிவினை செய்து கொடுப்பதைப் பார்க்கிறோம்.

சில குடும்பங்களில் ஆண்கள் மட்டுமே பெற்றோரின் சொத்துக்களை எடுத்துக் கொள்கின்றனர். பெண்களுக்கு ஏதும் கொடுப்பதில்லை. காரணம் கேட்டால் பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கும் போதே சீர் வரிசை, வரதட்சணை, நகை நட்டுக்கள் என அதிகமாகச் செலவு செய்து விட்டோம் என்று கூறி விடுகின்றனர். இது வரதட்சணை மற்றும் சீர் வரிசைகளின் தீய விளைவாகும். சிலர் தாயாரின் சொத்துக்கள் பெண்களுக்கு மட்டுமே உரியவை என்றும், தந்தையின் பெயரிலுள்ள சொத்துக்கள் ஆண் மக்களுக்கு உரியவை என்றும் (யூகத்தின் அடிப்படையில்) பிரித்து விடுகின்றனர். எனவே இந்நிலை மாற வேண்டும். வாரிசுகள் யார்? அவர்களுக்குரிய பங்கு என்ன? என்பது பற்றி எல்லாம் ஒவ்வொரு வரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். அதன்படி பிரித்தளிப்பதும் அவசியம்.

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் சிறப்பு பற்றிப் பேராசிரியர் G.C. வெங்கட சுப்பாராவ் தம்முடைய FAMILY LAW IN INDIA (இந்தியக் குடும்ப இயல் ச்ட்டம்) என்ற நூலில் கூறியுள்ள கருத்துக்கள் நாம் கவனிக்கத்தக்கவை.

'இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம்' மிகுந்த நுண்ணறிவோடு திட்டமிடப்பட்ட ஒன்றாகும். வாரிசுரிமையின் மிகச் சிக்கலான பிரச்சனைகளைப் பயனுள்ள வகையில் கையாளுவதால் அது நமது போற்றுதலுக்குரியதாகும்' என்று அவர் கூறுகிறார்.

மேலும் 'இஸ்லாமியச் சட்டத்தில் கடமையாக்கப்பட்டுள்ள விரிவான வாரிசுரிமை முறை எந்த அளவிற்கு இயலுமோ அந்த அளவிற்குத் துல்லியமாக உள்ளது' என்றும் புகழ்ந்துரைக்கிறார்.

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் மீது கூறப்படும்

ஒரேயொரு குறை என்னவெனில் அது பின்னங்களாக இருப் பதும் அதனால் சொத்து சிறு சிறு துண்டுகளாகப் பிரிந்து விடுவதும் தான். குறிப்பாக ஒரு வீடு அல்லது ஒரு வயல் சிறுசிறு துண்டுகளாய்ப் பிரிக்கப்படும் போது யாருக்கும் பயன்படாமல் போய் விடும் என்பது நாம் அறிந்ததே.

'ஆனால் அந்தக் குறையும் கூட பிற வாரிசுகளிடம் இருந்து விலைக்கு வாங்கும் முன்னுரிமையை அந்நியரை விட மற்ற வாரிசுதாரர்களுக்கு வழங்குவதன் மூலம் இஸ்லாமிய சட்டம் போக்கிவிடுகிறது' என்றும் G.C. வெங்கட சுப்பாராவ் கூறுகிறார்.

அதாவது இருவருக்குச் சொந்தமான சொத்தில் தமது பங்கை ஒருவர் விற்க விரும்பினால் அவர் தமது பங்காளிக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

> *'பங்காளிக்குத் தான் விற்க வேண்டும் என்பது, பிரிக்கப்படாத ஒவ்வொரு சொத்திலும் உள்ளது! எல்லைகள் வகுக்கப்பட்டுப் பாதைகள் (பிரித்துக்) குறிக்கப்பட்டு விட்டால் பங்காளிக்குத் தான் விற்க வேண்டும் என்ற நிலை இல்லை! ' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) விதித்தார்கள் என ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார்.*

**ஆதாரம் : புகாரி 2257**

இந்த முன்னுரிமையால்தான் இந்த விரிவான வாரிசுரிமை முறை காலத்தின் சோதனையைக் கடந்து இன்றுவரை அதன் அசல் வடிவத்தில் நிலைத்திருக்க முடிகிறது' என்று அப்பேராசிரியர் வியந்து போற்றுகிறார்.

இந்த சொத்துரிமைப் பங்கு விகிதாச்சாரங்கள் நம்மையெல்லாம் படைத்த இறைவனே ஏற்படுத்திய கணக்கீடு ஆகும். மனிதர்களாகிய நாம் அதை ஏற்படுத்தி இருந்தால் நமக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற ரீதியில் பாகுபடுத்தி இருப் போம். ஆனால் கருணையாளனான இறைவன் யாருக்கும் எந்தப் பாதகமுமின்றி எல்லோருக்கும் சொத்துக் கிடைக்கும் வகையில் பங்கீடு செய்துள்ளான்.

நபி (ஸல்) அவர்கள் கூட, ஏன் நபிமார்கள் எவரும் இந்த சொத்துப் பங்கீடு பிரச்சனையில் தலையிடவில்லை என்பது மட்டுமின்றி அவர்களின் சொத்து கூட பொதுவுடமை தான். அது எங்களது வாரிசுகளுக்கு வழங்கப்படக் கூடாது என்று

உறுதியாகக் கூறிச் சென்றுள்ளனர். இது இஸ்லாமிய மார்க்கத்தின் தனிச் சிறப்பாகும்.

*"என் வாரிசுகள் ஒரு தங்க நாணயத்தைக் கூட வாரிசுப் பங்காகப் பெற மாட்டார்கள். என் துணைவியருக்கான வாழ்க்கைச் செலவும் என் ஊழியரின் ஊதியமும் தவிர நான் விட்டுச் செல்பவை யெல்லாம் தர்மமே யாகும்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்.*

**ஆதாரம் : புகாரி 6729, 2776, 3096 முஸ்லிம் 1760, 1761, முஅத்தா, அபூதாவூத் 2974, அஹ்மத்**

இது பற்றி மிகத் தெளிவாகப் பின்வரும் நபி மொழியில் வந்துள்ளது.

*நபி (ஸல்) அவர்களின் மகள் ஃபாத்திமா (ரலி) அவர்கள் (நபியவர்களின் இறப்பிற்குப் பிறகு கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஆளனுப்பி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் ஒதுக்கித் தந்திருந்த மதீனா மற்றும் ஃபதக் சொத்திலிருந்தும் கைபரின் ஐந்தில் ஒரு பகுதி நிதியில் எஞ்சியதிலிருந்தும் தமக்குச் சேர, வேண்டிய வாரிசுரிமையைக் கேட்டார்கள். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "(நபிமார்களான) எங்கள் சொத்துக்களுக்கு வாரிசாக யாரும் வர முடியாது. நாங்கள் விட்டுச் செய்பவையெல்லாம் தர்மம் செய்யப் பட வேண்டியவை ஆகும். இந்தச் செல்வத்திலிருந்தே முஹம்மதின் குடும்பத்தினர் சாப்பிடுவார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். (எனவே) அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தர்மச் சொத்தில் நான் எந்தச் சிறுமாற்றத்தையும் செய்ய மாட்டேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் எந்நிலையில் அந்த சொத்துக்கள் இருந்து வந்தனவோ, அதே நிலையில் அவை நீடிக்கும். அதில் (அந்தச் சொத்துகளைப் பங்கிடும் விஷயத்தில்) நபி (ஸல்) அவர்கள் செயல்பட்டபடியே நானும் செயல்படுவேன்" என்று (ஃபாத்திமா அவர்களுக்கு) பதில்கூறி (யனுப்பி)னார்கள். ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் அவற்றில் எதையும் ஒப்படைக்க அபூபக்ர் (ரலி)*

மறுத்துவிட்டார்கள். இதனால் அபூபக்ர் (ரலி) மீது மனவருத்தம் கொண்டு இறக்கும் வரையில் அவர்களுடன் ஃபாத்திமா (ரலி) அவர்கள் பேசவில்லை. (புகாரியிலுள்ள ஹதீஸின் சுருக்கம்.)

**பார்க்க புகாரி எண் 3092, 3093**

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் சிறப்பு பற்றி மு.ஊ. வெங்கட சுப்பாராவ் என்ன கூறுகிறார்?*

*(2) நபிமார்களின் சொத்துக்களை அவர்களின் வாரிசுகள் பெற முடியுமா?*

# 3. கடனும் வஸிய்யத்தும்

ஒருவர் இறந்த பின் அவரது சொத்து வாரிசுக்காரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப் படுவதற்கு முன்பு பல்வேறு விசயங்கள் கவனத்தில் கொள்ளப் பட வேண்டியது அவசியமாகும்.

வாரிசுரிமை பற்றிக் குறிப்பிடும் 4:11,12 வது வசனங்களில் . . . இவ்வாறு வாரிசுகளுக்குச் சொத்து பிரித்துக் கொடுப்பது அவர் செய்துள்ள மரணசாசனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னர் தான். . . என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான். எனவே, இறந்தவருக்குக் கடன் இருந்தால் சொத்து பிரிக்கப்படுவதற்கு முன் கடன் அடைக்கப்பட வேண்டும்.

*'மார்க்கப் போரில் உயிர் நீத்த ஷஹீத் (தியாகி)க்கு கடனைத் தவிர மற்றெல்லாப் பாவங்களையும் அல்லாஹ் மன்னித்து விடுகிறான். இந்த விஷயத்தை எனக்கு ஜிப்ரீல் (அலை) கூறினார்கள் என நபி (ஸல்) கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ரு பின் அல்ஆஸ் (ரலி) அறிவிக்கிறார்.*

**ஆதாரம் : அஹ்மத் 2.220, முஸ்லிம் 4860, திர்மிதி 1640, 1886, 1712 நஸயீ 3156**

மார்க்கப் போரில் உயிர் நீத்த ஷஹீத் என்று கூறப்படும் உயிர்த்தியாகி கேள்வி கணக்கு ஏதுமின்றி சுவர்க்கம் செல்வார் என்றிருக்க அவருக்குக் கடன் இருக்குமானால் அதுமட்டும் மன்னிக்கப்படாது. ஏனெனில் கடன் என்பது பிறரது உரிமை ஆகும். பிறரது உரிமை அவர் மன்னிக்காதவரை மன்னிக்கப்பட மாட்டாது. எனவே தான் இறந்தவருக்குக் கடன் இருந்தால் அதை முதலில் கொடுத்துவிட வேண்டும். அல்லது இறந்த வருக்குக் கடன் கொடுத்தவர் விரும்பினால் அந்தக் கடனைத் திரும்பிப் பெறாமல் மன்னித்து விடலாம். அதுவரை உயிர்த் தியாகியான ஷஹீத் கூட மன்னிக்கப்பட மாட்டார்.

சொத்து முழுவதும் கடனுக்கே சரியாகப் போனால் கடன் அடைக்கப்பட்டு, வாரிசுக்காரர்களுக்கு ஏதும் கொடுக்கப்பட மாட்டாது. அல்லது வாரிசுக்காரர்கள் இருக்க, கடன் தொகை, இருக்கும் சொத்தை விட அதிகமாக இருந்தால் வாரிசுக்கார்கள் தான் அந்தக் கடனுக்கும் பொறுப்பேற்க வேண்டும். அவர்களும் வறியவர்களாக இருந்தால் செல்வந்தர்கள் யாராவது அக்கட

னுக்குப் பொறுப்பேற்கலாம். அல்லது கடன் கொடுத்தவர்கள் பெருந் தன்மையோடு கடனை மன்னித்து விடலாம்.

கடன் என்பதில் மக்களிடம் வாங்கிய கடன் மட்டுமின்றி இறந்தவர் செலுத்த வேண்டிய ஸகாத், நஷ்டஈட்டுத் தொகை முதலியவையும் அடங்கும் என்று சில அறிஞர்கள் குறிப்பிடுகின் றனர். மேலும் மனைவிக்குக் கொடுக்க வேண்டிய மஹர் கூட கடன் தான் என்றும் குறிப்பிடுகின்றனர். மற்றும் சில அறிஞர்கள், ஒரு மனிதன் இறந்த பின்னர் அல்லாஹ்வுக்காகச் செலுத்த வேண்டிய ஸகாத் போன்றவற்றை நிறைவேற்றத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அம்மய்யித்தை அடக்கம் செய்வதற்கான செலவினங் களும் கஃபன் ஆடை போன்றவையும் அவரது சொத்தில் இருந்துதான் செலவு செய்ய வேண்டும். அவரது உறவினர்களில் மகன், மகள் போன்றவர்கள் தமது சொந்தப் பணத்தில் செலவு செய்தால் அதுகுற்றமாகாது. எனவே, இறந்தவருக்குக் கடன் இருந்தால் அதைக் கொடுத்த பின்னர்தான் அவரது சொத்து வாரிசுகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும்.

**வஸிய்யத் (உயில்) அவசியமா?**

வஸிய்யத் என்றால் இறந்தவர் இறக்கும் முன் அல்லது இறக்கும் தருவாயில் சொத்துரிமைப் பங்கீடு பெறாதவர்களுக்கு அல்லது ஏதாவது தர்ம காரியத்திற்கு அல்லது மத்ரஸா, பள்ளி வாசல், அறக்கட்டளை போன்றவற்றிற்கு தனது சொத்தை சாச னம் செய்தல் ஆகும்.

*வஸிய்யத் செய்யத்தக்க பொருள் வளம் பெற்றவராக ஒருவர் இருந்தால், அப்பொருள் அவருக்குக் கிடைத்து, இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் வஸிய்யத்து எழுதப்பட்டு விட வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்.*

**(புகாரி, முஸ்லிம், முஅத்தா, திர்மிதி, அபூதாவூத், நஸயீ)**

*மேலும், இப்னு உமர் (ரலி) அவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களிடம் 'நான் இதைக் கேள்விப்பட்ட பின்னர், எனது வஸிய்யத்தை நான் எழுதி வைத்து விட்டேன். எழுதிவைக்காமல் ஓர் இரவு கூடக்கழித்ததில்லை!' எனவும் குறிப்பிடுகிறார்கள்.*

**(புகாரி, முஸ்லிம், அபூதாவூது, திர்மிதி, இப்னுமாஜா)**

'வஸிய்யத்து செய்யத்தக்க பொருளாதாரம் ஒரு முஸ்லிமிடம் இருக்க இரண்டு இரவுகள் கடக்கலாகாது!' என நபி (ஸல்) குறிப்பிட்டதாக அஹ்மதில் பதிவாகியுள்ளது.

'உங்களில் எவருக்கு மரணம் நெருங்கி விடுகிறதோ அவர், ஏதேனும் பொருள் விட்டுச் செல்பவராக இருப்பின் அவர் (தம்) பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் முறைப்படி வஸிய்யத் (மரண சாஸனம் ) செய்வது விதியாக்கப்பட்டிருக்கிறது. (இதை நியாயமான முறையில் நிறைவேற்றுவது) முத்தகீன்கள் (பயபக்தியுடையோர்) மீது கடமையாகும்.

வஸிய்யத்தை (மரணசாஸனத்தை)க் கேட்டபின்னர் எவரேனும் ஒருவர் அதை மாற்றினால், நிச்சயமாக அதன் பாவமெல்லாம் யார் அதை மாற்றுகிறார்களோ, அவர்கள் மீதே சாரும். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும் கேட்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கின்றான்.

*ஆனால் வஸிய்யத் செய்பவரிடம் (பாரபட்சம் போன்ற) தவறோ, அல்லது மனமுரண்டான அநீதமோ இருப்பதை அஞ்சி ஒருவர் (சம்பந்தப்பட்டவர்களிடையே) சமாதானம் செய்து அந்த (வஸியத்தை) சீர் செய்தால் அ(ப்படிச் செய்ப)வர் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனுமாகவும் இருக்கின்றான்.*

**(அல்குர்ஆன்: 2:180, 181, 182)**

இந்த ஆதாரங்களின் அடிப்படையில் வஸிய்யத் செய்வது அவசியம் என்கின்றனர் சிலர். ஒவ்வொரு வாரிசுகளுக்கும் உரிய பங்கு இவ்வளவு தான் எனக் கூறும் 4:11,12 மற்றும் 4:176வது வசனங்கள் அருளப்படுவதற்கு முன்னருள்ள நிலையாகும் இது. வாரிசுகளின் பாகங்கள் இவ்வளவு என, இறைவன் வரையறுத்து விட்டதால் வஸிய்யத் செய்வது அவசியமானது அல்ல. ஒருவர் விரும்பினால் வஸிய்யத் செய்யத் தடை எதுவும் இல்லை.

ஆயினும், யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்று இறைவன் வரையறுத்து விட்டானோ அவர்களுக்காக வஸிய்யத் செய்ய அனுமதி இல்லை. அவர்கள் அல்லாத மற்றவர்களுக்காக வஸிய்யத் செய்யத் தடை இல்லை. இதற்கான ஆதாரங்கள் வருமாறு

மேற்கண்ட 2:180-வது திருவசனத்தில் பெற்றோருக்கும் உறவினருக்கும் வஸிய்யத் செய்ய வேண்டுமென வலியுறுத்தப்

பட்டிருக்கிறது. இந்தத் திருவசனம் பற்றிக் குறிப்பிடுகின்ற அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், வாரிசுரிமைச் சட்டம் பற்றிய, முன்னர் குறிப்பிட்ட திருவசனங்கள் இறங்கிய வுடன் 2:180வது திருவசனம் மாற்றப்பட்டு விட்டது எனக் குறிப்பிடுகிறார்கள்.

'நிச்சயமாக! அல்லாஹ் யாருக்கு எவ்வளவு பங்கு உரித்தான தோ, அந்த அளவு அவர்களுக்கு வழங்கிவிட்டான். எனவே வாரிசுரிமைப் பங்கு பெற்றவர்களுக்கு வஸிய்யத்து செய்யலாகாது என நபி (ஸல்) கூறினார்கள். அபு உமாமதல் பாஹிலீ (ரலி) அறிவிக்கும் இந்த ஹதீஸ் அபூதாவூதில் 2870 வது ஹதீஸாகும்.

எனவே வாரிசுரிமை பங்கு பெற்றவர்களுக்கு, அறவே வஸிய் யத்து செய்யலாகாது. பங்கு பெறாதவர்களுக்கு வஸிய்யத்து செய்யலாம்.

**வாரிசுக்காரர்களுக்குத் தீங்கிழைக்கக் கூடாது:**

(மரண சாசனத்தின் மூலம் வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படக் கூடாது என அல்லாஹ் குறிப்பிடுகிறான் (அல்குர்ஆன் 4:12) எனவே வாரிசுகளுக்குக் கிடைக்க வேண்டிய பாகத்தில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாதவாறு வஸிய்யத்து செய்ய வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது.

*நபி (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜுடைய ஆண்டில் நான் நோய் வாய்ப்பட்டிருந்த போது, என்னை நோய் வினவுவதற்காக ரஸூல் (ஸல்) அவர்கள் வந்தார்கள். அப்போது நான் அல்லாஹ்வின் தூதரே! நான் கடுமையாக நோய் வாய்ப்பட்டு விட்டேன் என்பதை நீங்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றீர்கள். எனக்கு ஏராளமான பொருட்செல்வம் உள்ளது. எனக்கு ஒரே ஒரு மகள் மட்டும்தான் வாரிசு. எனவே எனது செல்வத்தில் மூன்றில் இரண்டு பங்கை தானமாக வழங்கிடட்டுமா? எனக் கேட்க, 'வேண்டாம்' என நபி (ஸல்) அவர்கள் கூறிவிட்டார்கள். 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது சொத்தில் பாதியை தானம் கொடுத்துவிடவா?' எனக் கேட்க அதற்கும் மறுத்து விட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது சொத்தில் மூன்றில் ஒரு பங்கை தருமம் செய்துவிடவா? என நான் மீண்டும் கேட்க, 'மூன்றில் ஒரு பங்கு என்பது அதிகம்', என்று சொன்ன நபி (ஸல்) அவர்கள்*

*'மக்களிடம் கையேந்திப் பிழைக்கும் ஏழைகளாக உமது சந்ததியினரை விட்டுச் செல்வதை விட பணக்காரர்களாக விட்டுச் செல்வது மிக நல்லது' என நபி (ஸல்) அவர்கள் தம்மிடம் கூறியதாக ஸஃது பின் அபீவக்காஸ் (ரலி) அறிவிக்கிறார்.*

**புகாரி எண். 3936, 4409, 5668, 6373**
**முஸ்லிம், முஅத்தா, அபூதாவூது, நஸயீ, திர்மிதி,**

எனவே வஸிய்யத்து செய்யும் போது மூன்றில் ஒரு பங்கை விட அதிகம் வஸிய்யத்து செய்து சொத்துரிமை உள்ளவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தலாகாது, மூன்றில் ஒரு பங்குக்கு மேல் வஸிய்யத்து செய்திருந்தால் அது செல்லாது எனவும் அறிய முடிகிறது. மேலும் சொத்துரிமை பெறத்தக்கவர்களுக்கும் வஸிய்யத் செய்திருந்தால் அதுவும் செல்லாது என்று அறியலாம்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) வாரிசுக்காரர்களுக்கு சொத்து பிரித்துக் கொடுக்கும் முன் கவனிக்கப்பட வேண்டிய காரியங்கள் எவை? அதற்கான ஆதாரங்களைக் குறிப்பிடுக.

(2) உயில் (வஸிய்யத்) என்றால் என்ன? அதன் அளவு என்ன?

(3) வாரிசுரிமை பெறக் கூடியவர்களுக்கு வஸிய்யத் செய்யலாமா?

# 4. வாரிசுரிமை பெறுவோர்

ஆண்களில் வாரிசுரிமை பெறக்கூடியவர்கள் பத்துப்பேர் ஆவர். விரிவாகச் சொன்னால் அவர்கள் 15 பேராக இருப்பார்கள். அவர்கள்,

1. மகன்
2. மகனின் மகன்
3. தந்தை
4. தந்தை வழிப் பாட்டன்
5. தாய் வழிச் சகோதரன்
6. தந்தை வழிச் சகோதரன்
7. தாய் தந்தை வழிச் சகோதரன்
8. தந்தை வழிச் சகோதரனின் மகன்
9. தாய் தந்தை ஒன்றுபட்ட சகோதரனின் மகன்
10. தாய் தந்தை ஒன்றுபட்ட சிறிய தகப்பனார்
11. தந்தை மட்டும் ஒன்றுபட்ட சிறிய தந்தை
12. தாய் தந்தை ஒன்றுபட்ட சிறிய தந்தையின் மகன்
13. தந்தை ஒன்றுபட்ட சிறிய தந்தையின் மகன்
14. கணவன்
15. அடிமையாயிருந்து விடுதலை பெற்றவன்.

இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வாரிசுக்காரர்களாக வந்தால் இவர்களில் மூவர் மட்டுமே வாரிசுரிமை பெறுவர்.

1. மகன்
2. தந்தை
3. கணவன்.

இவர்கள் தவிர ஏனையோர் மகன் அல்லது தந்தை இருப்பதால் வாரிசுரிமையை விட்டும் தடுக்கப்படுவர்.

சொத்துரிமைப் பெறக்கூடியவர்களில் தாய்தந்தை ஒன்று பட்ட சிறிய தந்தை, தந்தை மட்டும் ஒன்றுபட்ட சிறிய தந்தை என்று குறிப்பிடப்படுகிறது.

பெண்களில் வாரிசுரிமை பெறுவோர் எழுவர் ஆவர். விரிவாகச் சொன்னால் பத்துப் பேர் வாரிசுரிமை பெறுவர்.

1. மகள்

2. மகனின் மகள்

3. தாய்

4. தாய் வழிப்பாட்டி

5. தந்தை வழிப்பாட்டி

6. தாய் தந்தை ஒன்றுபட்ட சகோதரி

7. தந்தை வழிச் சகோதரி

8. தாய் வழிச் சகோதரி

9. மனைவி

10. அடிமையாயிருந்து விடுதலைப் பெற்ற பெண்.

வாரிசுரிமை பெறும் பெண்கள் அனைவரும் ஒரே நேரத்தில் இருந்தால் இவர்களில் ஐவர் மட்டுமே வாரிசுரிமை பெறுவர். அவர்கள்

1. மகள்

2. மகனின் மகள்

3. தாய்

4. மனைவி

5. தாய் தந்தையர் ஒன்றுபட்ட சகோதரி.

ஏனையோர் இவர்களால் வாரிசுரிமை பெறத் தடை செய்யப்படுவர்.

மேற்கூறப்பட்டவர்களில் ஆண்களும், பெண்களும் ஆகிய அனைவரும் வாரிசுரிமை பெறுவோரில் இடம் பெற்றால், மொத்தத்தில் ஐவர் மட்டுமே வாரிசுரிமைப் பங்கீடு பெறுவர். அவர்கள்,

1. தந்தை

2. தாய்

3. மகன்

4. மகள்

5. கணவன் அல்லது மனைவி.

ஏனையோர் இவர்களால் வாரிசுரிமை இழப்பர்.

சொத்துரிமை கணக்குகளில் பெரும்பாலும் ஆண்களில் 4 பேரும் பெண்களில் 8 பேரும் மட்டுமே வாரிசுகளாக வருவர்.

| பெண் பங்குதாரர்கள் | ஆண்களில் பங்குதாரர்கள் |
|---|---|
| (1) மனைவி | (1) கணவன் |
| (2) தாய் | (2) தந்தை |

(3) பாட்டி
(4) மகள்
(5) மகனின் மகள்
(6) தாய் வழிச் சகோதரி
(7) உடன் பிறந்த சகோதரி
(8) தந்தை வழிச் சகோதரி

(3) பாட்டன்
(4) தாய் வழிச் சகோதரன்

இவர்கள் தவிர மகன், மகனின் மகன், சிறிய தந்தை, உரிமை விடப்பட்ட அடிமை போன்றோர் அஸபாக்களாக வருவர்.

**வாரிசுரிமை ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்று ஆகும்.**

1. வம்சா வழித் தொடர்பு.
2. திருமணத் தொடர்பு
3. ஒப்பந்த அடிப்படையான தொடர்பு (அடிமை-எஜமான் என்ற தொடர்பு)

**3 வது வகையான ஒப்பந்த அடிப்படையிலான தொடர்பு இரு வகைப்படும்.**

1. நண்பர்கள், கூட்டாக வியாபாரம் செய்வோர் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உடன்படிக்கை.
2. அடிமை உரிமை விடப்பட்டதால் ஏற்படும் தொடர்பு.

**வாரிசுரிமையைத் தடுப்பவை மூன்று நிலைகள் ஆகும். அவையாவன**

1. அடிமைத்தனம்
2. கொலை செய்தல்:- கொன்றவன் கொல்லப்பட்டவனிட -மிருந்து எதையும் வாரிசாகப் பெற மாட்டான்.
3. மதமாற்றம் - முஸ்லிமுக்கு காஃபிர் வாரிசாக மாட்டான். அது போலக் காஃபிருக்கு (இறை நிராகரிப்பாளனுக்கு) ஒரு முஸ்லிம் வாரிசுரிமை பெறமாட்டான்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) ஆண்களில் வாரிசுரிமை பெறுவோர் எத்தனைபேர்? அவர்கள் யார் யார்?

(2) பெண்களில் வாரிசுரிமை பெறுவோர் யார் யார்?

(3) ஆண்களும் பெண்களும் ஆகிய அனைத்து வாரிசுகளும் வாரிசுரிமை பெறக்கூடியவர்களாக இருக்கும் நிலைை தோன்றினால் அப்போது வாரிசுரிமை பெறுவோர் யார் யார்?

(4) வாரிசுரிமை எந்தெந்தக் காரணங்களால் ஏற்படும்?

(5) வாரிசுரிமையைத் தடுக்கும் காரணங்கள் யாவை?

# 5. வாரிசுரிமையின் வகைகளும் வாரிசுகளின் வகைகளும்

**வாரிசுரிமை பெறும் வகைகள் இரண்டாகும்.**

*1. குர்ஆனில் கூறப்பட்ட பொதுப் பங்கீடு பெறும் பங்குதாரர்கள் (Sharers) குர்ஆனில் 1/2, 1/4, 1/8, 1/6, 1/3, 2/3, ஆகிய ஆறு விகிதங்கள் கூறப்படுகின்றன.*

*2. மேற்கண்ட விகிதங்களைப் பெறும் வாரிசுரிமைக் காரர்களுக்குக் கொடுத்தது போக மீதியுள்ளதைப் பெறுபவர்கள் அல்லது வாரிசுரிமை பெறுவோர் யாரும் இல்லாத போது சொத்து முழுவதையும் பெறுவோரான அஸபாக்கள் (எச்சதாரர்கள் Residuaries)*

**வாரிசுகள் மூன்று வகையினர் ஆவர்.**

*1. குர்ஆனில் கூறப்பட்ட பொதுப்பங்கீட்டைப் பெறுவோர்*

*2. அஸபாவாகப் பங்கு பெறுவோர்.*

*3. பொதுப் பங்கீடும் பெற்று அஸபாவாகவும் பங்கு பெறுவோர்.*

*இவை பற்றிப் பின்னர் விரிவாக விளக்கப்படும்.*

*வாரிசுரிமை பெறுவோர் என்றால் இறந்தவரிலிருந்து கணக்கிட வேண்டும். உதாரணமாக மகன் வாரிசுரிமை பெறுவான், மகள் வாரிசுரிமை பெறுவாள், சகோதரன் வாரிசுரிமை பெறுவான், மனைவி வாரிசுரிமை பெறுவாள் என்றால் இறந்தவருக்கு மகன், இறந்தவருக்கு மகள், இறந்தவரது சகோதரன், இறந்தவரின் மனைவி என்று பொருள் கொள்ள வேண்டும்.*

*மேற் கூறப்பட்ட பங்குதாரர்களும் எச்சதாரர்களான அஸபாக்களும் பின் வரும் நான்கு வகையினரில் அடங்குவர்.*

*1. ஏறுமுறை மூதாதையர்*

*2. வழித்தோன்றல்கள்*

*3. கிளை வழியினர்.*

*4. திருமணமுறையில் உறவினர்.*

| | | |
|---|---|---|
| | ஏறுமுறை மூதாதையர்<br>(தாய், தந்தை, பாட்டன்போன்றோர்)<br>↑ | |
| திருமணமுறை உறவினர்<br>(கணவன், மனைவி) ← | இறந்தவரின் | → கிளைவழியினர்<br>சகோதரன், சகோதரி |
| | ↓<br>வழித்தோன்றல்கள்<br>(மகன்,மகள்,மகனின் மகள் போன்றோர்) | |

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) அல்குர்ஆனில் கூறப்படும் பொதுப்பங்கீடுகள் எவை எவை?*

*(2) வாரிசுகள் எத்தவை வகை?*

# 6. பெண்களுக்கு அநீதமான பங்கீடா?

இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தில் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப் பட்டுள்ளது. ஆண்களுக்கு 2 பங்கு, பெண்களுக்கு ஒரு பங்கு வழங்கப்படுகிறது. இதைச் சிலர் குறை கூறுகின்றனர். ஆனால் இது நீதியாளன் அல்லாஹ் வழங்கிய சட்டம் ஆகும். மனிதர்கள் சட்டம் இயற்றினால் அது குறையுள்ளதாக இருக்கும். அல்லாஹ்வின் சட்டம் நிறைவானது, குறைவற்றது.

> பெற்றோரோ நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்றவற்றிலிருந்து ஆண்களுக்குப் பாகமுண்டு. பெற்றோரோ நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்றவற்றிலிருந்து பெண்களுக்கும் பாகமுண்டு. குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ இருப்பினும் சரியே. (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட சட்டம் ஆகும்.

**(அல்குர்ஆன் 4:7)**

இந்த வசனம் இறந்தவர்களின் சொத்துக்களில் அவர்களது உறவினரான பெண்களுக்கும் உரிமை உண்டு என்று கூறுகிறது. அதாவது 1400 ஆண்டுகளுக்கு முன்பே, பெண்களுக்கு சொத்துக்களில் வாரிசுரிமை உலகில் தரப்படாத ஒரு காலகட்டத்தில், இஸ்லாம் பெண்களுக்கு வாரிசுரிமை உண்டு எனச் சட்டம் இயற்றியது. 'பெண்களுக்கும்' என்று இவ்வசனம் அழுத்தம் திருத்தமாகக் கூறுவதிலிருந்து அதற்கு முன்பு பெண்களுக்கு வாரிசுரிமை இல்லை என்று உறுதியாக அறிய முடிகிறது.

இறந்தவர் சொத்துக்களில் பெண்களுக்கு உரிமை உண்டு என்ற பிற சட்டங்கள் சுமார் 300 முதல் 500 ஆண்டுகளுக்கு உட்பட்டவையே. நம் நாட்டில் ஹிந்து சமுதாயத்திலும் ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின் ஏற்பட்ட சட்டங்களில் தான் பெண்களுக்கு வாரிசுரிமை வழங்கப்பட்டது.

இஸ்லாமியச் சட்டத்தில் பெண்களுக்கு வாரிசுரிமை உண்டு என்று சொன்னாலும் அவர்களை ஒத்த உறவில் உள்ள ஆண்க

ளுக்குக் கிடைக்கும் பாகம் எவ்வளவோ அதில் பாதிதான் பெண்களுக்கு.

இன்றைய பெண்ணியவாதிகளும், இந்துத்துவ பிரசாரகர்களும் இதைக் குறை கூறுகின்றனர். இவர்கள் மட்டுமின்றி முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்ளும் சிலரும் பெண்களுக்கு குறைவான பாகத்தை இஸ்லாம் வழங்குவதைக் குறை கூறி வருகின்றனர். நல்ல முறையில் தொழுகை போன்ற நல்லறங்களில் ஈடுபாடுள்ள குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் கூட, தங்களுக்குச் சொத்துரிமையில் குறைவாகச் சொத்து கிடைக்கும் போது இஸ்லாமிய சட்டத்தைக் குறை கூறாமல் இருப்பதில்லை. ஆகையால், இஸ்லாம் ஏன் ஆண்களுக்குக் கிடைக்கும் பாகத்தில், பாதியைப் பெண்களுக்கு வழங்குகிறது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

## ஆண்களின் பொறுப்பு

ஆண்கள் பெண்களை விட உடலால் பலம் வாய்ந்தவர்கள் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வாறு ஆண்களையும் பெண்களையும் வேறுபடுத்திப் படைத்த இறைவன், அந்தப் பலம் வாய்ந்த ஆணினம் பலவீனமான பெண்ணினத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை ஏற்படுத்தியுள்ளான். இஸ்லாத்தில் மட்டுமின்றி உலகில் வாழும் எல்லாச் சமூக மக்களிடமும் பெரும்பாலும் இது தான் நடைமுறை. ஓர் ஆண் தனது மனைவி, மக்கள் மற்றும் தாய் போன்ற உறவினர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பாளியாக இருக்கின்றான்.

குடும்பச் செலவுக்காகப் பொருளீட்ட வேண்டிய பொறுப்பு ஆண் மீதே சுமத்தப்பட்டுள்ளது.

பெண்களின் நிர்வாகிகளாக ஆண்களே இருக்கின்றனர். ஏனெனில் அவர்களில் ஒருவரை விட மற்றவரை அல்லாஹ் (உடல் வலிமையால்) மேன்மைப்படுத்தியுள்ளான். அன்றி (ஆண்களாகிய) அவர்கள் தமது பொருளாதாரத்தை பெண்களுக்காகச் செலவு செய்கின்றனர். ஆகவே நல்லொழுக்கமான பெண்கள் (இறைவனுடைய இச்சட்டத்திற்குப்) பணிந்து நடப்பார்கள்.

**(உலகப் பொதுமறை அல்குர்ஆன் 4:34)**

இவ்வாறிருக்க குடும்பத்திற்கு செலவு செய்ய வேண்டிய பொறுப்பு இல்லாத பெண்ணுக்கும் சொத்துரிமை வழங்கப்பட்டிருப்பது பெண்களுக்குச் சாதகமானது தான். பாதகமானது

அல்ல. அது ஆண்களுக்குக் கிடைக்கும் சொத்தில் பாதியானா லும் சாதகமானது தான்.

இஸ்லாமிய சமூக அமைப்பில் ஒரு பெண் எந்த நிலையிலும் தனக்காகக் கூடச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

ஒரு பெண் மண முடிக்கப்படுமுன் அவளது தந்தையும் தந்தை இல்லாத போது சகோதரனும் அவளது வாழ்வியல் தேவைகளுக்குப் பொறுப்பாக்கப்படுகிறார்கள்.

*'ஒருவரிடம் மூன்று பெண் மக்களோ, சகோதரிகளோ, அல்லது இரண்டு பெண் மக்களோ சகோதரிகளோ இருந்து அவர்களை நல்லவிதமாக வளர்த்து அவர்க ளிடம் பொறுமையாய் இருந்து (அவர்கள் விஷயத்தில்) அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொண்டால் அவர் சுவர்க் கத்தில் நுழைவார்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய தாக அபூஸயீத் (ரலி) அறிவிக்கிறார்.*

**(ஆதாரம்:– திர்மிதி)**

மண முடிக்கப்படும் போது தனக்குக் கணவனாக வருபவனி டமிருந்து மஹர் என்ற மணக்கொடை பெற்றுக் கொள்ள பெண் ணுக்கு வழி செய்யப்பட்டுள்ளது. அது அவளது வாழ்நாள் முழுவதும் தேவைப்படும் செலவினங்களுக்குப் போதுமான அளவு கூட வாங்கிக் கொள்ளலாம். கணவன் கைவிட்டு விடும் சூழ்நிலைகளில் அது அவளுக்குப் பயன்படும்.

ஒரு பெண் தன் தந்தையின் பொறுப்பிலிருந்து மணமுடிக்கப் பட்டு கணவன் வீட்டிற்கு வந்துவிட்டால் அவளது செலவினங் களுக்கு கணவன் பொறுப்பேற்கிறான். எந்த அளவுக்கென்றால் குழந்தை பெற்று அக்குழந்தைக்குப் பால் கொடுப்பதற்கும் கூட கணவனிடமிருந்து கூலி பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப் பட்டுள்ளது.

*. . . பாலூட்டும் தாய்களுக்கு முறைப்படி உணவும், உடையும் கொடுத்து வருவது குழந்தையுடைய தந்தை மீது கடமையாகும் . . .*

**(உலகப் பொதுமறை குர்ஆன் 2:233)**

*'அல்லாஹ்வின் தூதர் அவர்களிடம், எங்களில் ஒருவ ரின் மனைவிக்கு அவளது கணவன் செய்ய வேண்டிய கடமை என்ன? என நான் கேட்டேன். அதற்கு அவர்கள், 'நீ உணவு உண்டால் அவளுக்கும் உண்ணக்*

*கொடுக்கவும். நீ உடுத்துவது போல் அவளுக்கும் உடை கொடுக்கவும். அவளது முகத்தில் அடிக்காதீர். அவளைப் பழித்துப் பேசாதீர். (உங்களுக்குள் பிணக்கு ஏற்பட்டால்) வீட்டிலே தவிர அவளை வெறுக்காதீர்' என்று கூறியதாக முஆவியா பின் ஹைதா (ரலி) அறிவிக்கிறார்.*

**(ஆதாரம்:– அபூதாவூத்)**

இதுபோன்றே ஒரு தாய் முதுமையடைந்து விட்டால் அவளது வாழ்வியல் செலவினங்களை மகன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது.

*நபியே! எதை (யாருக்கு) செலவு செய்வது? என்று உம்மிடம் கேட்கின்றனர். நீர் கூறுவீராக:- நீங்கள் பொருளாதாரத்தில் இருந்து செலவு செய்வது பெற்றோருக்கும் உறவினருக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப் போக்கர்களுக்கும் உரியதாகும்.*

**(உலகப் பொதுமறை அல்குர்ஆன் 2:213)**

எனவே பெண்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை அவர்களுக்கான எல்லாச் செலவுகளுக்கும் பொறுப்பேற்கும் ஆண்களுக்குப் பெண்களைப் போல இருமடங்கு வாரிசுரிமை வழங்கியிருப்பது மிகவும் நியாயமானது. எவ்வகையிலும் பெண்களுக்கு அநீதியானது அன்று.

*அல்லாஹ்வும் அவனது திருத்தூதரும் யாதொரு காரியத்தை முடிவு செய்து விட்டால், அவர்களுடைய அக் காரியத்தில் சுயமாக வேறு கருத்து கொள்வதற்கு இறை நம்பிக்கை (ஈமான்) கொண்ட எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமை இல்லை. அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எவர் மாறு செய்கிறாரோ அவர் பகிரங்கமான வழிகேடாக வழி கெட்டுவிட்டார்.*

**(உலகப் பொதுமறை அல்குர்ஆன் 33:36)**

இந்த வசனத்தின் படி இஸ்லாமியர்கள், இந்தச் சட்டத்தையும், ஏனைய பிற இஸ்லாமிய சட்டங்களையும் குறை சொன்னால் அவர்கள் பகிரங்கமான வழிகேட்டில் உள்ளனர் என்பது மட்டுமின்றி இஸ்லாத்தை விட்டும் வெளியேறி மறுமையில்

நிரந்தர நரகத்திற்கு உரியவர்களாக ஆகிவிடுவர் என்பதை அறிந்து நடக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

தற்போது தான் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கியவர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்பே பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கிய இஸ்லாத்தைக் குறை சொல்லத் தகுதியே அற்றவர்கள். அந்தக் காலகட்டத்தில் பெண்களுக்கு மனித உரிமைகளே மறுக்கப்பட்டிருந்தன. பெண்கள் மனிதப் பிறவிகள் தானா என்பதில் சந்தேகம் கொண்டிருந்தனர். அத்தகைய சூழ்நிலையில் இஸ்லாம் தான் பெண்களுக்குச் சொத்துரிமை உட்பட எல்லா உரிமைகளையும் வழங்கிச் சிறப்பித்தது.

ஆணும், பெண்ணும் சமம் என்று கூக்குரல் இடும் முற்போக்குவாதிகள் சொல்லும் சமத்துவம், பெண்களுக்கு ஆடைக் குறைப்பும், அழகுப் போட்டிகளில் பங்கு கொண்டு ஆண்களுக்கு கிளு கிளுப்பை ஊட்டுவதும் தவிர வேறில்லை. ஆண்களைப் போல் வேலைக்குச் சென்று ஆண்களின் காமப் பசிக்கு இரையாகி, விட்டில் குழந்தைகளையும் கணவனையும் கவனிக்க முடியாமல் சீரழியும் சமத்துவம் நம் பெண்களுக்குத் தேவையற்றது.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) இஸ்லாமியச் சொத்துரிமைச் சட்டத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்கு எந்த அளவு?

(2) ஆண்களுக்கு 2 பங்கு வழங்கிய இஸ்லாமிய சொத்துரிமைச் சட்டம் பெண்களுக்கும் அதேபோன்று வழங்கவில்லை ஏன்?

# 7. கணவனுக்குக் கிடைக்கும் பங்குகள்

## மனைவிக்குக் கிடைக்கும் பங்குகள்

*கணவன் பங்கு பெறும் முறைகள் இரண்டாகும்.*

**கணவன்**

**1/2 பங்கு** **1/4 பங்கு**

**1/2 பாகம் பெறும் நிலை:-**

*இறந்து போன மனைவிக்கு இந்தக் கணவன் மூலமோ, அல்லது வேறு கணவன் மூலமோ குழந்தைகள் இல்லாவிட்டால், அல்லது மகனின் குழந்தைகளோ அல்லது ஆண் வழிச் சந்ததியினரில் ஒருவரும் இல்லாவிட்டால் அவள் விட்டுச் செல்லும் சொத்தில் அரைப்பாகம் கணவனுக்குக் கிடைக்கும். (குழந்தைகள் என்பது ஆண், பெண் இரு பாலாரையும் குறிக்கும்)*

**1/4 பாகம் பெறும் நிலை:-**

*இறந்த மனைவிக்கு மேற்கூறியவர்களில் யாரேனும் இருந்தால் அவளது சொத்தில் கணவனுக்கு கால் பாகம் கிடைக்கும்.*

*மனைவி பாகம் பெறும் முறை இரண்டாகும்.*

**மனைவி**

**1/4 பாகம்** **1/8 பாகம்**

**1/4 பாகம் பெறும் நிலை:-**

*இறந்து போன கணவனுக்கு இந்த மனைவியின் மூலமாகவோ அல்லது வேறு மனைவியரின் மூலமாகவோ குழந்தைகள் ஏதும் இல்லாவிட்டால் அல்லது ஆண் வழிச் சந்ததியில் யாரும் இல்லாவிட்டால் அவன் விட்டுச் சென்ற சொத்தில் மனைவிக்கு 1/4 பாகம் கிடைக்கும்.*

1/8 பாகம் பெறும் நிலை:-

இறந்த கணவனுக்கு மேற் கூறியவர்களில் யாரேனும் இருந்தால் கணவனது சொத்தில் மனைவிக்கு 1/8 பாகம் கிடைக்கும்.

ஒரு முஸ்லிம் அதிகபட்சமாக நான்கு மனைவியரை மண முடித்துக் கொள்ளலாம். மனைவிக்குக் கிடைக்கும் பாகத்தில் எத்தனை மனைவியர் இருந்தாலும் அதை சமமாகவே பங்கிட்டுக் கொள்ள வேண்டும். ஒரேயொரு மனைவி இருந்தால் மேற்கண்ட நான்கில் ஒன்றையோ அல்லது எட்டில் ஒன்றையோ முழுதாகப் பெற்றுக் கொள்வாள். பல மனைவியர் இருந்தால் நான்கில் ஒரு பங்கில் அல்லது எட்டில் ஒரு பங்கில் தமக்கிடையே சமமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

நாம் முன்னர் கூறிய அடிமைத்தனம், கொலை, மாறுபட்ட மதங்கள் ஆகிய நிலைகளில் தவிர வேறெப்போதும் கணவன் மனைவி இருவரும் எந்நிலையிலும் பாகம் பெறுவதை தடுக்கும் தடைகள் யாரும் இல்லை.

**உதாரணங்கள்**

ஒருத்தி கணவனையும் அவளது தந்தையுடன் பிறந்த சகோதரனும் இருக்க, இறந்து விடுகிறாள். அவளது சொத்தை கீழ்க்காணும் முறைப்படிப் பங்கிட வேண்டும்.

**எடுத்துக்காட்டு - (1)**

| | |
|---|---|
| 1] **கணவன்** | **தந்தையுடன் பிறந்த சகோதரன்** |
| 1/2 | [அஸபா மீதியுள்ளதைப் பெறும் எச்சதாரர்] |

இந்நிலையில் சொத்தை இரண்டு பங்கு வைத்து ஒரு பங்கை கணவனுக்கும் மீதி ஒரு பங்கை தந்தையுடன் பிறந்த சகோதரனுக்கும் கொடுக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு - (2)**

| | |
|---|---|
| **கணவன்** | **மகன்** |
| 1/4 | [அஸபா மீதியுள்ளதைப் பெறும் எச்சதாரர்] |

ஒருத்தி கணவனும் மகனும் இருக்க இறந்து விடுகிறாள். இந்நிலையில் சொத்தை நான்கு பங்கு வைத்து கணவனுக்கு நான்கில் ஒரு பங்கும் மீதி 3பங்கை மகனுக்கும் கொடுக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு - (3)**

கணவனும் மகனின் மகன் இருந்தாலும் இதே போன்று தான் கணவனுக்கு ஒரு பங்கும் மீதி 3 பங்கை மகனின் மகனுக்கும் கொடுக்க வேண்டும். மகன் இல்லாவிட்டால் தான் மகனின் மகன் சொத்துரிமை பெறுவான்.

மேற்கண்ட உதாரணம் 1 - இல் இறந்த பெண்ணின் கணவனுடன் அவளது தந்தையுடன் பிறந்த சகோதரன் ஒரு நிலையிலும், 2,3 ஆகிய உதாரணங்களில் மகனும், மகனின் மகனும் இடம் பெறுகின்றனர். இவர்கள் 'அஸபா' அதாவது மீதியுள்ளதைப் பெறும் எச்சதாரர்களாக இடம் பெற்று மீதியுள்ள சொத்து முழுவதையும் பெறுகின்றனர்.

**எடுத்துக்காட்டு - 4**

| கணவன் | மகனின் மகள் | உடன் பிறந்த சகோதரன் |
|---|---|---|
| 1/4 | 1/2 | அஸபா [மீதியுள்ளதைப் பெறும் எச்சதாரர்] |

இந்நிலையில் சொத்தை 4பங்கு வைத்து கணவனுக்கு நான்கில் ஒரு பங்கும் மகனின் மகளுக்கு நான்கில் இரண்டு பங்கும் மீதியுள்ள ஒரு பங்கை அஸபா என்ற நிலையில் உடன் பிறந்த சகோதரனும் பெறுவர்.

**எடுத்துக்காட்டு - 5**

| கணவன் | தாய் | தந்தை |
|---|---|---|
| 1/2 | 1/3 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6பங்கு வைத்து கணவனுக்கு அரைப் பங்காக 3 பங்கும் தாய்க்கு மீதியில் 1/3 பங்காக 1 பங்கும் கொடுத்து மீதியுள்ளதை அஸபா என்ற நிலையில் தந்தை பெறுவார். அது 2 பங்காகும்.

**எடுத்துக்காட்டு - 6**

| கணவன் | மகன் | தந்தை |
|---|---|---|
| 1/4 | அஸபா | 1/6 |

இந்நிலையில் மனைவியின் சொத்தை 12 பங்கு வைக்க வேண்டும். மகன் இருப்பதால் கணவனுக்கு நான்கில் ஒரு பங்கு ஆகிய 3-ம், தந்தைக்கு ஆறில் ஒரு பங்கு ஆகிய 2- ம் மீதி மகனுக்கு 7பங்கும் கொடுக்க வேண்டும்.

இனி மனைவிக்குக் கிடைக்கும் பங்குகளுக்கான உதாரணங்களைப் பார்ப்போம்.

**எடுத்துக்காட்டு - 7**

| மனைவி | உடன் பிறந்த சகோதரன் |
|---|---|
| 1/4 | அஸபா |

இந்நிலையில் முழுச் சொத்தையும் 4 பங்கு வைத்து கணவனுக்கு மக்கள் இல்லாத காரணத்தால் மனைவிக்கு நான்கில் ஒரு பாகமும், மீதி 3 பாகங்கள் அஸபா என்ற அடிப்படையில் உடன் பிறந்த சகோதரனுக்கும் கிடைக்கும்.

**எடுத்துக்காட்டு - 8**

| மனைவியர் 4பேர் | உடன்பிறந்த சகோதரன் |
|---|---|
| 1/4 | அஸபா |
| 1பங்கு | மீதி 3 பங்கு |

இந்நிலையில் கணவனின் சொத்தை 4பங்கு வைத்து மனைவியர் நான்கு பேருக்கும் 1பங்கும் மீதி 3பங்கு உடன்பிறந்த சகோதரனுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

**எடுத்துக்காட்டு - 9**

| மனைவி | மகன் மகள் |
|---|---|
| 1/8 | அஸபா |

இந்நிலையில் கணவனின் சொத்தை 24பாகங்களாகப் பிரிக்க வேண்டும். காரணம் மகனுடன் மகளும் சேர்ந்து வருவதால் அஸபா என்ற நிலையை அடைகிறாள். இந்நிலையில் ஓர் ஆணுக்கு இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பங்கு போன்றது கிடைக்கும் என அல்லாஹ் 4:11வது வசனத்தில் கூறுவது போலக் கொடுக்க வேண்டும். எனவே ஆண் மகனை இரண்டாக எண்ணிக் கொள்ள வேண்டும். பெண் மகளை ஒன்றாக எண்ண வேண்டும். எனவே 3,8க்கு அதமப் பொது மடங்கு 24. எனவே சொத்து முழுவதையும் 24 பங்கு வைக்கிறோம்.

மனைவிக்கு 24இல் எட்டில் ஒரு பங்கான 3ம் பாக்கி உள்ள 21பங்கை 3பங்காகப் பிரித்தால் ஒரு பங்கு 7வரும். ஆணுக்கு 2பங்கு என்ற அடிப்படையில் 14 பங்குகளும் பெண்ணுக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் 7 பங்குகளும் கொடுக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு - 10

| மனைவியர் 3 பேர் | மகன் மகள் |
|---|---|
| 1/8 | அஸபா |

முன்னர் எடுத்துக் காட்டு 9ல் கூறப்பட்டபடியே சொத்துக் களைப் பிரிக்க வேண்டும். 9வது எடுத்துக் காட்டில் ஒரு மனைவி மட்டும் உள்ளதால் 3பங்கையும் ஒரே மனைவி எடுத்துக் கொள்வாள். இந்த 10வது எடுத்துக்காட்டில் 3மனைவியர் உள்ள தால் 3 மனைவியருக்கும் 3பங்கு கிடைக்கும். அவ்வாறானால் ஒவ்வொரு மனைவியருக்கும் ஒரு பங்கும் மகனுக்கும் மகளுக்கும் 9வது எடுத்துக் காட்டில் கூறியது போன்று கிடைக்கும்.

எடுத்துக் காட்டு - 11

| மனைவி | மகன் |
|---|---|
| 1/8 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 8பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கும் மகனுக்கு மீதி 7 பங்கும் கொடுக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு - 12

| மனைவி | உடன் பிறந்த சகோதரன் |
|---|---|
| 1/4 | அஸபா |

சொத்தை 4பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கும், மீதி3 பங்குகள் உடன் பிறந்த சகோதரனுக்கும் கொடுக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு - 13

| மனைவி | தாய் | தந்தை |
|---|---|---|
| 1/4 | 1/3 | அஸபா |

இந்நிலையில் கணவனின் சொத்தை 12பாகமாகப் பிரித்து மனைவிக்கு 12இல் நான்கில் ஒரு பாகம் 3ம், தாய்க்கு, மீதியுள்ள 9இல் மூன்றில் ஒரு பங்கான 3பாகமும், மீதி தந்தைக்கும் கொடுக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு - 14

| மனைவி | தாய் | தந்தை | மகன் |
|---|---|---|---|
| 1/8 | 1/6 | 1/6 | அஸபா |

இந்நிலையில் கணவனின் சொத்தை 24பங்கு வைக்க வேண்டும் எனவே மனைவிக்கு 3பங்கும், தாய்க்கு 4 பங்கும் தந்தைக்கு 4பங்கும் மீதியுள்ள 13 பாகங்கள் மகனுக்கும் கொடுக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட எல்லா விதமான எடுத்துக் காட்டுக்களுக்கும், கணவனும், மனைவியும் பாகம் பெறும் முறைக்கும் ஆதாரமாக அல்குர்ஆனில் 4:11,12 ஆகிய வசனங்களையும் புகாரி எண் 2747, மற்றும் 6739 ஆகியவற்றைப் பார்க்கவும்.

**குறிப்பு:-**

நாம் மேலே கூறிய எடுத்துக்காட்டுகளில் சொத்தை 12 பங்கு வைக்க வேண்டும், 24 பங்கு வைக்க வேண்டும் என எழுதியுள்ளோம். ஏன் அவ்வாறு பங்கு வைக்க வேண்டும்? எப்படி 24 பங்கு வைக்க வேண்டுமென்று கண்டு பிடித்தீர்கள்? என்றெல்லாம் சந்தேகம் எழலாம். பங்கீடுகள் பின்னமாக இருப்பதால் பின்னக் கூட்டல், பின்னக் கழித்தல் போன்ற கணக்குகளை நன்கு தெரிந்து கொண்டால் அது எளிதாக விளங்கும். பின்னங்களில் பயன்படுத்தும் அதமப் பொது மடங்கு, உத்தமப் பொதுக் காரணி போன்றவற்றைப் புரிந்து கொண்டால் பங்கீடு செய்யும் முறை பற்றி எளிதாக அறிந்து கொள்ளலாம்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) கணவனுக்குக் கிடைக்கும் பங்குகள் எவை எவை?

(2) மனைவிக்குக் கிடைக்கும் பங்குகள் எவை, அவை எந்தெந்த நிலைகளில் கிடைக்கும்?

(3) மனைவி இறந்து கீழ்வரும் வாரிசுகள் இருந்தால் சொத்தை எந்த விகிதத்தில் பிரிக்க வேண்டும்?

A. கணவன் — மகனின் மகள்
தந்தை — உடபிறந்த சகோதரி
தந்தையின் தந்தை — தந்தை வழிச் சகோதரி
தாய் — தாய் வழிச் சகோதரன்
மகள் — தாய் வழிச் சகோதரி
மகன்

B. கணவன் — மகனின் மகன்
தந்தை — மகனின் மகள்

| | |
|---|---|
| தந்தையின் தந்தை | தாய்வழிச் சகோதரி |
| தாய் | தந்தை வழிச் சகோதரன் |
| உடன் பிறந்த சகோதரி | தந்தை வழிச் சகோதரி |

C. கணவன் - மகன் - மகள்

D. கணவன் - தந்தை வழிச் சகோதரன்

E. மனைவி - மகள் - தந்தை

F. மனைவி - மகனின் மகள் - பாட்டன்

G. மனைவி - தந்தை வழிச் சகோதரன் 2 பேர்

H. 3 மனைவியர் - தாய் - மகன்

| | |
|---|---|
| I. மனைவி | மகனின் மகன் |
| தந்தை | தாய் வழிச் சகோதரன் |
| தந்தையின் தந்தை | தாய் வழிச் சகோதரி |
| தாய் | தந்தை வழிச் சகோதரி |
| மகன் | உடன் பிறந்த சகோதரி |
| மகள் | |

J. கணவன் - உரிமைவிடப்பட்ட அடிமை

# 8. பெண் மக்களின் பாகம்

**பெண் மக்கள் மூன்று வகைகளில் பாகம் பெறுவர்.**

*1. இறந்தவருக்கு மகன் இல்லாமல் ஒரேயொரு மகள் மட்டும் இருந்தால் சொத்தில் பாதியைப் பெறுவாள்.*

*2. மகன் இல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட பெண் மக்கள் இருந்தால் சொத்தில் மூன்றில் இரண்டு பங்கைப் பெறுவார்கள்.*

*3. மகன் அல்லது மகன்கள் இருந்தால் பெண் மக்களுக்குக் குறிப்பிட்ட பாகம் இன்றி தனது சகோதரனுடன் சேர்ந்து அஸபாவாக (மற்ற பங்குதாரர்களுக்குக் கொடுத்தது போக மீதியைப்) பெறுவாள். அப்போது ஆணுக்கு 2பங்கு, பெண்ணுக்கு ஒரு பங்கு என்ற விகிதத்திலேயே பங்கு பெறுவாள்.*

**உதாரணம் - 1**

| கணவன் | தாய் | தந்தை | மகன் | மகள் |
|---|---|---|---|---|
| 1/4 | 1/6 | 1/6 | [அஸபா] | [அஸபா] |

*இந்நிலையில் சொத்தை 36 பங்கு வைக்க வேண்டும், ஏனெனில் 4,6 இவற்றில் பொது எண்12. மகன், மகள் வருவதால் இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பாகம் ஒரு ஆணுக்கு என்ற ரீதியில் ஆண் மகனை இரண்டாகவும் பெண்ணை ஒன்றாகவும் கருதி ஆக 3ஆல் பெருக்க 12x3=36 வரும். எனவே 36பங்கு வைத்து கணவனுக்கு 9பங்குகளும் தாய், தந்தை ஒவ்வொருவருக்கும் 6பங்குகளும் கொடுத்தது போக மீதியுள்ள 15 பங்குகளை மூன்றாக ஆக்கி ஒரு பகுதியை அதாவது 5 பங்குகளை மகளுக்கும், இரண்டு பகுதிகளான 10 பங்குகளை மகனுக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டும்.*

*இதில் மகனுக்கென்று தனிப்பங்கு இல்லை, கணவன், தாய், தந்தைக்குக் கொடுத்தது போக மீதி உள்ள சொத்தை மகனும் மகளும் இருபெண்களின் பாகம் ஒரு ஆணுக்கு என்ற விகிதாச் சாரத்தில் பிரித்துக் கொண்டனர்.*

*இது மேற் கூறப்பட்ட சட்டத்தில் 3வது நிலைக்கு உதாரணமாகும். முதல் நிலைக்கான உதாரணம் பின் வருமாறு*

**உதாரணம் - 2**

| மகள் | சகோதரன் |
|---|---|
| 1/2 | அஸபா [எஞ்சியதைப் பெறும் எச்சதாரர்] |

இந்நிலையில் சொத்தை இரண்டு பங்கு வைத்து ஒரேயொரு மகள் மட்டும் இருப்பதால் பாதியைக் கொடுத்து விட்டு மீதிப் பாதியை சகோதரன் அஸபா என்ற ரீதியில் பெறுவான்.

**உதாரணம்_3**

| மகள் | தந்தை |
|---|---|
| 1/2 | 1/6 + அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்குகள் வைக்க வேண்டும். அதில் பாதியான 3 பங்குகளை மகளுக்கும் ஒரு பங்கை தந்தைக்கு கொடுக்க வேண்டும். இது பங்குதாரர் என்ற அடிப்படையில் கிடைக்கும் பாகம். மேலும் அவர் தவிர மற்றவர்கள் யாரும் இல்லாததால் மீதி 2 பங்கையும் அவரே எஞ்சியதைப் பெறும் அஸபாவாகப் பெறுவார். ஆக தந்தைக்கு 1+2 = 3 பங்குகள் கிடைக்கும்.

**உதாரணம் _ 4**

| தந்தை | தாய் | 2 மகள்கள் |
|---|---|---|
| 1/6 | 1/6 | 2/3 |

இந்நிலையில் சொத்தை 6பங்குகள் வைக்க வேண்டும்.

அவற்றில் தந்தைக்கு 1 பங்கும், தாய்க்கு 1 பங்கும், மகள்கள் ஒவ்வொருவரும் இரண்டு இரண்டு பங்குகளும் பெறுவார்கள்.

**உதாரணம்_5**

| மகன் | மகள் |
|---|---|
| 2/3 | 1/3 |

மகன் மகள் ஆகிய இருவருமே எஞ்சியதைப் பெறும் அஸபாக்கள் தாம். ஆயினும் அவர்களுக்குள் மகளைப் போல் இரு பங்குகளை மகன் பெற வேண்டும் என்ற அடிப்படையில் சொத்தை 3 பங்கு வைத்து ஆணுக்கு இரண்டு பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

**உதாரணம்_6**

| 2 மகன்கள் | 3 மகள்கள் |
|---|---|

இந்நிலையில் மகள்களுக்கு ஆளுக்கு 1 பங்கு என்ற வகையில் மூன்று பங்குகளும், மகன்களுக்கு ஆளுக்கு இரு பங்குகள் என்ற

வகையில் 4 பங்குகளும், ஆக 7 பங்குகளாகச் சொத்தைப் பிரிக்க வேண்டும். மகள்கள் ஒவ்வொருவரும் 1/7 பங்கும் மகன்கள் ஒவ் வொருவரும் 2/7 பங்கும் பெறுவார்கள்.

**உதாரணம் -7**

**3 மகன்கள்** **2 மகள்கள்**

இந்நிலையில் சொத்தை 8பங்கு வைத்து 6பங்கை மகன் களுக்கும் மீதியுள்ள 2 பங்கை மகள்கள் 2 பேருக்கும் கொடுக்க வேண்டும்.

இந்த உதாரணங்களிலிருந்து நாம் புரிந்து கொள்வது என்ன வெனில் ஆண்மகனை 2 ஆகக் கணித்து பெண்ணை ஒன்றாக கணிக்க வேண்டும். மேற்கண்ட எல்லா விதமான எடுத்துக்காட் டுகளுக்கும் மகள் பாகம் பெறும் முறைக்கும் ஆதாரமாக அல்குர் ஆனில் 4:11 வது வசனத்தில் பின்வருமாறு அமைந்துள்ளது.

'உங்கள் மக்களில் ஓர்ஆணுக்கு இரண்டு பெண்களுக் குக்கிடைக்கும் பங்கு போன்றது கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான். பெண்கள் மட்டும் இருந்து அவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் அவர்களுக்கு இறந்து போனவர் விட் டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகம் கிடைக்கும். ஆனால் ஒரே பெண்ணாக இருந்தால் அவள் பங்கு பாதியாகும் . . .'

**(உலகப் பொதுமறை அல்குர்ஆன் 4:11)**

**பயிற்சி வினாக்கள்:-**

(1) மகள் எத்தனை வழிகளில் பாகம் பெறுவாள்?

(2) கீழ்வரும் கணக்குகளுக்கு விடை கண்டுபிடி!

A. மகள் - தந்தை வழிச் சகோதரி

B. மகள் 2 - உடன் பிறந்த சகோதரி

C. மகள் 5 - மகன் 3

D. மகன் 2 - மகள் 4

# 9. மகனின் மகள் பாகம் பெறும் முறைகள்

**A.** **பங்கு கிடைக்காத நிலைகள்:**

*1. இறந்தவருக்கு மகன் இருந்தால் மகனின் மகளுக்குப் பங்கு கிடைக்காது.*

*2. இறந்தவருக்கு இரண்டு பெண்மக்களோ அதை விட அதிகமோ இருந்தாலும் மகனின் மகளுக்குப் பாகம் கிடையாது.*

*3. ஒருபடி முந்திய மகனின் மகன் இருந்தாலும் பங்கு கிடையாது.*

*4. ஒரு படி முந்திய மகனின் மகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தாலும் பங்கு ஏதும் கிடைக்காது.*

*5. இறந்தவருக்குப் பெண் மக்கள் மட்டுமிருந்து மகனின் மகளுடனோ, அல்லது ஆண் வழிச் சந்ததியில் அடுத்தடுத்த தலை முறையிலோ ஆண் இருந்தால் மகன் வழிப் பேரனுடன் மகனின் மகள் அஸபாவாகி ஆணுக்கு இரண்டு, பெண்ணுக்கு ஒன்று என்ற விகித்தில் பங்கு பெறுவாள்.*

**B.1/2 பங்கு பெறும் நிலை:**

*மேற்கண்ட A1 முதல் A5 வரையுள்ள வாரிசுகள் இல்லா திருந்து மகனின் மகள் ஒருத்தி மட்டும் இருந்தால் இறந்தவர் சொத்தில் பாதி கிடைக்கும்.*

*(அதாவது இறந்தவருக்கு ஆண்மக்களோ, பெண்மக்களோ, இல்லாதிருக்க வேண்டும்)*

**C. 2/3 பங்கு பெறும் நிலை:**

*மேற்கூறப்பட்ட A1 முதல் A5 வரையுள்ள வாரிசுகள் இல்லா திருந்து மகனின் மகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் சொத்தில் 2/3 பங்கு கிடைக்கும்.*

*(இறந்தவருக்கு ஆண்மக்களோ, பெண் மக்களோ, இல்லாதி ருக்க வேண்டும்)*

**D.1/6 பங்கு பெறும் நிலை**

*இறந்தவருக்கு ஒரேயொரு மகள் மட்டும் இருந்தால் மகனின் மகளுக்கு ஆறிலொன்று (பெண் மக்களுக்கு மூன்றில் இரண்டு*

பாகங்களை நிறைவு படுத்தும் பொருட்டு) மகனின் மகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

மேற்கூறப்பட்ட அனைத்துக்கும் எடுத்துக் காட்டுகள் வருமாறு:

**எடுத்துக் காட்டு - 1**

| கணவன் | தந்தை | மகன் | மகள் | மகளின்மகள் | மகனின்மகன் |
|---|---|---|---|---|---|
| 1/4 | 1/6 | அஸபா | | பாகம் கிடையாது | |

இந்நிலையில் சொத்தை 36 பங்கு வைக்க வேண்டும். அதில் கணவனுக்கு 9 பங்கும், தந்தைக்கு 6 பங்கும் கொடுத்தது போக மீதியுள்ள 21 பாகத்தை 3ஆகப் பிரிக்க வேண்டும். அதில் 2பங்கு ஆண் மகனுக்கு 14 உம், ஒருபங்கு பெண் மகளுக்கு 7 உம் கொடுக்க வேண்டும்.

மகனின் மகளுக்கும், மகனின் மகனுக்கும் பங்கு கிடையாது. ஏனெனில் மகன் இருந்து அவர்கள் பங்கு பெறுவதை விட்டும் தடுக்கின்றனர்.

**எடுத்துக் காட்டு - 2**

| தந்தை | தாய் | மனைவி | இருபெண் மக்கள் | மகனின் மகள் |
|---|---|---|---|---|
| 1/6 | 1/6 | 1/8 | 2/3 | பாகம் கிடையாது |

இந்நிலையில் சொத்தை 27 பாகமாக வைக்க வேண்டும். தந்தைக்கு 4பங்கும் தாய்க்கு 4பங்கும் மனைவிக்கு 3பங்கும் இருபெண் மக்களுக்கும் 16பங்கும் கொடுக்க வேண்டும். மொத்தப் பங்குகளை எண்ணினால் 24பங்கு வைத்து அது 27ஆகப் பங்கு வைக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தும் அவுல் என்ற ஏற்ற விதிக் கொள்கை வகை சொத்துப் பங்கீடு ஆகும்

அவுல் என்ற ஏற்றவிதிக் கொள்கை பற்றி பின்னர் விவரிக்கப்படும்.

**எடுத்துக் காட்டு - 3**

| மகள் 2 | மகனின் மகன் | மகனின் மகனின் மகள் |
|---|---|---|
| 2/3 | அஸபா | 2மகள் இருப்பதாலும் ஒரு படி முந்திய மகனின் மகனாலும் பங்கு தடுக்கப்பட்டது |

சொத்தை 3 பங்கு வைத்து மகள் 2 பேர் இருப்பதால் 2/3 பங்கு

என்ற அடிப்படையில் 2 பங்கு கொடுத்தது போக மீதியை மகனின் மகன் பெறுகிறார்.

**எடுத்துக் காட்டு - 4**

| மகனின் மகன் | மகனின் மகள் |
|---|---|

இந்நிலையில் மொத்த சொத்தை 3 பங்க வைக்க வேண்டும். ஆணுக்கு 2, பெண்ணுக்கு 1 என்ற விகிதப்படி மகனின் மகன் 2 பங்கும், மகனின் மகள் 1 பங்கும் அஸபாவாகப் பெறுவர்.

**எடுத்துக் காட்டு - 5**

| மகனின் மகனின் மகன் | மகனின் மகனின் மகள் |
|---|---|

மேற்கண்ட 4வது எடுத்துக்காட்டுப் போன்றதே இதுவும்.

**எடுத்துக் காட்டு - 6**

| மகனின் மகனின் மகன் | மகனின் மகனின் மகள் |
|---|---|
| 3பேர் | 4பேர் |

இந்நிலையில் மொத்த சொத்தை 10 பங்கு வைக்க வேண்டும்.

6 பங்கை மகனின் மகனின் மகன் 3 பேரும் சமமாகப் பெறுவர். அதாவது ஒவ்வொருவருக்கும் 2 பங்கு கிடைக்கும். மீதி 4 பங்குகள் மகனின் மகனின் மகள் 4பேருக்கும் ஒவ்வொருவருக்கும் 1 பங்கு வீதம் கிடைக்கும். ஆணுக்கு 2 பங்கு, பெண்ணுக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் பங்கிடப்பட்டுள்ளது.

**எடுத்துக் காட்டு - 7**

| மகனின் மகள் | தந்தை |
|---|---|
| 1/2 | 1/2 அஸபா |

இறந்தவருக்கு மகனோ, மகளோ, யாரும் இல்லாததால் மகனின் மகள் பாதிப் பங்கைப் பெறுகிறாள். மீதிப்பாதியை தந்தை அஸபா என்ற ரீதியில் பெறுகிறார்.

**எடுத்துக் காட்டு - 8**

| தந்தை | தாய் | மகனின் மகள் 3பேர் |
|---|---|---|
| 1/6 | 1/6 | 2/3 |

இந்நிலையில் மொத்த சொத்தை 6பங்கு வைக்க வேண்டும் தந்தைக்கும் தாய்க்கும் தலா ஒரு பங்கும், மீதியுள்ள 4பங்கையும் மகனின் மகள் 3 பேரும் பெறுவர்.

இந்தக் கணக்கில் தாய்க்கும் தந்தைக்கும் கொடுத்தது போக மீதியுள்ள 4 பங்கை 3 பேருக்கு கொடுக்கும் போது பின்னமாக வருகிறது. இதைத் தவிர்க்க 6X3=18 பங்கு ஆக ஆக்கிக் கொண்டால் பின்னம் வராமல் கொடுக்கலாம். இப்போது தாய்க்கும் தந்தைக்கும் 3+3 பங்குகளும், மகனின் மகள் ஒவ்வொருவருக்கும் 4 பங்கு வீதம் கொடுக்க வேண்டும்.

| தந்தை | தாய் | மகள் | மகனின் மகள் 4பேர் |
|---|---|---|---|
| 1/6 | 1/6 | 1/2 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து தந்தைக்கு ஒரு பங்கும், தாய்க்கு ஒரு பங்கும் மகளுக்கு 3பங்கும், மகனின் மகள் 4 பேருக்கும் 1பங்கும் கொடுக்க வேண்டும்.

இதில் மகனின் மகள் 4 பேருக்கும் ஒரு பங்கு எனும் போது ஒவ்வொருவருக்கும் 1/4 பங்கு கிடைக்கும். இவ்வாறு பின்னம் வருவதை தவிர்க்க 6 என்ற பொது எண்ணை 4 ஆல் பெருக்கி 6X4=24 பங்கு வைத்து தந்தைக்கு 4 பங்கு, தாய்க்கு 4 பங்கு, மகளுக்கு 12 பங்கு, மகனின் மகள் 4 பேருக்கும் 4 பங்கு, அதாவது ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு வீதம் கொடுக்கலாம்.

**எடுத்துக் காட்டு - 9**

| தந்தை | இரு மகள் | மகனின் மகன் | மகனின் மகள் |
|---|---|---|---|
| 1/6 | 2/3 | அஸபா | அஸபா |

இந்நிலையில் மொத்த சொத்தை (6X3)=18 பங்கு வைக்க வேண்டும். தந்தைக்கு 3பங்கு, இரு மகள்களுக்கும் 12 பங்கு, மீதியுள்ள 3பங்கில் மகனின் மகனுக்கு 2ம், மகனின் மகளுக்கு ஒன்றும் கொடுக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு-10**

| தந்தை | தாய் | மகள்2 | மகனின் மகள் |
|---|---|---|---|
| 1/6 | 1/6 | 2/3 | |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து தந்தைக்கு ஒரு பங்கும், தாய்க்கு ஒரு பங்கும் மகள் 2 பேருக்கும் 4 பங்கும் கொடுக்க வேண்டும். மகள் 2 பேருக்கும் 2/3 பங்கு கொடுக்கப்பட்டு விட்டதால் மகனின் மகளுக்குப் பங்கு கிடைக்காது.

**எடுத்துக்காட்டு-11**

| தந்தை | தாய் | மகனின் மகள் | மகனின் மகனின் மகள் |
|---|---|---|---|
| 1/6 | 1/6 | 1/2 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து தந்தைக்கு ஒரு பங்கும், தாய்க்கு ஒரு பங்கும், மகனின் மகளுக்கு 3 பங்கும், மகனின் மகனின் மகளுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும். இறந்தவருக்கு ஒரேயொரு மகனின் மகள் இருப்பதால் அவளுக்குப் பாதிப் பங்கு கொடுத்தது போக பெண்களுக்கான 2/3 பங்கை நிறைவு செய்யும் பொருட்டு ஒரு பிடி பிந்திய மகனின் மகனின் மகள் 1/6 பங்கைப் பெறுகிறாள்.

**எடுத்துக்காட்டு-12**

| மகள்2 | மகனின் மகனின் மகன் | மகனின் மகள் | மகனின் மகனின் மகள் |
|---|---|---|---|
| 2/3 | அஸபா | அஸபா | அஸபா |

இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து 8 பங்கை மகள் 2 பேருக்கும் கொடுக்க வேண்டும். மீதியுள்ள 4 பங்கில் மகனின் மகனின் மகனுக்கு 2 பங்கும், மகனின் மகளுக்கு ஒரு பங்கும், மகனின் மகனின் மகளுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

மகள் 2 பேர் இருப்பதால் மகனின் மகள் பங்கு பெறாது தடுக்கப்படுவாள். எனினும் ஒரு படி பிந்திய மகனின் மகனின் மகனோடு அதே படியில் நிற்கும் மகனின் மகனின் மகள் எச்சதாரராகப் பங்கு பெற முடியுமாதலால் முந்திய படியில் நிற்கிற மகனின் மகளும் ஒரு படி பிந்திய மகனின் மகனின் மகனோடு சேர்ந்து அஸபா-எச்சதாரராகப் பங்கு பெறுகிறாள்.

இவற்றுக்கான ஆதாரங்கள் அல்குர்ஆனின் 4:11வது வசனத்திலும் நபிமொழி நூல்களிலும் வாரிசுரிமைச் சட்ட நூல்களிலும் காணலாம்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) மகனின் மகள் பாகம் பெறும் முறைகள் எவை எவை? ஆதாரம் என்ன?

(2) கீழ்வரும் கணக்குகளை செய்து விடை எழுது.

A. மகள் - மகனின் மகள் - தந்தை

B. மகள் 2 - மகனின் மகள்

C. மகனின் மகன் 2 பேர் - மகனின் மகள் 3 பேர்.

# 10. உடன் பிறந்த சகோதரி

*உடன் பிறந்த சகோதரி என்றால் தாய், தந்தை ஒன்றுபட்ட சகோதரிக்குச் சொல்லப்படும். தாய் ஒன்றான தந்தை வேறுபட்ட சகோதரி, தந்தை ஒன்றான தாய் வேறுபட்ட சகோதரி என்றெல்லாம் வாரிசுரிமை நூல்களில் குறிப்பிடப்படும். அது போன்ற உறவு முறைகளில் இருந்து பிரித்துக் காட்டவே இவ் வாறு குறிப்பிடப்படுகிறது.*

*உடன் பிறந்த சகோதரி கீழ்க்காணும் 6 முறைகளில் ஒரு முறையில் பங்கு பெறுவாள்.*

## A. பங்கு கிடைக்காத நிலை

*1. இறந்தவருக்குக் குழந்தைகள் இருந்தாலோ அல்லது ஆண்வழிச் சந்ததியில் குழந்தைகள் இருந்தாலோ பங்கு கிடைக்காது.*

*2. தந்தை அல்லது பாட்டன் இருந்தாலும் பங்கு கிடைக்காது.*

*தந்தை ஒன்றுபட்ட (தாய் வேறுபட்ட) சகோதரிகளும் மேற் கண்ட நிலைகளில் பங்கு ஏதும் பெற மாட்டார்கள்.*

## B. அஸபா (எச்சதாரராகப்) பங்கு பெறும் நிலை

*1. உடன் பிறந்த சகோதரனோடு அஸபாவாகப் பங்கு பெறுவாள்.*

*2. இறந்தவருக்குப் பெண்மக்கள் அல்லது மகனின் மகள்களோடும் எச்சதாரராகப் பங்கு பெறுவாள். (இந்நிலையில் இறந்தவருக்கு பெண்மக்கள் மட்டுமே இருக்க வேண்டும். அல்லது மகனின் மகள் அல்லது மகள் பலர் இருக்க வேண்டும்.)*

## C. 1/2 பங்கு பெறும் நிலை

A. *இல் கண்டபடி இறந்தவருக்குக் குழந்தைகளோ, ஆண்வழிச் சந்ததியில் யாரும் இல்லாது, தந்தை, பாட்டன் போன்றவர்களும் இல்லாது,. அவளுடன் பிறந்த சகோதரனும் இல்லாத நிலையில் அவள் ஒருத்தியாக இருந்தால் மொத்தச் சொத்தில் பாதியைப் பெறுவாள்.*

## D. 2/3 பங்கு பெறும் நிலை

*A. இல் கண்டபடி இறந்தவருக்குக் குழந்தைகளோ, ஆண்வழிச் சந்ததியில் யாரும் இல்லாது, அவளுடன் பிறந்த சகோதரனும் இல்லாத நிலையில் உடன் பிறந்த சகோதரி (ஒன்றுக்கு மேற்பட்ட) பலர் இருந்தால் 2/3 பங்கை அவர்கள் தமக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்.*

*இவற்றிற்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு*

**எடுத்துக்காட்டு 1**

| தாய் | தந்தை | சகோதரி 2 பேர் |
|---|---|---|
| 1/6 | அஸபா | தந்தையிருப்பதால் |
| | 5/6 | பங்கு இல்லை |

*இதில் சகோதரிகள் இருவர் இருப்பதால் தாயின் பங்கு குறைந்து 1/6 பங்கு பெறுகிறாள். மீதி தந்தைக்கு. பொதுவாக சகோதரி என்றால் உடன் பிறந்த சகோதரியைத் தான் குறிக்கும்.*

**எடுத்துக்காட்டு 2**

| தாய் | தந்தை | சகோதரி |
|---|---|---|
| 1/3 | அஸபா | தந்தையிருப்பதால் பங்கு இல்லை |

*இந்த நிலையில் தாய்க்கு 1/3 பங்கு. மீதி 2 பங்கு தந்தைக்கு*

**எடுத்துக்காட்டு 3**

| கணவன் | மகள் 2 | சகோதரி |
|---|---|---|
| 1/4 | 2/3 | அஸபா |

*இந்நிலையில் மொத்த சொத்தைப் 12பங்கு வைத்து 3 பங்கை கணவனுக்கும், 8பங்கை மகள் 2பேரும், மீதி 1 பங்கை சகோதரியும் பெறுவார்கள்.*

**எடுத்துக்காட்டு 4**

| மகள் | மகனின் மகள் | சகோதரி |
|---|---|---|
| 1/2 | 1/6 | அஸபா |

*சொத்தை 6பங்கு வைத்து மகளுக்கு 3பங்கும் மகனின் மகளுக்கு 1பங்கும் மீதி 2பங்கை சகோதரியும் பெறுகின்றனர். இதற்கான ஆதாரம் வருமாறு.*

அபூமூசா (ரலி) அவர்களிடம், (இறந்து போன ஒருவருக்கு) மகள், மகனுடைய மகள், சகோதரி ஆகியோர் (இருந்தால் அவர்களுக்குக் கிடைக்கும் சொத்துரிமை) குறித்து வினவப்பட்டது. அதற்கு அவர்கள் 'மகளுக்கு (மொத்தச் சொத்தில்) பாதியும் சகோதரிக்கு (மீதி)ப் பாதியும் கிடைக்கும் (மகனுடைய மகளுக்கு ஒன்றும் கிடையாது)' என்று கூறிவிட்டு, '(வேண்டுமானால்,) இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் சென்று (கேட்டுப் பாருங்கள். அன்னாரும் என் (கருத்தி)னையே பிரதிபலிப்பார்கள்' என்று சொன்னார்கள். ஆகவே, இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் (சென்று) அபூமுசா (ரலி) அவர்களின் கூற்றைத் தெரிவித்து (இது குறித்து விளக்கம்) கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், 'இவ்வாறு (மகனின் மகளுக்கு சொத்தில் பங்கு இல்லை என்று) நானும் சொன்னால் நிச்சயம் நான் வழி தவறியவனாகிவிடுவேன், நான் நேர்வழியடைந்தவர்களில் ஒருவனாக இருக்கமாட்டேன். இந்த விஷயத்தில் நபி (ஸல்) அவர்கள் அளித்த தீர்ப்பையே நானும் அளிக்கிறேன். மகளுக்குப் பாதியும் மகனின் மகளுக்கு ஆறில் ஒரு பாகமும் வழங்கப்பட வேண்டும். அப்போது தான் மூன்றில் இரு பாகங்கள் நிறைவாகும். எஞ்சியிருப்பது சகோதரிக்கு உரியதாகும் என்றார்கள். பின்னர் அபூமுசா (ரலி) அவர்களிடம் சென்று இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் சொன்னதைத் தெரிவித்தோம். அப்போது, 'இந்தப் பேரறிஞர் (இப்னு மஸ்ஊத் (ரலி)) உங்களிடையே இருக்கும் வரை என்னிடம் (விளக்கம்) கேட்காதீர்கள்' என்று (புகழ்ந்து) சொன்னார்கள்" என ஹுஸைன் பின் ஷுரஹ்பீல் (ரஹ்) அறிவிக்கிறார்.

**ஆதாரம் : – புகாரி எண். 6736**

அதாவது முதலில் தாம் கூறிய தீர்ப்பினை அபூமுசா (ரலி) அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டு இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார்கள். அதன் படி மொத்தச் சொத்தை 6 பாகங்களாகப் பிரித்து பாதியான 3 பாகங்களை மகளுக்கும், ஆறில் ஒரு பாகமான ஒரு பாகத்தை மகனுடைய மகளுக்கும், மீதியான இரு பாகங்களைச் சகோதரிக்கும் அளித்திட வேண்டும். இவ்வாறு அளித்தால் தான் 'இரு பெண் குழந்தைகள் இருந்தால் ஆறில் இரு பாகங்கள் வழங்க வேண்டும்'

என்ற விதி செயல்படுத்தப்பட்டதாக ஆகும். இங்கு ஒரு மகள், ஒரு மகனின் மகள் (அவளும் மகள் தான்) ஆக இரு புதல்வியர் இருப்பதால் அவர்களுக்கு மொத்தச் சொத்தில் மூன்றில் இரு பாகங்களை (66.66ரூ) வழங்க வேண்டும். ஆயினும் நேரடி மகளுக்கு மொத்தச் சொத்தில் பாதிப் பாகம் என்ற அடிப் படையில் 50 சதவீதமும் (49.99ரூ), பேத்திக்கு 16.66 சதவீதமும் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இருவருக்கும் சேர்த்து மூன்றில் இரண்டு அதாவது ஆறில் நான்கு பாகங்கள் கிடைத்து விடுகின்றன.

இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ இல்லாதிருந்து தந்தை அல்லது பாட்டனாரும் இல்லாது உடன் பிறந்த சகோதரனும் இல்லாத போது மகள்களோ, மகனின் மகள்களோ எத்தனை தலைமுறை பின் சென்றாலும் ஒரேயொரு மகளும், ஒரேயொரு மகனின் மகளும் மட்டும் இருந்தால் உடன் பிறந்த சகோதரி அஸபாவாகப் பங்கு பெறுவாள்.

**எடுத்துக்காட்டு 5**

| மகள்2 அல்லது மகனின் மகள் 2 பேர் | சகோதரி |
|---|---|
| 2/3 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 3பங்கு வைத்து மகள் இருவருக்கும் அல்லது மகள் இல்லாத நிலையில் மகனின் மகள் இருவருக்கும் 2 பங்கும் மீதி ஒரு பங்கை சகோதரியும் பெறுவர்.

**எடுத்துக்காட்டு 6**

| கணவன் | சகோதரி |
|---|---|
| 1/2 | அஸபா |

இந்த நிலையில் கணவனுக்கு 1/2 பங்கும் சகோதரிக்கு அரைப்பங்கும் கிடைக்கும்.

**எடுத்துக்காட்டு 7**

| தாய் | சகோதரி | சகோதரன் |
|---|---|---|
| 1/6 | | |

இந்நிலையில் சகோதரனுடன் சகோதரி இருப்பதால் அஸபா வாக ஆகி ஆணுக்கு 2, பெண்ணுக்கு ஒன்று என்ற விகிதத்தில் பங்கு பெறுவாள்.

சொத்தை 18 பங்கு வைக்க வேண்டும். அதில் தாய்க்கு 3 பங்குகளும் சகோதரனுக்கு பத்து பங்குகளும் சகோதரிக்கு 5பங்குகளும் கிடைக்கும்.

எடுத்துக்காட்டு 8

| மகள் | சகோதரி | தாய் |
|---|---|---|
| 1/2 | அஸபா | 1/6 |

இந்நிலையில் மொத்த சொத்தை 6பங்கு வைக்க வேண்டும். மகளுக்கு 3 பங்கும், தாய்க்கு ஒரு பங்கும் மீதியுள்ள 2பங்கு சகோதரிக்கும் கிடைக்கும். மகள் இடத்தில் மகனின் மகள் வந்தாலும் இதே போன்று தான் பங்கிட வேண்டும். மகள் இல்லாததால் மகளின் பங்கை மகனின் மகள் பெறுவாள்.

முஆத் பின் ஜபல் (ரலி) அவர்கள் யமன் நாட்டுக்கு எங்களின் போதகராகவும் ஆட்சியாளராகவும் வந்தார்கள். அன்னாரிடம் நாங்கள், தம் மகளையும் சகோதரியையும் விட்டு இறந்து போன ஒருவரைக் குறித்து (வாரிசுரிமை தொடர்பாக)க் கேட்டோம். அப்போது அவர்கள் (மொத்தச் சொத்தில்) மகளுக்குப் பாதியும் சகோதரிக்கு (மீதி)ப் பாதியும் அளிக்கும் படிக் கூறினார்கள்.

அஸ்வத் பின் யஸீத் (ரஹ்) அறிவிக்கிறார்.
(ஆதாரம் : – புகாரி ஹ.எண்.6734)

எடுத்துக்காட்டு 9

| சகோதரி | மகன் | தாய் |
|---|---|---|
| மகன் இருப்பதால் பங்கு இல்லை | அஸபா | 1/6 |

இந்நிலையில் சொத்தை 6பங்கு வைத்து தாய்க்கு ஒரு பங்கும் மீதி 5பங்கு மகனுக்கும் சேரும். மகன் இருப்பதால் சகோதரிக்குச் சொத்து தடுக்கப்பட்டது.

எடுத்துக்காட்டு 10

| சகோதரி | மகனின் மகன் | தாய் |
|---|---|---|

மேற்கண்ட 9வது எடுத்துக் காட்டுப் போலத்தான் பங்கிட வேண்டும்.

**எடுத்துக்காட்டு 11**

| மகள் | சகோதரி |
|---|---|
| 1/2 | அஸபா |

சொத்தை இரு பங்கு வைத்து பாதியை மகளுக்கும் மீதிப்பாதியை சகோதரியும் எடுத்துக் கொள்வார்கள்.

**எடுத்துக்காட்டு 12**

| மகள் | மகனின் மகள் | சகோதரி | தாய் |
|---|---|---|---|
| 1/2 | 1/6 | அஸபா | 1/6 |

இந்நிலையில் மொத்தச் சொத்தை 6 பங்கு வைத்து மகளுக்கு 3 பங்கு, தாய்க்கு ஒரு பங்கு, மகனின் மகளுக்கு ஒரு பங்கு, மீதியுள்ள ஒரு பங்கு அஸபா என்ற வகையில் சகோதரிக்குக் கிடைக்கும்.

**எடுத்துக்காட்டு 13**

| மகள்2 | சகோதரி |
|---|---|
| 2/3 | அஸபா |

சொத்தை 3பங்கு வைத்து மகள் இரண்டு பேருக்கும் 2பங்கும் மீதியுள்ள ஒரு பங்கு சகோதரிக்கும் கிடைக்கும்.

**எடுத்துக்காட்டு 14**

| சகோதரி 2 பேர் | சிறிய தந்தை |
|---|---|
| 2/3 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 3பங்கு வைத்து சகோதரி இரண்டு பேரும் 2பங்கையும் மீதி ஒரு பங்கை சிறிய தந்தையும் எடுத்துக் கொள்வார்.

மேற்கண்ட உதாரணங்கள் மற்றும் பங்கீடுகளுக்கான ஆதாரமாக அல்குர்ஆனின் 4வது அத்தியாயம் 11,12 மற்றும் 176 ஆகிய வசனங்களைப் பார்வையிடுக.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) சகோதரிக்கு பங்கு கிடைக்காத நிலைகள் எவை?

(2) சகோதரிகள் பங்கு பெறும் நிலைகள் பற்றி விவரி.

(3) கீழ்வரும் கணக்குகளுக்கு தீர்வு காண்க.

A. மகன் - உடன் பிறந்த சகோதரி

B. தந்தை - தாய் - சகோதரி

C. கணவன் - உடன் பிறந்த சகோதரி

D. உடன் பிறந்த சகோதரி 2 பேர் - தாய் வழிச் சகோதரி 2 பேர்

E. தாய் - சகோதரி 2 பேர் - தாய் வழிச் சகோதரி

F. மகள் - சகோதரி

# 11. தந்தை வழிச் சகோதரிகள் பாகம் பெறும் முறைகள்

தந்தை வழிச் சகோதரிகள் என்றால் தாய் வேறுபட்டு தந்தை ஒன்றுபட்ட சகோதரிகளுக்குச் சொல்லப்படும். இவர்கள் கீழ்க்காணும் ஆறு முறைகளில் ஒரு முறையாகப் பங்கு பெறுவார்கள். பெரும்பாலும் உடன் பிறந்த சகோதரி பங்கு பெறுவது போன்றே இவர்களும் பங்கு பெறுவர்.

## A.பங்கு கிடைக்காத நிலை

1) இறந்தவருக்கு மகன்கள் அல்லது மகன் வழிச் சந்ததியில் ஆண்கள் இருந்தால், அல்லது தந்தை அல்லது தந்தையின் தந்தையிருந்தால் தாய் தந்தை வழிச் சகோதரிகளுக்கோ, தந்தைவழிச் சகோதரிகளுக்கோ பங்கு கிடைக்காது.

2) தாய் தந்தை வழிச் சகோதரிகள் இருவரோ இருவருக்கு மேற்பட்டவர்களோ இருந்தால் இவர்களுக்குப் பங்கு ஏதும் கிடைக்காது.

3) தாய் தந்தை வழிச் சகோதரன் இருந்தால் அல்லது தாய் தந்தை வழிச் சகோதரி அஸபாவாகிவிட்டால் இவர்களுக்குப் பங்கு ஏதும் கிடையாது.

## B. அஸபாவாகப் பங்கு பெறும் நிலை

1) தந்தை வழிச் சகோதரன் (அதாவது அவளுடன் பிறந்த சகோதரன்) இருந்தால் அஸபாவாகப் பங்கு பெறுவாள்.

2) தாய் தந்தை ஆகிய இருவழிச் சகோதரி இல்லாத போது மகளோடும், மகனின் மகளோடும், மகள்களோடும் உடன் பிறந்த சகோதரி போன்று அஸபாவாகப் பங்கு பெறுவாள்.

## C. 1/2 பங்கு கிடைக்கும் நிலை

A.இல் கூறிய படி இறந்தவருக்குக் குழந்தைகளோ ஆண்வழிச் சந்ததியில் யாரும் இல்லாது தந்தை பாட்டன் போன்றவர்களும் இல்லாது அவளுடன் பிறந்த சகோதரனும் இல்லாது, இருவழிச் சகோதரிகள் இருவர், இருவருக்கு மேற்பட்டவர்கள் இல்லாத நிலையில் அவள் ஒருத்தியாக இருந்தால் மொத்தச் சொத்தில் பாதியைப் பெறுவாள்.

## D. 2/3 பங்கு பெறும் நிலை

A. இல் கூறிய படி யாரும் இல்லாத நிலையில் தந்தை வழிச் சகோதரி ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் 2/3 பங்கை தமக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்.

## E. 1/6 பாகம் பெறும் நிலை

இரு வழிச் சகோதரி (அதாவது தாய் தந்தை வழிச் சகோதரி) ஒருத்தி மட்டும் இருக்கும் போது அவளுக்குக் கிடைக்கும் 1/2 பாகம் போகப் பெண்களுக்குரிய மொத்தப் பங்காகிய மூன்றில் இரண்டு பங்கை நிறைவு செய்யும் பொருட்டு மீதியுள்ள ஆறில் ஒரு பாகம் இவளுக்குக் கிடைக்கும். இந்நிலையில் இவளை அஸபாவாக ஆக்கும் யாரும் இல்லாதிருக்க வேண்டும்.

மேற்கண்ட பங்குகளுக்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு

எ.கா_1

**A.** <u>**தந்தைவழிச் சகோதரி**</u> — <u>**மகன்**</u>

இந்நிலையில் சொத்து முழுவதையும் மகன் அஸபா என்ற வகையில் எடுத்துக் கொள்வான். மகன் இருப்பதால் தந்தை வழிச் சகோதரிக்குப் பங்கு கிடைக்காது.

**B.** **தந்தைவழிச் சகோதரி** — **தந்தை**

மேற்கண்டவாறே தந்தை அஸ்பா என்ற வகையில் முழுச் சொத்தையும் அடைவார். தந்தைவழிச் சகோதரிக்கு சொத்து கிடைக்காது.

**C.** **தந்தைவழிச் சகோதரி** — **தாய் தந்தைவழிச் சகோதரன்**

இந்நிலையிலும் சொத்து முழுவதையும் தாய் தந்தை வழிச் சகோதரன் அஸபா என்ற ரீதியில் அடைவான். தந்தை வழிச் சகோதரி சொத்து கிடைக்காமல் தடுக்கப்படுவாள்.

| **D.** தாய் தந்தை வழிச் சகோதரிகள் இருவர் | தந்தைவழிச் சகோதரி | சிறிய தந்தை |
|---|---|---|
| 2/3 | | அஸபா |

இந்நிலையிலும் தந்தை வழிச் சகோதரிக்கு பாகம் ஏதும் கிடைக்காது. சொத்தை 3பங்கு வைத்து 2பங்கை தாய் தந்தை (இருவழிச்) சகோதரிகள் இருவரும் எடுத்துக் கொண்டு மீதி யுள்ள ஒரு பங்கு சிறிய தந்தைக்குப் போகும்.

| E. மகள் | இருவழிச் சகோதரி | தந்தைவழிச் சகோதரி |
|---|---|---|
| 1/2 | அஸபா | |

இந்நிலையிலும் தந்தை வழிச் சகோதரிக்கு ஏதும் கிடையாது. தாய் தந்தை வழிச் சகோதரியாகிய இருவழிச் சகோதரி அஸபாவாக ஆவதால் தந்தை வழிச் சகோதரி சொத்து கிடைக்காமல் தடுக்கப்பட்டாள்.

சொத்தை 2பங்கு வைத்து மகள் ஒரு பங்கும் மீதி ஒரு பங்கு இருவழிச் சகோதரிக்கும் கிடைக்கும்.

| F. கணவன் | மகள் | மகனின் மகள் | இருவழிச் சகோதரி | தந்தை வழிச் சகோதரி |
|---|---|---|---|---|
| 1/4 | 1/2 | 1/6 | அஸபா | |

இந்நிலையில் தாய் தந்தை வழிச் சகோதரி அஸபாவாக வருவதால் தந்தை வழிச் சகோதரி சொத்து கிடைக்காமல் தடுக்கப்பட்டாள்.

இந்நிலையில் சொத்தை 12பங்கு வைக்க வேண்டும். 3 பங்கு கணவனுக்கும், 6பங்கு மகளுக்கும், 2பங்கு மகனின் மகளுக்கும், மீதியுள்ள ஒரு பங்கு அஸபாவாகிய தாய் தந்தை இருவழிச் சகோதரிக்கும் கிடைக்கும்.

எ.கா.2

| மகள் | மகனின் மகள் | தந்தைவழிச் சகோதரி |
|---|---|---|
| 1/2 | 1/6 | அஸபா |

இந்நிலையில் மொத்த சொத்தை 6 பங்கு வைத்து அதில் பாதியாகிய 3பங்கை மகளுக்கும் ஒரு பங்கை மகனின் மகளுக்கும் கொடுத்து விட வேண்டும். மீதியுள்ள 2பங்கு அஸபாவாகிய தந்தை வழிச் சகோதரிக்குக் கிடைக்கும்.

எ.கா_3

| இருவழிச் சகோதரிகள் இருவர் | தந்தைவழிச் சகோதரன் | தந்தைவழிச் சகோதரி |
|---|---|---|
| 2/3 | | அஸபா |

இந்நிலையில் தன்னோடு பிறந்த ஆணுடன் இருப்பதால் அஸபாவாகப் பங்கு பெற்று ஆணுக்கு இரண்டு பெண்ணுக்கு ஒன்று என்ற விகிதத்தில் பங்கு பெறுகிறாள்.

மொத்த சொத்தை 9பங்கு வைக்க வேண்டும். காரணம் உடன் பிறந்த சகோதரிகள் இருவர் வருவதால் அவர்களுக்கு 2/3 பங்கு கொடுக்க வேண்டும்.

தந்தை வழிச் சகோதரியும் தந்தைவழிச் சகோதரனும் இருப் பதால் ஆண் மகனை 2 ஆகவும் பெண்ணை ஒன்று ஆகவும் கணக் கிட்டு 3 நபர்கள் ஆகிறது. 3x3=9 அதமப் பொது மடங்கு.

எனவே 9பங்கு வைத்து அதில் 2/3 ஆகிய 6 பங்கை உடன் பிறந்த இரு வழிச் சகோதரிகள் இருவரும் எடுத்துக் கொள்வார்கள். மீதியுள்ள 3 பங்கில் ஆணுக்கு 2 பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

தந்தை வழிச் சகோதரனுக்கு 2பங்கும், தந்தை வழிச் சகோத ரிக்கு ஒரு பங்கும் கிடைக்கும்.

எ.கா_4

| தந்தைவழிச் சகோதரி | சிறிய தந்தை |
|---|---|
| 1/2 | அஸபா |

இந்நிலையில் மொத்த சொத்தை 2பங்கு வைத்து தந்தை வழிச் சகோதரிக்கு பாதியாகிய ஒரு பங்கும் மீதி ஒரு பங்கை சிறிய தந்தையும் பெறுவர்.

எ.கா_5

| இருவழிச் சகோதரி | தந்தைவழிச் சகோதரி | சிறிய அல்லது பெரிய தந்தை |
|---|---|---|
| 1/2 | 1/6 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து அதில் பாதி 3 பங்கை தாய் தந்தை வழிச் சகோதரிக்கும், ஒரு பங்கு தந்தை வழிச் சகோதரிக்கும் மீதி 2பங்கு சிறிய அல்லது பெரிய தந்தைக்கும் கிடைக்கும்.

எ.கா_6

| தந்தைவழிச் சகோதரன் | தந்தைவழிச் சகோதரி |
|---|---|
| 2 | 1 |

இந்நிலையில் வேறுயாரும் இல்லாததால் தந்தை வழிச் சகோதரன் மூலம் தந்தை வழிச் சகோதரி அஸபாவாகிறாள். எனவே சொத்தை 3பங்கு வைத்து 2 பங்கை தந்தைவழிச் சகோதரனும் ஒரு பங்கை தந்தை வழிச் சகோதரியும் பெறுவர்.

எ.கா_7

| தந்தை வழிச் சகோதரிகள் இருவர் | சிறிய தந்தை |
|---|---|
| 2/3 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 3 பங்கு வைத்து 2பங்கை தந்தை வழிச் சகோதரிகள் இருவரும் எடுத்துக்கொள்வர். மீதி ஒரு பங்கு சிறிய தந்தைக்குச் சேரும்.

எ.கா_8

| தாய் | தந்தை | தந்தைவழிச் சகோதரி |
|---|---|---|
| 1/3 | அஸபா | தந்தை இருப்பதால் சொத்து கிடையாது |

இந்நிலையில் சொத்தை 3பங்கு வைத்து ஒரு பங்கு தாய்க்கு மீதி 2பங்கு அஸபா என்ற முறையில் தந்தைக்குக் கிடைக்கும். (இறந்த வருக்குக் குழந்தைகள் இல்லை. ஒரே சகோதரி எனவே தாய்க்கு 1/3 பங்கு).

எ.கா_9

| தாய் | இருவழிச் சகோதரி | தந்தைவழிச்சகோதரி | தாய்வழிச் சகோதரி |
|---|---|---|---|
| 1/6 | 1/2 | அஸபா | 1/6 |

ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரிகள் இருப்பதால் தாய்க்கு 1/6 பங்கு.

இந்நிலையில் மொத்த சொத்தை 6பங்கு வைக்க வேண்டும். ஒரு பங்கு தாய்க்கும், மூன்று பங்கு இரு வழிச் சகோதரிக்கும் தாய் வழிச் சகோதரிக்கு ஒரு பங்கும் மீதி ஒரு பங்கு தந்தை வழிச் சகோதரிக்கும் கிடைக்கும்.

எ.கா_10

| கணவன் | தந்தை வழிச் சகோதரி |
|---|---|
| 1/2 | அஸபா 1/2 |

இந்நிலையில் சொத்தை 2 பங்கு வைத்து ஒரு பங்கு கணவனுக்கும் மற்றொரு பங்கு தந்தை வழிச் சகோதரிக்கும் கொடுக்க வேண்டும்.

# 12. தாய் வழிச் சகோதரிகள்

தாய்வழிச் சகோதரிகள் என்றால் தந்தை வேறுபட்டு தாய்மட்டும் ஒன்று பட்ட சகோதரிகளைக் குறிக்கும்.

இவர்கள் மூன்று வகைகளில் ஒரு வகையாகப் பங்கு பெறுவார்கள்.

## A. பங்கு கிடைக்காத நிலை

*1) இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகன் வழியில் குழந்தைகளோ, தந்தை அல்லது பாட்டன் இருந்தாலோ பங்கு பெற மாட்டார்கள்.*

*2) மேற்கண்ட யாரும் இல்லாமல் தாய் வழிச்சகோதரி ஒருத்தி மட்டும் இருந்தால் 1/6 பங்க கிடைக்கும்.*

*3) மேற்கண்ட யாரும் இல்லாமல் தாய் வழிச்சகோதரி ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் சொத்தில் மூன்றில் ஒரு பங்கு கிடைக்கும். அதை அவர்கள் தமக்கு மத்தியில் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்.*

*தாய்வழிச் சகோதரர்களும் இது போன்றே பாகம் பெறுவர். தாய், தந்தை வழிச் சகோதர, சகோதரிகள் அரபி மொழியில் பனுல் அஃயான் என்று கூறப்படுவர். தந்தை வழிச் சகோதர, சகோதரிகள் பனுல் அல்லாதி என்று கூறப்படுவர்.*

*தாய்வழிச் சகோதர, சகோதரிகள் அரபி மொழியில் பனுல் அக்யாபி அல்லது அவ்லாதுல் உம்மு என்று கூறப்படுவர்.*

*தாய் வழிச் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் ஒரு போன்றே பாகம் பிரித்துக் கொடுக்கப்படும். இவர்களில் ஆண் பெண் என்ற பாகுபாடு இல்லை. பிற வாரிசுக்காரர்களில் பெண்ணுக்குப் பங்குகிடைக்காத நிலையில், ஆண் இருந்தால் பெண்ணுக்கும் அஸபா என்ற அடிப்படையில் ஆணுக்கு இரண்டு பங்கு பெண்ணுக்கு ஒரு பங்கு என்ற வகையில் பாகம் கிடைக்க வாய்ப்புண்டு. ஆனால் தாய்வழிச் சகோதரர்கள் இருந்தாலும் தாய்வழிச் சகோதரிகளுக்குப் பங்கு கிடைக்காது.*

*தந்தை பாட்டன் போன்ற முன் வாரிசுகளோ, மகன், பேரன் போன்ற கிளை வாரிசுகளோ இல்லாத ஓர் ஆணோ அல்லது ஒரு பெண்ணோ இவர்களுக்கு ஒரு*

சகோதரனோ அல்லது ஒரு சகோதரியோ இருந்தால் அவர்கள் ஒவ்வொருக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு. ஆனால் ஒன்றக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அவர் கள் மூன்றில் ஒரு பாகத்தில் தமக்கிடையே சமமாக பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

(அல்குர்ஆன் 4:12)

இவற்றுக்கான எடுத்துக்காட்டுகள். வருமாறு

எ.கா_1

| தாய் | உடன்பிறந்த சகோதரி 2 | தந்தைவழிச் சகோதரி | தாய்வழிச் சகோதரன் |
|---|---|---|---|
| 1/6 | 2/3 | உடன் பிறந்த சகோதரி இருப்பதால் பங்கு கிடையாது | 1/6 |

இந்நிலையில் சொத்தை 6பங்கு வைத்து தாய்க்கு ஒரு பங்கும், உடன் பிறந்த சகோதரி இருவருக்கும் 4 பங்குகளும் தாய்வழிச் சகோதரன் அல்லது சகோதரிக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

உடன் பிறந்த சகோதரி இருவர் இருப்பதால் தந்தைவழிச் சகோதரிக்குப் பங்கு கிடையாது. தாய் வழிச் சகோதரன் இன்றி தாய்வழிச் சகோதரி இருந்தாலும் அதே போன்று தான்.

எ.கா_2

| உடன் பிறந்த சகோதரி | தந்தைவழிச் சகோதரி 2 | தாய்வழிச் சகோதரன் | தாய்வழிச் சகோதரி |
|---|---|---|---|
| 1/2 | 1/6 | 1/3 | |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து உடன் பிறந்த சகோதரிக்கு 3பங்கும் தந்தை வழிச் சகோதரி இரண்டு பேருக்கும் 1பங்கும் தாய் வழிச் சகோதரருக்கும், தாய்வழிச் சகோதரிக்கும் 2பங்கும் கொடுக்க வேண்டும்.

எ.கா_3

| உடன்பிறந்த சகோதரர் 2 பேர் | தாய்வழிச் சகோதரி 2பேர் |
|---|---|
| 2/3 | 1/3 |

இந்நிலையில் சொத்தை 3பங்கு வைத்து அதில் 2 பங்கை உடன்

பிறந்த சகோதரர் இரண்டு பேரும் எடுத்துக் கொள்வர். மீதி ஒரு பங்கு தாய்வழிச் சகோதரிகள் இருவரும் சமமாக எடுத்துக் கொள்வர்.

எ.கா_4

| **தந்தைவழிச் சகோதரி 2பேர்** | **தாய்வழிச் சகோதரர் 2பேர்** |
|---|---|
| 2/3 | 1/3 |

மேற்கண்ட 3வது எடுத்துக் காட்டு போன்றே சொத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

எ.கா_5

| **தந்தைவழிச் சகோதரி 2 பேர்** | **தாய்வழிச் சகோதரி 2 பேர்** |
|---|---|
| 2/3 | 1/3 |

மேற்கண்ட எடுத்துக்காட்டு 3,4 போன்றே இதுவும்.

எ.கா_6

| **தாய் வழிச் சகோதரர் 2** | **உடன் பிறந்த சகோதரர்** |
|---|---|
| 1/3 | அஸபா |

சொத்தை 3பங்கு வைத்து தாய்வழிச் சகோதரர் இருவருக்கும் ஒரு பங்கும் மீதி 2பங்கு உடன் பிறந்த சகோதரருக்கும் கொடுக்க வேண்டும்.

எ.கா_7

| **தாய்வழிச் சகோதரி** | **தாய்வழிச் சகோதரர்** | **உடன்பிறந்த சகோதரன்** |
|---|---|---|
| | 1/3 | அஸபா |

சொத்தை 3பங்கு வைத்து தாய்வழிச் சகோதரியும் தாய்வழிச் சகோதரரும் சேர்த்து ஒரு பங்கு பெறுவர். மீதி 2 பங்கு உடன் பிறந்த சகோதரருக்குக் கிடைக்கும்.

எ.கா_8

| **தாய்வழிச் சகோதரி** | **தாய்வழிச் சகோதரர்** | **தாய்** | **உடன்பிறந்த சகோதரர்** |
|---|---|---|---|
| | 1/3 | 1/6 | அஸபா |

இந்நிலையில் மொத்த சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும். அதில் தாய் வழிச் சகோதரருக்கும், தாய்வழிச் சகோதரிக்கும்

சேர்த்து 2 பங்கு கொடுக்க வேண்டும். தாய்க்கு ஒரு பங்கு, மீதி 3 பங்கு அஸபா என்ற அடிப்படையில் உடன்பிறந்த சகோதரருக்குக் கிடைக்கும்.

எ.கா_9

| தாய்வழிச் சகோதரர் 2பேர் | தாய் | தந்தை |
|---|---|---|
| தந்தை இருப்பதால் சொத்து கிடையாது | 1/6 | அஸபா |

சொத்தை 6பங்கு வைத்து தாய்க்கு ஒரு பங்கு போக மீதி 5பங்கு தந்தைக்குக் கிடைக்கும். தாய்வழிச் சகோதரர் இருவருக்கும் ஏதும் கிடைக்காது.

எ.கா_10

| தாய்வழிச் சகோதரர் இருவர் | மகன் |
|---|---|
| | அஸபா |

மகன் இருப்பதால் தாய் வழிச் சகோதரர்களுக்கு சொத்து ஏதும் கிடைக்காது. சொத்து முழுவதையும் மகன் எடுத்துக் கொள்வான். மகன் இருக்கும் இடத்தில் மகனின் மகன் இருந்தாலும் இதே போன்று தான்.

எ.கா_11

| தாய்வழிச் சகோதரி 2பேர் | மகள் | உடன் பிறந்த சகோதரி |
|---|---|---|
| மகள் இருப்பதால் சொத்து கிடைக்காது. | 1/2 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 2 பங்கு வைத்து மகள் ஒரு பங்கும், உடன் பிறந்த சகோதரி ஒரு பங்கும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எ.கா_12

| தாய்வழிச் சகோதரர் 2பேர் | மகனின் மகள் | பெரிய தந்தை [or] சிறிய தந்தை |
|---|---|---|
| மகனின் மகள் இருப்பதால் சொத்து கிடைக்காது | 1/2 | அஸபா |

மேற்கண்டவாறே சொத்தைப் பிரிக்க வேண்டும்.

## 'கலாலா' பற்றிய விளக்கம்

தந்தை, பாட்டனார் போன்ற மூல வாரிசுகளோ மகன், மகள்,

பேரன் போன்ற கிளை வாரிசுகளோ இல்லாமல் சகோதர சகோதரிகள் போன்ற பக்க வாரிசுகள் உள்ள நிலைக்கு அரபியில் 'கலாலா' என்று கூறப்படும்.

அல்லாஹ் தனது திருமறைக் குர்ஆனில் 4:12வது வசனத்தில் 'தந்தை, பாட்டன் போன்ற முன் வாரிசுகளோ அல்லது பிள்ளை, பேரன் போன்ற பின் வாரிசுகளோ இல்லாத ஓர்ஆணோ அல்லது ஒரு பெண்ணோ இவர்களுக்கு ஒரு சகோதரனோ அல்லது ஒரு சகோதரியோ இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு. ஆனால் இதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் மூன்றில் ஒரு பாகத்தில் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். (இதுவும்) அவர்களின் மரண சாசனமும் கடனும் நிறைவேற்றிய பின்னர்தான். ஆனால் வாரிசுகள் எவருக்கும் நஷ்டம் ஏற்படலாகாது. இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும். இன்னும் அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாகவும் மிக்க பொறுமையுடையோனுமாகவும் இருக்கின்றான்' என்று கூறுகிறான்.

> (நபியே!) மக்கள் உம்மிடம் கலாலா பற்றி தீர்ப்பு வழங்குமாறு கேட்கிறார்கள். நீர் கூறும்: "அல்லாஹ் உங்களுக்கு கலாலா பற்றி இவ்வாறு தீர்ப்பளிக்கின்றான்: குழந்தை இல்லாத ஒருவன், ஒரு சகோதரி அவனுக்கு இருக்கும் நிலையில் இறந்துவிட்டால், அவன் விட்டுச் சென்ற சொத்தில் பாதி அவளுக்கு உரியதாகும். குழந்தை இல்லாமல் அந்தச் சகோதரி இறந்துவிட்டால் சகோதரன் அவளுக்கு வாரிசாவான். இறந்து போனவருக்கு இரு சகோதரிகள் இருந்தால், அவ்விருவருக்கும் அவன் விட்டுச் சென்ற சொத்தில் மூன்றில் இரு பங்கு உரியதாகும். சகோதர சகோதரிகள் பலர் இருந்தால், அவர்களில் ஓர் ஆணின் பங்கு இரு பெண்களின் பங்கிற்குச் சமமானதாகும். அல்லாஹ் உங்களுக்குச் சட்ட திட்டங்களைத் தெளிவாக விவரிக்கின்றான்; நீங்கள் வழி தவறிவிடக் கூடாது என்பதற்காக! மேலும், அல்லாஹ் ஒவ்வொரு விஷயத் தைக் குறித்தும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

**(அல்குர்ஆன் 4:176)**

ஜாபிர் (ரலி) **கூறியதாவது:**

நான் நோயுற்றிருந்த போது நபி (ஸல்) அவர்கள் என்னை நோய்

விசாரிக்க வந்தார்கள். நான் மயக்கமான நிலையில் இருந்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் உளூ செய்து விட்டு அந்தத் தண்ணீரை என் மீது ஊற்றினார்கள். உடனே நான் மயக்கத்திலிருந்து (தெளிந்து) உணர்வு பெற்றேன். அப்போது நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய சொத்துக்கு வாரிசு யார்? என்னுடைய உடன் பிறப்புகள் மட்டுமே எனக்கு வாரிசாக ஆகும் நிலையில் நான் உள்ளேனே என்று கேட்டேன். அப்போது பாகப் பிரிவினை பற்றிய (4:176-வது) வசனம் இறங்கியது"

மேற்கண்ட திருமறைக் குர்ஆன் வசனங்களும் நபிமொழியும் கலாலா பற்றிய ஆதாரங்களாகும்.

4:12வது வசனத்தில் கூறப்படும் கலாலாவின் வாரிசுரிமைப் பங்குகளுக்கும் 4:176வது வசனத்தில் கூறப்படும் பங்குகளுக்கும் மத்தியில் பெருத்த வேறுபாடு காணப்படுகிறதே என்றொரு சந்தேகம் ஏற்படலாம்.

இந்த சந்தேகத்தைப் போக்க இரு வழிகள் உள்ளன.

**முதல்வழி:-**

4:12வது வசனம், மற்றும் 4:176வது வசனம் ஆகிய இவ்விரண்டு வசனங்களில் 4:176வது வசனமே இறுதியானதாகும். எனவே இறுதியான இவ்வசனம் 4:12வது வசனத்தில் கூறப்பட்டுள்ள கலாலா சட்டத்தை மாற்றிவிட்டது. இதற்கு ஆதாரமாகப் பின்வரும் செய்தி அமைந்துள்ளது.

**பராஉ (ரலி) அவர்கள் கூறியதாவது:**

(நபி (ஸல்) அவர்களுக்கு) இறுதியாக அருளப்பெற்ற (குர்ஆன்) அத்தியாயம் 'பாராஅத்' (9வது) அத்தியாயமாகும். (வாரிசுரிமைப் பங்கீடு தொடர்பாக) இறுதியாக இறங்கிய வசனம் '(நபியே!) உங்களிடம் மக்கள் தீர்ப்புக் கேட்கிறார்கள்' எனும் (இந்த 4:176ஆவது) வசனமாகும்.

**இந்த வசனத்தின் (4:176) கருத்தாவது:**

'கலாலா' என்பது தகப்பன் மற்றும் பாட்டன் ஆகிய மூல வாரிசுகளோ, பிள்ளை மற்றும் பேரன் ஆகிய கிளை வாரிசுகளோ இல்லாமல் சகோதர சகோதரிகள் போன்ற பக்க வாரிசுகள் உள்ள நிலையைக் குறிக்கும். இந்த நிலையில் உள்ள ஒருவர் இறந்து

போனால், அவர் விட்டுச்செல்லும் சொத்தை எவ்வாறு பங்கிடவேண்டும் என்பதை இவ்வசனம் விவரிக்கின்றது. இறந்தவர் ஆணாக இருந்து, அவருக்கு (தகப்பன் ஒன்றான) ஒரு சகோதரி மட்டும் இருந்தால் அவளுக்குச் சொத்தில் பாதி கிடைக்கும். இரண்டு சகோதரிகள் இருந்தால் சொத்தில் மூன்றில் இரண்டு பாகம் அவர்களுக்குரியதாகும். இறந்தவர் பெண்ணாக இருந்து, அவளுக்கு (தகப்பன் ஒன்றான) ஒரு சகோதரன் இருந்தால் முழுச் சொத்துக்கும் அவனே வாரிசாவான். இறந்தவருக்குச் சகோதரர்களும் சகோதரிகளுமாகப் பலர் இருந்தால், அவர்கள் தம்மிடையே 'இரு பெண்களுக்குச் சமமான பங்கு ஓர் ஆணுக்கு' என்ற விகிதத்தில் சொத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**இரண்டாவது வழி:-**

*4:12வது வசனத்தில் கூறப்படும் பங்கீடு தாய்வழிச் சகோதர சகோதரிகள் பற்றியது. தாய்வழிச் சகோதர சகோதரிகள் என்றால் தந்தை வேறுபட்டு தாய்மட்டும் ஒன்றுபட்ட சகோதர சகோதரிகள் ஆவர்.*

*4:176வது வசனத்தில் கூறப்படும் பங்கீடு ஒரேதாய் தந்தைக்குப் பிறந்த சொந்த சகோதர சகோதரிகள் அல்லது தந்தை ஒன்றுபட்டு தாய் வேறுபட்ட சகோதர சகோதரிகள் பற்றியது என்று வைத்துக் கொண்டால் பிரச்சனை ஏதும் இல்லை. இவ்விரண்டு வசனங்களுக்கு மத்தியில் முரண்பாடு இல்லை.*

*அல்லாஹ் மிக அறிந்தவன்.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) தாய் வழிச் சகோதரிகள், சகோதரர்கள் தந்தை வழிச் சகோதர சகோதரிகள் பெறும் பங்குகள் பற்றி விவரி.*

*(2) கீழ்வரும் கணக்குகளுக்கு தீர்வைக் கண்டு பிடி.*

A *தாய்வழிச் சகோதரன் - தந்தை வழிச் சகோதரன்*

B. *தாய்வழிச் சகோதரி - சிறிய தந்தை*

*(3) 'கலாலா' என்றால் என்ன?*

# 13. தாயின் பாகம்

தாய்க்கு மூன்று முறைகளில் ஒரு முறையாகப் பங்கு கிடைக்கும்.

## 1) 1/6 பாகம் கிடைக்கும் நிலை

இறந்தவருக்கு (ஆண், பெண்) குழந்தைகளோ அல்லது மகனின் குழந்தைகளோ அல்லது மகன் வழிச் சந்ததியில் யாராவது இருந்தால் அல்லது மூன்று வகையான சகோதர சகோதரிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் தாய்க்கு ஆறில் ஒரு பாகம் கிடைக்கும்.

## 2) 1/3 பாகம் கிடைக்கும் நிலை

மேற் கூறப்பட்டவர்கள் இல்லாத நேரத்தில் மூன்றில் ஒன்று கிடைக்கும்.

## 3) மீதியில் 1/3 பாகம் கிடைக்கும் நிலை

கணவன், மனைவி இருவரில் ஒருவர் பாகம் பெறுபவர்களாக இருந்து தந்தையும் பாகம் பெறும் நிலையில் கணவன், அல்லது மனைவிக்குக் கொடுத்தது போக மீதி உள்ளதில் 1/3 பாகம் தாய்க்குக் கிடைக்கும். அது போக மீதியுள்ளது தந்தைக்குக் கிடைக்கும். தந்தை இல்லாமல் பாட்டன் இருந்தால் தாய்க்கு மொத்தச் சொத்தில் மூன்றில் ஒரு பாகம் கிடைக்கும்.

**இவற்றிற்கான எடுத்துக் காட்டுகள் வருமாறு**

**எ_கா.1**

| தாய் | மகன் |
|---|---|
| 1/6 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து ஒரு பங்கை தாயும் மீதி 5 பங்கை மகனும் பெறுவர்.

**எ.கா_2**

| தாய் | மகன் இரண்டு பேர் |
|---|---|
| 1/6 | அஸபா |

மேற்கண்டவாறே இங்கும் சொத்து பிரிக்கப்படும். மகனுக்குக் கிடைத்த 5 பங்கு, மகன் இருவர் இருப்பதால் சமமாகப் பிரித்துக் கொடுக்கப் படும். அதாவது ஒவ்வொருவருக்கும் இரண்டரைப் பங்கு கிடைக்கும்.

பின்னம் வருவதைத் தவிர்க்க சொத்தை 6x2=12 பங்கு வைத்து தாய்க்கு 2 பங்கும், மீதியுள்ள 10 பங்கு மகன் ஒவ்வொருவருக்கும் 5+5 பங்கு கொடுக்க வேண்டும்.

எ_கா.3

| தாய் | தந்தை | சகோதரிகள் 2 பேர் |
|---|---|---|
| 1/6 | அஸபா | தந்தை இருப்பதால் பங்கு கிடைக்காது |

(தந்தை இருப்பதால் சகோதரிகள் பங்கின்றித் தள்ளப் பட்டாலும் தாயின் 1/3 பங்கை 1/6 பங்காகக் குறைத்து விட்டனர்.)

இந்நிலையிலும் மேற்கண்டது போன்றே சொத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

எ_கா.4

| தாய் | உடன்பிறந்த அல்லது தந்தைவழி சகோதரன் | உடன் பிறந்த அல்லது தந்தைவழி சகோதரி | தந்தை |
|---|---|---|---|
| 1/6 | தந்தையால் பங்கின்றி தள்ளப்பட்டார் | தந்தையால் பங்கின்றி தள்ளப்பட்டார் | அஸபா |

இந்நிலையிலும் மேற்கண்டவாறே சொத்து பிரித்துக் கொடுக் கப்பட வேண்டும். இறந்தவருக்குக் குழந்தை இல்லாததால் தாய்க்கு 1/3 பங்கு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரனும் சகோதரியும் வாரிசாக இருப்பதால் 1/6 பங்காகக் குறைத்து விட்டனர்.

எ_கா.5

| தாய் | தந்தை |
|---|---|
| 1/3 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 3 பங்கு வைத்து ஒரு பங்கு தாய்க்கும் மீதி 2 பங்கு தந்தைக்கும் கொடுக்க வேண்டும்.

எ.கா_6

| தாய் | தந்தை | சகோதரன் |
|---|---|---|
| 1/3 | அஸபா | தந்தையால் பங்கின்றித் தள்ளப்பட்டார் |

இங்கும் மேற்கண்டவாறே பிரித்துக் கொடுக்க வேண்டும். இங்கு தந்தை இல்லாதிருந்தால் சகோதரனுக்கு 2 பங்கும் தாய்க்கு ஒரு பங்கும் கிடைக்கும். அதாவது தந்தை பெறுவதை சகோதரன் அஸபாவாகப் பெறுவான்.

எ_கா.7

| கணவன் | தாய் | தந்தை |
|---|---|---|
| 1/2 | மீதியில் 1/3 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கும் மீதியுள்ள மூன்றில் தாய்க்கு ஒரு பங்கும் மீதி 2 பங்கு தந்தைக்குச் சேரும்.

இந்தக் கணக்கில் தாய்க்கு மொத்தச் சொத்திலிருந்து 1/3 பங்கு கொடுக்காமல் கணவனுக்கு கொடுத்தது போக மீதியுள்ளதிலிருந்து 1/3 பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் தந்தைக்கு 2பங்கு கிடைத்துள்ளது. இல்லையெனில் தந்தைக்கு ஒரு பங்கு தான் கிடைக்கும்.

அப்போது தாய்க்கு 2 பங்கும் தந்தைக்கு ஒரு பங்கும் ஆகிவிடும். தந்தையை விட தாய் அதிகம் பெறும் நிலை கணவன் அல்லது மனைவிக்குக் கொடுத்தது போக மீதியுள்ளதிலிருந்து தாய்க்கு 1/3 பங்கு கொடுக்கப்படுகிறது.

எ_கா.8

| மனைவி | தாய் | தந்தையின் தந்தை |
|---|---|---|
| 1/4 | 1/3 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து மனைவிக்கு 3 பங்கும் தாய்க்கு 4 பங்கும் மீதி 5 பங்கு தந்தையின் தந்தைக்கும் கிடைக்கும். தந்தையின் தந்தை இருப்பதால் மனைவி இருக்கும் போது அவளுக்குக் கொடுத்தது போக மீதியுள்ளதில் 1/3 பங்கு தாய்க்குக் கொடுக்கவில்லை. மொத்தச் சொத்திலிருந்தே கொடுக்கப்படுகிறது.

எ_கா.9

| மனைவி | தாய் | தந்தை |
|---|---|---|
| 1/4 | மீதியில் 1/3 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து மனைவிக்கு 3 பங்கும், மீதியுள்ள 9 இல் 1/3 பங்கு ஆகிய 3 பங்கை தாய்க்கும் மீதி 6 பங்கு தந்தைக்கும் சேரும். அல்லது சொத்தை 4 பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கு போக மீதியுள்ள 3 பங்கில் தாய்க்கு ஒரு பங்கும் தந்தைக்கு 2 பங்கும் கொடுக்க வேண்டும்.

எ_கா.10

| மனைவி | தாய் | தந்தையின் தந்தை |
|---|---|---|
| 1/4 | 1/3 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து 3 பங்கை மனைவிக்கும் 4 பங்கை தாய்க்கும் மீதி 5 பங்கை தந்தையின் தந்தைக்கும் கொடுக்க வேண்டும். தந்தையின் தந்தை இருப்பதால் தாய்க்கு மொத்தச் சொத்திலிருந்து 1/3 பங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

எ_கா.11

| தாய் | மகள் | சிறிய அல்லது பெரிய தந்தை |
|---|---|---|
| 1/6 | 1/2 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து 1 பங்கை தாயும் 3 பங்கை மகளும், எடுத்துக் கொள்வர். மீதி 2 பங்கு சிறிய அல்லது பெரிய தந்தைக்குக் கிடைக்கும்.

எ_கா.12

| தாய் | தாய் தந்தைவழிச் சகோதரி | தந்தைவழிச் சகோதரி | தாய்வழிச் சகோதரி |
|---|---|---|---|
| 1/6 | 1/2 | 1/6 | 1/6 |

மொத்த சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும். அதில் ஒரு பங்கு தாய்க்கும், 3 பங்கு இரு வழிச் சகோதரிக்கும், ஒரு பங்கு தந்தைவழிச் சகோதரிக்கும், ஒரு பங்கு தாய்வழிச் சகோதரிக்கும் கொடுக்க வேண்டும்.

எ_கா.13

| தாய் | கணவன் | உடன் பிறந்த சகோதரன் |
|---|---|---|
| 1/3 | 1/2 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும். தாய்க்கு 2

*பங்கும் கணவனுக்கு 3 பங்கும் மீதியுள்ள ஒரு பங்கு உடன் பிறந்த சகோதரனுக்கு அஸபா என்ற ரீதியில் கிடைக்கும்.*

*இதற்கான ஆதாரங்கள் அல்குர்ஆன் 4:11 மற்றும் நபிமொழி நூல்கள், வாரிசுரிமைச் சட்ட நூல்களில் காணலாம்.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) தாய்க்குக் கிடைக்கும் பங்குகள் எத்தனை? எந்தெந்த நிலைகளில் எவ்வளவு கிடைக்கும்?*

*(2) கீழ்வரும் கணக்குகளில் வரும் வாரிசுகளுக்குச் சொத்துரிமை எவ்வளவு கிடைக்கும்?*

A. *தந்தை - தாய் - மகனின் மகள் 3 பேர்*

B. *தந்தை - தாய் - மகள் - மகனின் மகள் 4 பேர்.*

C. *தந்தை - தாய் - மகள் 2 - மகனின் மகள்*

D. *மனைவி - தாய் - தந்தை*

E. *கணவன் - தந்தை - தாய்*

# 14. பாட்டன் பாட்டி விளக்கம்

## பாட்டி பற்றிய விளக்கம்

அரபு மொழியில் பாட்டிக்கு ஜத்தத் என்று சொல்லப்படும். பாட்டிகள் தாய் வழிப் பாட்டி, தந்தை வழிப்பாட்டி என்ற இருவகைப்படுவர். இவர்கள் தாய்வழியைச் சார்ந்த பாட்டி களாக இருப்பினும் தந்தைவழிப் பாட்டிகளாக இருப்பினும் அவர்கள் ஒருவரானாலும், பலரானாலும் அவர்கள் பாகம் பெற முக்கிய நிபந்தனை அவர்கள் பாகம் பெறத்தகுதி படைத்த ஜத்தத சஹீஹா (True Grand Mother) என்ற பிரிவினராக இருக்க வேண் டும்.

ஜத்தத ஃபாஸிதா (False Grand Mother) ஆக இருந்தால் அவர் கள் பாகம் பெற மாட்டார்கள்.

இப்போது ஜத்தத சஹீஹா, ஜத்தத ஃபாஸிதா என்றால் என்னவென்று பார்ப்போம்.

தாயின் தாய்

தாயின் தாயின் தாய்

தாயின் தாயின் தாயின் தாய்

இவ்வாறு இடையில் ஆண் குறுக்கிடாமல் இருக்க வேண்டும். அவர்கள் தான் ஜத்தத சஹீஹா.

தாயின் தாயின் தந்தையின் தாய் என்றால் இறுதியில் உள்ள பாட்டி ஜத்தத ஃபாஸிதா ஆவார். அவர் பாகம் பெற மாட்டார். இது தாய் வழிப் பாட்டியில் ஜத்தத சஹீஹா, ஜத்தத ஃபாஸிதா ஆகியவற்றின் விளக்கம் ஆகும்.

இதே போன்று தந்தை வழிப் பாட்டியிலும் உண்டு.

**உதாரணமாக**

தந்தையின் தாய்

தந்தையின் தந்தையின் தாய்

தந்தையின் தந்தையின் தந்தையின் தாய்

இவ்வாறு ஆண் தொடரில் வரும் தாயாக இருக்க வேண்டும்.

இந்த பாட்டி ஜத்தத சஹீஹா ஆவார். இவர் பாகம் பெறுவார். இத் தொடரில் பெண் குறுக்கிட்டால் ஜத்தத ஃபாஸிதா ஆகிவிடுவார். அவர் பாகம் பெற மாட்டார்.

உதாரணமாக தந்தையின் தாயின் தந்தையின் தாய்

இவ்வாறு ஆண் தொடரில் பெண் குறுக்கிட்டு ஆண் வந்தால் ஜத்தத ஃபாஸிதா ஆவார். அவர் பாகம் பெற மாட்டார்.

தாய் வழிப் பாட்டியானாலும் தந்தை வழிப் பாட்டி ஆனாலும் ஒரே தகுதி தான். இவ்வாறான பாட்டிகள் ஒருத்தியானாலும் பலரானாலும் தாய் இல்லாத போது ஆறில் ஒரு பங்கு பாகம் பெறுவார்கள்.

தாய் இன்றி தந்தை இருக்கும் நிலையில் தந்தை வழிப் பாட்டிகளுக்குப் பங்கு ஏதும் கிடைக்காது. தந்தை இல்லாமல் பாட்டனார் இருந்தால், தாய் வழிப் பாட்டி பங்கு பெறுவது போல தந்தை வழிப் பாட்டியும் பங்கு பெறுவாள். தந்தை வழிப் பாட்டிகள், தாய் வழிப்பாட்டிகள் எத்தனை பேர் இருந்தாலும் அனைவரும் ஆறில் ஒரு பாகத்தை தமக்கு மத்தியில் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்.

ஒருத்தி, தாய் தந்தை இரு வழி முறையிலும் பாட்டி ஆகிறாள். மற்றொருத்தி தாய் வழியில் மட்டும் பாட்டியாகிறாள். இந்நிலையில் இருவருமே சொத்துரிமை பெறுகிறார்கள் எனில் இருவருக்கும் சமமான அளவே கிடைக்கும்.

சமீபத் தலைமுறைப் பாட்டி இருக்கும் போது தூரத்து தலைமுறைப் பாட்டி பாகம் பெற மாட்டாள்.

## பாட்டனார் பற்றிய விளக்கம்

அரபு மொழியில் பாட்டனாருக்கு ஜத் என்று கூறப்படும். தந்தையின் தந்தையும் பாட்டனார் தான். தாயின் தந்தையும் பாட்டனார் தான். ஆனால் இங்கு பாகம் பெறும் பாட்டனார் தந்தைவழியைச் சார்ந்தவர் தான். தாய் வழியைச் சார்ந்த பாட்டனார் பாகம் பெற மாட்டார். இவர் (False Grand Father) என்று சொல்லப்படுவார். இறந்தவருக்கும் சொத்துரிமை வந்தடையும் ஆண் மூதாதையருக்கும் இடையில் பெண் தலைமுறையினர் குறுக்கிடாமல் இருந்தால் சொத்துரிமை பெறும் ஆண் மூதாதையர் பாட்டன் (True Grand Father) ஆவார்.

**உதாரணமாக**

தந்தையின் தந்தை

தந்தையின் தந்தையின் தந்தை

இவ்வாறு எத்தனை தலைமுறை முன் சென்றாலும் அந்தக் கொள்ளுப் பாட்டன்களும் இதில் அடங்குவர். இவர்கள் ஜத்த சஹீஹா (True Grand Father) எனப்படுவர்.

தந்தை, தந்தையின் தந்தை, அவரின் தாய், அவரின் தந்தை என வந்தால் இறுதியில் வந்த பாட்டனார் பாகம் பெறாத ஜத்த ஃபாஸித் (False Grand Father) எனப்படுவார்.

தந்தை இருக்கும் போது பாட்டனாருக்குப் பங்கு கிடைக்காது. பாட்டன் இருந்தால் அவரது தந்தைக்குப் பாகம் இல்லை. பாட்டனாருக்கு தந்தையின் பங்கு போன்றது தான் கிட்டும். ஆனால் சிறு வித்தியாசம் உண்டு.

(1) தாயின் தாய், பாட்டனாருடன் பங்கு பெறுவாள். அதே வேளையில் தந்தையிருந்தால் அவளுக்குப் பங்குகிடைக்காது.

(2) தாய், தந்தை,கணவன், அல்லது மனைவியை விட்டு ஒருவர் இறந்துவிட்டால் தந்தை இருக்கும் போது கணவன் அல்லது மனைவிக்குக் கொடுத்தது போக மீதி உள்ளதில் மூன்றில் ஒரு பங்கு தாய்க்குக் கிடைக்கும். ஆனால் தந்தை இல்லாது பாட்டனார் இருந்தால் மொத்தச் சொத்தில் மூன்றில் ஒரு பங்கு பெறுவார் தாய். இவ்விரண்டு வித்தியாசங்கள் உண்டு.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) சொத்துரிமை பெறும் பாட்டன் பாட்டி பற்றிய விளக்கத்தை எழுது.

(2) சொத்துரிமை பெறாத பாட்டன், பாட்டி யார் யார்?

# 15. பாட்டன் பாட்டி பங்கு விகிதம்

பாட்டி பங்கு பெறும் முறைகள் இரண்டாகும்.

### (1) பங்கு கிடைக்காத நிலை

A. தாய் வழிப் பாட்டியானாலும், தந்தை வழிப்பாட்டி யானாலும் இறந்தவரின் தாய் உயிரோடு இருக்கும்போது பங்கு பெறமாட்டார்கள்.

B. நெருங்கிய பாட்டி இருக்கும் போது தூரத்துப் பாட்டி பாகம் பெற மாட்டாள்.

C. தாய், தந்தை மற்றும் நெருங்கிய தந்தை வழிப்பாட்டி, நெருங்கிய பாட்டி, அல்லது இடைப்பட்ட பாட்டன் ஆகியோர் இருந்தால் தந்தை வழிப் பாட்டியை பாகம் கிடைக்காமல் தடுத்து விடுவார்கள்.

### (2) 1/6 பங்கு பெறும் நிலை

மேற்கண்டவர்கள் இல்லாதிருந்து அவள் தாய் வழிப் பாட்டியானாலும், தந்தை வழிப் பாட்டியானாலும் அவள் ஒருத்தியானாலும் பலராயினும் 1/6 பங்கு பாகம் பெறுவார்.

எ-கா.1

| தந்தையின் தாய் | தாயின் தாய் | தந்தையின் தந்தை |
|---|---|---|
| 1/6 | | அஸபா 5/6 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து ஒரு பங்கை தந்தையின் தாயும், தாயின் தாயும், சமமாகப் பங்கு வைத்துக் கொள்வார்கள். மீதி 5 பங்கு தந்தையின் தந்தைக்குச் சேரும்.

**குறிப்பு :-**

தந்தையின் தந்தை இடைப்பட்ட பாட்டனாகக் குறுக்கிடாத தால் தந்தையின் தந்தையோடு ஒரே தகுதியில் ஒத்த தலைமுறை யில் இருப்பதால் தந்தையின் தாய் தள்ளப்படாமல் பங்கு பெறுகிறாள்.

எ-கா.2

| தந்தையின் தாய் | தாயின் தாய் | தந்தை |
|---|---|---|
| தந்தை இருந்தால் பங்கு கிடையாது. | 1/6 | அஸபா 5/6 |

தாயின் மூலம் பங்கு கிடைப்பதால் தந்தை இருந்தும் தாயின் தாய் தள்ளப்படவில்லை. இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து ஒரு பங்கை தாயின் தாயும்- மீதி 5 பங்கை தந்தையும் பெறுவர்.

எ-கா.3

| **தந்தையின் தந்தையின் தாய்** | **தந்தையின் தந்தை** |
|---|---|
| தந்தையின் தந்தையால் பங்கின்றித் தள்ளப்பட்டாள் | அஸபா |

தந்தையின் தந்தை எல்லாச் சொத்தையும் பெறுவார்.

குறிப்பு : இடைப்பட்ட பாட்டனாக தந்தையின் தந்தை நிற்ப தால் அவருடைய தாய் அவரால் பங்கின்றித் தள்ளப்பட்டாள். ஆனால் தந்தையின் தந்தையின் தாயினுடைய இடத்தில் அதற்குப் பதிலாக தந்தையின் தாயின் தாய் இருந்தால் தந்தையின் தாய் மூலம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதால் தந்தையின் தந்தையால் தள்ளப்படமாட்டார்.

எ_கா.4

| **தந்தையின் தாயின் தாய்** | **தந்தையின் தந்தை** |
|---|---|
| 1/6 | அஸபா 5/6 |

எ_கா.5

| **தந்தையின் தாய்** | **தாயின் தாயின் தாய்** | **தந்தையின் தந்தை** |
|---|---|---|
| 1/6 | தந்தையின் தாய் இறந்தவருக்கு நெருங்கிய பாட்டி, எனவே சொத்து கிடைக்காது. | அஸபா 5/6 |

எ_கா.6

| **தந்தையின் தாய்** | **தாயின் தாயின் தாய்** | **தந்தை** |
|---|---|---|
| தந்தையால் தள்ளப் பட்டாள் | தந்தையின் தாயால் தள்ளப்பட்டாள் | அஸபா |

முழுச் சொத்தையும் தந்தை அடைவார்.

தந்தையின்தாய் தந்தையால் பங்கு பெறாது தடுக்கப்பட்ட போதிலும் தாயின்தாயின் தாயை பங்கு பெறாது தள்ளி

விடுகிறார். இதில் தந்தையின் தாய் இல்லாதிருந்தால் தாயின் தாயின் தாய்க்கு ஆறில் ஒரு பங்கு கிடைத்திருக்கும்.

| தாயின் தாயின் தாய் | தந்தை |
|---|---|
| 1/6 | அஸபா 5/6 |

## பாட்டன் பங்கு பெறும் முறைகள் நான்காகும்

### (1) பங்கு கிடைக்காத நிலை

இறந்தவருக்குத் தந்தையோ, நெருங்கிய பாட்டனோ இருந்தால் பங்கு ஏதும் இல்லாமல் தள்ளப்படுவார்.

### (2) 1/6 பங்கு பெறும் நிலை

இறந்தவருக்கு தந்தையோ, நெருங்கிய பாட்டனோ இல்லாமல் குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ இருந்தால் ஆறில் ஒன்று பெறுவார்.

### (3) 1/6 பங்குடன் அஸபா (எச்சதாரர்) ஆகவும் பங்கு பெறும் நிலை

தந்தையோ, நெருங்கிய பாட்டனோ இல்லாமல் இறந்தவருக்குப் பெண் குழந்தைகள் மட்டுமிருந்தால் 1/6 பங்கும் கிடைக்கும். எஞ்சியதும் கிடைக்கும்.

### (4) அஸபா (எச்சதாரர்) ஆகப் பங்கு பெறும் நிலை

தந்தை அல்லது நெருங்கிய பாட்டன் இல்லாதிருந்து இறந்தவருக்குக் குழந்தையோ, மகனின் குழந்தையோ இல்லாமல் மற்றப் பங்கு தாரர்கள் இருந்தால் அவர்களுக்குக் கொடுத்தது போக மீதி அஸபா என்ற ரீதியில் கிடைக்கும்.

எ_கா.1

பேரன் இறந்து கீழ்வரும் முறைப்படி வாரிசுகள் இருந்தால்

| தாய் | தந்தை | தந்தையின் தந்தை |
|---|---|---|
| 1/3 | அஸபா | தந்தையால் தள்ளப்பட்டார் |

இந்தத் தாய் தந்தைக்குக் குழந்தைகள் இல்லை. இந்நிலையில் சொத்தை 3 பங்கு வைத்து ஒரு பங்கு தாய்க்கும், மீதி 2 பங்கு தந்தைக்கும் கிடைக்கும்.

எ_கா.2

| தாய் | தந்தை | தந்தையின் தந்தை | தந்தையின் தந்தையின் தந்தை |
|---|---|---|---|
| 1/3 | அஸபா | தந்தை இருப்பதால் சொத்து கிடையாது | தந்தையாலும் நெருங்கிய பாட்டனாலும் தள்ளப்படுதல் |

இந்நிலையிலும் மேற்கண்டவாறே சொத்து பிரிக்கப்படும்.

எ_கா.3

| தந்தையின் தந்தை | மகன் | மகள் |
|---|---|---|
| 1/6 | அஸபா | |

இறந்தவருக்குக் குழந்தைகள் இருப்பதால் தந்தையின் தந்தைக்கு ஆறில் ஒரு பங்கு கிடைத்தது. மீதி 5 பங்கை 3 பாகமாகப் பிரித்து மகனுக்கு 2 பங்கும் மகளுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

எ_கா.4

| தாய் | தந்தையின் தந்தை |
|---|---|
| 1/3 | |

இறந்தவருக்குக் குழந்தைகள் இல்லாததால் தாய்க்கு மூன்றில் ஒரு பங்கும் மீதி 2 பங்கு தந்தையின் தந்தைக்கு அஸபா என்ற ரீதியிலும் கிடைத்தது.

எ_கா.5

| மகள் | தந்தையின் தந்தை |
|---|---|
| 1/2 | 1/6 + அஸபா<br>1 + 2 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து அதில் பாதி 3 பங்கை மகளுக்குக் கொடுக்க வேண்டும். தந்தையின் தந்தைக்கு ஒரு பாகம் கொடுக்க வேண்டும். 4 பங்கு போக மீதியுள்ள 2 பாகம் அஸபா என்ற ரீதியில் தந்தையின் தந்தைக்குக் கிடைக்கும்.

மகள் மட்டும் இருப்பதால் பங்குதாரராகவும் எச்சதாரராகவும் தந்தையின் தந்தை பங்கு பெற்றார்.

எ_கா.6

| மகள் 2 | தந்தையின் தந்தை |
|---|---|
| 2/3 | 1/6 + அஸபா |

*இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து 4 பங்கை மகள் 2 பேருக்கும் கொடுக்க வேண்டும். தந்தையின் தந்தைக்கு 1 பங்கு, பங்குதாரர் என்ற அடிப்படையிலும் மீதியுள்ள ஒரு பங்கு, எச்சதாரர் (அஸபா) என்ற அடிப்படையிலும் ஆக 2 பங்குகள் கிடைக்கும்.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) பாட்டன், பாட்டி பங்கு பெறும் நிலைகள், பங்கு பெறாத நிலைகளை விவரி.*

*(2) கீழ்வரும் வாரிசுதாரர்கள் இருந்தால் சொத்தை எவ்வாறு பங்கிட வேண்டும்?*

A. *கணவன் - பாட்டன்*

B. *மகனின் மகன் - பாட்டன்*

C. *பாட்டி - சிறிய தந்தை* or *பெரிய தந்தை*

# 16. மகன் பாகம் பெறும் முறைகள்

## மகன் பாகம் பெறும் முறைகள் மூன்றாகும்.

(1) இறந்தவருக்கு மகனுடன், மகள் இருக்கும் நிலையில் மற்ற பங்குதாரர்களும் இருந்தால் அவர்களுக்குத் தரவேண்டிய பங்குகளைக் கொடுத்து மீதமுள்ளதில் மகனுக்கு இரண்டு பங்குகள், மகளுக்கு ஒரு பங்கு என்ற விகிதத்தில் பங்கிடப் படவேண்டும்.

(2) இறந்தவருக்கு மகள் இல்லாத நிலையில் தாய், தந்தை, கணவன், மனைவி போன்ற மற்ற பங்கு தாரர்கள் இருந்தால் அவர்களுக்குத் தர வேண்டிய பங்குகள் கொடுக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள அனைத்தும் மகன்களுக்கே சேரும்.

(3) இறந்தவருக்கு மகள், தாய், தந்தை, கணவன், மனைவி போன்ற யாரும் இல்லாத நிலையில் எல்லாச் சொத்தும் மகன் அல்லது மகன்களுக்கே சேரும். இறந்தவருக்கு மேற் கூறப்பட்டோர் யாரும் இல்லாதிருந்து இறந்தவரின் சகோதர சகோதரிகள் இருந்தாலும் இல்லாவிடினும் அனைத்து சொத்தும் மகன் அல்லது மகன்களுக்கே சேரும்.

இவற்றுக்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு

எ_கா.1

| மகன் | மகள் |
|---|---|
| 2 | 1 |

இந்நிலையில் மொத்த சொத்தையும் 3 பங்கு வைத்து மகனுக்கு 2 பங்கு மகளுக்கு ஒரு பங்கு கொடுக்க வேண்டும்.

இந்நிலையில் மகனும் மகளும் அஸபா (எச்சதாரர்) ஆவர்.

எ_கா.2

<u>மகன் 3</u>   <u>மகள் 2</u>

இந்நிலையில் சொத்தை 8 பங்கு வைக்க வேண்டும். ஏனெனில் ஆண் மகனை 2 ஆகவும் பெண் மக்களை ஒன்றாகவும் எண்ண வேண்டும். மகன் 3 பேர் இருப்பதால் (3x2=)6+2=8. மகன்கள் மூவருக்கும் ஆறு பங்குகளும் மகள் 2 பேருக்கு 2 பங்குகளும்

கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கும்போது மகன்கள் ஒவ்வொருவருக்கும் 2 பங்குகளும் மகள் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கும் கிடைக்கும்.

எ-கா.3

| <u>தந்தை</u> | <u>மகன்</u> |
|---|---|
| 1/6 | அஸபா [எச்சதாரர்] |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து தந்தைக்கு ஒரு பங்கும் மீதி 5 பங்குகள் மகனுக்கும் கிடைக்கும்.

எ_கா.4

| <u>மனைவி</u> | <u>மகன் 2</u> |
|---|---|
| 1/8 | அஸபா [எச்சதாரர்] |

இந்நிலையில் சொத்தை 8 பங்கு வைத்து ஒரு பங்கை மனைவிக்கும் மீதி 7 பங்குகளை 2 மகன்களுக்கும் சமமாகக் கொடுக்க வேண்டும்.

எ_கா.5

| <u>மகன் 3</u> | <u>சகோதரர் 2</u> | <u>சகோதரி 1</u> |
|---|---|---|

இந்நிலையில் மொத்த சொத்தையும் மகன்கள் மூன்று பேரும் சமமாக அடைவார்கள். சகோதரர் 2 பேருக்கும் சகோதரிக்கும் ஏதும் கிடைக்காது.

இதற்கான ஆதாரங்களை அல்குர்ஆன் 4:11,12 வசனங்களிலும் நபிமொழி நூல்களிலும், வாரிசுரிமைச் சட்ட நூல்களிலும் காணலாம்.

**பயிற்சி வினாக்கள்:_**

(1) மகன் பாகம் பெறும் முறைகள் எத்தனை? அவை யாவை?

# 17. மகனின் மகன் (பேரன்) பாகம் பெறும் முறைகள்

மகனுடைய மகன் (பேரன்) பாகம் பெறும் முறைகள் ஐந்தாகும்.

1) இறந்தவருக்கு மகன் இல்லாமலிருந்து, மகள்கள் இருக்கும் நிலையில் மகனுடைய மகன் (பேரன்) இருந்தால் மகள்களுக்குக் கொடுக்க வேண்டிய பங்கு போக மீதமுள்ளதை எடுத்துக் கொள்வான்.

2) இறந்தவருக்கு மகன் இல்லாமல் மகள்கள் இருக்கும் நிலையில் மகனுடைய மகனுடன், மகனுடைய மகளும் (பேத்தி) இருந்தால் மகனுடைய மகனும் மகனுடைய மகளும் ஆணுக்கு இரண்டு, பெண்ணுக்கு ஒன்று என்ற விகிதத்தில் பங்குபெறுவர்.

3) இறந்தவருக்குத் தாய், தந்தை, கணவன் அல்லது மனைவி போன்றோர் இருந்து மகன் இல்லாத நிலையில், மகனுடைய மகன் இருந்தால் மேற்கூறப்பட்டவர்களுக்குக் கொடுத்தது போக மீதமுள்ளதை அஸபா என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்வான்.

4) இறந்தவருக்குத் தாய். தந்தை, கணவன் அல்லது மனைவி, மகள் யாரும் இல்லாத நிலையில் மகனுடைய மகன் மட்டும் இருந்தால், சொத்து முழுவதும் அஸபா என்ற அடிப்படையில் மகனுடைய மகனுக்கே சேரும்.

5) இறந்தவருக்கு மகன்கள் யாராவது இருந்தால் அந்நிலையில் மகனுடைய மகனுக்கு பங்கு ஏதும் கிடையாது.

இவற்றுக்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு.

எ_கா.1

| மகனுடைய மகன் | மகள் |
|---|---|
| | 1/2 |

இந்நிலையில் சொத்தை 2 பங்கு வைத்து மகள் ஒரு பங்கும் மீதி ஒரு பங்கை மகனுடைய மகனும் எடுத்துக் கொள்வர்.

எ_கா.2

| மகள் 2 | மகனுடைய மகன் |
|---|---|
| 2/3 | |

*இந்நிலையில் சொத்தை 3 பங்கு வைத்து 2 பங்கை ஆளுக்கொரு பங்கு வீதம் 2 மகள்களும் மீதி ஒரு பங்கை மகனுடைய மகனும் எடுத்துக் கொள்ள வேண்டும்.*

**எ_கா.3**

| **மகள் 3** | **மகனுடைய மகன்** | **மகனுடைய மகள்** |
|---|---|---|
| 2/3 | அஸபா | |

*இந்நிலையில் சொத்தை 9 பங்கு வைத்து 6 பங்கை மகள் மூன்று பேரும் எடுத்துக் கொள்வர். மீதியுள்ள 3 பங்கில் மகனுடைய மகன்2 பங்கும் மகனுடைய மகள் ஒரு பங்கும் எடுத்துக் கொள்ள வேண்டும்.*

**எ_கா.4**

| **தந்தை** | **கணவன்** | **மகனுடைய மகன்** |
|---|---|---|
| 1/6 | 1/4 | அஸபா |

*இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து 2 பங்கை தந்தையும் 3 பங்கை கணவனும், மீதியுள்ள 7 பங்கையும் மகனுடைய மகனும் எடுத்துக் கொள்வர்.*

**எ_கா.5**

| **கணவன்** | **மகன்** | **மகனுடைய மகன்** |
|---|---|---|
| 1/4 | அஸபா | |

*இந்நிலையில் சொர்த்தை 4 பங்கு வைத்து ஒரு பங்கை கணவனும், மீதியுள்ள 3 பங்கை மகனும் எடுத்துக் கொள்ள வேண்டும். மகன் இருப்பதால் மகனுடைய மகனுக்கு பங்கு ஏதும் கிடைக்காது.*

**பயிற்சி வினாக்கள்:_**

*(1) மகனுடைய மகன் எப்போது சொத்துப் பெறுவான்?*

*(2) மகனுடைய மகன் பங்கு பெறும் முறைகள் எத்தனை? அவை யாவை?*

# 18. தந்தையின் பாகங்கள்

தந்தை மூன்று வகைகளில் ஒரு வகையாகப் பாகம் பெறுவார்.

## 1) 1/6 பங்கு பெறும் நிலை

இறந்தவருக்கு மகனோ, அல்லது மகனின் மகன் அல்லது ஆண்வழிச் சந்ததியில் ஆண்கள் இருந்தால் தந்தை ஆறில் ஒரு பங்கு (1/6) பெறுவார்.

2) 1/6 பங்கும் மற்ற வாரிசுதாரர்களுக்குக் கொடுத்தது போக மீத முள்ளதைப் பெறும் அஸபா எச்சதாரராகவும் உள்ள நிலை.

இறந்தவருக்கு மகள், மகனின் மகள், இறந்தவரின் ஆண்வழிச் சந்ததியில் ஆண் யாருமில்லாது பெண் மட்டும் இருந்தால் அந்நிலையில் தந்தை 1/6 பங்கு பெறுபவராகவும் மீதமுள்ளதைப் பெறும் அஸபாவாகவும் ஆவார்.

3) மேலே 1-இல் கூறியபடி ஆண் வழிச் சந்ததியில் யாருமில்லாத நிலையிலும், 2-இல் கூறியபடி இறந்தவருக்கு மகளோ, அல்லது ஆண்வழிச் சந்ததியில் பெண்ணோ, இல்லாவிட்டால் வாரிசுரிமை பெறும் நபர்களுக்குக் கொடுத்தது போக எஞ்சிய சொத்து முழுவதையும் தந்தை அஸபா என்ற வகையில் பெறுவார்.

மேலே 1-இல் கூறப்பட்ட ஆண்வழிச் சந்ததியில் வரும் ஆண்கள் தான் கவனிக்கப்படும். மேலே 2-இல் கூறப்பட்ட மகளின் மகனோ, அல்லது மகளின் மகளோ அதாவது பெண் வழிச் சந்ததி இருந்தால் அவர்களுக்கு சொத்தில் பங்கு கிடைக்காது. ஆக இம் மூன்று முறையல்லாமல் வேறெந்த வகையிலும் தந்தை பாகம் பெற மாட்டார்.

இவற்றுக்கான எடுத்துக் காட்டுகள் வருமாறு

**எ_கா.1**

| மகன் | தந்தை | மனைவி |
|---|---|---|
| அஸபா | 1/6 | 1/8 |

இந்நிலையில் சொத்தை 24 பங்கு வைத்து 4 பங்கை தந்தைக்கும், 3 பங்கை மனைவிக்கும், மீதியுள்ள 17 பங்கை மகனுக்கும் கொடுக்க வேண்டும்.

எ_கா.2

| தந்தை | மகள் | தாய் | மனைவி |
| --- | --- | --- | --- |
| 1/6+அஸபா | 1/2 | 1/6 | 1/8 |

*இந்நிலையில் சொத்தை 24 பங்கு வைத்து தந்தைக்கு 4 பங்கும், மகளுக்கு 12 பங்கும், தாய்க்கு 4 பங்கும், மனைவிக்கு 3 பங்கும் கொடுத்து விட வேண்டும். மீதியுள்ள ஒரு பங்கு அஸபா என்ற முறையில் தந்தைக்குச் சேரும். எனவே தந்தைக்கு 4+1==5 பங்கு கிடைக்கிறது.*

எ_கா.3

| தந்தை | மகள் | மனைவி |
| --- | --- | --- |
| 1/6+அஸபா | 1/2 | 1/8 |

*இந்நிலையிலும் சொத்தை 24 பாகங்களாகப் பிரிக்க வேண்டும். மகளுக்கு 12 பங்கும், மனைவிக்கு 3 பங்கும் தந்தைக்கு 4 பங்கும் கொடுத்து விட வேண்டும். மீதமுள்ள 5 பங்கும் தந்தைக்கே சேரும். ஆக தந்தைக்கு 5+4==9 பங்கு கிடைத்துள்ளது. மேற் கண்ட 2-வது எடுத்துக்காட்டில் தாய் இருப்பதால் அந்த 4 பங்கு தாய்க்குச் சென்று விட்டது.*

எ_கா.4

| தந்தை | மகன் | மகள் |
| --- | --- | --- |
| 1/6 | அஸபா | |

*இந்நிலையில் சொத்தை 18 பங்கு வைத்து 3 பங்கை தந்தையும், மீதியுள்ள 15 பங்கில் 10 பங்கை மகனும், 5 பங்கை மகளும் பெறுவார்கள்.*

*மகன் 2 பங்கும், மகள் ஒரு பங்கும் பெறுவதால் அதமப் பொது மடங்கு 18 ஆனது. 6x3=18.*

எ_கா.5

| தாய் | தந்தை |
| --- | --- |
| 1/3 | அஸபா |

*இந்நிலையில் சொத்தை 3 பங்கு வைத்து தாய்க்கு ஒரு பங்கும் மீதி 2 பங்குகள் தந்தைக்கும் சேரும்.*

எ_கா.6

| மகள் | தந்தை |
| --- | --- |
| 1/2 | 1/6+அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து 3 பங்கை மகளும் ஒரு பங்கை தந்தையும் பெறுவார். மீதமுள்ள 2 பங்கும் தந்தைக்கே கிடைக்கும்.

இதற்கான ஆதாரங்களை அல்குர்ஆன் 4:11,12 வது வசனங்களிலும் நபிமொழி நூல்கள் மற்றும் வாரிசுரிமைச் சட்ட நூல்களிலும் காணலாம்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) தந்தை பாகம் பெறும் நிலைகள் எத்தனை?

(2) தந்தை பாகம் பெறும் நிலைகளை உதாரணங்களுடன் விவரி.

# 19. ஆறில் ஒன்று (1/6) பாகம் பெறுவோர்

இதுவரை வாரிசுக்காரர்கள் பெறும் பங்குகளையும் அவர்கள் எந்த நிலையில் அதைப் பெறுவார்கள் என்பதையும் பார்த்தோம். இனி இன்ஷா அல்லாஹ் 1/6, 1/8, 1/4, 1/2, 2/3, 1/3 போன்ற பங்குகளைப் பெறும் வாரிசுக் காரர்களைப் பார்ப்போம்.

*சொத்தில் 1/6 பாகம் பெறுவோர்*

*1) தந்தை*

*2) பாட்டன்*

*3) தாய்*

*4) மகனின் மகள்*

*5) தந்தை வழிச் சகோதரி*

*6) தாய் வழிச் சகோதரன் மற்றும் தாய் வழிச் சகோதரி*

*7) பாட்டி ஆகிய ஏழுபேர்.*

**1) தந்தை:-**

*இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ இருந்தால் தந்தை 1/6 பாகம் பெறுவார்.*

**குறிப்பு:-**

*குழந்தைகள்ஆணாக இருந்தால் தந்தை 1/6 பாகம் பெறுவார். பெண்ணாக இருந்தால் 1/6 பாகம் மற்றுமுள்ள வாரிசுதாரர் களுக்குக் கொடுத்தது போக மீதி இருந்தால் அதை அஸபாவா கவும் அடைவார். குழந்தைகள் அல்லது மகனின் வழித் தோன்றல்கள் யாரும் இல்லாவிட்டால் அஸபாவாக சொத்தை அடைவார்.*

**2) பாட்டன்:-**

*2 நிபந்தனைகளில் பாட்டன் 1/6 பாகம் பெறுவார்) மேற் கூறப்பட்ட நபர்கள் இருந்து) தந்தை இல்லாதிருந்தால் பாட்டன் 1/6 பாகம் பெறுவார்.*

**3) தாய்:-**

*இறந்தவருக்குக் குழந்தைகளோ, ஆண்வழிச் சந்ததியில் மகனின் குழந்தைகளோ இருந்தால், மேலும் சகோதர சகோத*

ரிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் தாய் 1/6 பாகம் பெறுவார்.

**குறிப்பு:-**

1) சகோதர சகோதரிகள் என்போரில் உடன் பிறந்த இரண்டு வழிச் சகோதர சகோதரிகளானாலும் சரி, அல்லது தந்தை வழிச் சகோதர சகோதரிகளானாலும் சரி, அல்லது தாய் வழிச் சகோதர சகோதரரிகளானாலும் சரியே, அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் தாய் 1/6 பாகம் பெறுவார்.

2) இறந்தவருக்குக் குழந்தைகள் அல்லது மகனின் குழந்தைகள் யாரும் இல்லாவிட்டால், தாய் மொத்தச் சொத்தில், 1/3 பங்கு பெறுவார். மேற் கூறப்பட்டது போன்ற கணவன் - தந்தை-தாய் அல்லது மனைவி - தந்தை- தாய் போன்ற நிலைகளில் கணவன் அல்லது மனைவிக்கு கொடுத்தது போக மீதியுள்ளத்தில் 1/3 பங்கு பெறுவார் தாய்.

**4) மகனின் மகள்:-**

இறந்தவருக்கு ஒரேயொரு மகள் மட்டுமிருந்து, மகனின் மகள் உடன் அவளை அஸபாவாக ஆக்கும் மகனின் மகன் (அதாவது அவளின் சகோதரன்) இருத்தல் ஆகாது.

**குறிப்பு:-**

1) இறந்தவருக்கு ஒரேயொரு மகள் மட்டும் இருக்க வேண்டும். இறந்தவருக்கு மகன் இருக்கலாகாது. மகன் இருந்தால் மகனின் மகளுக்கு ஏதும் கிடைக்காது.

**குறிப்பு:-**

2) மகனின் மகள் பலர் இருப்பினும் மேற்கண்ட நிலைகளில் அனைவருக்கும் 1/6 பாகமே கிடைக்கும்.

**5) தந்தை வழிச் சகோதரி**

1) சகோதரன் இல்லாமலிருந்து

2) தாய் தந்தை இருவழிச் சகோதரி ஒரேயொருத்தி மட்டும் இருந்து

3) அவளுடன் சகோதரனும் இருத்தல் ஆகாது.

**6) தாய் வழிச் சகோதரன் மற்றும் தாய் வழிச் சகோதரி**

3 நிபந்தனைகள் இருந்தால் 1/6 பாகம் பெறுவர்.

A) இறந்தவருக்குக் பிள்ளைகளோ, மகனின் பிள்ளைகளோ இருத்தல் ஆகாது.

B) தாய் வழிச் சகோதரன் ஒருவன் இருக்க வேண்டும். அல்லது தாய் வழிச் சகோதரி ஒருத்தி மட்டும் இருக்க வேண்டும்.

C) இறந்தவருக்குத் தந்தை பாட்டன் இருத்தல் ஆகாது.

7) **பாட்டி அல்லது பாட்டிகள்:-**

தாய் வழிப்பாட்டியானாலும் தந்தை வழிப் பாட்டியானாலும் 1/6 பாகம் பெறத் தடைகள் ஏதும் இருக்கக் கூடாது. பாட்டி சொத்து பெறுவதை விட்டும் தடை செய்வது தாய் இருந்தால்தான். தந்தை வழிப்பாட்டி யானால் தந்தை இல்லாதிருக்க வேண்டும். (மேலும் விபரமாக அறிய முன்னர் சென்ற பாட்டன் பாட்டி பற்றிய விளக்கத்தைப் பார்க்கவும்)

சொத்துரிமை பெறுவோர் மற்றும் அவர்கள் பெறும் பங்கு பற்றி எளிய முறையில் அறிய பின்வரும் அட்டவணை உதவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மகள் | 1/2 | 2/3 | மற்றவர்களால் அஸபா | | | |
| மகனின் மகள் | 1/2 | 2/3 | 1/6 | மற்றவர்களால் அஸபா | சொத்து பெறத் தடை | |
| இருவழிச் சகோதரி | 1/2 | 2/3 | மற்றவர்களால் அஸபா | மற்றவர்களுடன் அஸபா | சொத்து பெறத் தடை | |
| தந்தை வழிச் சகோதரி | 1/2 | 2/3 | 1/6 | மற்றவர்களால் அஸபா | மற்றவர்களுடன்அஸபா | சொத்து .பெறத் தடை |
| தாய் வழிச் சகோதரன், சகோதரி | 1/3 | 1/6 | சொத்து பெறத் தடை | | | |
| தாய் | 1/3 | 1/6 | மீதத்தில் 1/3 | | | |
| தந்தை | 1/6 | 1/6+ அஸபா | அஸபா | | | |
| பாட்டனார் | 1/6 | 1/6+ அஸபா | அஸபா | சொத்து பெறத் தடை | | |
| பாட்டி | 1/6 | சொத்து பெறத் தடை | | | | |
| கணவன் | 1/2 | 1/4 | | | | |
| மனைவி | 1/4 | 1/8 | | | | |

பயிற்சி வினாக்கள்:-

(1) ஆறில் ஒரு பாகம் பெறுவோர் யார் யார்? எந்தெந்த நிலைகளில் அவர்களுக்கு அந்தப் பாகம் கிடைக்கும்?

(2) கீழ்வரும் வாரிசுக்காரர்கள் இருந்தால் அவர்களுக்குக் கிடைக்கும் சொத்துப் பங்கு எவ்வளவு?

A தாய் - மகன்

B. தந்தை - மகன்

C. தாய் - சகோதரி - தந்தைவழிச் சகோதரன்

D. தந்தை - மகனின் மகன்

E. பாட்டன் - மகன் - மகனின் மகன்

F. தாயின் தாய் - தந்தைவழிச் சகோதரன்

G. தந்தையின் தாய் - சகோதரன்

H. மகள் - மகனின் மகள் - சகோதரன்

I. மகனின் மகள் - மகனின் மகனின் மகள் - தந்தைவழிச் சகோதரன்

J. சகோதரி - தந்தைவழிச் சகோதரி - தந்தைவழிச் சகோதரனின் மகன்

K. மனைவி - சகோதரி - தந்தைவழிச் சகோதரி 2பேர் - சிறிய or பெரிய தந்தை

L. தாய் - மகன் - மகள்

M. இரண்டு மனைவியர் - தந்தை

N. தாயின் தாய் - தந்தை

O. தாயின் தாயின் தந்தை - மகனின் மகன் - மகனின் மகள்

P. தாயின் தாய் - தாயின் தந்தை - மகன்

Q. தாயின் தாயின் தாய் - தாயின் தாயின் தந்தை - தாயின் தந்தையின் தந்தை - மகன்

R. தாய் வழிச் சகோதரன் - மனைவி - பாட்டன்

S. மகனின் மகள் -மகன் - தந்தை

T. பாட்டி - மகன்

U. மகள் 2பேர் - தந்தைவழிச் சகோதரி

# 20. மூன்றில் ஒன்று (1/3) பாகம் பெறுவோர்

மூன்றில் ஒன்று பாகம் பெறுவோர் இருவகையினர்.

*(1) தாய்*

*(2) தாய்வழிச் சகோதர சகோதரிகள்*

(1) **தாய்:-**

பின்வரும் மூன்று நிபந்தனைகளின் போது 1/3 பங்கு.

(A) இறந்தவருக்கு குழந்தைகளோ அல்லது மகனின் குழந்தைகளோ இல்லாவிடில் தாய் மொத்தச் சொத்தில் 1/3பங்கு பெறுவார்.

**குறிப்பு:-**

இங்கே குழந்தைகள் என்பது ஆண், அல்லது பெண் ஒன்று அல்லது பல குழந்தைகளைக் குறிக்கும்.

(B) உடன் பிறந்த சகோதர சகோதரிகள், தந்தைவழிச் சகோதர சகோதரிகள், தாய்வழிச் சகோதர சகோதரிகள் ஒருவர் இருந்தால் தாய்க்கு 1/3 பாகம் கிடைக்கும்.

(C) கணவன் - தாய் - தந்தை

மனைவி - தாய் - தந்தை

வந்தால் தாய்க்கு மொத்தச் சொத்திலிருந்து 1/3 கொடுக்காமல் கணவன் மனைவிக்குக் கொடுத்தது போக மீதம் உள்ளதிலிருந்து 1/3 பங்கு கொடுக்க வேண்டும். இவ்விரண்டு பிரச்சனைகளுக்கும் உமரிய்யதானி என்று கூறப்படும். உமர் (ரலி) தான் முதன் முதலாக இவ்வாறு தீர்ப்பு வழங்கினார்கள்.

(2) **தாய் வழிச் சகோதர சகோதரிகள்:-**

இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகன் வழியில் குழந்தை களோ, தந்தை அல்லது பாட்டன் போன்றோர் இல்லாமல், தாய்வழிச் சகோதரிகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் சொத்தில் 1/3 பங்கை தமக்கிடையே சமமாகப் பங்கிட்டுக் கொள்வர்.

தாய்வழிச் சகோதரர்களுக்கும் இதே சட்டம் தான். இதற்கான ஆதாரம் 4:12வது வசனத்தில் வந்துள்ளது.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) மூன்றில் ஒன்று பாகம் பெறுவோர் எத்தனை பேர்? எந்த நிலைகளில் அவ்வாறு பாகம் பெறுவர்?

(2) கீழ்வரும் சொத்துரிமைக் கணக்குகளுக்கு விடை காண்.

A. தாய் - தந்தை

B. தாய் - தந்தை வழிச் சகோதரன்

C. கணவன் - தாய்வழிச் சகோதரன் இருவர் - தந்தைவழிச் சகோதரன்

D. சகோதரி - தாய்வழிச் சகோதரிகள் இருவர் - தந்தைவழிச் சகோதரன்

E. கணவன் - தாய்வழிச் சகோதரன் இருவர் - சகோதரன்

F. தந்தைவழிச் சகோதரிகள் இருவர் - தாய்வழிச் சகோதரர்கள் இருவர்

G. மனைவி - தாய்வழிச் சகோதரர்கள் இருவர் - சிறிய தந்தை

H. தாய்வழிச் சகோதரர்கள் இருவர் - மகள் - மகனின் மகன்

I. தாய்வழிச் சகோதரர்கள் 2 பேர் - தந்தை - கணவன்

# 21. மூன்றில் இரண்டு 2/3 பாகம் பெறுவோர்

*மூன்றில் இரண்டு பங்கு பெறுவோர 4 வகையினர்*

*1. மகள்கள் (பெண் மக்கள்)*

*2. மகனின் மகள்கள்*

*3. உடன் பிறந்த சகோதரிகள் (தாய் தந்தை ஒன்றான சகோதரிகள்)*

*4. தந்தை மட்டும் ஒன்றான சகோதரிகள்*

**(1) பெண் மக்கள்**

**பெண்மக்கள் 2/3 பாகம் பெற 2 நிபந்தனைகள்.**

*(1) அப்பெண்களை அஸபாவாக ஆக்கும் அவளுடைய சகோதரன் இருக்கலாகாது. அவர்கள் உடன்பிறந்த சகோதரர் களானாலும் சரி. தந்தைவழிச் சகோதரர்களானாலும் சரி. தாய் வழிச் சகோதரர்களானாலும் சரி. (இவர்கள் இல்லாதிருக்க வேண்டும்).*

*(2) மகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்க வேண்டும்.*

**(2) மகனின் மக்கள்:-**

**இவர்கள் 2/3 பாகம் பெற 3 நிபந்தனைகள்.**

*(1) இறந்தவருக்கு மகன், இரண்டு இரண்டுக்கு மேற்பட்ட பெண் மக்கள், ஒரு படி முந்திய மகனின் மகன், ஒரு படி முந்திய மகனின் மகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஆகியோர் இருக்கக் கூடாது.*

*(2) இறந்தவருக்குப் பெண் மக்கள் மட்டுமிருந்து மகனின் மகளுடனோ அல்லது ஆண் வழிச் சந்ததியில் அடுத்தடுத்த தலைமுறையில் ஆண் வாரிசுகள் இருக்கலாகாது.*

*(3) மகனின் மகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்க வேண்டும்.*

**(3) சகோதரிகள்:-**

**சகோதரிகள் 2/3 பாகம் பெற 4 நிபந்தனைகள்:**

*(1) இறந்தவருக்குக் குழந்தைகள் அல்லது ஆண்வழிச் சந்ததியில் குழந்தைகள் இருக்கலாகாது.*

*(2) தந்தை அல்லது பாட்டன் இருக்கக் கூடாது.*

*(3) அவளுடன் பிறந்த சகோதரன் இருக்கலாகாது.*

*(4) சகோதரிகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்க வேண்டும்.*

**(4) தந்தைவழிச் சகோதரிகள்:**

**தந்தைவழிச் சகோதரிகள் 2/3 பாகம் பெற 5 நிபந்தனைகள்:**

*(1) இறந்தவருக்குக் குழந்தைகள் அல்லது ஆண் வழிச் சந்ததியில் குழந்தைகள் இருக்கலாகாது.*

*(2) தந்தை அல்லது பாட்டன் இருக்கக் கூடாது.*

*(3) அவளுடன் பிறந்த சகோதரன் இருக்கக் கூடாது.*

*(4) இவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்க வேண்டும்.*

*(5) தாய் தந்தைவழிச் சகோதரிகள் இருவரோ, இருவருக்கு மேற்பட்டவர்களோ இருக்கக்கூடாது. தாய் தந்தைவழிச் சகோதரன் இருக்கக் கூடாது. தாய் தந்தை வழிச் சகோதரி அஸபாவாக ஆகாத நிலை வேண்டும்.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) மூன்றில் இரண்டு பங்கு பெறுவோர் யார் யார்? எந்தெந்த நிலைகளில் அப்பங்கு பெறுவர்?*

*(2) கீழ்வரும் சொத்துரிமைக் கணக்குகளுக்கு விடை காண்.*

A. *மகள் 2 - தந்தை*

B. *மகள் 2 - பாட்டன்*

C. *மகனின் மகள் 2 - சிறிய* or *பெரிய தந்தை*

D. மகனின் மகள் 2 - தந்தை ஒன்றுபட்ட சிறிய தந்தை

E. சகோதரி 2 - தந்தை வழிச் சகோதரன்

F. தந்தை வழிச் சகோதரி 2 - தந்தைவழிச் சகோதரனின் மகன்

G. 3 பெண் மக்கள் - மகன்

H. 4 மகனின் மகள் - மகனின் மகன்

I. மகனின் மகள் 2 - மகன் - மகள்

J. சகோதரி 2 - மகன் 2

K. சகோதரி 2 - தந்தை - கணவன்

# 22. சொத்தில் பாதியைப் பெறுவோர்.

அரைப்பங்கு பெறுவோர் 5 வகை வாரிசுகள் ஆவர்.

(1) கணவன்

(2) மகள்

(3) மகனின் மகள்

(4) சகோதரி

(5) தந்தை வழிச் சகோதரி

**(1) கணவன்:-**

கணவன் அரைப்பங்கு பெற வேண்டுமானால் ஒரு நிபந்தனை. அதாவது இறந்த மனைவிக்கு இந்தக் கணவன் மூலமோ, அல்லது வேறு கணவன் மூலமோ குழந்தைகள் அல்லது மகனின் குழந்தைகள், யாரும் இருக்கக் கூடாது.

**(2) மகள்:-**

மகள் சொத்தில் பாதியைப் பெற 2 நிபந்தனைகள்:

(1) அவளை அஸபாவாக ஆக்கும் சகோதரன் இருக்கக் கூடாது. அந்தச் சகோதரன் அவளுடன் பிறந்த சகோதரன் ஆயினும் சரி. அல்லது தந்தை வழிச் சகோதரன் ஆனாலும் சரியே. அல்லது தாய் வழிச் சகோதரன் ஆனாலும் சரியே.

(2) அவளுடன் பிறந்த சகோதரியோ, தந்தைவழிச் சகோதரிகளோ, தாய்வழிச் சகோதரிகளோ இருக்கக் கூடாது. (அவள் ஒருத்தியாக இருக்க வேண்டும்).

**(3) மகனின் மகள்:-**

(1) அவள் ஒருத்தியாக இருக்க வேண்டும்.

(2)இறந்தவருக்கு ஆண் மக்களோ, பெண் மக்களோ இல்லாதிருக்க வேண்டும்.

(3) ஒருபடி முந்திய மகனின் மகள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்கலாகாது.

(4) இவளை அஸபாவாக ஆக்கும் எந்த ஆணும் இருக்கலாகாது.

(விரிவாக அறிய மகனின் மகள் பாகம் பெறும் முறைகளைப் பார்க்கவும்).

**(4) சகோதரி:-**

இறந்தவருக்குக் குழந்தைகளோ, ஆண் வழிச் சந்ததியில் யாரும் இல்லாது, அவளுடன் பிறந்த சகோதரனும் இல்லாத நிலையில், தந்தை, பாட்டன் போன்றவர்களும் இல்லாது அவள் ஒருத்தியாக இருந்தால் சொத்தில் பாதிப் பங்கு கிடைக்கும்.

**(5) தந்தைவழிச் சகோதரி:-**

இறந்தவருக்குக் குழந்தைகளோ, ஆண் வழிச் சந்ததியில் யாரும் இல்லாது, அவளுடன் பிறந்த சகோதரனும் இல்லாத நிலையில், தந்தை, பாட்டன் போன்றவர்களும் இல்லாது அவள் ஒருத்தியாக இருந்தால் சொத்தில் பாதிப் பங்கு கிடைக்கும்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) சொத்தில் அரைப்பங்கு பெறுவோர் யார்? எந்தெந்த நிலைகளில் அதைப் பெறுவார்கள்?

(2) கீழ்வரும் வாரிசுகளுக்கு சொத்தைப் பங்கு வை.

A. கணவன் - தந்தை

B. கணவன் - பாட்டனார்

C. மகள் - மகனின் மகள்

D. மகனின் மகள் - மகனின் மகனின் மகன்

E. சகோதரி - தந்தைவழிச் சகோதரி

F. தந்தைவழிச் சகோதரி - தந்தைவழிச் சகோதரனின் மகன்

G. கணவன் - சகோதரன்

H. கணவன் - தந்தை வழிச் சகோதரன்

I. கணவன் - விடுதலையான அடிமைப்பெண்

J. மகள் - சிறிய தந்தை

K. மகனின் மகள் - தாய் தந்தை ஒன்றுபட்ட சிறிய தந்தையின் மகன்

L. சகோதரி - விடுதலையான அடிமை

M. தந்தைவழிச் சகோதரி - தந்தை ஒன்றான சிறிய or பெரிய தந்தையின் மகன்

# 23. சொத்தில் கால் பங்கு பெறுவோர்

சொத்தில் கால் பங்கு பெறுவோர் இரு வகையினர்.

(1) கணவன்

(2) மனைவி அல்லது மனைவியர்

**கணவன்:-**

இறந்த மனைவிக்கு குழந்தைகள், மகனின் குழந்தைகள் உள்ள போது கணவன் கால் பங்கு பெறுவான். அக்குழந்தைகள் இந்தக் கணவன் மூலம் பிறந்திருந்தாலும் சரியே. அல்லது வேறு கணவர் மூலம் பிறந்திருந்தாலும் சரியே.

**மனைவி:-**

இறந்த கணவனுக்கு இந்த மனைவியர் மூலமோ வேறு மனைவியர் மூலமோ குழந்தைகள் ஏதும் இல்லாவிட்டால் அல்லது ஆண் சந்ததியினரில் யாரும் இல்லாத நிலையில் மனைவி கால் பங்கு பெறுவாள்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) கால்பங்கு பெறும் வாரிசுகள் யார்? எந்தச் சூழ்நிலையில் அப்பங்கைப் பெறுவார்கள்?

(2) கீழ்வரும் வாரிசுகளுக்கு சொத்தைப் பங்கீடு செய்.

A. கணவன் - மகன்

B. கணவன் - மகன்கள் 3 பேர்

C. மனைவி - தந்தை

D. மனைவி - பாட்டனார்

E. கணவன் - மகன் - மகள்

F. கணவன் - தந்தை வழிச் சகோதரன்

G. மனைவி - தந்தைவழிச் சகோதரன் 2 பேர்

H. மனைவி - சிறிய or பெரிய தந்தை

# 24. சொத்தில் எட்டில் ஒரு (1/8) பாகம் பெறுவோர்

*சொத்தில் 1/8 பாகம் பெறுவது மனைவி அல்லது மனைவியர் மட்டுமே.*

*இறந்து போன கணவனுக்கு இந்த மனைவி மூலமோ வேறு மனைவியர் மூலமோ குழந்தைகள் இருந்தால், அல்லது ஆண் வழிச் சந்ததியில் யாரும் இருந்தால் கணவனது சொத்தில் மனைவிக்கு எட்டில் ஒரு பாகம் கிடைக்கும். பல மனைவியர் இருந்தால் அவர்கள் தமக்கு இடையே கிடைப்பதை சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) சொத்தில் எட்டில் ஒரு பாகம் பெறுவது யார்? எந்தச் சூழ்நிலையில் அப்பாகம் கிடைக்கும்?*

*(2) கீழ்வரும் வாரிசுகள் இருந்தால் சொத்தை எப்படிப் பங்கிட வேண்டும்?*

A. *மனைவி - மகன்*

B. *மனைவி - மகள் - சிறிய தந்தை*

C. *மனைவி - மகன் - மகள்*

D. *மனைவி - மகள் - தந்தை*

E. *மனைவி - மகனின் மகள் - பாட்டனார்*

F. *மனைவியர் 3 பேர் - மகன் - தாய்*

G. *மனைவியர் 3 - தாய் - சிறிய டிச பெரிய தந்தை*

# 25. அஸபாக்கள் - எச்சதாரர்கள் (RESIDUARIES)

இதுவரை சொத்துரிமை பெறுவோர், மற்றும் அவர்கள் பெறும் சொத்துரிமை எவ்வளவு என்பனவற்றை விரிவாகப் பார்த்தோம். அப்போது அஸபா என்று பல இடங்களில் நாம் குறிப்பிட்டுள்ளோம். அஸபா என்றால் யார் என்பதை நாம் ஓரளவு அறிந்திருந்தாலும் அது பற்றி விளக்கமாக அறிவது நல்லது.


சொத்துரிமையின் போது பங்குதாரர்களுக்குக் கொடுத்தது போக எஞ்சியுள்ள சொத்தைப் பெறுபவர்கள் அஸபாக்கள் (எச்சதாரர்கள்) எனப்படுவர்.

(பாகப்பிரிவினை தொடர்பாகக் குர்ஆனில் நிர்ணயிக்கப் பெற்றுள்ள) பாகங்களை (முதலில்) அவற்றுக்கு உரியவர்களிடம் சேர்த்துவிடுங்கள். பிறகு எஞ்சியிருப்பது (இறந்தவரின்) மிக நெருக்கமான (உறவினரான) ஆணுக்கு உரியதாகும் என்று நபிகள் நாயகம் கூறினார்கள்.

**அறிவிப்பாளர் இப்னு அப்பாஸ் (ரலி) , ஆதாரம் புகாரி எண்.6735**

12 வாரிசுகளுக்கு (அஸ்ஹாபுல் ஃபராயிள்) அவர்களுக்கென நிர்ணயிக்கப்பெற்றுள்ள பாகங்களைக் கொடுத்த பிறகு மீதியுள்ள பாகம் ஆண் வாரிசான மகன் அல்லது மகனுடைய மகன் போன்ற நெருக்கமான வாரிசுகளுக்கு (அஸபா) கிடைக்கும்..

அஸபாக்களை கீழ்வரும் அட்டவணையின்மூலம் நினைவிலி ருத்திக் கொள்வது நன்று.



## முதல் வகுப்பினர்

## (First class heirs - Descendant)

நேர்வழித் தோன்றல்கள்

*மகன்*

*மகனுடன் மகள் எச்சதாரர்*

*மகனின் மகன்*

*மகனின் பேரன்*

*பேரனின் மகன்*

*பேரனின் பேரன்*

*அஸபாக்கள் என்ற எச்சதாரர்களில் முதலாவதாக பங்கு பெறுபவர் மகனே. எத்தனை பங்கு தாரர்கள் இருந்தாலும் மகனுக் குப் பங்கு கிடைக்கும். மகனுடன் ஒத்த மகள் சேர்ந்து மகனுக்கு 2 பங்கு, மகளுக்கு ஒரு பங்கு என்ற விகிதத்தில் பங்கு பெறுவாள். மகன் இல்லாமல் மகனின் மகன் இருந்தால் எத்தனை தலைமுறை பின் சென்றாலும் அஸபாவாகப் பங்கு பெறுவான். மகன், மகனின் மகன் போன்றவர்கள் இல்லாவிட்டால் இரண்டாம் பிரிவினராக மூதாதையர்களான தந்தையும் அவர் இல்லை யென்றால் தந்தையின் தந்தையும் அஸபாவாகப் பங்கு பெறுவர்.*

*இவ்விரு பிரிவினரும் இல்லையென்றால் 3வது பிரிவினரான தந்தையின் வழித் தோன்றல்களான இறந்தவரின் சகோதரர்களும் அடுத்து சகோதரிகளும் அஸபாவாகப் பங்கு பெறுவர். இம்மூன்று பிரிவினரும் இல்லாவிட்டால் 4வது பிரிவான பாட்டனின் வழித் தோன்றல்களான தந்தையின் சகோதரர்கள் வருவர். மகன் இருந்தால் மற்றெல்லா அஸபாக்களும் தள்ளப்படுவார்கள்.*

**எ.காட்டு - 1**

| மகள் 2 | மகனின் மகனின் மகன் | மகனின்மகள் | மகனின் மகனின் மகள் |
|---|---|---|---|
| 2/3 | அஸபா | அஸபா | அஸபா |

*சொத்தை 12 பங்கு வைக்க வேண்டும். ஏனெனில் ஆண் மகனை 2 ஆகவும் பெண்ணை ஒன்றாகவும் எண்ணினால் 4 வரும். 4,3 க்கு அதமப் பொது மடங்கு 12.*

அதில் 8 பங்கு 2 மகள்களுக்கும் கொடுக்க வேண்டும். மீதியுள்ள 4 பங்கு ஆணுக்கு 2 பங்கு பெண்ணுக்கு ஒரு பங்கு கொடுக்க வேண்டும். அதன்படி மகனின் மகனின் மகனுக்கு 2 பங்கும் மீதியுள்ள 2 பங்கில் மகனின் மகளுக்கு ஒரு பங்கும் மகனின் மகனின் மகளுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

குறிப்பு:-

இந்தக் கணக்கில் மகனின் மகள் 2, மகள்களால் தள்ளப் பட்டாலும் பிந்திய தலைமுறையிலுள்ள மகனின் மகனின் மகள் ஒத்த மகனோடு பங்கு பெறுவதால் இவளுக்கும் பங்கு தரப் பட்டுள்ளது.

எ.காட்டு-2

| மகள் 2 | மகனின் மகள் | மகனின் மகனின் மகன் |
|---|---|---|
| 2/3 | அஸபா | அஸபா |

இந்நிலையில் சொத்தை 9 பங்கு வைக்க வேண்டும். ஏனெனில் மகள் 2 பேர் உள்ளதால் அவர்களுக்கு 2/3 பங்கு. மற்ற இருவரும் அஸபாக்கள். ஆணுக்கு 2 பங்கு பெண்ணுக்கு ஒரு பங்கு. 3 பங்கு கொடுக்க வேண்டும். 2/3 மற்றும் 3 பங்கு எனும் போது 3x3=9 எளிதாக வகுபடும் அதமப் பொது மடங்கு.

எனவே மகள் 2 பேருக்கும் 6 பங்கு, மீதியுள்ள 3 பங்கில் மகனின் மகள் ஒரு பங்கும், மகனின் மகனின் மகன் 2 பங்கும் பெறுவர்.

எ.காட்டு -3

| மகள் | மகனின் மகள் | மகனின் மகனின் மகன் | மகனின் மகனின் மகள் |
|---|---|---|---|
| 1/2 | 1/6 | அஸபா | அஸபா |

இந்நிலையில் சொத்தை 18 பங்கு வைத்து மகளுக்கு 9 பங்குகளும் மகனின் மகளுக்கு 3 பங்குகளும் கொடுத்து விட வேண்டும். மீதியுள்ள 6 பங்கில் மகனின் மகனின் மகனுக்கு 4 பங்குகளும் மகனின் மகனின் மகளுக்கு 2 பங்குகளும் கொடுக்க வேண்டும்.

எ.காட்டு-4

| மகனின் மகள் | மகனின் மகனின் மகன் | மகனின் மகனின் மகள் |
|---|---|---|
| 1/2 | அஸபா | |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து 3 பங்கை மகனின் மகளுக்கும் மீதியுள்ள 3 பங்கில் 2 பங்கு மகனின் மகனின் மகனுக்கும் ஒரு பங்கு மகனின் மகனின் மகளுக்கும் உரியதாகும்.

எ.காட்டு-5

| மகள் 2 | மகனின் மகன் | மகனின் மகனின் மகன் | மகளின் மகனின் மகள் |
|---|---|---|---|
| 2/3 | அஸபா | மகனின் மகன் இருப்பதால் சொத்து கிடையாது | மகள்2 பேர் மற்றும் மகனின் மகன் இருப்பதால் சொத்து கிடையாது |

இந்நிலையில் சொத்தை 3 பங்கு வைத்து 2 பங்கு 2 மகள்களுக்கும் மீதி ஒரு பங்கு மகனின் மகனுக்கும் கிடைக்கும். மகனின் மகன் இருப்பதால் மகனின் மகனின் மகனுக்கும், மகள் 2 பேரும் மகனின் மகனும் இருப்பதால் மகளின் மகனின் மகளுக்கும் ஏதும் கிடைக்காது.

மேற்கண்ட முதல் பிரிவினர் இருக்கும் போது பின்வரும் 2ஆம் பிரிவினர் அஸபா ஆக வர முடியாது.

## இரண்டாம் பிரிவினர் - மூதாதையர்

## (IInd class heirs - Ancestors)

தந்தை

தந்தையின் தந்தை

தந்தையின் தந்தையின் தந்தை எத்தனை தலைமுறை முன் சென்றாலும்

இறந்தவருக்கு நெருங்கி இருப்பவர் அகன்று இருப்பவரை சொத்துப் பெற முடியாமல் தள்ளி விடுவார். உதாரணமாக இறந்தவருக்குத் தந்தை உயிருடன் இருந்தால் அத் தந்தையின் தந்தை சொத்து பெறாது தள்ளப்படுவார்.

எ.காட்டு-1

| தந்தை | மகன் |
|---|---|
| 1/6 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து ஒரு பங்கு தந்தைக்கும் மீதி 5 பங்கு மகனுக்கும் கிடைக்கும். மகன் இருப்பதால் தந்தை பங்குதாரர் ஆனார்.

எ.காட்டு_2

| தாய் | தந்தை | தந்தையின் தந்தை [பாட்டன்] |
|---|---|---|
| 1/6 | அஸபா | தந்தை இருப்பதால் பங்கு இல்லை |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து ஒரு பங்கு தாய்க்கும், மீதி தந்தைக்கும் சேரும்.

எ.காட்டு_3

| மகள் | தந்தை |
|---|---|
| 1/2 | [பங்குதாரர் 1/6 + அஸபா 1/3] = 1/2 |

இந்நிலையில் சொத்தை 2 பங்கு வைத்து மகளுக்கு பாதியும் மீதிப் பாதி தந்தைக்கும் சேரும்.

எ.காட்டு_4

| மகனின் மகள் | தந்தை |
|---|---|
| 1/2 | [பங்கு 1/6 + அஸபா 1/3] = 1/2 |

மேற்கண்ட 3வது எ.காட்டு போன்றே பங்கு வைக்க வேண்டும். மகளுடனும், மகனின் மகளுடனும் (எத்தனை தலைமுறை பின் சென்றாலும்) மட்டுமே தந்தை பங்குதாரராகவும் அஸபா எச்சதாரராகவும் பங்கு பெறுவார்.

## மூன்றாவது வகுப்பினர்
## (Third class heirs - Collaterals)

தந்தை வழியினரான கிளை வழியினர். (சகோதரன் - சகோதரி) முதலிரண்டு பிரிவினர் இல்லாவிட்டால் தான் இந்த 3வது வகுப்பினர் அஸபா ஆவர்.

இறந்தவரின் சகோதரன்

சகோதரனின் மகன்

சகோதரனின் பேரன்

சகோதரனின் மகனுடைய பேரன்

சகோதரனுடைய பேரனின் பேரன்

**குறிப்பு:**

உடன் பிறந்த சகோதரனுடன் உடன் பிறந்த சகோதரி இருந்தால் 2:1 என்ற விகிதத்தில் பங்கு பெறுவர்.

உடன் பிறந்த சகோதரி எச்சதாரராகப் பங்கு பெற வேண்டுமென்றால் உடன் பிறந்த சகோதரன் உட்பட முதல் இரண்டு வகுப்பினர் யாரும் இல்லாதிருந்து

A. மகளோ - மகள்களோ

B. மகனின் மகளோ - மகனின் மகள்களோ

C. இறந்தவரின் ஒரு மகளும், மகனின் மகள் ஒருத்தியும் இருந்தாலும்

D. இறந்தவரின் ஒரு மகளும், ஒரு மகனின் மகள்களும் இருந்தாலும்

உடன் பிறந்த சகோதரி அஸபாவாகப் பங்கு பெறுவாள்.

தந்தை வழிச் சகோதரனோடு தந்தை வழிச் சகோதரி அஸபாவாக 2:1 என்ற விகிதத்தில் பங்கு பெறுவர்.

**குறிப்பு:**

தந்தை வழிச் சகோதரி, முன் கூறப்பட்ட எச்சதாரர் எவரும் வரிசையில் இல்லாதிருந்து தந்தை வழிச் சகோதரனும் இல்லாதிருந்து

A. மகளோ அல்லது மகள்களோ

B. மகனின் மகளோ அல்லது மகள்களோ

C. ஒரு மகளுடன் ஒரு மகனின் மகளோ அல்லது பல மகள்களோ இருந்தால் எச்சதாரர் (அஸபா) ஆகப் பங்கு பெறுவாள்.

தந்தை வழிச் சகோதரனின் மகன்

தந்தை வழிச் சகோதரனின் மகனின் மகன் ஆகியோரும் இப்பிரிவில் வருவர்.

**குறிப்பு:-**

சகோதரர்களிலும், சகோதரர் மகன்களிலும் இருவழிச்

சகோதரர்கள் முதலிடமும் அதன் பின்பு தந்தை வழிச் சகோதரர்களும் தந்தை வழிச் சகோதரர் மகன்களும் இடம் பெறுவர்.

எ.காட்டு-1

| **மகன் அல்லது மகனின் மகள்** | **உடன் பிறந்த சகோதரி** | **உடன் பிறந்த சகோதரனின் மகன்** |
|---|---|---|
| 1/2 | அஸபா | உடன்பிறந்த சகோதரியால் தள்ளப்பட்டான் |

*இந்நிலையில் சொத்தை 2 பங்கு வைத்து ஒரு பங்கை மகள், மகள் இல்லாத போது மகனின் மகளும் மற்றொன்றை உடன் பிறந்த சகோதரியும் எடுத்துக் கொள்வர்.*

குறிப்பு:-

*மகள் இருப்பதால் உடன் பிறந்த சகோதரி பங்குதாரராக முடியாது. ஆனால் உடன் பிறந்த சகோதரன் மற்றும் முன்னர் கூறியுள்ள அஸபாக்கள் யாரும் இல்லாததால் இவள் அஸபா வாகக் கருதப்பட்டு 1/2 பங்கு பெறுகிறாள்.*

எ.காட்டு-2

| **மகனின் மகள் 2** | **உடன் பிறந்த சகோதரி** |
|---|---|
| 2/3 | அஸபா 1/3 |

*இந்நிலையில் சொத்தை 3 பங்கு வைத்து 2 பங்கு மகனின் மகளுக்கும் மீதி ஒரு பங்கு அஸபா என்ற நிலையில் உடன் பிறந்த சகோதரிக்கும் கிடைக்கும்.*

எ.காட்டு-3

| **மகள்** | **மகனின் மகள்** | **கணவன்** | **தாய்** | **உ.பி.சகோதரி** |
|---|---|---|---|---|
| 1/2 | 1/6 | 1/4 | 1/6 | |

*இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைக்க வேண்டும். மகளுக்கு 6 பங்குகளும், மகனின் மகளுக்கு 2 பங்குகளும், கணவனுக்கு 3 பங்குகளும், தாய்க்கு 2 பங்குகளும் கொடுக்க வேண்டும். ஆக மொத்தம் 13 பங்குகள் வருகிறது. 12 பங்கு வைத்து அது 13 பங்கு கொடுக்க வேண்டிய நிலை பற்றி பின்னர் விவரிக்கப்படும். உடன் பிறந்த சகோதரிக்கு ஏதும் கிடைக்காது.*

எ.கா_4

| மகள் | மகனின் மகள் | கணவன் | உடன்பிறந்த சகோதரி |
|---|---|---|---|
| 1/2 | 1/6 | 1/4 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து 6 பங்கு மகளுக்கும், 2 பங்கு மகனின் மகளுக்கும், 3 பங்கு கணவனுக்கும் மீதியுள்ள ஒரு பங்கு உடன் பிறந்த சகோதரிக்கும் கிடைக்கும்.

எ.காட்டு_5

| உ.பி.சகோதரன் | உ.பி.சகோதரி | தந்தை வழிச் சகோதரி |
|---|---|---|
| அஸபா | | |

இந்நிலையில் சொத்தை 3 பங்கு வைத்து ஆணுக்கு 2 பங்கு என்ற அடிப்படையில் சகோதரனுக்கு 2 பங்கும் சகோதரிக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும். தந்தை வழிச் சகோதரி, உடன் பிறந்த சகோதரன் இருப்பதால் தள்ளப்பட்டாள்.

எ.காட்டு_6

| கணவன் | தாய் | சகோதரன் | சகோதரி |
|---|---|---|---|
| 1/2 | 1/6 | அஸபா | |

இந்நிலையில் சொத்தை 18 பங்கு வைத்து கணவனுக்கு 9 பங்குகளும் தாய்க்கு 3 பங்குகளும் கொடுக்க வேண்டும். மீதியுள்ள 6 பங்கில் 4 சகோதரனுக்கும் 2 சகோதரிக்கும் கிடைக்கும்.

**குறிப்பு:_**

உடன் பிறந்த சகோதரன் இருப்பதால் உ.பிறந்த சகோதரி பங்குதாரராகப் பங்கு பெற முடியாது. எனினும் எஞ்சியிருக்கும் சொத்தை உடன் பிறந்த சகோதரனோடு சேர்த்து அஸபாவாகப் பெறுகிறாள்.

## நான்காவது வகுப்பினர்
## (Fourth class heirs - Father's Brothers)

பாட்டனாரின் வழித் தோன்றல்களான தந்தையின் கிளை வழியினர்.

தந்தையின் சகோதரன்

தந்தையின் சகோதரனின் மகன்

தந்தையின் சகோதரனின் பேரன்

தந்தையின் சகோதரனுடைய மகனின் பேரன்

தந்தையின் சகோதரரின் பேரனின் பேரன்

**குறிப்பு:-**

தந்தையின் சகோதரர்களில் உடன்பிறந்த சகோதரர்கள் முதலிடம் பெறுவர். அவர்கள் இல்லாவிட்டால் தந்தை வழிச் சகோதரர்கள் அடுத்து இடம் பெறுவர்.

## அஸபாக்கள் விளக்கம்

அஸபாக்கள் மூன்று வகைப்படுவர்.

(1) அஸபா பி நஃப்ஸிஹி

(2) அஸபா பி கைரிஹி

(3) அஸபா மஅ கைரிஹி

பிறர் தொடர்பு இன்றி தாமே அஸபாவாக ஆகுபவர்கள் அரபியில் அஸபா - பிநஃப் ஸிஹி எனப்படுவார்கள். பெண் வழித் தொடர் இல்லாமல் இறந்தவருடன் சேரும் ஒவ்வொரு ஆணுக்கும் அஸபா - பிநஃப்ஸிஹி எனக் கூறப்படும்.

### 1. அஸபா பி.நஃப்ஸிஹி நான்கு வகைப்படுவர்

1) இறந்தவருடைய சந்ததியினர்.

மகன், மகனின் மகன், மகன் வழி பேரனின் மகன் என எத்தனை தலைமுறை கீழே சென்றாலும் முந்திய தலைமுறையினர் இல்லாத போது தான் பின்னவர் பங்கு பெறுவர். மகன் இருக்கும் போது பேரனுக்குப் பங்கில்லை. மகனின் மகன் இருந்தால் பேரனின் மகனுக்குப் பங்கு கிடைக்காது. இந்த அடிப்படையில் ஒருவருக்கு 2 மகன்கள் அல்லது 2க்கு மேற்பட்ட மகன்கள் உள்ளனர். அவர்களில் ஒருவன் மரணித்து விட்டால் அவனது மகனுக்குப் பங்கு கிடைக்காது.

இறந்தவரின் மகளுக்குப் பங்கு உண்டு. ஆனால் மகளின் மகளோ, மகளின் மகனோ பாகம் பெற மாட்டார்கள். மகளின் சந்ததியினர் அவளது கணவனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனவே கணவனின் குடும்பத்தினருடன் தான் பாகம் பெறுவார்கள்.

2) இறந்தவருக்கு சந்ததிகள் இல்லாத போது அவரது முந்திய தலைமுறையினர் அதாவது தந்தை, தந்தையின் தந்தையாகிய பாட்டனார் போன்றவர்கள் அஸபா ஆக வருவர்.

3) முந்திய மேற்கண்ட 2 பிரிவுகளில் யாரும் இல்லாவிட்டால்

தந்தையின் சந்ததியினர் அஸபா ஆவர். தந்தையின் சந்ததியாக இறந்தவர் இருந்தது போன்று இறந்தவரின் சகோதர சகோதரிகளும் தந்தையின் சந்ததியினராகவே கருதப்படுவர். ஆண்கள் தான் அஸபாவாக வருவர். சகோதரிகள் மட்டும் தாமாக வரமுடியாது. ஆனால் சகோதரனோடு சேர்ந்து வந்தால் சகோதரி அஸபாவாகப் பங்கு பெறுவாள்.

4) தந்தையின் சந்ததிகள் இல்லாத போது பாட்டனாரின் சந்ததிகளாகிய இறந்தவரின் தந்தையின் சகோதரர்களும் அவர்கள் இல்லாத போது அவர்களின் சந்ததியினரில் உள்ள ஆண்களும் இதே முறையில் அஸபா ஆவர்.

பாட்டனாரின் சந்ததி இல்லாவிட்டால் அவரின் தந்தையாகிய முப்பாட்டனாரின் ஆண் வழிச் சந்ததிகளும், அவர்களும் இல்லாத போது அவருக்கு முன்னருள்ள பாட்டனாரின் ஆண்வழிச் சந்ததிகளும் அஸபா ஆவர்.

இதற்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு:-

**(1) தந்தை அஸபா**

| கணவன் | தந்தை |
|---|---|
| 1/2 | அஸபா |

சொத்தை 2 பங்கு வைத்து கணவனுக்கு ஒரு பங்கும், மீதியுள்ள ஒரு பங்கு தந்தைக்கும் கிடைக்கும்.

**(2) மகனுக்கு எடுத்துக்காட்டு:-**

| தாய் | தந்தை | மகன் | மகன் |
|---|---|---|---|
| 1/6 | 1/6 | அஸபா | அஸபா |

சொத்தை 6 பங்கு வைத்து தாய்க்கு ஒரு பங்கு, தந்தைக்கு ஒரு பங்கு போக மீதியுள்ள 4 பங்கில் ஒவ்வொரு மகனுக்கும் 2 பங்கு கொடுக்க வேண்டும்.

**(3) பாட்டனாருக்கு எடுத்துக்காட்டு:-**

| கணவன் | தந்தையின் தந்தை |
|---|---|
| 1/2 | |

சொத்தை 2 பங்கு வைத்து ஒரு பங்கு கணவனுக்கும் மற்றொரு பங்கு பாட்டனாருக்கும் கிடைக்கும்.

**(4) மகனின் மகனுக்கு எடுத்துக்காட்டு:-**

| மகள் | மகனின் மகன் |
|---|---|
| 1/2 | அஸபா |

*சொத்தை 2 பங்கு வைத்து ஒரு பங்கு மகளுக்கும் மீதியுள்ள ஒரு பங்கு மகனின் மகனுக்கும் கிடைக்கும்.*

(5) உடன் பிறந்த சகோதரனுக்கு எடுத்துக்காட்டு:-

| தாய் | தாய்வழிச் சகோதரன் | தாய்தந்தை இருவழிச் சகோதரன் |
|---|---|---|
| 1/6 | 1/6 | அஸபா |

*இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து தாய்க்கு ஒரு பங்கும் தாய்வழிச் சகோதரனுக்கு ஒரு பங்கும் கொடுத்தது போக மீதியுள்ள 4 பங்கும் உடன் பிறந்த சகோதரனுக்குக் கிடைக்கும்.*

(6) தந்தைவழிச் சகோதரனுக்கு உதாரணம்:-

| சகோதரி | தந்தைவழிச் சகோதரன் |
|---|---|
| 1/2 | |

*சொத்தை 2 பங்கு வைத்து ஒரு பங்கு சகோதரிக்கும் மற்றொரு பங்கு தந்தைவழிச் சகோதரனுக்கும் கிடைக்கும்.*

(7) உடன் பிறந்த சகோதரன் மகனுக்கு எடுத்துக்காட்டு:-

| தந்தைவழிச் சகோதரி | உடன் பிறந்த சகோதரன் மகன் |
|---|---|
| 1/2 | அஸபா |

*மேற்கண்ட 6வது கணக்குப் போன்றே பங்கிட வேண்டும்.*

(8) தந்தை வழிச் சகோதரன் மகனுக்கு உதாரணம்:-

| தாய் | தந்தைவழிச் சகோதரன் மகன் |
|---|---|
| 1/3 | அஸபா |

*சொத்தை 3பங்கு வைத்து ஒரு பங்கு தாய்க்கும் மீதியுள்ள 2 பங்கு தந்தை வழிச் சகோதரன் மகனுக்கும் கிடைக்கும்.*

(9) தாய் தந்தை ஒன்றுபட்ட சிறிய அல்லது பெரிய தந்தைக்கு உதாரணம்:-

| பாட்டி | தாய் தந்தை ஒன்றுபட்ட சிறிய அல்லது பெரிய தந்தை |
|---|---|
| 1/6 | அஸபா |

*சொத்தை 6பங்கு வைத்து பாட்டிக்கு ஒரு பங்கும் மீதி 5 பங்கு தாய் தந்தை ஒன்றுபட்ட சிறிய அல்லது பெரிய தந்தைக்கும் கிடைக்கும்.*

(10) தந்தை ஒன்றுபட்ட சிறிய அல்லது பெரிய தந்தைக்கு எ.காட்டு:-

| கணவன் | தந்தை ஒன்றுபட்ட சிறிய தந்தை |
|---|---|
| 1/2 | |

சொத்தை 2 பங்கு வைத்து ஒரு பங்கு கணவனுக்கும் மற்றொரு பங்கு தந்தை ஒன்றுபட்ட சிறிய தந்தைக்கும் கிடைக்கும்.

(11) தாய் தந்தை ஒன்றுபட்ட சிறிய அல்லது பெரிய தந்தையின் மகனுக்கு எடுத்துக்காட்டு:-

| மனைவி | தாய் தந்தை ஒன்றுபட்ட சிறிய or பெரிய தந்தை மகன் |
|---|---|
| 1/4 | அஸபா |

சொத்தை 4 பங்கு வைத்து ஒரு பங்கு மனைவிக்கும் மீதி 3 பங்கு தாய் தந்தை ஒன்றபட்ட சிறிய தந்தை மகனுக்கும் சேரும்.

(12) தந்தை ஒன்றுபட்ட சிறிய தந்தையின் மகன் எ.காட்டு:-

| தந்தைவழிச் சகோதரி | தந்தை ஒன்றான சிறிய தந்தையின் மகன் |
|---|---|
| 1/2 | |

சொத்தை 2 பங்கு வைத்து ஒரு பங்கு தந்தை வழிச் சகோதரிக்கும் மற்றொரு பங்கு தந்தை ஒன்றான சிறிய தந்தையின் மகனுக்கும் கிடைக்கும்.

அஸபாக்களில் அடுத்த வகை அஸபா - பி கைரிஹி எனப்படுவர்.

மற்றவர் மூலம் அஸபா ஆனவர் என்பது இதன் பொருள்.

பாகம் பெறும் பெண் தன் உடன் பிறந்தவனோடு அஸபா ஆகுவது.

ஒருத்தியாக இருக்கும்போது சொத்தில் சரிபாதியும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருக்கும்போது 2/3 பங்கும் பெறும் பிரிவினர்கள் அஸபா - பி-கைரிஹி ஆவர்.

1. மகனுடன் மகள்

2. மகன் இல்லாத போது மகனின் மகனுடன் மகனின் மகள்

3. இறந்தவருக்கு மகளோ, மகனின் மகளோ இல்லாத போது தனது சகோதரனுடன் சகோதரி.

4. மேற்கூறிய மூன்று வகுப்பினரும் இல்லாத போது தனது சகோதரனுடன் தந்தை வழிச் சகோதரி.

இவர்கள் அஸபா - பி- கைரிஹி ஆவர்.

**குறிப்பு 1 :-**

அஸபா என்ற வகையில் சிறிய தந்தை, பெரிய தந்தை

சேருகிறார்கள். ஆனால் தந்தையின் சகோதரி அதாவது இறந்தவரின் மாமி பங்கு பெற மாட்டாள்.

**குறிப்பு 2:-**

ஒரு பெண் தனியாக வரும்போது பங்கு பெறவில்லையானால் அவளுடைய சகோதரன் அஸபா ஆகும் போதும் பங்கு பெற மாட்டாள். உதாரணமாக சகோதரனின் மகன் அஸபா ஆகும்போது சகோதரரின் மகள் பங்கில் சேர மாட்டாள். அவளுக்கு அஸபாவாகவும் பங்கு கிடைக்காது.

இதற்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு:-

**A.** **மகள்** **மகன்**

மகனுடன் சேர்ந்து மகள் அஸபாவாகிறாள். சொத்தை 3 பங்கு வைத்து மகனுக்கு 2 பங்கும் மகளுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

**B.** **மகனின் மகள்** **மகனின் மகன்**

மேற்கண்ட A போன்றே இங்கும் பங்கிட வேண்டும்.

**C.** **சகோதரி** **சகோதரன்**

மேற்கண்ட A, B போன்றே ஆணுக்கு 2 பங்கு பெண்ணுக்கு ஒரு பங்கு என்ற விகிதத்தில் பங்கீடு அமையும்.

**D.** **தந்தைவழிச் சகோதரி இருவர்** **தந்தைவழிச் சகோதரன் இருவர்**

மேற்கண்ட உதாரணங்கள் போன்றே இதுவும் அமையும். தந்தைவழிச் சகோதரரர்கள் இருவர் இருப்பதால் அவர்களை 4 பேராகக் கணக்கிட வேண்டும். பெண்கள் இருவர், ஆக 6பங்கு வைத்து 4 பங்கு தந்தை வழிச் சகோதரன் இருவருக்கும் ஆளுக்கு 2பங்கு வீதம் கிடைக்கும். தந்தை வழிச் சகோதரி இருவருக்கும் ஆளுக்கு ஒரு பங்கு கிடைக்கும்.

அஸபாக்களில் 3வது வகை, அஸபா - மஅ-கைரிஹி (மற்றொரு பெண்ணுடன் சேருவதால் அஸபா ஆகும் பெண்)

இறந்தவருக்குப் பெண் மக்கள், அல்லது மகனின் மகள் மட்டும் இருந்தால் அவர்களுடன் தாய் தந்தை (இரு)வழிச் சகோதரி அல்லது தந்தைவழிச் சகோதரி அஸபா ஆவாள்.

இதற்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு:-

**A.** உடன் பிறந்த சகோதரிக்கு எடுத்துக்காட்டு:-

| மகள் | சகோதரி |
|---|---|
| 1/2 | அஸபா |

சொத்தை 2 பங்கு வைத்து மகளுக்கு ஒரு பங்கும் மீதியுள்ள ஒரு பங்கு உடன் பிறந்த சகோதரிக்கும் கிடைக்கும்.

**B.**

| மகள் | மகனின் மகள் | தந்தைவழிச் சகோதரி |
|---|---|---|
| 1/2 | 1/6 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து மகளுக்கு 3 பங்கும், மகனின் மகளுக்கு ஒரு பங்கும் போக மீதமுள்ள 2 பங்கு தந்தை வழிச் சகோதரிக்குக் கிடைக்கும்.

அஸபா பிஸ் ஸபப் (காரண ரீதியான அஸபா) என்றொரு வகையும் உண்டு. அதாவது விடுதலையான ஆண் பெண் அடிமைகள் அஸபாவாகப் பங்கு பெறுவர். இறந்தவருக்கு எந்த வாரிசுகளம், மகன், தந்தை போன்ற அஸபாக்களும் தவுல் அர்ஹாம் என்ற தூரத்து உறவினர்களும் இல்லாத போது அடிமைகள் அஸபாவாகப் பங்கு பெறுவர். அடிமைகள் தற்போது உலகில் இல்லாத காரணத்தால் அதுபற்றி விளக்கம் தரவில்லை.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) அஸபாக்கள் என்றால் யார்? அவர்கள் எத்தனை வகையினர்? ஒவ்வொரு வகை பற்றியும் விரிவாக எழுது?

(2) அஸபா பி நஃப்ஸிஹி
அஸபா பி கைரிஹி — விளக்கம் தருக?
அஸபா மஅ கைரிஹி

(3) கீழ்வரும் கணக்குகளுக்கு விடை காண்க.

A. தந்தை - தாய் - சகோதரன்

B. தந்தை - மனைவி

C. கணவன் - தந்தை

D. பாட்டன் - பாட்டி - சகோதரி

E. பாட்டன் - பாட்டி - கணவன்

F. மனைவி - பாட்டனார்

G. கணவன் - சகோதரன்

H. மனைவி - சகோதரிகள் 3 பேர்

I. மகள் - சகோதரன் - சகோதரி

J. மனைவியர் 2 - தந்தைவழிச் சகோதரன்

K. தந்தை - 3 மகன்கள்

L. கணவன் - மகன்

M. தந்தை - சகோதரன் - மகனின் மகன்

N. தந்தை ஒன்றுபட்ட சிறிய தந்தை - மகள்

O. மனைவி 2பேர் - தந்தை ஒன்றுபட்ட சிறிய தந்தை மகன்

P. தந்தை வழிச் சகோதரி - தந்தை வழிச் சகோதரனின் மகன்

Q. மனைவி - சகோதரனின் மகன்

R. மகள் 2 - சகோதரி 2

S. மகனின் மகள் 2 - சகோதரி

T. தந்தைவழிச் சகோதரி 2 - மகனின் மகள் 2

U. கணவன் - தந்தை - மகன் - சகோதரன் -சிறிய தந்தை - உரிமை விடப்பட்ட அடிமை.

V. தாய் - தந்தை - மகன் - மகனின் மகன்

W. கணவன் - சகோதரன் - தந்தைவழிச் சகோதரன்

X. மகள் - தந்தை

Y. மகள் - மகனின் மகள் - பாட்டனார்

Z. தந்தை - தாய் - மகனின் மகன் - மகனின் மகள்

# 26. சொத்துரிமை குறுக்கீடுகள்

வாரிசுகள் பாகம் பெறும்போது சிலரால் சிலர் பாகம் பெறாமல் தள்ளப்படுவார்கள். இதை தள்ளல் விதிக் கொள்கை (Doctrine of Exclusion) என்றும் குறுக்கீடுகள் என்றும் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு சொத்துக் கிடைக்காமல் தள்ளுவது 2 வகைப்படும்.

1. சொத்து அறவே கிடைக்காமல் தள்ளுவது

2. கிடைக்கும் சொத்து குறைந்து விடுவது

இறந்தவரின் சொத்தில் பங்கு கிடைக்காது முழுமையாகத் தள்ளப்படுபவர்களை (Total exclusion) கீழே உள்ள பட்டியலில் காணலாம்.

| தள்ளப்பட்டவர் | தள்ளப்படுவதற்கான காரணங்கள் |
|---|---|
| 1. பாட்டன் | தந்தையோ நெருங்கிய பாட்டனோ இருத்தல். |
| 2.பாட்டி | தாயோ, நெருங்கிய தந்தை வழிப்பாட்டியோ, |
| (அ) தாய்வழிப்பாட்டி | தாய் வழிப் பாட்டியோ இருத்தல். |
| (ஆ)தந்தை வழிப்பாட்டி | தாயோ, தந்தையோ, நெருங்கிய தந்தைவழிப் பாட்டியோ நெருங்கிய பாட்டியோ, இடைப்பட்ட பாட்டியோ இருத்தல். |
| 3. உடன் பிறந்த சகோதரி | மகன், மகனின் மகன் (எத்தனை தலைமுறைபின் சென்றாலும்) தந்தை, அல்லது பாட்டன் ஆகிய ஆண் இருத்தல். |
| 4. தந்தை வழிச் சகோதரி | மகன், மகனின் மகன், தந்தை (அ) பாட்டன் (அ) உடன் பிறந்த சகோதரன் (அல்லது) ஒன்றுக்கு மேற்பட்ட உடன் பிறந்த சகோதரிகள் இருத்தல்.<br>உடன் பிறந்த சகோதரி ஒருத்தி மட்டும் இருந்தால் தந்தை வழிச் சகோதரி அறை குறையாகத் தள்ளப்பட்டு 1/6 பங்கு பெறுவாள். |
| 5. தாய்வழிச் சகோதரன், தாய் வழிச் சகோதரி | மகனோ, மகனின் மகனோ (எத்தனை தலைமுறை பின் சென்றாலும்) தந்தை அல்லது பாட்டனோ இருத்தல். |
| 6. மகனின் மகள் (எத்தனைதலைமுறை பின் சென்றாலும்) | நெருங்கிய மகனாலும், ஒன்றுக்கு மேற்பட்ட மகள்கள் இருந்தால் தள்ளப்படுவாள்.<br>ஆனாலும் ஒரு படி உயர் தரத்தில் நிற்கும் ஒரேயொரு மகள் இருந்தால் அரை குறையாகத் தள்ளப்பட்டு 1/6 பங்கு பெறுவார். |
| 7. மகனின் மகன் | மகன் இருக்கும் போது மகனின் மகன் தள்ளப்படுவான். |

அரைகுறையாகத் தள்ளப்பட்டு (Partial Exclusion)
குறைந்த பங்கு பெறுவோர் அட்டவணை

| பங்குதாரர் | கூடுதல் பங்கு | குறைந்த பங்கு | பங்கு குறையக் காரணம் |
|---|---|---|---|
| 1. கணவன் | 1/2 | 1/4 | இறந்தவருக்கு (ஆண், பெண்) குழந்தைகளோ மகனின் (ஆண், பெண்) குழந்தைகளோ உயிருடன் இருந்தால் பங்கு குறையும். |
| 2. மனைவி | 1/4 | 1/8 | இறந்தவருக்கு (ஆண், பெண்) குழந்தைகளோ மகனின் (ஆண், பெண்) குழந்தைகளோ உயிருடன் இருந்தால் பங்கு குறையும். |
| 3. தாய் | 1/3 | 1/6 | A.இறந்தவருக்குக் குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ (எ.த.பி.செ) இருந்தால்<br>B. இறந்தவருக்கு வாரிசாக ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரர்கள் இருந்தால்<br>C. ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரிகள் இருந்தால்<br>D. ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் உயிருடன் இருந்தாலும் தாய்க்குப் பங்கு குறையும். |
| 4. மகனின் மகள் | 1/2 | 1/6 | இறந்தவருக்கு ஒரேயொரு மகள் இருந்தால் |
| 5. தந்தை வழிச் சகோதரி | 1/2 | 1/6 | இறந்தவருக்கு ஒரேயொரு உடன் பிறந்த சகோதரி இருந்தால். |

குறிப்பு:-

வாரிசுரிமை பெறுவோர் பற்றிக் கூறியுள்ள இடங்களிலும் இது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டுகளுடன் விரிவாக அறிய முன்னர் பார்க்க.

உறவினர்களைக் கொலை செய்தல், மத மாற்றம், அடிமை போன்றவையும் முன்பின் இறந்தோர் யார் என அறியாமை போன்றவை வாரிசுரிமையைத் தடை செய்துவிடும். இவர்கள் வேறு வாரிசுக்காரர்கள் சொத்துரிமை பெறுவதைத் தடுக்க முடியாது.

| தாய் | மகள் | தந்தை | மதம் மாறிய மகன் |
| --- | --- | --- | --- |
| 1/6 | 1/2 | அஸபா | |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து ஒரு பங்கு தாய்க்கும், 3 பங்கு மகளுக்கும் மீதியுள்ள 2 பங்கு தந்தைக்கும் சேரும் மதம் மாறிவிட்டதால் மகன் ஏதும் பெற மாட்டான்.

குறிப்பு:-

அவன் மதம் மாறாதிருந்தால் பின்வரும் முறைப்படி கணக்கு வரும்.

| தாய் | தந்தை | மகள் மகன் |
| --- | --- | --- |
| 1/6 | 1/6 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 18 பங்கு வைத்து தாய்க்கு 3 பங்கும் தந் தைக்கு 3 பங்கும் கிடைக்கும். மீதியுள்ள 12 பங்கில் 8 பங்கு மகனுக்கும் 4 பங்கு மகளுக்கும் கிடைக்கும்.

சகோதர சகோதரிகளில் அவர்கள் இருவர் இருந்தால் அதாவது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் தாயின் பாகம் 1/3 என்பதை 1/6 ஆக குறைத்து விடுவர். அவர்கள் பாகம் பெறாவிட்டாலும் இவ்வாறு குறைத்து விடுவர். இந்தச் சகோதர சகோதரிகள் இருவழிச் சகோதர சகோதரிகளானாலும் சரி, தந்தை வழிச் சகோதர சகோதரிகள் ஆனாலும் சரி, தாய் வழிச் சகோதர சகோதரிகள் ஆனாலும் சரியே. தாய்க்கு கிடைக்க வேண்டிய பங்கைக் குறைத்து விடுவார்கள்.

| தாய் | தந்தை | சகோதரர்கள் இருவர் [or] சகோதரிகள் இருவர் |
| --- | --- | --- |
| 1/6 | அஸபா | பங்கு இல்லை |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து 1 பங்கை தாய்க்கும் தந்தைக்கு 5 பங்கும் கொடுக்க வேண்டும். சகோதரர்கள் இருவர் அல்லது சகோதரிகள் இருவர் பங்கு பெறாவிட்டாலும் தாயின் பாகத்தை 1/3 லிருந்து 1/6 ஆகக் குறைத்து விட்டனர்.

கிடைக்க வேண்டிய பங்குகள் குறைய மற்றொரு காரணமும் உண்டு. பங்காளிகள் அதிகரிக்கும் போது பங்குகள் குறையும். அதற்கான எடுத்துக் காட்டுகளைக் காண்போம்.

## A. பங்காளிகள் அதிகத்தால் பங்கு குறைய உதாரணம்

| மகள் 4 பேர் | சிறிய அல்லது பெரிய தந்தை |
|---|---|
| 2/3 | அஸபா |

சொத்தை 6 பங்கு வைத்து 4 பங்கை மகள் 4 பேரும் தலைக்கு ஒரு பங்கு வீதம் எடுத்துக் கொள்வர். மீதி 2 பங்கு அஸபாவுக்குக் கிடைக்கும். இங்கே 4 மகள் இருப்பதால் ஒவ்வொருவருக்கும் பங்கு குறைந்து விட்டது. 2 பேர் இருந்திருந்தால் தலைக்கு 2 பங்கு கிடைத்திருக்கும்.

## B. அஸபாக்கள் அதிகமாக இருப்பதால் பங்கு குறைவதற்கான உதாரணம்

| மனைவி | மூன்று சிறிய தந்தைகள் |
|---|---|
| 1/4 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 4 பங்கு வைத்து ஒரு பங்கு மனைவிக்கும் மீதியுள்ள 3 பங்குகள் மூன்று சிறிய தந்தையருக்கும் தலைக்கு ஒரு பங்கு வீதம் கொடுக்கப்படும். ஒரு சிறிய தந்தை மட்டும் இருந்திருந்தால் அவருக்கே அந்த 3 பங்குகளும் கிடைத்திருக்கும்.

## C. அடிப்படைப் பங்குகளில் குறைவு ஏற்படுவது

| தாய் | கணவன் | சகோதரி |
|---|---|---|
| 1/3 | 1/2 | 1/2 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து தாய்க்கு 2 பங்கும் கணவனுக்கு 3 பங்கும், சகோதரிக்கு 3 பங்கும் கொடுக்க வேண்டும். பங்குகளைக் கூட்டினால் 2+3+3=8 பங்குகள் வருகின்றன. எனவே சொத்தை 8 பங்காகப் பிரிக்க வேண்டும். இதனால் வாரிசுகளுக்கு கிடைக்க வேண்டிய பங்கு குறைந்து விடுகிறது.

*(இதை அவுல் என்று கூறுவர். இது பற்றிப் பின்னர் விவரிக்கப் படும்)*

*இதனால் தாய்க்கு 1/3 கிடைக்க வேண்டிய நிலையில் 1/4 தான் கிடைத்திருக்கிறது. கணவனுக்கும், சகோதரிக்கும் சொத்தில் 1/2 பங்கு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 3/8 பங்கு தான் ஒவ்வொருவருக்கும் கிடைத்துள்ளது.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) சொத்துரிமை பெறுவதில் தடையாக இருக்கும் நிலைகள் எத்தனை? அவை யாவை?*

*(2) சொத்து அறவே கிடைக்காது தடை செய்வோர் யார் யார்? பட்டியலிட்டு விளக்கம் தருக.*

*(3) கிடைக்க வேண்டிய சொத்தில் குறைவு ஏற்படுத்தும் வாரிசுகள் யார் யார்? விளக்கம் தருக.*

# 27. ஏற்றவிதிக் கொள்கை (அவுல்)

## (Doctrine of Increase (aul))

*அடிப்படைப் பங்குகளை விட, பங்குகள் அதிகமாகி விடும் நிலைக்கு அவுல் என்று அரபியில் கூறப்படும். உதாரணமாக ஒரு வாரிசுரிமைச் சட்டக் கணக்கில் 6 பாகங்களாகச் சொத்தைப் பிரிக்க வேண்டிய சூழ்நிலையில் 10 பாகங்கள் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இதற்கே அவுல் என்று கூறப்படும். இது போன்ற நிலையில் சொத்தில் பாதி (1/2) கொடுக்க வேண்டுமானால் 10இல் பாதியாகிய 5 கொடுக்கக் கூடாது. சொத்தை 10 பங்கு வைத்தாலும் கூட 6இல் சரிபாதி 3 தான் கொடுக்க வேண்டும்.*

*4:12வது வசனத்தில் 'வாரிசுக்காரர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத் தாத வகையில் பங்கீடு செய்யப்படல் வேண்டும்' என்று அல் லாஹ் கூறியுள்ளான். இதன் பொருள், வஸிய்யத் எனும் மரண சாசனம் செய்பவர் வாரிசுகளுக்கு கிடைக்க வேண்டிய பங்கீட் டில் பாதிப்பு ஏற்படாதவாறு மரண சாசனம் செய்ய வேண்டு மென வலியுறுத்துகிறது. அதாவது சொத்து முழுவதையும் பிறருக்கோ பொது நலத் தொண்டுக்காகவோ உயில் எழுதி கொடுத்து வாரிசுகளை வெறுமனே விடலாகாது. அல்லது அவர்களுக்கு நியாயமாகச் சேர வேண்டியதில் குறைவு ஏற்படுத்தி விடக் கூடாது என்பதும் ஒரு விளக்கமாகும். மேலும் வாரிசுகள் ஒவ்வொருவருக்கும் இவ்வளவு தான் என்று நிர்ணயிக்கப்பட்ட பின்னர் எவ்வாறு பாதிப்பு ஏற்படும் என வினவலாம்.*

*வாரிசுரிமைச் சட்டத்தில் நாம் மேற்குறிப்பிட்ட அவுல் (ஏற்றவிதிக் கொள்கை)க்கு இந்த வசனம் ஒரு ஆதாரம் ஆகும்.*

**உதாரணமாக:-**

| மனைவி | 2மகள் | தாய் | தந்தை |
|---|---|---|---|
| 1/8 | 2/3 | 1/6 | 1/6 |

*மொத்த சொத்தையும் 24 பங்கு வைக்கிறோம். 24இல் மனை விக்கு 3 பங்கு, 2 மகளுக்கும் 16 பங்கு, தாய்கு 4 பங்கு தந்தைக்கு 4 பங்கு கொடுக்கிறோம். ஆக 27 பங்கு வைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. 24 பங்கில் மனைவிக்கு 3 பங்கு கொடுத்தால் மற்றவர் களுக்கும் அதே போன்று கொடுக்க வேண்டும். அப்போது பங்குகள் போதாமல் மற்றவர்களுக்குக் குறைவு ஏற்படுத்தும்*

நிலை தோன்றுகிறது. எனவே எல்லோ ருக்கும் சமமாகக் குறைவு ஏற்படும் விதத்தில் 27 பங்கு வைத்து 27இல் 3 பங்கு மனைவிக்குக் கொடுக்கிறோம். 2 மகளுக்கும் 27 பங்கிலிருந்து 16 பங்கு கொடுக் கிறோம். தாய் தந்தைக்கு 27 பங்கிலிருந்து 4 பங்கு ஒவ்வொரு வருக்கும் கிடைக்கும். இதனால் அவரவர் பங்குக்கு ஏற்ப சிறிது குறையும். ஒரு பங்குதாரருக்கு கூடவும் மற்றொரு பங்குதாரருக்கு குறைவும் ஏற்படாமல் பங்கீடு செய்வதற்காகத்தான் அல்லாஹ் இந்த வசனத்தில் வாரிசுக் காரர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் பங்கீடு செய்யப் படல் வேண்டும் என்று குறிப்பிடுகி றான். இந்த வசனம் ஒருவகை யில் அவுல் எனும் ஏற்றவிதிக் கொள்கைக்கு ஆதாரம் ஆகும்.

அவுல் என்பது சில எண்களில் சில கணக்குகளில் மட்டும் தான் ஏற்படும். 6 அடிப்படைப் பங்கு வைக்க வேண்டியது 7,8,9,10 ஆகிய 4 எண்கள் தான் கூடுமே தவிர இதைவிடக் கூடாது. அவற்றுக் கான எ.காட்டுகள் வருமாறு.

எ.காட்டு_1 6 _ 7

| கணவன் | தந்தைவழிச் சகோதரிகள் இருவர் |
|---|---|
| 1/2 | 2/3 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும். கணவனுக்கு 3 பங்கும், தந்தை வழிச் சகோதரிகள் இருவருக்கும் 4 பங்கும் கொடுக்க வேண்டும். பங்குகளைக் கூட்டினால் 3+4 ==7 வருகிறது. எனவே சொத்தை 7 பங்கு வைக்க வேண்டும். 7இல் பாதி $3^{1/2}$ கணவனுக்குக் கொடுக்கக் கூடாது. 3 பங்கு தான் கொடுக்க வேண்டும்.

எ.காட்டு_2 6_7

| கணவன் | உ.பி.சகோதரி | தாய்வழிச் சகோதரி |
|---|---|---|
| 1/2 | 1/2 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கும் சகோதரிக்கு 3 பங்கும் தாய் வழிச் சகோதரிக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும். 3+3+1=7 பங்கு வருகிறது.

எ.காட்டு_3 6_8

| கணவன் | சகோதரிகள் 2 | தாய் வழிச் சகோதரி |
|---|---|---|
| 1/2 | 2/3 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்குகளும் சகோதரிகள் இருவருக்கும் 4 பங்குகளும் தாய் வழிச் சகோதரிக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும். 3+4+1=8 பங்கு ஆகி விடுகிறது. எனவே 8 பங்கு வைத்து மேற்கண்டவாறு கொடுக்க வேண்டும். தாய் வழிச் சகோதரி இடத்தில் தாய் இருந்தாலும் இவ்வாறு தான் கணக்கு வரும்.

எ.காட்டு-4 6_8

| கணவன் | உ.பி.சகோதரி | தாய்வழிச் சகோதரி3பேர் |
|---|---|---|
| 1/2 | 1/2 | 1/3 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கும், உ.பிறந்த சகோதரிக்கு 3 பங்கும், தாய் வழிச் சகோதரி மூவருக்கு 2 பங்கும் கொடுக்க வேண்டும். 6 பங்கு வைத்து அது 8 பங்கு ஆகிவிட்டது.

எ.காட்டு-5 6_9

| கணவன் | சகோதரிகள்2 | தாய்வழிச் சகோதரிகள் 2 |
|---|---|---|
| 1/2 | 2/3 | 1/3 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும். கணவனுக்கு 3 பங்கும் சகோதரிகளுக்கு 4 பங்கும், தாய்வழிச் சகோதரிகளுக்கு 2 பங்கும் கொடுக்க வேண்டும். 3+4+2=9 பங்கு ஆகிவிட்டது.

எ.காட்டு-6 6_9

| கணவன் | தாய் | சகோதரி | தந்தைவழிச் சகோதரி | தாய்வழிச் சகோதரி |
|---|---|---|---|---|
| 1/2 | 1/6 | 1/2 | 1/6 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும். கணவனுக்கு 3 பங்குகளும், தாய்க்கு ஒரு பங்கும், சகோதரிக்கு 3 பங்குகளும், தந்தை வழிச் சகோதரிக்கு ஒரு பங்கும், தாய் வழிச் சகோதரிக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும். 3+1+3+1+1= 9 பங்கு ஆகி விடுகிறது.

எ.காட்டு-7 6_10

| கணவன் | தாய் | சகோதரிகள்2 | தாய்வழிச் சகோதரிகள் 2 |
|---|---|---|---|
| 1/2 | 1/6 | 2/3 | 1/3 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும். கணவனுக்கு 3 பங்குகளும் தாய்க்கு ஒரு பங்கும் சகோதரிகள் இருவருக்கும் 4 பங்குகளும், தாய் வழிச் சகோதரிகளுக்கு 2 பங்கும் கொடுக்க வேண்டும்.

3+1+4+2=10 பங்கு ஆகிவிடுகிறது.

எ.காட்டு_8 6_10

| கணவன் | சகோதரி 2 | தாய் | தாய்வழிச் சகோதரி 3 | தாய்வழிச் சகோதரன் 5 |
|---|---|---|---|---|
| 1/2 | 2/3 | 1/6 | 1/3 | |

இந்நிலையிலும் மேற்கண்டவாறே சொத்தைப் பங்கிட வேண்டும். தாய்வழிச் சகோதரி 3 தாய்வழிச் சகோதரன் 5 பேருக்கும் ஆக 8 பேருக்கும் கிடைக்கும் அந்த 2 பங்கிலிருந்து சமமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

அடிப்படைப் பாகங்கள் 12ஆகப் பிரிக்க வேண்டிய நிலையில் 13,15,17 இந்த மூன்று எண்களாகக் கூடுமே தவிர வேறு எண்கள் வராது.

எ.காட்டு_9 12_13

| மனைவி | சகோதரிகள் 2 | தாய்வழிச் சகோதரி |
|---|---|---|
| 1/4 | 2/3 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 12 பாகங்களாகப் பிரிக்க வேண்டும். மனைவிக்கு 3 பங்குகளும் சகோதரிகள் இருவருக்கும் 8 பங்குகளும் தாய் வழிச் சகோதரிக்கு 2 பங்கும் கொடுத்தால் (3+8+2)=13 பங்கு ஆகிவிடுகிறது.

எ.காட்டு_10 12_13

| கணவன் | மகள் | தாய் | பாட்டன் | சகோதரி |
|---|---|---|---|---|
| 1/4 | 1/2 | 1/6 | 1/6 | |

இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைக்க வேண்டும். கணவனுக்கு 3 பங்குகளும், மகளுக்கு 6 பங்குகளும், தாய்க்கு 2 பங்குகளும், பாட்டனுக்கு 2 பங்குகளும் கொடுக்க வேண்டும். இறந்தவருக்குப் பாட்டன், மற்றும் மகள் இருப்பதால் சகோதரிக்கு ஏதும் கிடைக்காது. 3+6+2+2=13 பங்குகள் ஆகி விட்டன.

எ.காட்டு-11 12 _ 13

| கணவன் | தாய் | மகள் 2 |
|---|---|---|
| 1/4 | 1/6 | 2/3 |

*இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து 3 பங்கு கணவனுக்கும், 2 பங்கு தாய்க்கும், 8 பங்கு மகள் 2 பேருக்கும் கொடுத்தால் (3+2+8)=13 பங்கு ஆகிவிடுகிறது.*

எ.காட்டு-12 12_13

| கணவன் | மகள் | மகனின் மகள் | தாய் |
|---|---|---|---|
| 1/4 | 1/2 | 1/6 | 1/6 |

*இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து 3 பங்கு கணவனுக்கும், 6 பங்கு மகளுக்கும் மகனின் மகளுக்கு 2 பங்கும், தாய்க்கு 2 பங்கும் கொடுத்தால் (3+6+2+2)=13 பங்கு ஆகி விடுகிறது.*

எ.காட்டு-13 12_15

| மனைவி | சகோதரிகள் 2 | தாய்வழிச் சகோதரிகள் 2 |
|---|---|---|
| 1/4 | 2/3 | 1/3 |

*இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து மனைவிக்கு 3 பங்குகளும், சகோதரிகளுக்கு 8 பங்குகளும், தாய் வழிச் சகோதரிகளுக்கு 4 பங்குகளும் கொடுத்தால் (3+8+4)=15 பங்குகள் ஆகி விடுகின்றன.*

எ.காட்டு-14 12_15

| கணவன் | தாய் | தந்தை | மகள் 2 |
|---|---|---|---|
| 1/4 | 1/6 | 1/6 | 2/3 |

*இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைக்க வேண்டும். கணவனுக்கு 3 பங்குகளும், தாய்க்கு 2 பங்குகளும் தந்தைக்கு 2 பங்குகளும், மகள் 2 பேருக்கும் 8 பங்குகளும் கொடுத்தால் (3+2+2+8=)=15 பங்குகள் ஆகி விடுகின்றன.*

எ.காட்டு-15 12_17

| மனைவி | தாய் | சகோதரிகள்2 | தாய்வழிச் சகோதரிகள் 2 |
|---|---|---|---|
| 1/4 | 1/6 | 2/3 | 1/3 |

இந்நிலையில் சொத்தை 12 பங்குவைக்க வேண்டும். மனைவிக்கு 3 பங்குகளும், தாய்க்கு 2 பங்குகளும், சகோதரிகள் இருவருக்கும் 8 பங்குகளும், தாய்வழிச் சகோதரிகள் இருவருக்கும் 4 பங்குகளும் கொடுத்தால் (3++2+8+4=) =17 பங்குகள் ஆகி விடுகிறது.

அடிப்படைப் பாகம் 24 ஆக வைக்க வேண்டிய கணக்குகளில் 27ஆக மட்டுமே அவுல் ஏற்படும். நாம் மேற்கூறிய எண்களைத் தவிர வேறு எந்த அடிப்படை எண்களும் மாறவே மாறாது. மேலும் 6 என்பது 7,8,9,10 ஆகவும், 12 என்பது 13,15,17 ஆகவும் 24 என்பது 27 ஆக மட்டுமே மாறும். அவ்வாறின்றி வேறு எண்கள் வந்தால் உங்கள் கணக்கில் தவறு செய்திருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளவும்.

எ.காட்டு_16 24_27

| மனைவி | மகள்2 | தந்தை | தாய் |
|---|---|---|---|
| 1/8 | 2/3 | 1/6 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 24 பங்கு வைக்க வேண்டும். மனைவிக்கு 3 பங்குகளும், மகள் இருவருக்கும் 16 பங்குகளும், தந்தைக்கு 4 பங்குகளும், தாய்க்கு 4 பங்குகளும் கொடுத்தால் (3++16+4+4)=27 பங்குகள் ஆகிவிடுகின்றது.

எ.காட்டு_17 24_27

| மனைவி | மகள் | தாய் | தந்தை | மகனின் மகள் |
|---|---|---|---|---|
| 1/8 | 1/2 | 1/6 | 1/6 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 24 பங்கு வைக்க வேண்டும். மனைவிக்கு 3 பங்குகளும், மகளுக்கு 12 பங்குகளும், தாய், தந்தை, மகனின் மகள் ஒவ்வொருவருக்கும் நான்கு பங்குகளும் கொடுக்க வேண்டும்.

3+12+4+4+4==27 பங்குகள் ஆகி அவுல் என்ற ஏற்ற விதியாகி விட்டது. எனவே சொத்தை 27 பங்கு வைக்க வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) எந்தெந்த எண்கள் அடிப்படைப் பாகமாக இருக்க அவுல் ஆக வரும்?*

*(2) 6, அவுலாக வரும் எண்கள் எவை எவை?*

*(3) 12 அடிப்படைப் பங்காக இருந்து அவுல் வரும் எண்கள் எவை?*

*(4) அடிப்படைப் பாகம் 24 என்பது எந்த எண்ணாக அவுல் ஏற்படும்?*

*(5) கீழ்வரும் வாரிசுக்காரர்களுக்கு சொத்தை பங்கீடு செய்து கொடு.*

A. *கணவன் - சகோதரி - தந்தை வழிச் சகோதரி*

B. *கணவன் - தாய் - சகோதரி*

C. *கணவன் - சகோதரி - தாய் - தாய்வழிச் சகோதரர்கள் 2பேர்*

D. *கணவன் - சகோதரி - தாய்வழிச் சகோதரர்கள் 2 பேர் - தாய் - தந்தைவழிச் சகோதரி*

E. *மனைவி - சகோதரிகள் 2 பேர் - தாய்*

F. *மனைவி - தந்தைவழிச் சகோதரிகள் 2 பேர் - தாய்வழிச் சகோதரர்கள் 2 பேர்*

G. *மனைவி - சகோதரிகள் 2 பேர் - தாய் வழிச் சகோதரர்கள் 2 பேர் - தாய்*

H. *மனைவி - மகள் 2 - தந்தை - தாய்*

# 28. இறக்க விதிக் கொள்கை (ரத்து)

## (Doctrine of Return)

**மறு பங்கீடு:-**

இறந்தவரின் வாரிசுதாரர்களுக்குப் பங்கு வைத்துத் தரப்படும் போது இறந்தவரின் சொத்தின் மொத்தப் பங்குத் தொகையை விட வாரிசுதாரர்களின் பங்கு அதிகமானால், அதிகமாகி விட்ட பங்கு அளவுக்கு இறந்தவரின் சொத்துப் பங்குத் தொகையை கூட்டிக் கொள்வது அவ்லு எனப்படும்.

ஆனால் ரத்து என்பது அதற்கு நேர் மாறானது. இறந்தவரின் வாரிசுதாரர்களுக்குப் பங்கு வைத்துத் தரப்படும் போது இறந்தவரின் சொத்தின் மொத்தப் பங்குத் தொகையை விட வாரிசு தாரர்களின் பங்கு குறைந்து, அஸபா (எச்சதாரர்)களும் இல்லாவிட்டால் இறந்தவரின் சொத்தின் மொத்தப் பங்குத் தொகையை குறைந்த பங்கு அளவிற்கு சுருக்கிக் கொள்வது ரத்து எனப்படும்.

அவ்லில் இறந்தவரது சொத்தின் பங்குத் தொகை அதிகமாகும்.

ரத்தில் இறந்தவரது சொத்தின் பங்குத் தொகை மீதமாகும்.

ரத்து என்ற வகையில் வாரிசுதாரர்களுக்கு உரிய பாகத்தை கொடுத்த பின்னர் சொத்து மீதமிருந்து அஸபா யாரும் இல்லாவிட்டால் மீதமுள்ள பங்குகளை முதலில் கொடுத்த வாரிசுதாரர்களுக்கே அவர்களது ஈவின்படி மீண்டும் மறு பங்கீடு செய்யப்படும். இவ்வாறு சொத்து மீதமாகும் போது கணவன் மனைவி ஆகியோருக்கு மட்டும் மறு பங்கீடு இல்லை என்று சில அறிஞர்களும் உண்டு எனச் சில அறிஞர்களும் கூறுகின்றனர். மீதமாகும் சொத்தை வாரிசுதாரர்கள் யாரும் இல்லாத போது பைத்துல் மால் எனும் அரசு பொது நிதிக் கருவூலத்தில் சேர்க்க வேண்டுமென்று கூறியவர்கள் தற்காலத்தில் அரசு பொது நிதிக் கருவூலம் இல்லாததால் அல்லது சரிவரச் செயல்படாததால் கணவன் மனைவிக்கே கொடுத்துவிடலாம் என்று கூறுகின்றனர். கணவன், மனைவிக்கு ரத்து (மறு பங்கீடு) இல்லை என்பதே சரியான கூற்றாகும்.

ரத்து (மறுபங்கீடு) பெறும் வாரிசுதாரர்கள்

(1) மகள்

(2) மகனின் மகள்

(3) உடன் பிறந்த சகோதரி

(4) தந்தைவழிச் சகோதரி

(5) தாய் வழிச் சகோதரி

(6) தாய் வழிச் சகோதரன்

(7) தாய்

(8) பாட்டி ஆகிய 8 பேர் ஆவர்.

ரத் என்ற இறக்கவிதிக் கொள்ளைப்படி நான்கு வகையான கணக்குகள் வரும்.

1) கணவன், மனைவி இருவரும் இல்லாமல் மற்ற வாரிசுகளில் ஒரு பிரிவினர் மட்டும் இருத்தல்.

2) கணவன், மனைவி இருவரும் இல்லாமல் மற்ற வாரிசுகள் பலர் இருத்தல்

3) கணவன், மனைவியுடன் ஒரேயொரு பிரிவினர் இருத்தல்

4) கணவன், மனைவியுடன் பல பிரிவினர் இருத்தல்.

இவற்றுக்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு.

## முதல் வகை

**எ.காட்டு-1**

**பெண்மக்கள் 2 பேர்**

2/3

இவ்வாறு ஒருவர் இறந்து அவருக்குப் பெண்மக்கள் இரண்டு பேர் மட்டும் இருந்தால் சொத்தை 3 பங்கு வைத்து 2 பங்கை 2 பெண் மக்களுக்கும் கொடுத்து விட்டு மீதமுள்ள ஒரு பங்கைப் பெற யாரும் இல்லை. எனவே அதையும் பெண் மக்கள் இருவருக்கும் கொடுக்க வேண்டும். எனவே சொத்தை 2 பங்கு வைத்து பெண் மக்கள் இருவருக்கும் ஆளுக்கு ஒரு பங்கு கொடுத்து விட வேண்டும். பங்கில் வித்தியாசமானவர்கள் இல்லாததால் நபர்களின் எண்ணிக்கை கவனிக்கப்பட்டுள்ளது.

**எ.காட்டு-2**

ஒருவர் இறந்து அவருக்கு மகனின் மகள் 4 பேர் மட்டும் இருக்கின்றனர். வேறெவரும் இல்லை. இந்நிலையில் சொத்தை 4 பங்கு வைத்து 4 பேருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிட

வேண்டும். 2/3 பங்கு என்பது தற்போது இல்லை. இவ்விரண்டு எ.காட்டுகளும் முதல் வகைக்கு உதாரணம்.

## இரண்டாவது வகை

எ.காட்டு-3

| பாட்டி | தாய்வழிச் சகோதரி |
|---|---|
| 1/6 | 1/6 |

இந்த நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து பாட்டிக்கு ஒரு பங்கும் தாய்வழிச் சகோதரிக்கு ஒரு பங்கும் கொடுத்து விட்டு மீதமுள்ள 4 பங்கையும் அவ்விருவருக்குமே கொடுக்க வேண்டும். வேறு வாரிசுகள் இல்லை. இருவரும் சம பங்கு பெறக் கூடிய வர்களாக இருப்பதால் சொத்தை சரிபகுதியாகப் பிரித்து இருவருக்கும் சமபங்கு கொடுத்து விட வேண்டும்.

எ.காட்டு-4

| தாய் | தாய் வழிச் சகோதரர்கள் 2 |
|---|---|
| 1/6 | 1/3 |

இந்நிலையில் சொத்தை 6 பாகமாக வைத்துப் பங்கிடாமல் சொத்தை மூன்று பங்கு வைத்து தாய்க்கு ஒரு பங்கும், தாய் வழிச் சகோதரர்கள் இருவருக்கும் இரண்டு பங்கும் கொடுத்து விட வேண்டும். 6 பங்கு வைத்தால் மீதி 3 பங்குகள் இருக்கும். எனவே 3 பங்கு வைத்து அதை அவர்களது சொத்துரிமையின் பங்கீட் டின்படி பங்கிடப்பட்டுள்ளது.

எ.காட்டு-5

| தாய் | மகள் |
|---|---|
| 1/6 | 1/2 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்தால் தாய்க்கு ஒரு பங்கும், மகளுக்கு 3 பங்கும் கிடைக்கும். ஆனால் 4 பங்கு வைத்து தாய்க்கு ஒரு பங்கும் மகளுக்கு 3 பங்கும் கொடுக்க வேண்டும்.

எ.காட்டு-6

| தாய் | மகள் 2 |
|---|---|
| 1/6 | 2/3 |

இந்நிலையில் சொத்தை 5 பாகங்களாகப் பங்கிடல் வேண்டும். தாய்க்கு ஒரு பங்கும் மீதியுள்ள 4 பங்குகள் மகள் 2 பேருக்கும் கொடுக்க வேண்டும்.

எ.காட்டு-7

| தாய் | மகள் | மகனின் மகள் |
|---|---|---|
| 1/6 | 1/2 | 1/6 |

இந்நிலையிலும் சொத்தை 5 பங்குதான் வைக்க வேண்டும். தாய்க்கு ஒரு பங்கு, மகனின் மகளுக்கு ஒரு பங்கு, மீதியுள்ள 3 பங்கு மகளுக்கு உரியது. 6 பங்கு வைத்து 5 பங்காக சுருங்கிவிடும் ரத்து என்ற வகைப் பங்கீடு இது.

இவை 2வது வகைக்கு எ.காட்டுகள் ஆகும்.

## மூன்றாவது வகை

எ.காட்டு-8

| கணவன் | மகள் |
|---|---|
| 1/4 | 1/2 |

இந்நிலையில் சொத்தை 4 பங்கு வைத்து கணவனுக்கு ஒரு பங்கும் மகளுக்கு 2 பங்கும் கொடுக்க வேண்டும். கணவர் இரத்தத் தொடர்பு இல்லாதவர். எனவே இறக்கவிதிக் கொள்கைப்படி மீதியைப் பெற முடியாது. மீதியுள்ள ஒரு பங்கு மகளுக்கே சேரும்.

எனவே கணவனுக்கு 1/4 பங்கும் மகளுக்கு 3/4 பங்கும் கிடைக்கும். 3 பெண் மக்கள் இருந்தால் மூன்று பங்குகளை ஆளுக்கு ஒன்றாகப் பங்கிட்டுக் கொள்வர்.

எ.காட்டு-9

| மனைவி | மகள் |
|---|---|
| 1/8 | 1/2 |

இந்நிலையில் சொத்தை 8 பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கும் மகளுக்கு 4 பங்கும் கிடைக்கும். மீதியும் மகளுக்கே கிடைக்கும். அவ்வாறானால் மனைவிக்கு ஒரு பங்கு போக மீதி 7 பங்கும் மகளுக்கே உரியது.

மனைவி இரத்தத் தொடர்பு இல்லாதவர். எனவே ரத்துபடி பாகம் பெற முடியாது.

எ.காட்டு-10

| கணவன் | பெண்மக்கள் 6 பேர் |
|---|---|
| 1/4 | மீதி 3/4 |

இந்நிலையில் சொத்தை 8 பங்கு வைக்க வேண்டும். 6 பெண் மக்கள் இருப்பதால் அவர்களுக்கு பின்னமாக கொடுக்காமல் முழுமையாகக் கொடுக்க (4x2=)=8 பங்கு வைக்கிறோம். கணவனுக்கு 2 பங்கும் 6 பெண் மக்களுக்கு ஒரு பங்கு வீதம் 6 பங்கும் கொடுக்க வேண்டும்.

எ.காட்டு-11

| கணவன் | பெண்மக்கள் 7 |
|---|---|
| 1/4 | மீதி 3/4 |

இந்நிலையில் சொத்தை 28 பங்கு வைத்து 7 பங்கை கணவனுக்கும் மீதியுள்ள 21 பங்கை ஆளுக்கு 3 பங்கு வீதம் பெண் மக்கள் 7 பேருக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். கணவனுக்கு மறு பங்கீடு கிடையாது.

## நான்காவது வகை

எ.காட்டு-12

| மனைவி | பாட்டி | தாய்வழிச் சகோதரிகள் 2 |
|---|---|---|
| 1/4 | 1/6 | 1/3 |

இந்நிலையில் சொத்தை 4 பங்கு வைத்து மனைவிக்கு 1 பங்கு போக மீதியுள்ள 3 பங்கை பாட்டிக்கு ஒரு பங்கும், தாய் வழிச் சகோதரிகள் இருவருக்கும் 2 பங்கும் கொடுத்து விட வேண்டும்.

எ.காட்டு-13

| மனைவி | பாட்டிகள்4 | தாய்வழிச் சகோதரர்கள் 6 பேர் | மீதி |
|---|---|---|---|
| 1/4 | 1/6 | 1/3 | 3 |

இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து 3 பங்கை மனைவிக்கும், பாட்டிகள் நால்வருக்கும் 2 பங்கும் தாய்வழிச் சகோதரர்கள் 6 பேருக்கும் 4 பங்கும் கொடுத்தால் (3+2+4=)=9 பங்கு வருகிறது. இன்னும் 3 பங்கு உள்ளது. அதை பாட்டிகளுக்கு ஒரு பங்கும் தாய்வழிச் சகோதரர்கள் 6 பேருக்கும் 2 பங்கும் கொடுத்தால் மனைவிக்கு 3, பாட்டிகளுக்கு 3 பங்கு, தாய் வழிச் சகோதரர்கள் ஆறுபேருக்கும் 6 பங்கும் ஆகிறது. பாட்டிகளுக்கு 4 பேருக்கு 3 பங்கு கொடுத்தால் பின்னமாக வருவதால் 4ஆல் எல்லாப் பங்குகளையும் பெருக்க வேண்டும். மனைவிக்கு 3x4==12, பாட்டிகள் 4 பேருக்கு 4x3==12, தாய்வழிச் சகோதரர்கள் 6 பேருக்கு 6x4==24 ஆக 48 பங்குகள்.

எ.காட்டு-14

| கணவன் | தாய் | மகள் | = | கணவன் | தாய் | மகள் |
|---|---|---|---|---|---|---|
| 1/4 | 1/6 | 1/2 | | 1/4 | | |

*இந்நிலையில் சொத்தை 16 பங்கு வைக்க வேண்டும். ஏனெனில் கணவனுக்கு 1/4 பங்கு, மீதியுள்ள 3/4 பங்கு தாய்க்கும், மகளுக்கும் கொடுக்க வேண்டும்.*

கணவன் 1/4 = 1-1/4 = 3/4 = 4/16 = 4 பங்கு

தாய் 1/6 = 1/4x3/4 = 3/16 = 3 பங்கு

மகள் 1/2 = 3/4x3/4 = 9/16 = 9 பங்கு

எ.காட்டு-15

| மனைவி | தாய் | மகள் |
|---|---|---|
| 1/8 | 1/6 | 1/2 |

மனைவி 1-1/8 = மீதி 7/8 = 4/32 = 4 பங்கு

தாய் 1/6 = 1/6(1/4x7/8) = 7/32 = 7 பங்கு

மகள் 1/2 = 3/6 (3/4x7/8 = 21/32 = 21 பங்கு

*சொத்தை 32 பங்கு வைத்து மேற்கண்ட படி பிரித்துக் கொடுக்க வேண்டும்.*

எ.காட்டு-16

| கணவன் | தந்தைவழிச் சகோதரன் | தந்தைவழிச் சகோதரி |
|---|---|---|
| 1/2 | 1/6 | 1/6 |

கணவன் 1/2 போக மீதி 1/2 உள்ளது.

தந்தைவழிச் சகோதரன் 1/6 (1/2 x1/2) = 1/4

தந்தைவழிச் சகோதரி 1/6 (1/2 x1/2) = 1/4

எ.காட்டு-17

| மனைவி 3 | தந்தைவழிச் சகோதரி | தாய்வழிச் சகோதரி |
|---|---|---|
| 1/4 | 1/2 | 1/6 |

மனைவி 3 பேருக்கும் 1/4 பங்கு = 4/16

தந்தைவழிச் சகோதரிக்கு = 9/16

தாய்வழிச் சகோதரிக்கு = 3/16

எ.காட்டு-18

| மனைவி 2 | தாய் | மகள் |
|---|---|---|
| 1/8 | 1/6 | 1/2 |

மனைவி இருவருக்கும் 1/8 பங்கு = 4/32 = 4 பங்கு

தாய்க்கு 1/6 = 1/4 x 7/8 = 7/32 = 7 பங்கு

மகள் 1/2 = 3/4 x 7/8 = 21/32 = 21 பங்கு

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) சொத்துரிமையில் ரத்து என்றால் என்ன?*

*(2) சொத்துரிமையில் ரத்து மறுபங்கீடு யார் யாருக்கு கிடைக்காது?*

*(3) மறுபங்கீடு பெறும் வாரிசுதாரர்கள் யார் யார்?*

*(4) ரத்தில் எத்தனை வகையான பிரச்சனைகள் தோன்றும்?*

*(5) கீழ்வரும் வாரிசுதாரர்களுக்கு சொத்தைப் பங்குவை.*

A. பாட்டி 2 பேர் - தாய் வழிச் சகோதரன்

B. தாய் - தாய்வழிச் சகோதரன் 2 பேர்

C. மகள் - மகனின் மகள் 2 பேர்

D. பாட்டி - சகோதரி - தந்தை வழிச் சகோதரி

E. மனைவி - மகள்

F. மனைவி - சகோதரி

G. கணவன் - தாய்

H. மனைவி - தாய் - தாய்வழிச் சகோதரன்

I. பாட்டி - தாய் வழிச் சகோதரன் - மனைவி

J. மனைவி - பாட்டி 2 - தாய் வழிச் சகோதரன் 2 பேர்

K மனைவி 3 பேர் - மகள் 4 பேர்

L. மனைவி 4 பேர் - தாய் - மகள் 3 பேர்

M. மனைவி - மகள் - மகனின் மகள் 4 பேர்

# 29. அடிப்படைப் பங்கு எடுப்பது எவ்வாறு?

முன்னர் சென்ற கணக்குகளில் இறந்தவரின் சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும், 12 பங்கு வைக்க வேண்டும், 24 பங்கு வைக்க வேண்டும் என்றெல்லாம் படித்தோம். அவ்வாறு ஏன் பங்கு வைக்க வேண்டும் என்பதை விரிவாகப் பார்ப்போம். இன்ஷா அல்லாஹ்

இறந்தவரின் முழு சொத்தை வாரிசுகளுக்கு பங்கிடும்போது எத்தனை பங்குகளாக பிரித்தால் எளிதாக பங்கிட முடியும் என்று காண்பதுதான் அடிப்படைப் பங்கு (அதாவது மொத்த பங்கு) அதை அறிய எளிய முறை. குர்ஆனில் கூறப்பட்டுள்ள பங்குகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

1வது வகை 1/2, 1/4, 1/8

2வது வகை 1/3, 2/3, 1/6

முதலாவது வகையில் 1/2 உம் 1/4 உம் வந்தால் அதில் பெரிய எண்ணான 4ஐ அடிப்படைப் பாகமாகக் கருத வேண்டும்.

இரண்டாவது வகையில் உள்ள பின்னங்கள் வந்தால் அதில் பெரிய எண்ணான 6ஐ அடிப்படைப் பங்காகக் கருத வேண்டும்

பல பின்னங்கள் கலந்து வந்தால் உதாரணமாக

1. முதல்வகையில் 1/2 உடன் 2வது வகையில் உள்ள ஒன்றோ பலதோ கலந்து வந்தால் அடிப்படைப் பாகம் 6 ஆகும்.

2. முதல் வகையில் உள்ள 1/4 உடன் 2வது வகையில் உள்ள பின்னங்கள் ஒன்றோ பலதோ கலந்து வந்தால் 12 பங்கு வைக்க வேண்டும்.

3. முதல் வகையில் உள்ள 1/8 உடன் 2வது வகையில் உள்ள பின்னங்கள் வந்தால் அடிப்படைப் பாகம் 24 ஆகும்.

அடிப்படைப் பங்குகள் 2, 3, 4, 6, 8, 12, 24 ஆகி ஏழு எண்கள் ஆகும்.

**எ.காட்டு-1 அடிப்படைப் பங்கு 6.**

| கணவன் | தாய் | தாய்வழிச் சகோதரன் | சிறிய[or]பெரிய தந்தை |
|---|---|---|---|
| 1/2 | 1/3 | 1/6 | அஸபா |

6பங்கு வைத்து கணவனுக்கு 3, தாய்க்கு 2, தாய்வழிச் சகோதரனுக்கு 1 ஆக 3+2+1= 6 பங்கு சரியாகி விட்டது. சிறிய (or) பெரிய தந்தை அஸபா என்றாலும் சொத்து மீதமில்லாததால் ஏதும் கிடைக்கவில்லை.

எ.காட்டு-2 அடிப்படைப் பங்கு 12.

| மனைவி | தாய் | தாய்வழிச் சகோதரன் 2 பேர் | சகோதரன் |
|---|---|---|---|
| 1/4 | 1/6 | 1/3 | அஸபா |

12 பங்கு வைத்து மனைவிக்கு 3 பங்கு, தாய்க்கு 2 பங்கு, தாய் வழிச் சகோதரன் 2 பேருக்கும் 4 பங்கும் சகோதரனுக்கு மீதியுள்ள 3 பங்கு அஸபா என்ற ரீதியில் கிடைக்கிறது.

எ.காட்டு-3 அடிப்படைப் பங்கு 24.

| மனைவி | மகள் | மகனின் மகள் | தாய் | சகோதரன் |
|---|---|---|---|---|
| 1/8 | 1/2 | 1/6 | 1/6 | அஸபா |

24 பங்கு வைத்து மனைவிக்கு 3 பங்கு, மகளுக்கு 12 பங்கு, மகனின் மகளுக்கு 4 பங்கு, தாய்க்கு 4 பங்கு, மீதியுள்ள ஒரு பங்கு அஸபா என்ற ரீதியில் சகோதரனுக்குக் கிடைக்கும்.

குறிப்பு:-

ஒருவர் இறந்து அவருக்கு வாரிசாக அஸபாக்கள் மட்டுமே இருந்து அவர்கள் அனைவரும் ஆண்களாக இருந்தால் எத்தனைபேர் இருக்கின்றார்களோஅந்த எண்ணிக்கையே அடிப்படைப் பங்கு ஆகும்.

உதாரணமாக ஒருவர் இறந்து அவருக்கு 5 ஆண் மக்கள் மட்டும் இருந்தால் அடிப்படைப் பங்கு 5 ஆகும். சொத்தை 5 பங்கு வைத்து 5 பேருக்கும் சமமாகப் பங்கிட வேண்டும்.

ஆண்களும் பெண்களுமாக இருந்தால் ஆணை 2ஆகவும் பெண்ணை ஒன்றாகாவும் எண்ணி அதுவே அடிப்படைப் பங்கு ஆகும். உதாரணமாக 3 ஆண்மக்களும் 4 பெண் மக்களும் இருந்தால் 3 ஆண்மக்களை 6 ஆகவும் 4 பெண்மக்களை 4 ஆகவும் கணக்கிட்டு (6+4=10) அடிப்படைப் பங்கு 10 ஆகும்.

சொத்து பிரிவினையில்

1. ஒன்று போன்ற எண்கள் (தமாஸுல்)

2. மாறுபட்ட எண்கள் (தபாயுன்)

3. ஒன்றை மீதமில்லாமல் வகுக்க முடிந்த எண்கள். (ததாகுல்)

4. ஒன்றை மற்றொன்றால் வகுக்க முடியாத நிலையில் மூன்றாவது எண் அவற்றை மீதமில்லாமல் வகுத்து விடும் படியான எண்கள். (தவாஃபுக்)

ஆக 4 பிரிவான எண்களைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும்.

தமாஸுல் என்றால் (2-2) (3-3) (5-5) (7-7) ஒரே போன்ற எண்கள். ஒன்று மற்றொன்றுக்குச் சமமான எண்கள். இந்நிலையில் அதே எண்ணை அடிப்படைப் பாகமாக வைத்துக் கொள்ளலாம்.

தபாயுன் எண்கள் என்றால் ஒன்றை மற்றொன்றால் மீதமின்றி வகுக்கவோ, மூன்றாவது எண்ணாலும் மீதமின்றி வகுக்கவோ முடியாத மாறுபட்ட எண்கள் உதாரணமாக 5,6 போன்று. அல்லது 7,8 போன்று. 5,8 போன்று. இதுபோன்று வரும் நிலைகளில் அடிப்படைப்பாகம் காண வேண்டுமானால் அவ்விரண்டு எண்களையும் ஒன்றால் மற்றொன்றை பெருக்கி வரும் தொகையே அடிப்படைப்பங்கு ஆகும்.

ததாகுல் என்றால் ஒன்று மற்றொன்றின் மடங்காக இருக்கும் எண்கள். உதாரணமாக (3,6) (3,9) (4,12) (8,24) ஆகிய எண்களைக் குறிப்பிடலாம். இவற்றில் ஒன்று மற்றொன்றை மீதமின்றி வகுத்துவிடும்.

தவாஃபுக் என்றால் ஒன்று மற்றொன்றின் மடங்காக இருந்தாலும் ஒன்றை மற்றொன்றால் மீதமின்றி வகுக்க முடியாத எண்கள். 3வது எண்தான் இவ்விரண்டையும் மீதமின்றி வகுக்கும். உதாரணமாக (8,20) இவற்றை 4 என்ற எண் மீதமின்றி வகுக்கும்.

இவற்றைப் பற்றி மேலும் விரிவாக அறிய பின்னக் கணக்குகளைப் படித்தல் நன்று. அதுதான் மிகச் சிறந்த வழியாகும்.

**தஸ்ஹீஹ் (பாகங்களை முழுமைப்படுத்துதல்)**

பாகங்கள் கொடுக்கும் போது பின்னமாகக் கொடுப்பதை விட முழுமையாகக் கொடுத்தலே நன்று. எனவே பின்னமாக வருபவற்றை முழுமைப் படுத்தும் குறைந்தபட்ச எண்ணுக்கு தஸ்ஹீஹ் என்று கூறப்படும்.

இவற்றை உதாரணம் மூலம் அறியலாம்.

எ.காட்டு-1

| **மகள்** | **தாய்** | **தந்தை** |
|---|---|---|
| 2/3 | 1/6 | 1/6 |

சொத்தை 6 பங்கு வைத்து மகள் 2 பேருக்கும் 4 பங்கு, தாய்க்கு ஒரு பங்கு தந்தைக்கு ஒரு பங்கு ஆக 6 பங்கு. மகள் 2 பேருக்கும் 4 பங்கு கிடைத்துள்ளது. ஆளுக்கு 2 பங்காக 4 பங்கை பங்கிட்டுக் கொடுத்து விடலாம். இந்தக் கணக்கில் பிரச்சனை இல்லை.

ஆனால் பின்வரும் கணக்கைப் பாருங்கள்

எ.காட்டு-2

| **மகள் 8** | **தாய்** | **சிறிய தந்தை** |
|---|---|---|
| 2/3 | 1/6 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து 4 பங்கை 8 மகளுக்கும் தாய்க்கு ஒரு பங்கும் மீதி ஒரு பங்கை சிறிய தந்தைக்கும் கொடுக்க வேண்டும். 8 மகளுக்கு 4 பங்கைக் கொடுத்தால் ஆளுக்கு 1/2 பங்கு கொடுக்க வேண்டும். எனவே 2ஆல் அடிப்படைப் பாகத்தைப் பெருக்கினால் 6X2=12 பங்கு வைத்தால் பின்னமின்றி சொத்து கிடைக்கும்.

12 பங்கு வைத்தால் மகள் 8 பேருக்கும் 8 பங்கு. ஆளுக்கு ஒரு பங்கு கொடுத்து விடலாம். தாய்க்கு 2 பங்கு. சிறிய தந்தைக்கு மீதி 2 பங்கு.

இவ்வாறு பின்னம் ஏற்படாமல் முழுமைப்படுத்துவதே தஸ்ஹீஹ் எனப்படும்.

அடிப்படைப்பாகம் அவ்லாக (ஏற்றவிதியாக) மாறினால் அவ்லால் பெருக்க வேண்டும்.

எ.காட்டு-3 12 - 15 X 3 = 45

| **கணவன்** | **மகள் 6** | **தாய்** | **தந்தை** |
|---|---|---|---|
| 1/4 | 2/3 | 1/6 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கும் மகள் 6 பேருக்கும்8 பங்கும், தாய்க்கும் தந்தைக்கும் தலா 2 பங்கும் கொடுத்தால் (3+8+2+2=)15 பங்கு ஆகிவிட்டது. பெண் மக்கள் 6

*பேருக்கு 8 பங்கு கொடுத்தால் பின்னமாகக் கொடுக்க வேண்டும். அதை முழுமைப் படுத்த 6க்கும் 8க்கும் மத்தியில் இரண்டில் தவஃப்புக் உள்ளது. எனவே 6உடைய பாதி 3ஆல் 15 ஐ பெருக்க 45 கிடைத்தது. எனவே எல்லாப் பங்கு களையும் 3ஆல் பெருக்க கணவனுக்கு 9 பங்கு மகள் 6 பேருக்கு 8x3=24 பங்கு. அப்படியானால் ஒவ்வொரு மகளுக்கும் 4 பங்கு கிடைக்கும். தந்தைக்கும் தாய்க்கும் முறையே 6,6 பங்குகள் கிடைக்கும்.*

**குறிப்பு:-**

*அடிப்படைப் பங்குகளை எந்த எண்ணால் பெருக்குகிறோமோ அதே எண்ணால் வாரிசுகாரர்களின் பங்கையும் பெருக்க வேண்டும்.*

**எ.காட்டு-4** 12 X 12 = 144

| மனைவி 4 | பாட்டிகள் 3 | தந்தையின் சகோதரர்கள் 12 |
|---|---|---|
| 1/4 | 1/6 | அஸபா |
| [3] | [2] | [7] |

*சொத்தை 12 பங்கு வைத்து 4 மனைவிகளுக்கும் 3 பங்கும், 3 பாட்டிகளுக்கும் 2 பங்கு, மீதியுள்ள 7 பங்கு தந்தையின் சகோதரர்கள் 12 பேருக்கும் உரியது.*

*4 மனைவியருக்கு 3 பங்கு கொடுத்தால் 3 பாட்டிகளுக்கு 2 பங்கு கொடுத்தால் த.சகோதரர்கள் 12 பேருக்கு 7 பங்கு கொடுத்தால் பின்னமாக வருகிறது. எனவே 4,3,12 இவற்றில் அதமப் பொது மடங்கு 12. எனவே 12ஆல் அடிப்படைப்பங்கையும் (12x12=144), வாரிசுகளின் பங்கையும் பெருக்கினால்*

| | | |
|---|---|---|
| மனைவி 4 பேருக்கு | 3x12=36 | |
| பாட்டிகள் 3 பேருக்கு | 2x12=24 | மொத்தம் 144 |
| த.சகோதரர்கள் 12 பேருக்கு | 12x7=84 | பங்குகள் |

ஒரு மனைவிக்கு 9 பங்குகள். 4 பேருக்கு 36 பங்குகள்

ஒரு பாட்டிக்கு 8 பங்குகள். 3 பேருக்கு 24 பங்குகள்

த.சகோதரர்கள் ஒருவருக்கு 7 பங்குகள். 12 பேருக்கு 84 பங்குகள்

எ.காட்டு-5

| மனைவிகள் 2 | பெண் மக்கள் 10 | பாட்டிகள்6 | தந்தையின் சகோதரர்கள் 7 பேர் |
|---|---|---|---|
| 1/8 | 2/3 | 1/6 | அஸபா |
| [3] | [16] | [4] | [1] |

சொத்தை 24 பாகம் வைத்து மனைவிகள் 2 பேருக்கு 3 பங்கும், மகள் 10 பேருக்கு 16 பங்கும், பாட்டிகள் 6 பேருக்கு 4 பங்கும் மீதி ஒரு பங்கு தந்தையின் சகோதரர்கள் 7 பேருக்கும் கொடுக்க வேண்டும். இவ்வாறு கொடுக்கும் போது ஒவ்வொருவருக்கும் பின்னமாகக் கொடுக்க வேண்டியதேற்படும்.

மனைவிகள் 2, பங்கு 3 தபாயுன் 2

மகள் 10 பங்கு 16 தவாஃபுக் 5

பாட்டி 6 பங்கு 4 தவாஃபுக் 3 2x5x3x7=210

சகோதரர்கள் 7 பங்கு 1 தபாயுன் 7

210x24=5040

மனைவி 2 பேருக்கு 3x210 = 630 ஒரு மனைவிக்கு 315

மகள் 10 பேருக்கு 16x210 = 3360 ஒரு மகளுக்கு 336

பாட்டி 6 பேருக்கு 4x210 = 840 ஒரு பாட்டிக்கு 140

தந்தையின்சகோதரர்1x210=210 ஒருவருக்கு 30

------

5040

ஆக இதுபோன்ற கணக்குகளுக்கும் பின்னக் கூட்டல், பெருக்கல் போன்ற பின்னக் கணக்குகளையும், அதமப்பொது மடங்கு, உத்தமப் பொதுக்காரணி, வகுத்திகள், காரணிகள் போன்ற பள்ளிக் கணக்குகளையும் படிப்பது அவசியம்.

இதுபற்றி விளக்க வேண்டுமென்பதற்காகவே இப்பகுதியில் சில கணக்குளை இடம் பெறச் செய்தோம். எனவே பள்ளிக் கணக்குகளை சற்று பாருங்கள். அவற்றை விளக்க இந்த நூல் இடம் போதாது.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) தஸ்ஹீஹ் என்றால் என்ன?

(2) ஒன்று போன்ற எண்கள், மாறுபட்ட எண்கள் ஒன்றையொன்று மீதமில்லாமல் வகுக்கும் எண்கள் பற்றி விளக்கம் தருக.

(3) கீழ்வரும் வாரிசுகளின் சொத்துப் பிரச்சனையைத் தீர்த்து வை.

A. மனைவியர் 2 பேர் - சிறிய or பெரய தந்தை 3 பேர்

B. சகோதரிகள் 2 பேர் - தந்தை வழிச் சகோதரன்

C. மனைவி 3 பேர் - சிறிய தந்தை 4 பேர்

D. மகள் 3 பேர் - பாட்டிகள் 3 - சிறிய தந்தை

E. 2 மனைவி - 4 சிறிய தந்தை

F. மனைவியர் 3 - பாட்டிகள் 4 - தந்தைவழிச் சகோதரிகள் 6 - சகோதரி 1 - தாய் வழிச் சகோதரர்கள் 8 பேர்.

G. பாட்டிகள் 3 - தந்தைவழிச் சகோதரிகள் 5 - தந்தைவழிச் சகோதரரின் மகன்கள் 4

H. பெண்மக்கள் 6 - தாய் - பாட்டனார்

# 30. தவுல் அர்ஹாம்

## தூரத்து உறவினர்கள் (Distant kindred)

தூரத்து உறவினர்கள் என்றால் உண்மையில் அவர்கள் இறந்தவருடைய தூரத்து உறவினர் அல்லர். மாறாக பங்குதாரர் களாகவோ, அஸபா (எச்சதாரர்)களாகவோ பங்கு பெறாது தூரத்தில் நிற்பதால் தூரத்து உறவினர்கள் என்று கூறுகிறோம்.

தவுல்அர்ஹாம் என்பது குர்ஆனில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தையோ அஸபா என்ற முறையில் மீதியுள்ள பாகத்தையோ பெறாத உறவினர்களைக் குறிக்கும். இவர்கள் பெண் வழி உறவினர்களாவர். தாயின் சகோதரன், தாயின் சகோதரி, தாய் வழிப் பாட்டனார், மகளின் பிள்ளைகள், சகோதரியின் பிள்ளைகள், சகோதரனின் மகள், தந்தையுடைய சகோதரரின் மகள், தந்தையின் சகோதரி, தாயின் தந்தையுடைய சகோதரர், தாய் வழிச் சகோதரனின் மகன் ஆகிய பத்து வகை உறவினர்கள் தவுல் அர்ஹாம் என்னும் இரத்த பந்துக்களில் அடங்குவர். இவர்களுக்குச் சொத்தில் பங்கு உண்டா இல்லையா என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு.

குர்ஆனில் கூறப்பட்டுள்ள பாகங்களைப் பெறும் உறவினர் களோ (அஸ்ஹாபுல் ஃபராயிள்) மீதியை அடையும் தந்தைவழி உறவினர்களோ (அஸபா) இல்லாதபோது இவர்களுக்குச் சொத்துரிமை உண்டு என்பது சிலரது வாதமாகும்.

பங்குதாரரில் கணவனோ, மனைவியோ மட்டும் இருந்து மற்ற 9 ஆண் வாரிசுகளும், 7 பெண் வாரிசுகளும் இல்லாது போனால் இவர்கள் பங்கு பெறுவார்கள். கணவன், மனைவி தவிர மேற்கண்ட வாரிசுகள் வந்தால் இந்த தவுல் அர்ஹாம் பிரிவினரை சொத்து பெறாது தள்ளிவிடுவர்.

*அல்லாஹ்வின் வேதப்படி, இரத்தபந்தமுடையவர்கள் தாம் ஒருவர் மற்றொருவருக்கு உதவுவதில் அதிக உரிமையுடையவர்களாவர். திண்ணமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.*

**(திருக்குர்ஆன் 8:75)**

*அல்லாஹ்வின் வேதப்படி - ஏனைய பொது முஸ்லிம் களை விடவும், ஹிஜ்ரத் செய்து வந்தவர்களை விடவும்*

இரத்தபந்த உறவினர்கள்தாம் ஒருவர் மற்றவருக்கு உதவி புரிவதில் அதிக உரிமையுடையவர்கள் ஆவர். ஆயினும், உங்கள் நண்பர்களுக்கு நீங்கள் ஏதேனும் நன்மை (செய்ய விரும்பினால்) செய்துகொள்ளலாம். இந்த விதி இறைவேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

***(திருக்குர்ஆன் 33:6)***

இந்த வசனங்களையும் சில நபி மொழிகளையும் ஆதாரமாகக் காட்டி இவர்களுக்கு சொத்துரிமை உண்டு என்பது சிலரின் வாதமாகும்.

தவுல் அர்ஹாம் எனும் இரத்தப் பந்துக்களான தூரத்து உறவினர்களை 4 வகையினராகப் பிரிக்கலாம்.

## முதல் வகையினர் வழித் தோன்றல்கள் (Descendants)

மகளின் குழந்தைகளும் அவர்களின் வழித்தோன்றல்களும்

மகனின் மகளின் குழந்தைகளும் அவர்களின் வழித் தோன்றல் களும்.

## 2வது வகையினர் மூதாதையர் (Ascendants)

பாகம் பெறாத அஸபாவுமில்லாத தாயின் தந்தை, தந்தை வழி மூதாதையர்களில் ஜத்தஃபாஸித், ஜத்ததஃபாஸிதா (ஜத்தஃபாஸித், ஜத்ததஃபாஸிதா முன்னர் விளக்கப்பட்டுள்ளது)

## 3வது வகையினர் கிளைவழியினர் (Descendants of Father)

மரணமானவரின் சகோதரனின் மகள் அவளின் சந்ததிகள்

சகோதரிகளின் மக்கள் அவர்களின் சந்ததிகள்.

அதுபோன்று தந்தைவழி or தாய் வழிச் சகோதரனின் or சகோதரியின் குழந்தைகள்.

## 4வது வகையினர் தந்தையின் கிளை வழியினர் (Descendants of Grand parents)

மரணமானவரின் தாய், தந்தை வழிப் பாட்டனாரின் சந்ததியும்

தாய் தந்தை வழிப் பாட்டியின் சந்ததிகளிலும் உள்ள பாகம் பெறாதவர்களும் அஸபாவுமில்லாதவர்களும்,

உதாரணமாக மாமா, மாமி, தாயின் சகோதர சகோதரிகள் அவர்களின் சந்ததிகள்

இவர்களில் முந்திய வகுப்பினர் பிந்திய வகுப்பினரை சொத்துப் பெறாமல் தள்ளிவிடுவர். அதாவது முதல் வகுப்பினர் இருக்கும் போது 2வது வகுப்பினருக்கோ, 2வது வகுப்பினர் இருக்கும்போது 3வது வகுப்பினருக்கோ பாகம் கிடைக்காது.

எ.காட்டு-1

| மனைவி | மகளின் மகன் | மகளின் மகள் |
|---|---|---|
| 1/4 | 2 | 1 |

சொத்தை 4 பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கும் மீதியுள்ள 3 பங்கை ஆணுக்கு 2பங்கு பெண்ணுக்கு ஒரு பங்கு என்ற விகிதத்தில் மகளின் மகனுக்கு 2 பங்கும் மகளின் மகளுக்கு ஒரு பங்கும் தரப்பட வேண்டும்.

மகளின் மக்கள் சொத்துரிமை பெற மாட்டார்கள். வேறு வாரிசுகள் யாரும் இல்லாததால் அவர்களுக்கு சொத்துரிமை கிடைத்துள்ளது.

எ.காட்டு-2

| தாயின் தந்தை | தாயின் தாயின் தந்தை |
|---|---|

இந்நிலையில் சொத்து முழுவதும் தாயின் தந்தைக்கே சேரும். அவர் தான் இறந்தவருக்கு நெருக்கமானவர்.

இவர் சொத்துப் பெற முடியாத ஜத்த ஃபாஸிதாவாக இருப்பினும் வேறு வாரிசுகள் யாரும் இல்லாததால் சொத்து பெறுகிறார்.

எ.காட்டு-3

| தாயின் சகோதரனின் மகள் | தாய் தந்தைவழிச் சகோதரனின் மகளின் மகன் |
|---|---|

சொத்து முழுவதும் தாயின் சகோதரனின் மகளுக்கே கிடைக்கும். அவள் தான் இறந்தவருக்கு நெருக்கமானவள்.

எ.காட்டு-4

| <u>மாமா</u> | <u>சின்னம்மா</u> |
|---|---|
| 2 | 1 |

*இருவரும் சமமான தரத்தில் இருப்பதால் ஆணுக்கு 2 பங்கு பெண்ணுக்கு ஒரு பங்கு என்ற விகிதத்தில் சொத்தை 3 பங்கு வைத்து மாமாவுக்கு 2 பங்கும் சின்னம்மாவுக்கு ஒரு பங்கும் கொடுக்கவேண்டும்.*

எ.காட்டு-5

| <u>மாமா</u> | <u>சிறிய or பெரிய தந்தையின் மகள்</u> |
|---|---|

*சொத்து மாமாவுக்கே கிடைக்கும். ஏனெனில் அவர்தான் சிறிய தந்தையின் மகளை விட முந்திய பிரிவில் உள்ளவர்.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) தவுல் அர்ஹாம் என்றால் யார்?*

*(2) தவுல் அர்ஹாம்களை எத்தனை வகையினராகப் பிரிக்கலாம்?*

# 31. ஒருவருக்கு 2 வழிகளில் சொத்து கிடைக்குமா?

ஒருவருக்கு 2 வழிகளில் சொத்து கிடைக்க வாய்ப்பு உள்ளது.

(இறந்து போன ஒரு பெண்ணுக்குத்) தந்தையின் சகோதரர் புதல்வர்கள் இருவர் உள்ளனர். அவர்களில் ஒருவர் (அவளுடைய) தாய் வழிச் சகோதரர் ஆவார். மற்றொருவர் (அவளுடைய) கணவர் ஆவார். (இவர்களிடையே அவள் விட்டுச் சென்ற சொத்தை எவ்வாறு பங்கிட வேண்டும்?)

ஒரு பெண் இறந்தபோது அவளுக்குக் கணவனும் தாய் வழிச் சகோதரனும் இருந்தால் அவர்களிடையே அவளுடைய சொத்தை எவ்விதம் பங்கிட வேண்டும்? அவர்கள் இருவரும் அந்தப் பெண்ணுடைய தந்தையின் சகோதரர் புதல்வர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் விவரமாவது : ஸைத் என்பவர் அஸ்மா என்ற பெண்ணை மணமுடித்தார். அவர்களுக்கு காலித் என்ற மகன் பிறந்தான். பின்னர் அவர் சுமய்யா என்ற பெண்ணை இரண்டாவதாக மணமுடித்ததில் ஃபாரூக் என்ற பையன் பிறந்தான். பின்னர் அவர் சுமய்யாவை விவாகரத்துச் செய்து விடவே, அவருடைய சகோதரர் அம்ர் என்பார் சுமய்யாவை மறு மணம் செய்துகொண்டார். அம்ர்-சுமய்யா தம்பதியருக்கு ஃபாத்திமா எனும் மகள் பிறந்தாள். ஃபாத்திமாவை ஸைத்-அஸ்மா தம்பதியருக்குப் பிறந்த காலித் மணமுடித்துக் கொண்டான். பின்னர் ஃபாத்திமா இறந்துவிட்டாள். அவளுடைய பெற்றோர் (அம்ர்-சுமய்யா) முன்பே இறந்துவிட்டனர். இந்நிலையில் ஃபாத்திமாவின் சொத்துக்களுக்கு வாரிசுகளாக காலிதும் ஃபாரூக்கும் மட்டுமே உள்ளனர். இவர்களில் காலித் ஃபாத்திமாவின் கணவன்ஆவான். ஃபாரூக் ஃபாத்திமாவின் தாய் (சுமய்யா) வழிச் சகோதரன் ஆவான். அதே நேரத்தில் அவர்களிருவரும் ஃபாத்திமாவின் தந்தை அம்ரின் சகோதரரான ஸைதுடைய புதல்வர்களாவர். இவர்களிடையே ஃபாத்திமாவின் சொத்தை எவ்வாறு பங்கிட வேண்டும் என்பதே கேள்வி. (ஃபத்ஹுல் பாரீ)

'கணவருக்கு (அவளுடைய சொத்தில்) பாதியும், தாய் வழிச் சகோதரருக்கு ஆறில் ஒரு பாகமும் கிடைக்கும். எஞ்சியிருப்பது

அவர்கள் இருவரிடையே சரி பாதியாகப் பங்கிடப்படும் என்று அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.

மேற்கண்ட வினாவுக்கு விடைதான் இது. மொத்தச் சொத்தை ஆறு பாகங்களாகப் பங்கிட்டு, பாதியை (3 பாகம்) கணவன் காலிதுக்கும், ஆறில் ஒரு பாகத்தை (ஒரு பாகம்) தாய் வழிச் சகோதரனான ஃபாரூக்கிற்கும் முதலில் அளித்திட வேண்டும். மீதியை (2 பாகம்) இருவருக்கிடையே சமமாகப் பங்கிட்டுத் தலா ஒரு பாகத்தை வழங்கிட வேண்டும். இறுதியில் காலிதுக்கு நான்கு (3+1) பாகங்களும் ஃபாரூக்கிற்கு இரண்டு (1+1) பாகங்களும் கிடைக்கும்.

எ.காட்டு-1

**6 பாகம்**

| காலித் | ஃபாரூக் |
|---|---|
| [கணவன்] | [தா.வ.ச] |
| 3+1=4 | 1+1=2 |

எ.காட்டு-2

| கணவன் மற்றும் சிறிய தந்தையின் மகன் | தாய்வழிச் சகோதரர் | பாட்டி |
|---|---|---|
| 1/2 | 1/6 | 1/6 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து 3 பங்கை கணவனுக்கும் தாய்வழிச் சகோதரருக்கு ஒரு பங்கும், பாட்டிக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும். மீதியுள்ள ஒரு பங்கு அஸபா என்ற முறையில் கணவனுக்கே கிடைக்கும். ஏனெனில் அவர் மற்றொரு வகையில் அப்பெண்ணின் சிறிய தந்தையின் மகன் ஆக இருக்கிறார். எனவே அவருக்கு (3+1)=4 பங்கும், தாய்வழிச் சகோதரருக்கு ஒரு பங்கும் பாட்டிக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

எ.காட்டு-3

| மனைவி | மகனின் மகனின் மகள் | தாய்வழிச் சகோதரர் மற்றும் சிறிய தந்தையின் மகன் |
|---|---|---|
| 1/8 | 1/2 | அஸபா+சொத்து பெறத் தடை |
| [1] | [4] | 3+ ஏதும் இல்லை. |

இந்நிலையில் சொத்தை 8 பங்கு வைத்து ஒரு பங்கு மனைவிக்கும், 4 பங்கு மகனின் மகனின் மகளுக்கும் மீதியுள்ள (3) பங்கு தாய்வழிச் சகோதரருக்கும் கிடைக்கும். மீதி ஏதும் இல்லை. மேலும் மகனின் மகனின் மகள் இருப்பதால் சொத்து கிடைக்காமல் தடுத்து விடுவதால் 3 பங்கு மட்டும் கிடைக்கிறது.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) ஒருவருக்கு இருவழிகளில் சொத்து கிடைக்க வாய்ப்பு உள்ளதா? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

# 32. தனக்குக் கிடைக்கும் பங்கை வாரிசுதாரர் விட்டுக் கொடுத்தல்

*வாரிசுகளில் ஒருவர் தனக்குக் கிடைக்கும் பங்கை வேண்டாம் என்றோ, அல்லது தனக்குக் கிடைக்க வேண்டிய வீட்டிற்குப் பகரமாக, அல்லது, கணவன், தனது மனைவிக்குத் தரவேண்டிய மஹர் தொகைக்குப் பகரமாக, பாகம் வேண்டாம் என்று நீங்கிக் கொண்டாலோ அந்நிலையில் வேண்டாம் என்று கூறியவனை யும் சேர்த்தே பங்கு வைக்க வேண்டும்.*

*இறந்தவரின் மொத்தப் பங்குத் தொகை கணக்கிட்டு வாரிசுகளுக்கு எவ்வளவு கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொண்ட பின்னர் பங்கு வேண்டாம் என்றவரின் பங்கை இறந்தவரின் மொத்தப் பங்கிலிருந்து கழித்து விட்டு மீதியை மொத்தப் பங்காகக் கருதி மற்ற வாரிசுக்காரர்களுக்கு பங்கிட்டுத் தர வேண்டும்.*

*இங்கே மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் யார் பாகம் வேண்டாம் என்று விலகிவிடு கிறாரோ அவரை இறந்தவரின் மொத்தப் பங்குத் தொகையை கணக்கிடு முன் நீக்கி விடக் கூடாது.*

*உதாரணமாக கணவன், தாய், தந்தையின் சகோதரர் ஆகிய மூன்று வாரிசுதாரர்கள் இருக்க, ஒரு பெண் மரணமடைந்தாள். கணவன் மஹர் கொடுக்காததால் தனது பங்கை விட்டுக் கொடுத்தார். அந்நிலையில் சொத்தை எப்படிப் பங்கு வைக்க வேண்டும்? இதோ விடை*

**எ.காட்டு-1**

| கணவன் | தாய் | தந்தையின் சகோதரர் |
|---|---|---|
| 1/2 | 1/3 | அஸபா |

**சொத்து வேண்டாம் என**

**விலகிக் கொண்டவர்**

*இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கு, தாய்க்கு 2 பங்கு, மீதி ஒரு பங்கு தந்தையின் சகோதரருக்கு என்பதை நாம் அறிவோம்.*

*மொத்தப் பங்குகள் 6*

கணவனின் பங்குகள் 3

தற்போது அடிப்படைப் பங்கு 6 - 3 == 3

சொத்தை 3 பங்கு வைத்து 2 பங்கு தாய்க்கும், தந்தையின் சகோதரருக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

சொத்து வேண்டாம் என்ற கணவனை ஆரம்பத்திலேயே நீக்கி விட்டால் தாய்க்கு 1/3 பாகமும் மீதி 2 பாகம் தந்தையின் சகோதரருக்குக் கிடைத்து விடும். ஆனால் இது தவறாகும். உண்மையில் தாய்க்கு 2 பங்கும், தந்தையின் சகோதரருக்கு ஒரு பங்கும் தான் கிடைக்க வேண்டும்.

எ.காட்டு-2

| கணவன் | தாய் | தந்தையின் சகோதரர் |
|---|---|---|
| 1/2 | 1/3 | அஸபா<br>சொத்து வேண்டாம் என்று<br>விலகி விட்டார். |

6 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கும் தாய்க்கு 2 பங்கும், தந்தையின் சகோதரருக்கு ஒரு பங்கும் உண்டு. த.சகோதரர் சொத்து வேண்டாம் என்றதால் சொத்தை 5 பங்கு வைத்து கணவனுக்கு 3பங்கும் தாய்க்கு 2 பங்கும் கொடுக்க வேண்டும்.

எ.காட்டு-3 24 - 12 = 12

| மனைவி | மகள் | தாய் | தந்தை |
|---|---|---|---|
| 1/8 | 1/2<br>பங்கு வேண்டாம்<br>என்று விலகிவிட்டார் | 1/6 | 1/6 + அஸபா |

இந்நிலையில் சொத்தை 24 பங்கு வைக்க வேண்டும். மனைவிக்கு 3, மகளுக்கு 12 பங்கு, தாய்க்கு 4 பங்கு, தந்தைக்கு 4 பங்கு, மீதி ஒரு பங்கு தந்தைக்கு அஸபா என்ற வகையில் கிடைக்கும்

மகள் சொத்து வேண்டாம் என்று சொன்னதால் அவளது பங்கை நீக்கிவிட்டு 12 பங்கு வைத்து

மனைவிக்கு 3 பங்கு

தாய்க்கு 4 பங்கு — ஆக 12 பங்குகள்

தந்தைக்கு 4++1 = 5 பங்கு

**குறிப்பு:-**

*வாரிசுரிமை பெறுபவர்களில் ஒருவர் தனக்குப் பங்கு வேண்டாம் என்று விலகும்போது ஓரளவு பணம் ஏதும் வாங்கிக் கொண்டு வெளியேறினாலும் கூட அவரும் பங்கில் இருப்பது போன்றே கணக்கிட்டுப் பின்னர் அவரது பாகத்தை மொத்தப் பங்கிலிருந்து கழித்து விட்டு மற்றவர்களின் பங்குப் படி சொத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.*

| கணவன் | மகள் | தாயின்தாய் | தந்தைவழிச் சகோதரன் |
|---|---|---|---|
| 1/2 | 1/2 | 1/6 | அஸபா |

**சொத்து வேண்டாம்**

*12 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கு, மகளுக்கு 6 பங்கு, தாயின் தாய்க்கு 2 பங்கு மீதியுள்ள ஒரு பங்கு தந்தைவழிச் சகோதரனுக்குக் கிடைக்கும்.*

*கணவன் சொத்து வேண்டாம் என்றதால் அவரது பங்கும் அஸபா என்ற வகையில் தந்தை வழிச் சகோதரனுக்குக் கிடைக் கும். தந்தை வழிச் சகோதரனுக்கு 1++3==4 பங்கு கிடைக்கும்.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) ஒருவர் தனக்கு சொத்து வேண்டாம் என விலகிக் கொண்டால் சொத்தை எப்படிப் பங்கிட வேண்டும். உதாரணங்களுடன் விளக்கு.*

# 33. சொத்துகளைப் பங்கிடும் முறை

எ.காட்டு-1

ஒரு மனிதர் மனைவி, மகள், 3 சகோதரர்களை விட்டு இறந்து விடுகிறார். அவர் விட்டுச் சென்ற சொத்து 24000 ரூபாய் என்றால் ஒவ்வொரு வாரிசுகளுக்கும் எவ்வளவு கிடைக்கும்?

| | | | |
|---|---|---|---|
| மனைவி | 1/8 | (1) | 3000 |
| மகள் | 1/2 | (4) | 12000 |
| சகோதரர் 3 பேர் அஸபா1+1+1= | | (3) | 9000 |
| | மொத்தம் | | 24000 |

சொத்துக்களை 8 பங்கு வைத்து ஒரு பங்கு மனைவிக்கும், 4 பங்கு மகளுக்கும், மீதியுள்ள 3 பங்கு சகோதரர்கள் மூவருக்கும் ஆணுக்கு ஒரு பங்கு வீதம் கொடுக்க வேண்டும்.

**விட்டுச் சென்ற சொத்து 24,000 ரூபாய்**

**24,000 ஐயும் 8 பங்கு வைக்க வேண்டும். 24,000/8 = 3000**

**ஒரு பங்கு 3000, எனவே மனைவிக்கு ரூ.3000,**

**மகளுக்கு 4 பங்கு 4x3000 = 12,000**

**சகோதரர் 3 பேருக்கு 3000+3000+3000**

**ஆளுக்கு 3000 வீதம் 9,000 கொடுக்க வேண்டும்.**

எ.காட்டு-2

ஒரு பெண் இறக்கும் போது, கணவன், தாய், மகள், தந்தை இவர்கள் இருக்க இறந்து விடுகிறார். 65,000 ரூபாய் சொத்துக்களையும் விட்டு இறக்கிறார். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கிடைக்கும்?

சொத்தை 12 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கும், மகளுக்கு 6 பங்கும் தாய் தந்தைக்கு ஒவ்வொருவருக்கும் 2 பங்கும் கொடுத்தால் 13 பங்கு ((அவுல் ) = ஏற்றவிதிக் கொள்கை) ஆகிவிடுகிறது.

விட்டுச் சென்ற சொத்து 65 ஆயிரத்தை அடிப்படைப் பங்கான 13ஆல் வகுத்தால் ஒரு பங்கு எவ்வளவு என்பது தெரியும்.

**65000/13 = ரூ. 5000 ஒரு பங்கு**

| | | | |
|---|---|---|---|
| கணவன் | 1/4 | (3)x5000 = | 15,000 |
| மகள் | 1/2 | (6)x5000 = | 30,000 |

| | | | |
|---|---|---|---|
| தாய் | 1/6 | (2)x5000 = | 10,000 |
| தந்தை | 1/6 | (2)x5000 = | 10,000 |
| | | மொத்தம் | 65,000 |

எ_காட்டு_3 12 _ 15 X 3 = 45

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கணவன் | 1/4 | (3)x3=9x1500 | = | 13,500 | |
| மகள் 3 பேர் | 2/3 | (8)x3=24x1500 | = | 36,000 | ஒருவருக்கு 12,000 வீதம் |
| தாய் | 1/6 | (2)x3=6x1500 | = | 9,000 | |
| பாட்டன் | 1/6 | (2)x3=6x1500 | = | 9,000 | |
| | | மொத்தம் | = | 67,500 | |

*சொத்தை 12 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கு, மகள் 3 பேருக்கும் 8 பங்கு, தாய்க்கு 2 பங்கு, பாட்டனாருக்கு 2 பங்கு ஆக 15 பங்கு வைக்க வேண்டிய நிலை*

*விட்டுச் சென்ற சொத்தின் மதிப்பு 67,500 ரூபாய்*

*மகள் 3 பேருக்கு 8 பங்கை பிரித்துக் கொடுத்தால் பின்னமாக வரும். எனவே அடிப்படைப் பங்கு 15ஐயும் மற்றெல்லாப் பங்குகளையும் 3ஆல் பெருக்க 15x3==45 அடிப்படைப் பங்கு.*

*சொத்தின் மதிப்பை 45ஆல் வகுத்தால் ஒரு பங்கு எவ்வளவு என்பது தெரியும்.*

*67500%45=1500 ஒரு பங்கு*

*கணவனுக்கு 9 பங்கு 13,500*

*மகள் ஒவ்வொருவருக்கும் 12,000 வீதம் 3 பேருக்கு 36,000*

*தாய்க்கு 9,000*

*பாட்டனாருக்கு 9,000*

*ஆக 67,500 ரூபாய் சரி.*

**குறிப்பு:_**

*சொத்துக்களைப் பங்கிடும் முறைக்கும் பின்னக்கணக்கு, பெருக்கல், வகுத்தல் போன்ற சில அடிப்படைக் கணக்குகளைத் தெரிந்திருக்க வேண்டும்.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) ஒரு பெண் 8 லட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்களையும் தாய்- கணவன் - சகோதரி ஆகியோரையும் விட்டு இறந்து விடுகிறாள். அவளது சொத்துக்களை எப்படிப் பிரித்துக் கொள்ள வேண்டும்?*

*(2) ஒரு பெண் கணவன் - தாய் - சகோதரிகள் இருவரையும் வாரிசாக விட்டு இறந்து விடுகிறாள். அவளது சொத்து மதிப்பு 16 லட்சம்.அவளது வாரிசுகள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கிடைக்கும்?*

*(3) ஒருவர் தாய் - சகோதரி - தந்தை வழிச் சகோதரி - தந்தைவழிச் சகோதரன் ஆகிய வாரிசுகளையும் 27 ஆயிரம் பெறுமதியான சொத்துக்களையும் விட்டு இறந்து விடுகிறார். அவரது வாரிசுகள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கிடைக்கும்?*

*(4) ஒருவர் 36 லட்ச ரூபாய் பெறுமதியான சொத்துக்களை விட்டு இறந்து விடுகிறார். அவரது வாரிசுகள் மனைவி - பாட்டி - தந்தை வழிச் சகோதரி - தந்தை வழிச் சகோதரன். இவர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கிடைக்கும்?*

*(5) ஒருவர் 7 லட்சம் பெறுமதியான வீட்டையும் தாய் - சகோதரி - தந்தை வழிச் சகோதரி - தாய் வழிச் சகோதரன் இருவர் ஆகியோரையும் விட்டு மரணமடைந்தார். அவரது வாரிசுகள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கிடைக்கும்?*

# 34. இறந்தவருக்குக் கடன் இருந்தால்?

இறந்தவருக்குக் கடன் இருந்தால், அவர் சொத்தையும் விட்டுச் சென்றிருந்தால் முதலில் கடன்காரர்களுக்கு அவரது சொத்திலிருந்து கொடுக்கப்படும். மீதி ஏதும் இல்லாவிட்டால் சொத்துரிமை பெறும் உறவினர்கள் இருந்தால் அவர்களுக்கு ஏதும் கிடைக்காது. கடன்காரர்களுக்குக் கொடுத்தது போக மீதியிருந்தால் அதை அவரின் வாரிசுகள் பங்கிட்டுக் கொள்வர். இவற்றுக்கான எடுத்துகாட்டுகள் வருமாறு.

**எ.காட்டு-1**

இறந்தவர் விட்டுச் சென்றது ஒரு லட்சம் ரூபாய்.

கடன் ஒரு லட்சம் ரூபாய் என்றால் அனைத்தையும் கடன் காரர்களுக்கே கொடுக்க வேண்டும்.

**கடன்**

| | |
|---|---|
| சுமையாவுக்கு | 25,000 |
| தஸ்லீமாவுக்கு | 12,000 |
| நூருத்தீனுக்கு | 18,000 |
| அன்வருக்கு | 20,000 |
| அனீஸாவுக்கு | 20,000 |
| கைருன்னிஸாவுக்கு | 5,000 |
| மொத்தம் | 1,00,000 |

ஆக இறந்தவர் ஒரு லட்சம் ரூபாய் விட்டுச் சென்றாலும் கடன் ஒரு லட்சம் உள்ளதால் அதைக் கொடுத்து விட்டோம். மீதி ஏதும் இல்லை. வாரிசுகளுக்கு ஏதும் கிடைக்காது.

**எ.காட்டு-2**

உஸ்மான் விட்டுச் சென்ற சொத்து ரூபாய் நாற்பது ஆயிரம்.

**கடன்**

| | |
|---|---|
| யாஸிருக்கு | 2,000 |
| அஸ்மாவுக்கு | 4,000 |

புஷ்ராவுக்கு 4,000

--------

மொத்தக் கடன் 10,000 மீதி 30,000

உஸ்மான் விட்டுச் சென்ற வாரிசுதாரர்கள் பின்வருமாறு.

| மனைவி 3 | மகன்கள் 2 | தாய் | தந்தை |
|---|---|---|---|
| 1/8 | அஸபா | 1/6 | 1/6 |
| [3] | [13] | [4] | [4] |

சொத்தை 24 பங்கு வைத்து மனைவிக்கு 3 பங்கும், தாய்க்கு 4 பங்கும் தந்தைக்கு 4 பங்கும் கொடுத்தது போக மகன்கள் 2 பேரும் அஸபா என்ற வகையில் 13 பங்கைப் பெறுவார்கள். தற்போது கடன்போக இருப்பது 30,000 ரூபாய்.

30,000 ரூபாயை 24ஆல் வகுத்தால் ஒரு பங்கு 1250 ரூபாய் ஆகும்.

ஒரு மனைவிக்கு 1250 ரூ. 3 மனைவிகளுக்கு ரூ 3750

தாய்க்கு 4 பங்கு 1250x4 = ரூ. 5000

தந்தைக்கு 4 பங்கு 1250x4== = ரூ. 5000

மகன்கள் 2 பேருக்கும் 13 பங்கு

(ஒருவருக்கு 8125 ரூபாய்) 1250x13== = 16250

----------

ஆக மொத்தம் 30,000

மேலே இரண்டு எ.காட்டுகளில் ஒன்றில் கடனும் விட்டுச் சென்ற சொத்தும் சரியாக இருந்ததால் வாரிசுகளுக்கு ஏதும் கிடைக்காது என்றும் மற்றொன்றில் கடனும் கொடுத்து மீதி இருந்ததால் மீதியை வாரிசுகளுக்கு அவர்களது விகிதாச்சாரப்படி பங்கிட்டு கொடுக்க வேண்டுமென்று அறிந்தோம்.

சொத்து குறைவாகவும் கடன் அதிகமாகவும் இருந்தால் கடன்காரர்களின் விகிதாச்சாரப்படி சொத்தை கடன்காரர்களுக்கு பங்கிட வேண்டும். வாரிசுகளுக்கு ஏதும் கிடைக்காது.

அதற்கான எடுத்துக்காட்டுகள் வருமாறு

**எ.காட்டு-3**

ஒருவர் யூசுப் இடம் 20,000 ரூபாயும், அய்யூபு இடம் 16,000

ரூபாயும், ஸித்தீக் இடம் 12,000 ரூபாயும் கடன் வாங்கியிருந்தார். ஆனால் அவரது சொத்தின் மதிப்பு 18 ஆயிரம் தான். தற்போது அவரது வாரிசுகளும் உள்ள நிலையில் அவரது சொத்தை எப்படிப் பிரித்துத்தர வேண்டும்?

**மொத்தக்கடன் 20ஆயிரம்+16+12 = 48 ஆயிரம்**

**விட்டுச் சென்றது 18 ஆயிரம்**

**18,000/48,000 = 3/8**

**யூசுப்புக்கு கொடுக்க முடிந்தது 20,000 x 3/8 = 60,000/8 = 7500**

**அய்யூபுக்கு கொடுக்க முடிந்தது 16,000 x 3/8 = 48,000/8 = 6000**

**ஸித்தீக்குக்குகொடுக்கமுடிந்தது12,000 x 3/8 = 36,000/8 = 4500**

----------

**ஆகமொத்தம் ரூ. 18000**

ஆக அவர்களது கடனின் விகிதாச்சாரப்படி இருக்கும் சொத்தை எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்து முடித்துவிட்டோம். இனி சொத்து ஏதும் இல்லாததால் வாரிசுகளுக்கு ஏதும் இல்லை.

**குறிப்பு:-**

இந்தக் கணக்கில் கடனாளிகளை, வாரிசுகள் போலக் கருதி அவர்களது கடனுக்கு ஏற்ப இருக்கும் சொத்தைப் பிரித்துக் கொடுத்து விட்டோம்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) ஒருவர் 12 லட்சம் பெறுமதிவாய்ந்த தோட்டத்தையும் மனைவி 3 பேர் பாட்டி 2 பேர் - சிறிய தந்தை - சகோதரி ஆகியோரையும் விட்டு இறந்தார். கடன் 3 லட்சம். இவர்களுக்கு அவரது சொத்திலிருந்து என்ன பங்கு கிடைக்கும்?

(2) <u>வாரிசுகள்:-</u> தாய் - தந்தைவழிச் சகோதரி - தாய் வழிச் சகோதரர்கள் இருவர். சொத்து மதிப்பு 72 ஆயிரம். கடன் 12 ஆயிரம்.

(3) மகள் - மகனின் மகள் - தந்தை வழிச் சகோதரர்கள் இருவர். சொத்து 36 ஆயிரம். கடன் 12 ஆயிரம் ரூபாய்.

# 35. பலதலைமுறைகளாகப் பாகம் பிரிக்கப்படாமல் இருந்தால்?

இஸ்லாமிய ஷரீஅத் சட்டப்படி ஒருவர் மரணமானவுடன் அவரது சொத்து வாரிசுகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படாமல் இருந்தால் ... இரண்டு தலைமுறை மூன்று தலைமுறைகளாக சொத்து பிரிக்கப்படாமல் இருந்தால் எவ்வாறு சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று பார்ப்போம். இன்ஷா அல்லாஹ் ....

இவ்வாறு பல தலைமுறைகளாகப் பாகம் பிரிக்கப்படாமல் இருந்து பின்னர் பிரித்துக் கொடுக்கப்படுவதற்கு அரபியில் முனாஸகா என்று கூறப்படும்.

**எ.காட்டு-1**

ஒரு மனிதர் மனைவி, மகள், சகோதரர் இருக்க இறந்து விடுகிறார். சொத்து பிரிக்கப்படுவதற்கு முன்பு மகளும் இறந்து விடுகிறாள். அப்போது அவளது பாட்டனும், மகனும் வாரிசாக உள்ளனர். இப்போது சொத்தை எவ்வாறு பங்கு வைப்பது?

**இறந்தவர்** 8X3=24

| மனைவி | ~~மகள்~~ | சகோதரன் |
|---|---|---|
| 1/8 | ~~1/2~~ | அஸபா |
| [1] | ~~[4]~~ | [3] |

இந்நிலையில் சொத்தை 8 பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கும் மகளுக்கு 4 பங்கும் கொடுத்து, மீதியுள்ள 3 பங்கு சகோதரனுக்கு கொடுக்க வேண்டும்.

**இறந்தவர் மகள். மகளுடைய பங்கு4** 4X3=12

| பாட்டன் | மகன் |
|---|---|
| 1/6 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும். மகளுடைய பங்கு 4, 4,6க்கு மத்தியில் 2இல் தவாஃபுக் உள்ளது. இதை கணக்குப் பாடங்களில் வகுத்தி அல்லது காரணி என்று கூறுவர். எனவே 6ன் பகுதி 3ஆல் அடிப்படைப் பங்குகளை

பெருக்க வேண்டும். அவ்வாறு பெருக்கும் போது மனைவிக்கு 3 பங்குகளும், மகளுக்கு 12 பங்குகளும், சகோதரனுக்கு 9 பங்குகளும் கிடைக்கும். தற்போது மகளின் பங்கு 12இல் பாட்டனாருக்கு 2 பங்குகள், மகனுக்கு மீதியுள்ள 10 பங்குகள் கிடைக்கும்.

தற்போது உயிரோடுள்ள மனைவிக்கு 3 பங்குகள், சகோதரனுக்கு 12 பங்குகளும், பாட்டனாருக்கு 2 பங்குகளும், இறந்த மகளின் மகனுக்கு 10 பங்குகளும் கிடைக்கும்.

எ.காட்டு-2

தஸ்லீமா தனது கணவனையும், மகன் அன்வரையும் விட்டு இறந்து விடுகிறாள். 19,200 ரூபாய் ரொக்கம் உள்ளது. பின்னர் அன்வர் தனது மகன் நூர், மகள் பாத்திமா ஆகியோரை விட்டு இறந்து விடுகிறான். பின்னர் அவரது மகள் பாத்திமா, கணவன் ஸலீம், மகன் பைஸல் ஆகியோரை விட்டு இறந்து விடுகிறாள். தற்போது உயிரோடுள்ள ஒவ்வொருவரின் பங்கு என்ன?

① 4X4=16 பங்கு இறந்தவர் தஸ்லீமா மனைவி 4 பங்கு

| கணவன் | அன்வர் [மகன்] |
|---|---|
| 1/4 | அஸபா |
|  | [3] |

சொத்தை 4 பங்கு வைத்து ஒரு பங்கு கணவனுக்கும் 3 பங்கு மகன் அன்வருக்கும் உரியது.

②இறந்தவன் அன்வர். அவனது சொத்து 3 பங்கு

| மகன் நூர் | மகள் பாத்திமா |
|---|---|
| 2x4=8 | ①x4=4 |

இருக்கும் 3 பங்கையும் மகனுக்கு 2 பங்கு மகளுக்கு ஒரு பங்கு கொடுத்துவிட வேண்டும்.

③ 4X1=4 இறந்தது மகள் பாத்திமா. அவளது பங்கு 1.

| கணவன் ஸலீம் | மகன்பைஸல் |
|---|---|
| 1/4 | அஸபா |
| ① | ③ |

பாத்திமாவின் பங்கு ஒன்று, கணவனும் மகனும் இருப்பதால்

சொத்தை 4 பங்கு வைக்க வேண்டும். ஒன்றை 4ஆல் பெருக்க 4x1=4 பங்கு கிடைக்கும். இதை 4ஆல் பெருக்குவதால் (1)வது (2)வது கணக்கிலும் 4ஆல் பெருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| (1) வது கணக்கில் கணவனுக்கு | 1x4= | 4 பங்கு |
| (2) வது கணக்கில் மகன் நூருக்கு | 2x4= | 8 பங்கு |
| மகள் பாத்திமாவுக்கு | 1x4= | 4 பங்கு |

4பங்கு பெற்ற மகள் பாத்திமா இறந்து விடுவதால் அந்த 4 பங்கில் 3வது கணக்கில் உள்ள கணவனுக்கு ஒரு பங்கும் மகனுக்கு 3 பங்கும் கொடுக்க வேண்டும்.

ஆக 16 பங்குகள் ஆகிறது. சொத்தை 16 பங்கு வைக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (1) கணவனுக்கு 4 பங்கு | 19200/16x4 = | ரூ | 4800 |
| (2) மகனுக்கு (நூர்) 8 பங்கு | 19200/16x8 = | ரூ | 9600 |
| (3) பாத்திமாவின் கணவன் . | | | |
| ஸலீம்1 பங்கு | 19200/16x1 = | ரூ | 1200 |
| மகன் பைஸல் 3 பங்கு | 19200/16x3 = | ரூ | 3600 |
| | | | --------- |
| | ஆக மொத்தம் | ரூ. | 19,200 |

19,200 ஐ 16ஆல் வகுத்தால் ஒரு பங்கு எவ்வளவு என்று தெரியவரும். ஒரு பங்கு 1200 ரூபாய். அதன்படி அவர்களுக்குப் பங்கிட்டு கொடுக்க வேண்டும்.

எ.காட்டு-3

ஹிந்த் என்ற பெண், கணவன் உமர், மகன் உத்மான், மகள் சல்மாவை விட்டும், 60,000 ரூபாய் இருக்க இறந்து விட்டாள். சொத்தை பிரித்துப் பங்கிடுமுன் மகள் சல்மா இறந்துவிட்டாள். அவள் தனது மகன் ஹஸன், தந்தை உமர் ஆகியோர் இருக்க இறந்துவிட்டாள். சொத்தைப் பங்கிடுமுன் மகன் உத்மானும் இறந்தார். அவர் இறக்கும் போது அவரது மனைவிபத்ர் தந்தை உமர் இருக்க இறந்தார். பின்னர் பத்ர் இறந்தார். அவளது வாரிசாக மகன் முஹம்மத், மகள் ஃபாத்திமாவை விட்டு இறந்தாள். அப்படியானால் தற்போது உயிருடன் உள்ள ஒவ்வொருவரின் பங்கு என்ன?

① 4X6=24 **இறந்தவர் ஹிந்த்**

| கணவன் | மகன் | மகள் |
|---|---|---|
| உமர் | உஸ்மான் | சல்மா |
| 1/4 | | |
| [1] | [2] | [1] |
| x | x | x |
| 6 | 6 | 6 |
| [12] | [6] | [6] |

*இந்நிலையில் சொத்தை 4 பங்கு வைத்து கணவன் உமருக்கு ஒரு பங்கு கொடுக்க வேண்டும். மீதி 3 பங்கு உள்ளது. அதில் மகன் உஸ்மானுக்கு 2 பங்கும், மகள் சல்மாவுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.*

② **இறந்தவர் சல்மா. அவளது பங்கு 1. 1 X 6 = 6**

| மகன் | தந்தை |
|---|---|
| ஹஸன் | உமர் |
| அஸபா | 1/6 |
| [5] | [1] |

*சொத்தை 6 பங்கு வைக்க வேண்டும். இருப்பது ஒரு பங்கு, எனவே அதை 6ஆல் பெருக்க 6x1 = 6. அதே போன்று முன்னர் 1வது கணக்கில் உள்ளதையும் அடிப்படைப் பாகத்தையும் 6ஆல் பெருக்க வேண்டும்.*

*தற்போதுள்ள நிலையில்*

| | |
|---|---|
| உமரின் பங்குகள் | 6+1= 7 பங்குகள் |
| மகன் உஸ்மான் | 12 பங்குகள் |
| மகன் ஹஸன் | 5 பங்குகள் |

③ **இறந்தவர் உஸ்மான் அவரது பங்கு 12**

| மனைவி | தந்தை |
|---|---|
| பத்ர் | உமர் |
| 1/4 [3] பங்குகள் | அஸபா [9 பங்குகள்] |

*இறந்தவரின் 12 பங்குகளில் மனைவி பத்ருக்கு 1.4 பங்கு. 12இல் கால் பங்கு 3. மீதியுள்ள 9 பங்கு தந்தை உமருக்குக் கிடைக்கும்.*

④ இறந்தவர் பத்ர் 3 பங்குகள்

| மகன் | மகள் |
|---|---|
| முஹம்மத் | ஃபாத்திமா |
| [2] | [1] |

பத்ரின் 3 பங்குகளில் அவளது மகன் முஹம்மதுக்கு 2 பங்குகளும் மகளுக்கு ஒரு பங்கும் கொடுக்க வேண்டும்.

ஆக இப்போது இருப்பவர்களும் அவர்களின் பங்குகளும்.

| | | | |
|---|---|---|---|
| (1,2,3 கணக்கு) உமர் | 6+1+9 | = | 16 |
| (2வது கணக்கு) ஹஸன் | | = | 5 |
| (4வது கணக்கு) முஹம்மத் | | = | 2 |
| (4வது கணக்கு) ஃபாத்திமா | | = | 1 |
| | ஆக | = | 24 |

சொத்து மதிப்பு 60,000 ரூபாய். அதை 24 பங்கு வைக்க வேண்டும். 60,000 ஐ 24ஆல் வகுத்தால் ஒரு பங்கு எவ்வளவு என்று தெரியும்.

60,000/24 = 2500

| | | | |
|---|---|---|---|
| உமர் 16 பங்குகள் 2500x16 | = | ரூ | 40,000 |
| ஹஸன் 5x2500 | = | ரூ | 12,500 |
| முஹம்மத் 2x2500 | = | ரூ. | 5,000 |
| ஃபாத்திமா 1x2500 | = | ரூ. | 2,500 |
| ஆக மொத்தம் | | ரூ. | 60,000 |

இவ்வாறு பிரித்துக் கொடுக்க வேண்டும்.

குறிப்பு:-

இதுபோன்ற கணக்குகளில் ஒருவர் இறக்காமல் பல தலைமுறைகளில் உயிரோடு இருக்கும் போது அவரது பங்கை ஒவ்வொரு முறையும் கூட்டிக் கொள்ள வேண்டும். உதாரணமாக மேற்கண்ட கணக்கில் உமர் கடைசிவரை உயிரோடு உள்ளார். அவர் கணவராக தந்தையாக 3 கணக்குகளிலும் பங்கு பெறுகிறார்.

இறந்தவரது சொத்தைப் பிரிக்கும் போது முந்திய கணக்கில்

அவரது பெயரையும் அவரது பங்கையும் அடித்து விட வேண்டும்.

உதாரணமாக முதல் கணக்கில் உஸ்மான், சல்மா, 3வது கணக்கில் பத்ர் ஆகியோர்.

**எ.காட்டு-4**

ஆதிலா என்ற பெண் கணவன் ஷகீல், மகள் அனீஸா, தாய் யாஸ்மீன் ஆகியோரையும் ஒரு லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் சொத்துக்களையும் விட்டு மரணமடைந்தார்.

பாகம் பிரிக்குமுன் கணவர் ஷகீல் மரணமடைந்தார். அவருக்கு வாரிசாக மற்றொரு மனைவி ஸாபிரா, தந்தை ஜமீல், தாய் மாஹிரா ஆகியோர் உள்ளனர். ஷகீலுக்குப் பின்னர் மகள் அனீஸா மரணம். அவளுக்கு அவளது மகள் மாஜிதா, மகன் நஸீர், முர்ஷித், தாயின் தாய் யாஸ்மின் ஆகியோர் வாரிசாக உள்ளனர்.

அதன்பின்னர் யாஸ்மினும், மரணமடைகிறாள். அவளது வாரிசாக அவளது கணவர் முபாரக், மற்றும் முனீர், முஹ்ஸின் என்ற 2 சகோதரர்கள் உள்ளனர். இந்நிலையில் சொத்தை எப்படிப் பிரிக்க வேண்டும்?

ரத்து சட்டப்படி பாகம் 4 ஆக்கப்பட்டது.

① 4X4=16X2=32X4=128 **மரணமடைந்தவர்:- ஆதிலா**

| கணவன் | மகள் | தாய் |
|---|---|---|
| ~~ஷகீல்~~ | ~~அனீஸா~~ | ~~யாஸ்மின்~~ |
| 1/4 | 1/2 | 1/6 |

சொத்தை 12 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கும், மகளுக்கு 6 பங்கும், தாய்க்கு 2 பங்கும் கொடுத்தால் 3++6+2=11 பங்கு தான் வருகிறது. எனவே ரத்து மறு பங்கீடு செய்ய வேண்டும். எனவே சொத்தை 4 பங்கு வைத்து கணவனுக்கு ஒரு பங்கும் மீதி 3 பங்குகள் மகளுக்கு மூன்று பங்குகளும், தாய்க்கு ஒரு பங்கும் ஆக 4 பங்கு ஆக்க வேண்டும். எனவே அடிப்படைப்பங்காகிய 4 ஐ 4 ஆல் பெருக்கி 4x4=16 பங்கு வைத்து கொடுத்து விட்டோம். விவரம் பின்வருமாறு.

அதாவது கணவனுக்கு 4 பங்குகள் போக மீதி 12 பங்குகள். அதை 4 பங்கு வைத்தால் ஒரு பங்கு 3 4 பங்குகள் கணவனுக்கு

| | |
|---|---|
| எனவே மகளுக்கு 3 பங்குx3 | 9 பங்குகள் |
| தாய்க்கு ஒரு பங்கு x 3 | 3 பங்குகள் |
| | --------------- |
| ஆக | 16 பங்குகள் |

தாய் யாஸ்மினுக்கு (பின்வரும் 3வது கணக்கின்படி) 3x2=6 பங்கு.

② ஷகீலுக்குக் இக்கணக்கில்

கிடைத்த பங்கு 4 அடிப்படைப்பாகம் 4 மரணம்:- ஷகீல்

| மனைவி | தந்தை | தாய் | |
|---|---|---|---|
| ஸாபிரா | ஜமீல் | மாஹிரா | (மனைவியின் பாகம் கொடுத்தபின் மீதியில் மூன்றில் ஒன்று) |
| 1/4 | அஸபா | 1/3 | |
| 1 | 2 | 1 | |
| 2 | 4 | 2 | |

*சொத்தை 4 பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கு கொடுத்தால் மீதி 3 பங்கு உள்ளது. மனைவிக்குக் கொடுத்தது போக மீதியில் ஒரு பாகம் தாய்க்கு, தந்தைக்கு 2 பாகம். ஷகீலின் பங்குகள் அவரது வாரிசுகளுக்கு சரியாகப் போய் விட்டது.*

*(4வது கணக்கின்படி 4ஆல் பெருக்க) ஸாபிராவுக்கு 8, ஜமீலுக்கு 16, மாஹிராவுக்கு 8 பங்குகள்.*

③ அனீஸாவுக்கு இந்தக்கணக்கில்

கிடைத்த பங்குகள்9 அடிப்படைப்பாகம் 6 மரணம்:- அனிஸா

| மகன் | மகன் | மகள் | தாயின் தாய் [பாட்டி] |
|---|---|---|---|
| நஸீர் | முர்ஷித் | மாஜிதா | யாஸ்மின் |
| அஸபா | | | 1/6 |
| 2 | 2 | 1 | 1 |
| 6 | 6 | 3 | 3 |
| [4வதுகணக்கின் படி] [24] | [24] | [12] | |

*இந்தக் கணக்கில் அடிப்படைப்பாகம் 6, அனிஸாவுக்குக் கிடைத்த பங்குகள் 9,*

6,9 ஆகிய எண்களை 3 என்ற எண் மீதமில்லாமல் வகுத்துவிடும். எனவே 6இன் மூன்றில் ஒரு பங்கான 2ஆல் முதல் கணக்கிலுள்ள அடிப்படைப்பாகம் 16ஐ பெருக்க 32 வந்தது. எனவே பங்குகளையும் 2 ஆல் பெருக்கிக் கொள்ள வேண்டும். எனவே தாய் யாஸ்மின் பங்கு 3x2==6 ஆனது. முதல் கணக்கிலுள்ள மற்ற இருவரும் இறந்து விட்டனர்.

2வது கணக்கிலும் 2ஆல் பங்குகளைப் பெருக்கிட வேண்டும்.

3வது கணக்கில் அனீஸாவின் 9 பங்குகளை 6 பங்கு வைக்க வேண்டும். 9,6 இரண்டிற்கும் உத்தமப் பொதுக்காரணி 3. எனவே 3ஆல் பெருக்கி அனீஸாவின் வாரிசுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

| ④ யாஸ்மினுக்கு கிடைத்தபங்குகள் | இக்கணக்கில் அடிப்படைப்பாகம் | மரணம்: யாஸ்மின் |
|---|---|---|
| 6+3=9 | 2X2=4, 9X4=36 பங்கு | |

| **கணவர் முபாரக்** | **சகோதரர் முனீர்** | **சகோதரர் முஹ்ஸின்** |
|---|---|---|
| 1/2 | அஸபா | |
| | 1 | |
| 1 | | |
| [2] | [1] | [1] |
| [18] | [9] | [9] |

அடிப்படைப்பாகம் 2இல் கணவருக்கு ஒன்று போக மீதி ஒன்று. 2 சகோதரர்களுக்கு ஒன்றைக் கொடுத்தால் 1/2 பின்னம் வருகிறது. எனவே அடிப்படைப்பாகம் 2ஐ 2ஆல் பெருக்கி 4ஆக்கி கணவருக்கு 2. ஒவ்வொரு சகோதரருக்கும் ஒன்று ஆக 2 கொடுத்தோம்.

**யாஸ்மின் பங்குகள் 9, அடிப்படைப்பாகம் 4,**

9,4 தாபயுன். எனவே முதல் கணக்கின் அடிப்படைப் பாகமாகிய 32 ஐ4ஆல் பெருக்க 32x4=128 ஆகும். எனவே முன்னருள்ள 2,3 ஆகிய எல்லாக் கணக்குகளையும் 4ஆல் பெருக் கிக் கொள்ள வேண்டும். 1வது கணக்கில் உள்ள எல்லோரும்

இறந்து விட்டதால் பெருக்கத் தேவையில்லை. இந்த (4வது) கணக்கில் பாகம் பெற்றவர்களை 9ஆல் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

தற்போது உயிருடன் உள்ள வாரிசுகள் மற்றும் பங்குகள்

| | |
|---|---|
| 1. ஸாபிரா | 8 |
| 2. ஜமீல் | 16 |
| 3. மாஹிரா | 8 |
| 4. மாஜிதா | 12 |
| 5. நஸீர் | 24 |
| 6. முர்ஷித் | 24 |
| 7. முபாரக் | 18 |
| 8. முனீர் | 9 |
| 9. முஹ்ஸின் | 9 |
| மொத்தம் | 128 பங்குகள் |

விட்டுச் சென்ற தொகை ஒரு லட்சத்து 28 ஆயிரம் = ரூ. 1,28,000

இதை 128 ஆல் வகுத்தால் ஒரு பங்கு எவ்வளவு என்று தெரியும்.

1,28,000/128 = ரூ. 1000 ஒரு பங்கு.

| | | |
|---|---|---|
| எனவே 8 பங்கு ஸாபிராவுக்கு | ரூ. | 8,000 |
| 16 பங்கு ஜமீலுக்கு | ரூ. | 16,000 |
| 8 பங்கு மாஹிராவுக்கு | ரூ. | 8,000 |
| 12 பங்கு மாஜிதாவுக்கு | ரூ. | 12,000 |
| 24 பங்கு நஸீருக்கு | ரூ. | 24,000 |
| 24 பங்கு முர்ஷிதுக்கு | ரூ. | 24,000 |
| 18 பங்கு முபாரக்குக்கு | ரூ. | 18,000 |
| 9 பங்கு முனீருக்கு | ரூ. | 9,000 |
| 9 பங்கு முஹ்ஸினுக்கு | ரூ. | 9,000 |
| ஆக மொத்தம் | ரூ. | 1,28,000 |

இதுவரை நாம் பார்த்த வாரிசுரிமைக் கணக்குகள் முந்திய

கணக்கில் பங்கு பெறும் வாரிசுகளும், அடுத்தடுத்த கணக்குகளில் பங்கு பெறும் வாரிசுகளும் வெவ்வேறு நபர்களாக இருந்தால் எப்படிக் கணக்கிடுவது என்பது பற்றியதாகும். ஆனால் பின்வரும் இரண்டு எ.காட்டுகளில் வரும் இரண்டு கணக்குகளிலும் ஒரே வாரிசுதாரர்களே பங்கு பெறுவதாக இருந்தால் இருமுறை கணக்கிடத் தேவையில்லை. ஒரே கணக்கிலேயே போதுமாக்கிக் கொள்ளலாம்.

**எ.காட்டு-5**

*பாஸிம் என்பவர் 2 ஆண் மக்களையும் 2 பெண் மக்களையும் விட்டு மரணமடைந்தார். பின்னர் 2 பெண் மக்களில் ஒரு பெண் இறந்து விடுகிறார். தற்போது சொத்தை எப்படிப் பங்கு வைக்க வேண்டும்?*

**இறந்தவர்:- பாஸிம்**

| மகன் | மகன் | மகள் | மகள் |
|---|---|---|---|
| தாஹிர் | ஃதாபித் | தாஹிரா | குலூத் |
| 2 | 2 | 1 | |

*சொத்து பிரிக்கப்படாமல் இருக்கும் நிலையில் மகள் குலூத் மரணமடைந்தாள். அவளுக்கு வேறு வாரிசுகளும் இல்லை. எனவே அவளுக்குப் பங்கு வைக்காமல் 5 ஆகப் பங்கு வைத்து ஆணுக்கு 2, பெண்ணுக்கு ஒன்று என்ற விகிதத்தில் கொடுத்து விட வேண்டும்.*

**எ.காட்டு-6**

*ஒரு பெண் கணவனையும் ஒரு மகளையும் ஒரு மகனையும் விட்டு இறந்து விடுகிறாள். சொத்து பிரிக்கப்படுவதற்கு முன்பு கணவனும் இதே வாரிசுகளை விட்டு இறந்து விடுகிறான். இந்நிலையில் அந்த வாரிசுகளுக்கு எவ்வளவு பங்கு கிடைக்கும்?*

| மகன் | மகள் |
|---|---|
| 2 | 1 |

*சொத்தை 3 பங்கு வைத்து மகனுக்கு 2 பங்கும் மகளுக்கு 1 பங்கும் கொடுத்து விடவேண்டும். கணவன் இறந்த பின்பும் அதற்கு முன்பும் இதேபோன்று தான் கணக்கு வரும். இரண்டு முறை கணக்குப் பார்க்கத் தேவையில்லை.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) நூருத்தீன் என்பவர் அன்வர், அனீஸ், அஹ்மத் ஆகிய 3 மகன்களை விட்டு இறந்தார். அவரது சொத்து பிரிக்கப்படவில்லை. அன்வர் தமது மனைவி ஆரிஃபா, மகள் ஆமினா, மகனின் மகன் ஆபிதீன் ஆகியோரை விட்டு இறந்தார். அனீஸ் தமது மகன்கள் ஆதில், அய்யூப், அதீக் ஆகியோரை விட்டு இறந்தார். அஹ்மத் தமது மகன்கள் ஸித்தீக், ஃபாயிஸ் என்ற இரண்டு மகன்களையும், ஃபாத்திமா என்ற மகளையும் விட்டு இறந்தார். இவர்களில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பங்கை கணக்கிட்டு எழுது.*

*(2) முஸ்தபா என்பவர் தமது மனைவி முஹ்ஸினா என்பவரையும் கதீஜா என்ற வேறு மனைவிக்குப் பிறந்த அனீஸா, ஆபிதா, தஸ்னீம், தாஹிரா ஆகிய 4 பெண் மக்களையும் முனீர் என்ற பெரிய தந்தையையும் விட்டு இறக்கிறார். அவர்களுக் கிடையில் சொத்து பிரிக்கப்படவில்லை. பின்னர் தஸ்னீம் தமது கணவர் அஷ்ரப் என்பவரையும் தாய் கதீஜாவையும், மகன் பைஸல் என்பவரையும் விட்டு இறந்து விடுகிறார். தாஹிரா என்ற மகள் தமது கணவர் ரஹ்மதுல்லாஹ் என்பவரையும், ஆரிஃப், அன்வர் என்ற 2 மகன்களையும் விட்டு இறந்து விடுகிறார். இவர்களது சொத்தை கணக்கிட்டுப் பிரித்துக் கொடுக்கவும்.*

*(3) இஸ்மாயீல் என்பவர் தமது மனைவி ரஷீதா என்பவரையும் நஸீமா என்ற வேறுமனைவிக்குப் பிறந்த மகனின் பெண் மக்களான ரஹ்மத், ஹஸீனா ஆகியோரையும் ஹாரிஸ் என்ற சிறிய தந்தையையும் விட்டு இறந்து விடுகிறார். சொத்து பிரித்துக் கொடுக்கப் படவில்லை. பின்னர் ரஹ்மத், ஹஸன் என்ற மகனையும், ஸைனப் என்ற மகளையும், ஹஸீனா, ஹாரிஸ் என்ற மகனையும், அஸ்மா என்ற மகளையும் விட்டு இறந்து விடுகிறார். சொத்தை எப்படிப் பிரித்தளிக்க வேண்டும்?*

*(4) ஹஸன் என்பவர் தமது மகன்களான இஸ்மாயில், ஹாரிஸ் என்பவர்களை விட்டு இறந்தார். சொத்து பிரிக்கப்படாமல் இருக்கும் நிலையில் இஸ்மாயீல் என்ற மகன், அன்வர், அஹ்மத் என்ற இரு மகன்களைவிட்டு இறந்தார். ஹாரிஸ் என்பவர் அஷ்ரப் என்ற மகனையும் கதீஜா, ஆயிஷா என்ற 2 பெண்*

மக்களையும் விட்டு இறந்தார். தற்போது உயிரோடுள்ளவர்களுக்கு கிடைக்கும் சொத்தின் அளவை கணக்கிடு.

(5) முனீர் என்பவர் முஹம்மத், முஸ்தபா, ஹாரிஸ் என்ற மூன்று தந்தைவழிச் சகோதரர்களை விட்டு இறந்தார். சொத்து பிரிக்கப்படவில்லை. இவர்களில் முஹம்மத் என்பவர் தமது தாய் ஆயிஷா, மகன் அஷ்ரப் ஆகியோரைவிட்டு இறந்தார். முஸ்தபா என்பவர் தமது மனைவி ஹலீமா, மகன் ஹஸன் ஆகியோரை வாரிசாக விட்டு இறக்கிறார். சொத்தை எவ்வாறு பிரிக்க வேண்டும்?

(6) முஹம்மத் என்பவர் அஷ்ரப், அனீஸ் என்ற இரு மகன்களை விட்டு இறந்தார். சொத்துப் பிரிக்கப்படாமல் இருக்கும் நிலையில் அஷ்ரப் என்பவர் இஸ்மாயீல், ஹஸன் என்ற இரு மகன்களை விட்டு இறந்தார். அனீஸ் என்பவர் ஹாரிஸ், அல்தாப், யாஸிர் என்ற மூன்று மகன்களை விட்டு இறந்தார். சொத்துக்களை எந்த விகிதத்தில் பிரிக்க வேண்டும்?

(7) அன்வர் என்பவர் ஃபாத்திமா என்ற மனைவியையும் வேறு மனைவி மூலம் பிறந்த காமிலா, தாஹிரா என்ற 2 பெண்மக்களையும், ஹுஸைன் என்ற சிறிய தந்தையையும் விட்டு இறந்தார். சொத்துப் பிரிவினை ஆகாத நிலையில் காமிலா தமது கணவர் ஹஸன், மகன் நூர் ஆகியோரை விட்டு இறந்தார். தாஹிரா தமது கணவர் முஸ்தபா, அல்தாப், இஸ்மாயில், அய்யூப் என்ற 3 மகன்களை விட்டு இறந்தார். ஹுஸைன் என்பவர் அதீக், ஆதில் என்ற 2 மகன்களையும், தஸ்னீம் என்ற மகளையும் விட்டு இறந்தார் சொத்தை எப்படிப் பிரித்துக் கொள்ள வேண்டும்?

(8) ஹாரிஸ் என்பவர் காமிலா என்ற மனைவியையும் அனீஸா, ஆபிதா என்ற சகோதரிகளையும், ஃபாயிஸ் என்ற பெரிய தந்தையையும் விட்டு இறந்தார். பின்பு காமிலா வேறொரு திருமணம் செய்து ஒரு குழந்தை பெற்றார். சொத்துப் பிரிக்கப்படாமல் இருக்கும் நிலையில் காமிலா இறந்து விட்டார். அவருக்கு ஸித்தீக் என்ற கணவரும் அஹ்மத் என்ற மகனும் இருந்தனர். பின்னர் அனீஸா என்பவர் அன்வர் என்ற கணவரையும் அஷ்ரப் என்ற மகனையும் விட்டு இறந்தார். ஆபிதா என்பவர் ஹாரிஸ் என்ற கணவரையும் யாஸிர் என்ற மகனையும் விட்டு இறந்தார். சொத்தை எவ்வாறு பங்கிட வேண்டும்?

# 36. வாரிசு கருவில் இருந்தால்?

சொத்துரிமைப் பங்கீட்டின் போது ஏற்படும் சில அபூர்வ ஆனால் முக்கியமான பிரச்சனைகள் பற்றி இப்பகுதியில் பார்ப்போம். உதாரணமாக வாரிசுதாரர் கருவில் இருக்கும் போது ஒருவர் இறந்துவிட்டால் அவரது சொத்தை எவ்வாறு பங்கிடுவது? என்பதை பார்ப்போம்.

குழந்தை கருவில்இருக்கும் போது ஒருவர் இறந்து விட்டார் என்றால் குழந்தை பிறக்கும் வரை சொத்துப் பிரிக்காமல் இருக்கலாம். அதுவே நன்று. ஏனெனில் கருவில் இருப்பது ஆணா, பெண்ணா என்று அறிய முடியாது. அல்லது ஆணும், பெண்ணும் ஆக இரட்டைக் குழந்தை அல்லது 2 ஆண் குழந்தை, 2 பெண் குழந்தை அல்லது 2க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறக்க வாய்ப்பு உள்ளது. எனவே சொத்துப் பிரிப்பதை வாரிசுதாரர்கள் குழந்தை பிறக்கும் வரை பிற்படுத்தலாம். அதுதான் சிறந்த முறையாகும். ஆனால் அதுவரை பொறுத்திருக்க முடியாது என மற்ற வாரிசுதாரர்கள் கருதி, உடனே சொத்தைப் பிரிக்க வேண்டும் என்றால் அதற்கும் மார்க்கத்தில் வழி உள்ளது.

**கருவாக இருந்து பிறந்த குழந்தை சொத்துரிமை பெற நிபந்தனைகள்**

1. அது உயிரோடு பிறக்க வேண்டும். பிறந்தவுடன் அழுதல், தும்முதல், சப்தமிடுதல், சிரித்தல், உடல் உறுப்புக்களில் ஒன்றை ஆட்டுதல், கண்ணைத் திறத்தல், கொட்டாவி, மார்பகத்தை சூப்பு தல் போன்ற செய்கைகளில் ஒன்று நிகழ்ந்துவிட்டால் குழந்தை உயிருடன் பிறந்ததாகக் கருதப்படும்.

2. குழந்தை இறந்து பிறந்தால், அல்லது குழந்தையின் அதிகமான பகுதி வெளியாவதற்கு முன்பே இறந்துவிட்டால் அக் குழந்தை வாரிசாக மாட்டாது.

3. குழந்தை பிறந்த பின்பு இறந்து விட்டால் அதற்குக் கிடைக்கும் சொத்தை அதன் வாரிசுதாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

4. கர்ப்பத்தில் உள்ள குழந்தை பிறந்தாலும் பிறக்கா விட்டாலும் இறந்து பிறந்தாலும் எத்தனை குழந்தைகள் பிறந் தாலும் ஆண் பிறந்தாலும் பெண் பிறந்தாலும் மற்ற வாரிசு தாரர்களின் சொத்துப் பங்கு மாறாது, அதிகமாகாது, குறையாது என்ற நிலை இருந்தால் அவர்களது பங்கை உடனே கொடுத்து விடலாம். குழந்தை பிறப்பை எதிர் பார்க்கத் தேவையில்லை.

5. ஒருவன் திருமணம் செய்து சில நாட்களில் மரணமடைந்து அவனது மனைவி கர்ப்பமாக இருந்தால் அவள் குறைந்தது ஆறு மாதம் முடிந்து குழந்தை பெற்றால் அது அவனது குழந்தையாகக் கருதப்படும். ஆறுமாதத்திற்கு முன்னர் குழந்தை பெற்றால் அது அவனது குழந்தையாகக் கணிக்கப்படாது. எனவே சொத்துரி மையில் அக் குழந்தை சேர்க்கப்பட மாட்டாது. கர்ப்பத்தின் குறைந்த காலம் ஆறுமாதங்கள் என்றும் அதிக காலம் 2வருடங் கள் என்றும் 4 வருடங்கள் என்றும் கூறுகின்றனர்.

**குறிப்பு:-**

தற்காலத்தில் அது அவளது குழந்தையா இல்லையா? என்பது உட்பட பல்வேறு மரபணுச் சோதனைகள் மூலம் குழந்தைபற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. எனவே இவையெல்லாம் தற்காலத்திற்குப் பொருந்தாது.

**எடுத்துக்காட்டு-1**

ஒரு மனிதன் தனது மனைவி கர்ப்பமாக இருக்கும் நிலையில் இறந்து விடுகிறான். அப்போது அவனது வாரிசுகளாக அந்த மனைவி, அவனது தந்தையும் உள்ளனர். தற்போது எப்படி சொத்தைப் பிரிக்க வேண்டும்.

24 **மரணமானவர்:- இல்யாஸ்**

| தந்தை | மனைவி | கர்ப்பம் [கரு] |
|---|---|---|
| 1/6 | 1/8 | 24-7=17 மீதி |

சொத்தை 24 பங்கு வைத்து தந்தைக்கு 4 பங்கும் மனைவிக்கு 3 பங்கும் கொடுத்து விட்டு மீதியை (17 பங்கு) நிறுத்தி வைக்க வேண்டும். குழந்தை ஆணாகப் பிறந்ததால் மீதியுள்ள 17 பங்கும் அக்குழந்தைக்கு கிடைக்கும். ஆண் குழந்தை 2 (இரட்டைக்) குழந்தையானால் 17 பங்கை அவ்விரண்டு பேரும் பங்கிட்டுக் கொள்வார்கள்.

அது 2 பெண் குழந்தையானால் அவர்களுக்கு 2/3 பங்கு அதாவது 16 பங்கு கிடைக்கும். மீதியுள்ள ஒரு பங்கு அஸபா என்ற வகையில் தந்தைக்கு சேரும்.

அது ஒரு பெண் குழந்தையானால் 1/2 பங்கு. அதாவது 12 பங்கு அப்பெண் குழந்தைக்கு உரியது. மீதி அஸபா என்ற வகையில் தந்தைக்கு சேரும்.

குழந்தை இறந்து பிறந்தால் மனைவிக்கு 1/4 பங்கு. போக மீதி அஸபா என்ற முறையில் தந்தைக்குக் கிடைக்கும். (இந்நிலையில் சொத்தை 12 பங்கு வைக்க வேண்டும்)

எ.காட்டு_2

**24 x 3 = 72**

| கரு [ஆண்] | | மகள் | மனைவி | தாய் | சி.தந்தை |
|---|---|---|---|---|---|
| | | 1/2 | 1/8 | 1/6 | |
| | அஸபா | | | | |
| | (17) | | (3) | (4) | |
| (34) | | (17) | (9) | (12) | |

**24 x 3 = 72**

| கரு [பெண்] | | மகள் | மனைவி | தாய் | சி.தந்தை |
|---|---|---|---|---|---|
| | 2/3 | | 1/8 | 1/6 | அஸபா |
| | [16] | | [3] | [4] | [1] |
| [24] | [48] | [24] | [9] | [12] | [3] |
| | | [7] | | | [3] |

நிறுத்திவைக்கப்பட்டது 24 பங்குகள்.

வாரிசுதாரருக்கு தற்போது கொடுத்திருப்பது:-

மகளுக்கு 17 + மனைவிக்கு 9++ தாய்க்கு 12 = 38 பங்குகள்

நிறுத்தி வைக்கப்பட்டு பொதுவில் இருப்பது:- கரு பெண் 24++7 மகளுக்கு 7++சிறியதந்தை 3 = 34 பங்குகள்

மொத்த சொத்து 72 பங்கு. குழந்தை பிறப்பதற்கு முன்பு கொடுக்கப்பட்ட சொத்து மகளுக்கு 17+மனைவிக்கு 9 +தாய்க்கு 12 = 38, மீதி 34

இந்நிலையில் ஆண் குழந்தை பிறந்துவிட்டால் மீதியுள்ள **34** பங்கும் அந்த ஆண் குழந்தைக்கே கிடைக்கும்.

*பெண் குழந்தையானால் 24 அந்தப் பெண் குழந்தைக்கும் 7 பங்கு ஏற்கனவேயுள்ள மகள் (அதாவது இப்போது பிறந்த பெண்ணின் சகோதரி, முன்பு அவளுக்கு 17 கொடுத்திருக்கிறோம் ) இந்த 7உம் சேர்ந்து 24 பங்கு ஆகும்) ஆக இருவருக்கும் சமபங்கு கிடைக்கும், 3 பங்கு சிறிய தந்தைக்கு (இரட்டைக் குழந்தை பிறந்தால் மேற்கண்டவாறும் சொத்துரிமையில் முன்னர் நாம் படித்தவாறும் பங்கிட்டுத் தர வேண்டும்.*

எ.காட்டு-3

*ஒரு பெண் தனது கணவன், மற்றும் கர்ப்பிணியான தாயை விட்டும் இறந்து விடுகிறாள். அப்போது அவளது சொத்தைப் பிரிக்கும் முறை என்ன? அவள் விட்டுச் சென்ற சொத்து 24 ஆயிரம் ரூபாய்.*

| கணவன் | கர்ப்பிணித்தாய் | சகோதரன் [கரு] |
|---|---|---|
| 1/2 | 1/3 | அஸபா |

*சொத்தை 6 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கும், கர்ப்பிணித் தாய்க்கு 2 பங்கும் மீதி ஒரு பங்கு கருவிலிருக்கும் சகோதரனுக்கும் கொடுக்க வேண்டும். இப்போது கரு ஆணாகக் கருதப்பட்டது.*

*விட்டுச் சென்ற சொத்து 24 ஆயிரம். ஒருபங்கு 24,000/ 6==ரூ.4,000*

| | |
|---|---|
| *அவ்வாறானால் கணவனுக்கு 3x4000* | *= ரூ. 12,000* |
| **கர்ப்பிணித் தாய்க்கு 2x4000** | **= ரூ. 8,000** |
| **கருவிலிருக்கும் சகோதரனுக்கு 1 பங்கு** | **= ரூ. 4,000** |
| **ஆக ரூ.** | **= ரூ. 24,000** |

*கரு பெண்ணாகக் கருதினால்*

| கணவன் | கர்ப்பிணித்தாய் | [கரு] சகோதரி |
|---|---|---|
| 1/2 | 1/3 | 1/2 |

*இந்நிலையிலும் சொத்தை 6 பங்கு வைத்து கணவனுக்கு 3 பங்கு தாய்க்கு 2பங்கு, கருவிலிருக்கும் பெண் குழந்தைக்கு 3 பங்கு, ஆக*

*3+2+3=8. 6 பங்கு வைத்து 8 பங்கு ஆகும் அவுல் ஏற்றவிதிக் கொள்கைப்படி பங்கிட வேண்டும்.*

**விட்டுச் சென்ற 24 ஆயிரத்தில் ஒரு பங்கு = 24,000/8 = ரூ. 3,000**

| | |
|---|---|
| **இதன்படி கணவனுக்கு 3 பங்கு x 3,000** | **= ரூ. 9,000** |
| **கர்ப்பிணித்தாய்க்கு 2 பங்கு x 3000** | **= ரூ. 6,000** |
| **கரு பெண் சகோதரி 3 பங்கு x 3000** | **= ரூ. 9,000** |
| **ஆக மொத்தம்** | **= ரூ.24,000** |

*எனவே கருவுக்குக் கிடைக்கும் பங்குகளில் அதிமான பங்கை நிறுத்திவைக்க வேண்டும். ரூ. 9,000 நிறுத்தி வைக்கப்பட்டு கணவனுக்கு ரூ. 9,000 ரூபாயும், கர்ப்பிணித்தாய்க்கு ரூ. 6,000 ரூபாயும் கொடுக்க வேண்டும்.*

*குழந்தை பெண்ணாகப் பிறந்து விட்டால் நிறுத்தி வைக்கப் பட்ட ரூ. 9,000 அதற்கு கொடுக்கப்படும். ஆணாகப் பிறந்து விட்டால் நிறுத்தி வைக்கப்பட்டதிலிருந்து ரூ. 4,000 கொடுக்கப் படும். மீதி 5 ஆயிரம். கணவனுக்கு 9000 கொடுத்துள்ளோம். எனவே மீதி ரூ. 3000 கொடுக்க வேண்டும். கர்ப்பிணித் தாய்க்கு ரூ. 6000 கொடுத்துள்ளோம். மீதி ரூ.2000 கொடுக்க வேண்டும். ஆக ரூ. 24 ஆயிரம் பங்கிடப்பட்டு விட்டது.*

**குறிப்பு:-**

*இம்முறைகள் மிகக் குழப்பமாக உள்ளதால் குழந்தை பிறக்கும் வரை சொத்து பங்கீட்டைப் பிற்படுத்துவதே சிறந்த நடைமுறை யாகும்.*

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) கருவிலிருக்கும் குழந்தை பிறந்தவுடன் இறந்துவிட்டால் அது சொத்துரிமை பெற நிபந்தனைகள் என்னென்ன?*

# 37. நீரில் மூழ்கி தீயில் கருகி விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் வாரிசுரிமை

கப்பலில் பயணம் செய்யும் போதோ, விமானத்தில் பயணிக்கும் போதோ, பூகம்பம், வெள்ளம் போன்ற சூழ்நிலைகளில் உறவினர்கள் பலர் ஒரே நேரத்தில் இறந்து விடுகின்றனர். (அல்லாஹ் இது போன்ற தீமைகளை விட்டும் நம்மைப் பாதுகாப்பானாக!) அவர்களில் யார் முதலில் இறந்தார். யார் பின்னர் இறந்தார் என்ற விபரமும் தெரியாத போது என்ன செய்வது?

இவ்வாறான நிலையில் இறந்தவர்கள் ஒருவருக்கொருவர் வாரிசுரிமை பெறமாட்டார்கள். உயிருடன் யார் இருக்கின்றார்களோ அவர்களே வாரிசுரிமை பெறுவார்கள்.

தந்தையும் மகனும், அல்லது கணவனும் மனைவியும் விமானத்தில் பயணம் செய்யும் போது விபத்தில் இறந்து விடுகின்றனர் என்றால் தந்தைக்கு மகனும் மகனுக்கு தந்தையும், கணவனுக்கு மனைவியும், மனைவிக்கு கணவனும் வாரிசுரிமை பெற மாட்டார்கள். உயிரோடுள்ள வாரிசுகளே வாரிசுரிமை பெறுவார்கள்.

சில எடுத்துக்காட்டுகள் வருமாறு

எ.காட்டு-1

முஹம்மத் என்பவர் தமது மகன்கள் ஹஸன், உமர் ஆகிய இருவருடன் விமானத்தில் பயணம் செய்யும் போது விமானம் விபத்துக்குள்ளாகி எல்லோரும் இறந்து விட்டனர். இறந்த முஹம்மது, தமது ஸைனப் என்ற மனைவியையும், உஸ்மான் என்ற மகனையும் விட்டு இறந்துள்ளார். சொத்து 72 லட்சம்.

ஹஸன் தமது மகன்களான அலி, காலித் மற்றும் மனைவி கதிஜாவை விட்டு இறந்துள்ளார். சொத்து 32 லட்சம்.

உமர் தமது மகன் நாஸிர், மகள் சுலைஹா ஆகியோரை விட்டு இறந்துள்ளார். சொத்து 27 லட்சம். இந்நிலையில் சொத்தை எப்படிப் பங்கிட வேண்டும்?

① இறந்தவர்:- முஹம்மது சொத்து 72 லட்சம்

| மனைவி | மகன் |
|---|---|
| ஸைனப் | உஸ்மான் |
| 1/8 | அஸபா |

இந்நிலையில் சொத்தை 8 பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கும் மகனுக்கு 7 பங்கும் கொடுக்க வேண்டும்.

சொத்து ரூ. 72 லட்சம்

ஒரு பங்கு = 72,00,000/8 = ரூ. 9,00,000

மனைவிக்கு ஒரு பங்கு = ரூ. 9,00,000

மீதி 7 பங்கு x 9,00,000 = ரூ.63,00,000

மொத்தம் ரூ. 72,00,000

② இறந்தவர்:- ஹஸன் சொத்தின்மதிப்பு 32,00,000

| மகன் அலீ | மகன் காலித் | மனைவி கதிஜா |
|---|---|---|
| அஸபா | | 1/8 |

இந்நிலையிலும் சொத்தை 8 பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கும் மீதி 7 பங்கு 2 மகனுக்கும் சரிபாதியாகக் கிடைக்கும்.

சொத்து 32,00,000 லட்சம். ஒரு பங்கு 32,00,000/8 = ரூ. 4,00,000

மனைவி கதிஜாவுக்கு ரூ. 4,00,000. மீதி 28,00,000 ரூபாய்

அலி, காலித் ஒவ்வொரு மகனுக்கும் ரூ. 14,00,000 வீதம் கொடுக்க வேண்டும்.

③ இறந்தவர்:- உமர் சொத்து ரூ.27,00,000

| மகன் | மகள் |
|---|---|
| நாஸர் | சுலைகா |
| 2 | 1 |

இந்நிலையில் சொத்தை 3 பங்கு வைக்க வேண்டும்.

27,00,000/3 = ரூ. 9,00,000

ஒரு பங்கு 9,00,000 மகள் சுலைஹாவுக்கு

2 பங்கு ரூ 18,00,000 மகன் நாஸிருக்கு

ஆக மொத்தம் 27,00,000

எ.காட்டு_2

அலீ என்பவர் தமது மகன் ஸாதிக் என்பவருடனும் பேரன் மாஜித் என்பவருடனும் கப்பலில் பயணம் மேற்கொண்ட போது அனைவரும் நீரில் மூழ்கி இறந்தனர். இவர்கள் ஒவ்வொரு வருக்கும் ஒரு மகள் மட்டும் இருக்கின்றனர். அலீ 3 லட்சம் ரூபா யையும், ஸாதிக் 1 லட்சத்து 50 ஆயிரமும், மாஜித் 2 லட்சம் ரூபா யையும் விட்டு இறந்து விடுகின்றனர். உயிருடன் உள்ள வாரிசு தாரர்களுக்கு எப்படிப் பங்கிட வேண்டும்?

① **இறந்தவர்:_ அலீ 6_4 பங்கு (ரத்து) சொத்து ரூ. 3,00,000**

| மகள் | பேத்தி [மகனின் மகள்] | பேத்தி [பேரனின் மகள்] |
|---|---|---|
| ஹஸீனா | ரஃபீகா | ரீமா |
| 1/2 | 1/6 | சொத்து கிடைக்காது. |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து ஹஸீனா என்ற மகளுக்கு 3 பங்கும், ரஃபீகா என்ற பேத்திக்கு ஒரு பங்கும் கொடுத்தால் 4 பங்கு தான் வருகிறது. ரத்து என்ற இறக்க விதிக் கொள்கைப்படி 4 பங்கு வைத்து கொடுத்து விட வேண்டும்.

ஒரு பங்கு 3,00,000/4 = ரூ. 75,000

மகள் ஹஸீனாவுக்கு 3 பங்கு x 75,000 = ரூ. 2,25,000

பேத்தி ரஃபீகாவுக்கு ஒரு பங்கு = ரூ. 75,000

---

ஆக மொத்தம் = ரூ. 3,00,000

② **இறந்தவர்:_ ஸாதிக் சொத்து ரூ. 1,50,000**

| மகள் | பேத்தி [மகனின் மகள்] | சகோதரி |
|---|---|---|
| ரஃபீகா | ரீமா | ஹஸீனா |
| 1/2 | 1/6 | அஸபா |

இந்நிலையில சொத்தை 6 பங்கு வைத்து மகள் ரஃபீகாவுக்கு 3 பங்கும், பேத்தி ரீமாவுக்கு ஒரு பங்கும், சகோதரி ஹஸீனாவுக்கு 2 பங்கும் கொடுக்க வேண்டும்.

1,50,000 ஐ 6 பங்கு வைத்தால் = 1,50,000/6 = ரூ. 25,000

ஒரு பங்கு 25,000 ரூபாய் ஆகும்.

| | |
|---|---|
| ரஃபீகாவுக்கு 3 பங்கு | = ரூ. 75,000 |
| ரீமாவுக்கு 1 பங்கு | = ரூ. 25,000 |
| ஹஸீனாவுக்கு 2 பங்கு | = ரூ. 50,000 |
| ஆக மொத்தம் | = ரூ.1,50,000 |

③ இறந்தவர்:_ மாஜித் சொத்து ரூ. 2,00,000

| மகள் | சகோதரி | மாமி |
|---|---|---|
| ரீமா | ரஃபீகா | ஹஸீனா |
| 1/2 | 1/2 | சொத்து கிடைக்காது |

இந்நிலையில் சொத்தை 2 பங்கு வைத்து மகள் ரீமாவுக்குப் பாதியும், சகோதரி ரஃபீகாவுக்குப் பாதியும் கொடுக்க வேண்டும். ஆக ஆளுக்கு ஒவ்வொரு லட்சம் ரூபாய் கிடைக்கும். மாமி ஹஸீனாவுக்கு ஏதும் கிடைக்காது.

மொத்தச் சொத்து விபரம்

| | |
|---|---|
| ரூ. 3,00,000 + 1,50,000 + 2,00,000 | = ரூ. 6,50,000 |
| கொடுக்கப்பட்டது | |
| ஹஸீனாவுக்கு ரூ. 2,25,000 + ரூ. 50,000 | = ரூ. 2,75,000 |
| ரஃபீகாவுக்கு ரூ.75,000+75,000+1,00,000 | = ரூ. 2,50,000 |
| ரீமாவுக்கு ரூ. 25,000 + ரூ. 1,00,000 | = ரூ. 1,25,000 |
| ஆக மொத்தம் | = ரூ. 6,50,000 |

எ.காட்டு_3

ஜுனைத் என்பவர் தமது மகன் ஜுஹைர் என்பவருடன் ரயில் பயணத்தின் போது இருவரும் இறந்து விட்டனர். ஜுனைத்துக்கு தஸ்னீம் என்ற மகளும், தவ்ஃபீகா என்ற மகனின் மகளும், தாரிக் என்ற மற்றொரு மகனின் மகனும் மஹா என்ற மனைவியும் இருந்தனர். ஜுனைதுக்கு ரூ. 18 லட்சமும், அவரது மகனுக்கு ரூ. 24 லட்சமும் சொத்து இருந்தது. இந்நிலையில் சொத்தை எவ்வாறு பங்கீடு செய்வது?

① இறந்தவர்:_ ஜுனைத் சொத்து ரூ. 18,00,000

| மகள் | மகனின் மகள் | மற்றொரு மகனின் மகன் | மனைவி |
|---|---|---|---|
| தஸ்னீம் | தவ்ஃபீகா | தாரிக் | மஹா |
| 1/2 | அஸபா | | 1/8 |

இந்நிலையில் சொத்தை 8 பங்கு வைத்து 4 பங்கை மகள் தஸ்னீமுக்கும், 1 பங்கை மனைவி மஹ்றாவுக்கும் கொடுக்க வேண்டும். மீதி 3 பங்கில் மகனின் மகன் தாரிக்குக்கு 2 பங்கும் மகனின் மகள் தவ்ஃபீகாவுக்கு ஒரு பங்கும் தர வேண்டும்.

**18,00,000/8 = ரூ. 2,25,000 ஒரு பங்கு**

| | | |
|---|---|---|
| **தஸ்னீமுக்கு 4 பங்கு x 2,25,000** | = | **ரூ. 9,00,000** |
| **மகனின் மகள் தவ்ஃபீகாவுக்கு 1பங்கு** | = | **ரூ. 2,25,000** |
| **மகனின் மகன் தாரிக் 2 பங்கு** | = | **ரூ. 4,50,000** |
| **மனைவி மஹ்றாவுக்கு ஒரு பங்கு** | = | **ரூ. 2,25,000** |
| **ஆக மொத்தம்** | = | **ரூ.18,00,000** |

② **இறந்தவர்:- ஜுஹைர்** **சொத்து ரூ. 24 லட்சம்**

| சகோதரி | மகள் | சகோதரனின் மகன் | தாய் |
|---|---|---|---|
| தஸ்னீம் | தவ்ஃபீகா | தாரிக் | மஹ்றா |
| அஸபா | 1/2 | | 1/6 |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து மகள் தவ்ஃபீகாவுக்கு 3 பங்கும், தாய் மஹ்றாவுக்கு ஒரு பங்கும், மீதி 2 பங்குகள் சகோதரி தஸ்னீமுக்கும் கிடைக்கும் சகோதரன் மகன் தாரிக்குக்கு ஏதும் கிடைக்காது. உடன் பிறந்த சகோதரி இருப்பதால் தடுக்கப்பட்டார்.

**24,00,000/6 = ரூ. 4,00,000 ஒரு பங்கு**

| | |
|---|---|
| **சகோதரி தஸ்னீமுக்கு 2 பங்குகள்** | **= ரூ. 8,00,000** |
| **மகள் தஃபீகாவுக்கு 3 பங்குகள்** | **= ரூ.12,00,000** |
| **தாய் மஹ்றாவுக்கு ஒரு பங்கு** | **= ரூ. 4,00,000** |
| **ஆக மொத்தம்** | **= ரூ.24,00,000** |

**பயிற்சி வினாக்கள்:-**

(1) நீரில் மூழ்கி, தீயில் கருகி, விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் வாரிசுரிமை பற்றி விவரி!

# 38. காணாமல் போனவர் மற்றும் கைதியின் வாரிசுரிமை

இறந்தவரின் வாரிசுகளில் ஒருவர் காணாமல் போய் விட்டாலோ, அல்லது அண்டை நாடுகளில் ஏதாவது ஒன்றில் சிறையில் இருந்தாலோ அவரது சொத்துரிமை பற்றிப் பார்ப்போம்.

கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் காணாமல் போவதைப் பற்றியும் அவர்கள் வழிமாறிச் சென்று பாகிஸ்தான், இலங்கை சிறைகளில் இருப்பதையும் பின்னர் விடுவிக்கப்படுவதையும் நாம் நாளிதழ்களில் படிக்கிறோம்.

அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற வல்லரசு நாடுகள் வரம்பு மீறி பிற நாடுகளில் நுழைந்து ஆக்ரமித்து அங்குள்ள மக்களை சிறை பிடித்துக் கொடுமைப்படுத்துகின்றனர். இதற்கு தற்காலத்தில் அமெரிக்கா, ஈராக்கில் சிறைக் கைதிகளை கொடுமைப்படுத்தியது உதாரணம் ஆகும்.

இவ்வாறு இறந்தவரின் வாரிசுகளில் ஒருவரின் நிலை அவர் உயிருடன் இருக்கிறாரா? இறந்து விட்டாரா என்று தெரியாத நிலையில் அவர் வரும் வரை அல்லது அவரது நிலை இறந்து விட்டார் அல்லது உயிருடன் உள்ளார் என்பது தெளிவாகும் வரை சொத்துப் பிரிப்பதை தள்ளிப் போடுவது நல்லது. மற்ற வாரிசுகள் சொத்தைப் பிரிக்க வேண்டும் என்றால் கருவிலிருக்கும் குழந்தைக்கான கணக்குப் போல இறந்து விட்டார் என்று ஒரு கணக்கும் உயிருடன் உள்ளார் என்று ஒரு கணக்கும் போட்டு இரண்டில் எது குறைவான பங்குகள் வாரிசுக்குக் கிடைக்கிறதோ அதைக் கொடுத்துவிட வேண்டும். குறைவான பங்குகள், கூடுதல் பங்குகள் இவற்றுக்கு இடைப்பட்ட வித்தியாசத் தொகையை நிறுத்தி வைக்க வேண்டும்.

இறந்து விட்டாரா உயிருடன் உள்ளாரா என்பதை எவ்வளவு காலம் எதிர்பார்ப்பது என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

சில அறிஞர்கள் எல்லா நிலையிலும் நான்கு வருடங்கள் எதிர்பார்த்தால் போதும் என்று கூறியுள்ளனர்.

மேலும் இக்காலத்தில் தகவல் தொடர்பு சாதனங்கள் மிக அதிகமாக உள்ளன. தற்போது முன்னருள்ள நிலை போன்று இல்லை. காணாமல் போனவர் பற்றி பத்திரிகைகளில் போட்டோவுடன் பிரசுரிக்கலாம். தொலைக்காட்சிகளில், வானொலிகளில் ஒளி, ஒலி பரப்புச் செய்யலாம். காணாமல் போனவரும் தம்மைப் பற்றி அறிவிப்புச் செய்யலாம். செல் போன் உட்பட பலவிதமான தகவல் தொடர்பு சாதனங்கள் உள்ளதால் இவ் விஷயம் மிகவும் எளிதானது. ஒவ்வொரு நாட்டுடனும் தொடர்பு கொள்வது அந்நாட்டுச் சிறையில் உள்ளவர்கள் யார் யார் என அறிய முடியும் என்ற சூழ்நிலை உள்ளது. மேலும் தற்போது உலகில் உள்ள எல்லா நாடுகளும் பாஸ்போர்ட், ரேஷன்கார்டு, அடையாள அட்டை போன்றவற்றைப் பயன்படுத்தத் துவங்கி யுள்ளன. எல்லைகள் வகுக்கப்பட்டு ஆட்சி நடக்கிறது. எனவே இது மிகவும் எளிதானது., இவை எல்லாவற்றையும் மீறி காணாமல் போவது போன்ற சில சம்பவங்கள் நடக்க வாய்ப்பும் உள்ளது. உதாரணமாக சமீபத்தில் 2002ஆம் வருடம், பிப்ரவரி, மார்ச் மாதங்களில் குஜராத்தில் வகுப்புக் கலவரம் நடத்தப்பட்டது. வேண்டுமென்றே முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். பெண்கள் பர்லியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். அப்போது மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியிலிருந்த பி.ஜே.பி. அரசே முன்னின்று படுகொலைகளை நடத்தியது. அப்போது பலர் காணாமல் போய்விட்டனர். கொல்லப்பட்டார்களா? ஓடி விட்டார்களா என்று அறிய முடியாத நிலை.

ஒவ்வொரு நாட்டிற்கும் எல்லை உண்டு. நமது நாட்டின் எல்லைப்புற மாநிலங்களில் உள்ளவர்கள் அங்கிருந்து விரட்டப் படுகின்றனர். உதாரணமாக கோல்கத்தாவில் உள்ளவர்கள் வங்காள மொழி பேசுவர். அவர்கள் பங்களா தேசத்திலிருந்து வந்து விட்டதாக அங்கிருந்து விரட்டப்படுகின்றனர். பூகம்பங்களில், போர்க்காலங்களில் மக்கள் காணாமல் போவது உண்டு. அவர் கொல்லப்பட்டாரா? சிறை பிடிக்கப்பட்டாரா? என்று நாம் அறியோம். இது போன்ற சூழ்நிலைகளில் நாம் மேலே குறிப்பிட்டவாறு நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், வானொலி மூலம் அறிவித்து பின்னர் அதற்கான கால அவகாசத்தை எதிர்பார்த்து விட்டு சொத்தைப் பிரித்துக் கொடுக்கலாம். அந்தக் கால அவகாசம் நான்கு வருடங்கள் என்று பெரும்பாலான அறிஞர்கள் கணித்துள்ளனர்.

எ.காட்டு-1

ஒருவர் பின்வரும் வாரிசுகளை விட்டு இறந்துவிட்டார். அவர்களில் காணாமல் போன மகனும் உண்டு. அவர்களிடையே சொத்தைப் எப்படிப் பங்கு வைக்க வேண்டும்?

| மகன் | மகனின் மகள் | சகோதரர்கள் 2பேர் | தந்தைவழிச் சகோதரன் | தாய்வழிச் சகோதரிகள் 2 |
|---|---|---|---|---|
| காணாமல் போனான் | | | | |

இந்நிலையில் சொத்து முழுவதும் காணாமல் போன மகனுக்கே உரியது. ஏனெனில் அவன் திரும்பிக் கிடைத்து விட்டால் மற்றவர்கள் அனைவரையும் சொத்து கிடைக்காமல் தடுத்துவிடுவான். அவன் உயிருடன் இருக்க மற்றவர்கள் பாகம் பெற முடியாது.

அவன் இறந்துவிட்டதாக உறுதி செய்யப்படுமானால் பின் வரும் முறைப்படி சொத்தைப் பங்கிட வேண்டும்.அவன் இறந்து விட்டதாக உறுதி செய்யப்படுமானால் பின்வரும் முறைப்படி சொத்தைப் பங்கிட வேண்டும்.

| மகனின் மகள் | சகோதரர்கள்2பேர் அஸபா | தந்தைவழிச் சகோதரன் | தாய்வழிச் சகோதரிகள்2 |
|---|---|---|---|
| 1/2 | 1/2 | தடுக்கப்படல் | மகனின் மகளால் தடுக்கப்படல் |

மகனின் மகள் பாதியும் மீதிப் பாதியை 2 சகோதரர்களும் பெறுவர். காணாமல் போனவர் மட்டுமே வாரிசாக உள்ள நிலை யில் மேற்கண்ட எ.காட்டு அமைந்துள்ளது.

எ.காட்டு_2

மற்ற வாரிசுகளால் சொத்து கிடைக்காமல் தடுக்கப்படக் கூடியவர் காணாமல் போனால் என்ன செய்வது என்பதற்கு எ.காட்டு பின்வருமாறு

ஒருவர் இறந்தபோது பின்வரும் வாரிசுகள் இருந்தனர். அவர்களில் காணாமல் போன சகோதரனும் உண்டு.

| தந்தை | தாய் | மகள் | சகோதரன் |
|---|---|---|---|
| 1/6 + அஸபா | 1/6 | 1/2 | காணாமல் போனவன் |
| [1+1] | [1] | [3] | [தந்தையால் தடுக்கப்படுவான்] |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து ஒரு பங்கு தந்தைக்கும், ஒரு பங்கு தாய்க்கும் மகளுக்கு 3 பங்கும் மீதியுள்ள ஒரு பங்கு தந்தைக்கும் சேரும்.

காணாமல் போன சகோதரனுக்காக காத்திருக்கத் தேவையில்லை. தந்தை இருப்பதால் சகோதரன் சொத்து கிடைக்காமல் தடுக்கப்படுவான். அவனுக்கு சொத்தில் பங்கு இல்லை.

எ.காட்டு-3

| கணவன் | சகோதரிகள் 2 | தந்தைவழிச் சகோதரன் |
|---|---|---|
| 1/2 | 2/3 | [காணாமல் போனான்] அஸபா |

இந்நிலையில் சொத்தை 6 பங்கு வைத்து 3 பங்கை கணவனுக்கும், 4 பங்கை சகோதரிகள் 2 பேருக்கும் கொடுத்தால் (3++4) ==7 பங்கு ஆகிறது. அவுல் என்ற ஏற்றவிதிக் கொள்கை. மீதி ஏதும் இல்லை. எனவே தந்தை வழிச் சகோதரன் காணாமல் போனாலும் திரும்பி வந்தாலும் ஏதும் கிடைக்காது.. எனவே சொத்தைப் பங்கிட்டுக் கொடுத்து விட வேண்டும்.

எ.காட்டு-4

(1) 24 சொத்து ரூ. 48 ஆயிரம்

| மனைவி | தாய் | தந்தை | மகன் |
|---|---|---|---|
| | | | [உயிரோடுள்ளதாக கணித்து] |
| 1/8 | 1/6 | 1/6 | காணவில்லை |
| [3] | [4] | [4] | அஸபா [13] |

இந்நிலையில் சொத்தை 24 பங்கு வைத்து மனைவிக்கு 3 பங்கும், தாய்க்கு 4 பங்கும் தந்தைக்கு 4 பங்கும் கொடுத்து விட்டு மகனுக்காக, மீதி 13 பங்கை நிறுத்தி வைக்க வேண்டும்.

சொத்து 48,000/24 = ரூ. 2000 ஒரு பங்கு

மனைவிக்கு 3 பங்கு x 2000 = ரூ. 6,000

| | | |
|---|---|---|
| தாய்க்கு 4 பங்கு x 2000 | = | ரூ. 8,000 |
| தந்தைக்கு 4 பங்கு x 2000 | = | ரூ. 8,000 |
| காணாமல் போன மகனுக்கு | = | ரூ.26,000 |
| | | ------------- |
| ஆக மொத்தம் | | ரூ.48,000 |

(2)

| மனைவி | தாய் | தந்தை | மகன் |
|---|---|---|---|
| | | | [இறந்துவிட்டதாக கணித்து] |
| 1/4 | மனைவிக்கு கொடுத்தபின் மீதி 1/3 | அஸபா | |
| 1 | 1 | 2 | |

சொத்தை 4 பங்கு வைத்து மனைவிக்கு ஒரு பங்கு, மீதியில் தாய்க்கு ஒரு பங்கு. மீதி 2 தந்தைக்கு அஸபா முறையில் கிடைக்கும்.

ஒரு பங்கு 48,000/4 = ரூ. 12,000

| | | |
|---|---|---|
| மனைவிக்கு ஒரு பங்கு | ரூ. | 12,000 |
| தாய்க்கு ஒரு பங்கு | ரூ. | 12,000 |
| தந்தைக்கு 2 பங்கு | ரூ. | 24,000 |
| | | --------- |
| ஆக மொத்தம் ரூ. | | 48,000 |

**குறிப்பு:-**

காணாமல் போன மகன் உயிருடன் திரும்ப வந்துவிட்டால் அவனது பங்கான 26,000 ரூபாய் அவனுக்குக் கொடுக்கப்படும்.

அவன் இறந்துவிட்டதாக உறுதி செய்யப்படுமானால் மனைவிக்கு முன்னர் கொடுத்த ரு. 6,000 உடன் மீண்டும் ரூ. 6,000 கொடுக்கப்படும். தாய்க்கு முன்னர் ரூ. 8,000 கொடுக்கப்பட்டது. தற்போது மீண்டும் ரூ. 4,000 கொடுக்கப்படும். தந்தைக்கு முன்னர் ரூ. 8,000 கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது மேலும் ரூ.16 ஆயிரம் கொடுக்க வேண்டும்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) காணாமல் போனவரின் வாரிசுரிமை பற்றி எடுத்துக்காட்டுடன் விவரி!

# 40. சாப அழைப்புப் பிரமாணம் செய்த தம்பதியரின் சொத்துரிமை

**இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:-**

*நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு மனிதர் தம் மனைவிக்கு எதிராக சாப அழைப்புப் பிரமாணம் (லிஆன்) செய்தார். மேலும், அவர் அவளுடைய குழந்தையைத் தம்முடையதல்ல என்று சொன்னார். ஆகவே, அவ்விருவரையும் நபி (ஸல்) அவர்கள் பிரித்து வைத்தார்கள். குழந்தையை மனைவியிடம் சேர்த்தார்கள்.*

*மனைவி மீது கணவன் விபசாரக் குற்றம் சாட்டி, அதை நான்கு சாட்சிகளைக் கொண்டு நிரூபிக்கத் தவறும் போது அவன் 'லிஆன்' எனும் சாப அழைப்புப் பிரமாணம் செய்ய வேண்டும். குற்றச்சாட்டை மறுக்கும் மனை வியும் அவ்வாறே சாப அழைப்புப் பிரமாணம் செய்ய வேண்டும். இவ்விதம் செய்த பிறகு தம்பதியரிடையே பிரிவினை ஏற்பட்டுவிடும். இந்நிலையில் அவளுக்குப் பிறந்த பிள்ளை தாயிடமே ஒப்படைக்கப்படும். இந்தப் பிள்ளை இறந்துவிட்டால், அதன் சொத்துக்கு தாயே வாரிசாவாள். தாய் இல்லாதபோது தாயின் தந்தைவழி உறவினர்கள் (அஸபாக்கள்) வாரிசாவார்கள்.*

**(ஃபத்ஹுல் பாரீ)** **(புகாரி எண். 6748)**

**பயிற்சி வினாக்கள்:-**

*(1) சாப அழைப்புப் பிரமாணம் செய்த தம்பதியருக்குப் பிறந்த குழந்தையின் சொத்துக்கு வாரிசு யார்?*

# 41. உரிமை விடப்பட்ட அடிமையின் வாரிசுரிமை

நாம் முன்னர் எழுதியதில் வாரிசுரிமை பெறும் ஆண்களிலும் பெண்களிலும் உரிமை விடப்பட்ட அடிமையும் வாரிசுரிமை பெறுவான் என எழுதி இருக்கிறோம்.

**இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:**

இறை நம்பிக்கையாளர்களின் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் (பரீரா எனும்) ஓர் அடிமைப் பெண்ணை விலைக்கு வாங்கி விடுதலை செய்ய விரும்பினார்கள். பரீராவின் எசமானர்களோ 'பரீராவின் வாரிசுரிமை எங்களுக்கே வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் அவளை நாங்கள் உங்களுக்கு விற்கிறோம்' என்று கூறினர். ஆகவே, ஆயிஷா (ரலி) அவர்கள் இதை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கூற அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், '(அதற்காக) நீ விடுதலை செய்யாமல் இருந்துவிடாதே! விடுதலை செய்தவருக்கே வாரிசுரிமை உரியது' என்று சொன்னார்கள்.

*அடிமையாயிருந்த ஒருவர் விடுதலை அடைந்த பிறகு சம்பாதித்த சொத்துக்களுக்கு யார் வாரிசு என்ற கேள்விக்கு, அவரை விடுதலை செய்த எசமானே வாரிசாவார் என நபி (ஸல்) அவர்கள் விடையளித்துள்ளார்கள். பெற்றோரோ உறவினரோ இல்லாத நிலையில் உள்ள அடிமையிடம் அன்பு காட்டி, விடுதலை செய்து, சுதந்திர மனிதனாக வாழ வழிவகுத்தவர் விடுதலை செய்த எசமான்தான். ஆகவே, அந்த அடிமை இறந்தபின், அவன் விட்டுச் செல்லும் சொத்துகளுக்கு வாரிசாக மற்றெவரையும் விட எசமானே அதிகத் தகுதி உள்ளவராவார்.*

*அடிமையின் சொத்துக்களுக்கு எசமான் வாரிசுரிமை பெற வேண்டுமானால் அந்த அடிமைக்கு எந்த உறவுக்காரர்களும் இருக்கலாகாது. அடுத்து சாலையில் கண்டெடுக்கப்பட்ட குழந்தையை வளர்க்கும் பொறுப்பு அரசுடையதாகும். இக்குழந்தை வளர்ந்து ஆளாகி சொத்து சேர்த்து இறந்துபோனால், அது விட்டுச்செல்லும் சொத்துகளுக்கு அக்குழந்தையைக் கண்டெடுத்தவர் வாரிசாவார். இவ்வாறு சிலர்*

கூறினாலும், அக்குழந்தை விட்டுச் செல்லும் சொத்து அரசுக்கே (பைத்துல்மால்) சொந்தமாகும் என மற்றவர்கள் கூறுகிறார்கள். ஆக, இவ்வாறு கண்டெடுக்கப்படும் குழந்தை அடிமையாகக் கருதப்படாது, எனவே யாரும் அதை உடைமை யாக்கிக்கொள்ள இயலாது.

**(ஃபத்ஹுல் பாரீ) (புகாரி ஹ.எண். 6757)**

**பயிற்சி வினாக்கள்:-**

(1) உரிமைவிடப்பட்ட அடிமையின் வாரிசுரிமை பற்றி நபிமொழி ஆதாரத்துடன் எழுதுக.

## 42. இறை நிராகரிப்பாளரின் வாரிசுரிமை

ஒரு முஸ்லிம், முஸ்லிமல்லாத தம் உறவினருக்கோ, ஒரு முஸ்லிமல்லாதவர் தம் முஸ்லிமான உறவினருக்கோ வாரிசாக முடியாது. பாகப் பிரிவினைச் சட்டங்கள் மத ரீதியாக வேறுபடுகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும். இதுவே பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும். சிலர், ஒரு முஸ்லிம் தம்முடைய முஸ்லிமல்லாத உறவினருக்கு வாரிசாவார் என்று கூறி, 'இஸ்லாம் (உரிமைகளை) அதிகமாக்குமே தவிர, குறைக்காது' என்றொரு ஹதீஸை (அபூதாவூத், ஹாக்கிம்) ஆதாரமாகக் காட்டுகிறார்கள். இருப்பினும், இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் முறிவு காணப்படுகிறது.

(ஃபத்ஹுல் பாரீ)

ஒரு முஸ்லிமான தந்தைக்கு இரு புதல்வர்கள். ஒருவர் முஸ்லிம், மற்றொருவர் முஸ்லிமல்லாதவர். இந்நிலையில் தந்தை இறந்தபோது முஸ்லிமல்லாதவராக இருந்த புதல்வர், சொத்துப் பிரிவினை செய்து கொள்வதற்கு முன் இஸ்லாத்தில் இணைந்தார். இப்போதும் முஸ்லிமான தந்தையின் சொத்தில் அவருக்குப் பங்கு கிடைக்காது என்பதே பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும். தந்தை இறக்கும் போது புதல்வர் எப்படியிருக்கிறார் என்பதே முக்கியம். சொத்துப் பிரிவினை செய்து கொள்ளும் நேரம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது என்பது இவர்களின் வாதமாகும். சொத்துப் பிரிவினையின்போது முஸ்லிமானால்கூடப் போதும், அவருக்குப் பங்கு உண்டு என்கிறார்கள் சிலர். முஆவியா (ரலி) அவர்கள் அளித்த தீர்ப்பு ஒன்றை இவர்கள் ஆதாரமாகக் காட்டுகிறார்கள்.

(ஃபத்ஹுல் பாரீ)

பயிற்சி வினாக்கள்:-

(1) ஒரு முஸ்லிமுக்கு இறை நிராகரிப்பாளனும் ஒரு இறை நிராகரிப்பாளனுக்கு ஒரு முஸ்லிமும் வாரிசாக முடியுமா? முடியாதா? ஆதாரத்துடன் விளக்கு.

# 43. முகாஸமதுல் ஜத்து

*(சொத்துப் பங்கீட்டில் சகோதரர்களுடன் பாட்டனாரைச் சேர்ப்பது)*

இங்கே பாட்டனார் என்பது தந்தையின் தந்தையைக் குறிக்கும். சகோதரர்கள் என்பது ஒரே தாய் தந்தைக்குப் பிறந்த சகோதரர்களையும் தந்தைவழிச் சகோதரர்களையும் குறிக்கும். தந்தை இருக்கும் போது தந்தையின் தந்தையான பாட்ட னாருக்கு சொத்துரிமை கிடைக்காது. தந்தை இல்லாத போது பாட்டனாருக்கு சொத்துரிமை கிடைக்கும்,

அபூபக்ர் (ரலி), இப்னு அப்பாஸ் (ரலி), அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரலி) ஆகியோர் 'பாட்டனார் தந்தை(யைப் போன்றவர்) ஆவார்' என்று கூறினர். (அதற்கு ஆதாரமாக) இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் 'ஆதமின் மக்களே!' எனும் (7:26 ஆவது) வசனத் தொடரையும் 'நான் என் தந்தையரான இப்ராஹீம், இஸ்ஹாக், யஅகூப் ஆகியோரின் மார்க்கத்தையே பின்பற்றுகிறேன் (என்று யூசுஃப் கூறினார்)' எனும் (12:38ஆவது) வசனத் தொடரையும் ஓதினார்கள்.

*அதாவது இறந்து போன ஒருவருக்கு மகன் உயிருடன் இல்லாதபோது மகனுடைய மகன் (பேரன்) வாரிசாவான் என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விதியாகும். இந்நிலையில் சகோதரர்கள் இருந்தால் அவர்களுக்குப் பங்கேதும் கிடையாது. இதைப் போன்றுதானே, தந்தை இல்லாதபோது தந்தையின் தந்தையான பாட்டனாரும் வாரிசாக வேண்டும்? தந்தை இருந்தால் எவ்வாறு சகோதரர்களுக்கு எந்தப் பங்கும் கிடையாதோ அவ்வாறே பாட்டனார் இருந்தாலும் சகோதரர்களுக்குப் பங்கு கிடையாது. இது வே இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் வாதமாகும்.*

**(ஃபத்ஹுல் பாரீ)**

இறந்தவருக்கு உடன் பிறந்த சகோதரர்களோ, தந்தை வழிச் சகோதரர்களோ இருந்து, தந்தை இல்லாத நிலையில் தந்தையின் தந்தை (பாட்டனார்) இருந்தால் அவர்களிடையே சொத்தை எவ்வாறு பங்கிட வேண்டும்? என்பது தொடர்பாக இந்த நபித்தோழர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. ஒருவரிடமிருந்தேகூடப் பல கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களின் கருத்தாவது; ஒரு சகோதரனோ, இரு சகோதரர்களோ இருக்கும்போது, பாட்டனாரையும் ஒரு சகோதரராகப் பாவித்து சொத்தை அவர்களிடையே சமமாகப் பங்கிட வேண்டும். சகோதரர்கள் இருவருக்கு மேல் இருந்தால் பாட்டனாருக்கு மூன்றில் ஒரு பாகமும் (1/3), மீதி சகோதரர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

அலீ பின் அபீதாலீப் (ரலி) அவர்களின் தீர்ப்பாவது; சகோதரர்களில் ஒருவரைப் போன்றே பாட்டனார் கருதப்பட்டு, அவர்களிடையே சொத்தைச் சமமாகப் பங்கிட வேண்டும்.

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களின் கருத்தாவது; கணவன், தாய், சகோதரன், பாட்டனார் ஆகியோரை விட்டுச் சென்ற ஒரு பெண்ணின் சொத்தை மொத்தம் 6 பாகங்களாகப் பிரித்து கணவனுக்குப் பாதியும் (3 பாகம்) தாய்க்கு மீதியில் மூன்றில் ஒன்றும் (ஒரு பாகம்), சகோதரன் மற்றும் பாட்டனார் ஆகியோருக்குத் தலா ஒரு பாகமும் அளித்திட வேண்டும். அதன் வரைபடம்

**6 பாகம்**

| கணவன் | தாய் | சகோதரன் | பாட்டனார் |
|---|---|---|---|
| 3 | 1 | 1 | 1 |

ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்களின் கருத்தாவது; பாட்டனாருக்கு மொத்த சொத்தில் மூன்றில் ஒரு பாகம் கிடைப்பதானால், சகோதரர்களில் ஒருவராக அவரை பாவித்து அவர்களிடையே சமமாகப் பங்கிடலாம். அதைவிடக் குறைவாக கிடைக்கும் என்றிருந்தால் அவ்வாறு பாவிக்கலாகாது.

**(ஃபத்ஹுல் பாரீ)**

தந்தை உள்ள போது, எப்படிச் சகோதரர்களுக்குப் பங்கு கிடையாதோ அதே போல தந்தை இன்றிப் பாட்டனார் இருந்தாலும் சகோதரர்களுக்குப் பங்கு கிடையாது என்பதே சரியான சொல்லாகும்.

**பயிற்சி வினாக்கள்:-**

(1) முகாஸமதுல் ஜத்து என்றால் என்ன?

(2) பாட்டனார் உள்ள போது சகோதரர்களுக்குப் பங்கு கிடைக்குமா?

**(முற்றும்)**



இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டங்கள் விளக்கப் பட்டிருப்பது போன்று வேறெந்த மதங்களிலும் விளக்கப்படவில்லை. வாரிசுகளுக்குரிய உரிமைகளை வழங்குவதில் இஸ்லாம் காட்டுகின்ற அக்கறை வேறெந்த கொள்கை கோட்பாடுகளிலும் பார்க்க முடியாது.

இறந்தவரின் சொத்தை எவ்வாறு பங்கிட வேண்டும் என்ற விபரம் உலகப் பொதுமறையான அல்குர்ஆனில் மிகத் துல்லியமாகக் கூறப்பட்டுள்ளது.

"வாரிசுரிமைக் கல்வியைப் பயிலுங்கள். மற்றவர் களுக்கும் கற்றுக் கொடுங்கள்" என்று நபி (ஸல்) கூறினார்கள். ஆனால் இக்கல்வி நாளடைவில் தேய்ந்து போய்விட்டது. வாரிசுரிமை பற்றி மக்கள் அறிந்து கொள்ள முறையான தமிழ் நூல்கள் இல்லாதது இதற்கு காரணமாகும். அந்த குறையை இந்நூல் போக்கும் இன்ஷா அல்லாஹ்.

குறிப்பாக மார்க்க கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு இந்நூல் பயனுள்ளதாக அமையும்.

SAJIDA BOOK CENTRE CHENNAI

சாஜிதா புக் சென்டர்
248, தம்புச் செட்டி தெரு, சென்னை - 1.
போன் : 2522 4821 / 98409 77758